2966

T. N. L. A. Debates

OFFICAL REPORT

VOL: 36 NO: 2

April 2th 1987

D
V2:1,31 'N87
N87.36.2
36511

வெளியீடு 23-1-1988 Issued 23-1-1988

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல்2 , 1987-தொகுதி 36-எண் 2
Thursday, the 2nd April 1987-Volume 36-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

D
V211,31 N87
N87-36-2

136511
சென்னை-600 008.

# உள்ளடக்கம்

2—4—1987


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்: | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 147—180 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 180—203 |
| 2. தகவல் கோரல்: | |
| (அ) காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் வண்ணப்பூச்சுக்களின் மீது சுண்ணாம்பு பூசுவதாகக் கூறப்படுவது குறித்து. | 204, 206 |
| (ஆ) மதுரையில் குடிநீர்த் தட்டுப்பாடு. | 204—206 |
| (இ) பத்திரிகையாளர் மாடத்தில் இருக்கை மாற்றம். | 207—214 |
| (ஈ) சில ஹோட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்காதது. | 214—215 |
| (உ) பேரவை நடவடிக்கைகளின் சுருக்க வெளியீட்டிலுள்ள குறிப்பு. | 215 |
| 3. கவன ஈர்ப்பு: | |
| (அ) ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கக் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகள். | 215—218 |
| (ஆ) ஊராட்சி துப்புரவுப் பணியாளர்களின் ஊதியம் | 218—220 |
| (இ) திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிட வசதியின்மை. | 220—222 |
| (ஈ) அரசு விலையில் பள்ளிப் புத்தகங்கள் கிடைக்காதது. | 222—225 |
| 4. அறிக்கைகள் அளித்தல்: | |
| (அ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு. | 225 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு | 225 |
| 5. வரவு-செலவுத்திட்டம் 1987-88 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி) | 225—369 |
| (அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை | 226—368 |
| (ஆ) கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல் | 227—368 |
| (இ) கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 228—369 |

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. க. இராசாராம் | 226,345—362 |
| திரு. ந. சிவஞானம் | 229—236 |
| *திரு. செ. செம்மலை | 236—237 |
| *திரு. மா. மீனாட்சிசுந்தரம் | 238—250 |
| திரு. துரை கோவிந்தராசன் | 250—260 |
| திரு. கோ. வீரய்யன் | 260—264 |
| *திரு. சைதை சா. துரைசாமி | 264—268 |
| *திரு. பொ. உத்திராபதி | 268—273 |
| *திருமதி தா. இராசாம்பாள் | 273—277 |
| திரு. எம். வி. இரத்தினம் | 278—282 |
| *திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் | 232—285 |
| திரு. கா. சொர்ணலிங்கம் | 285—290 |
| திரு. ச. சங்கரலிங்கம் | 290—292 |
| *திரு. கே. அன்பழகன் | 292—296 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 297—302 |
| திரு. கே. பால்ாஜி | 302—307 |
| *திரு. வை. பாலச்சந்திரன் | 307—312 |
| *திரு. எம். அண்ணாதாசன் | 312—316 |
| *திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் | 316—321 |
| திரு. கே. முத்துவேல் | 321—324 |
| *திரு. எம். எம். இரங்கசுரத்தினம் | 324—328 |
| *திரு. எஸ். வேணுகோபால் | 328—333 |
| *திரு. ஆ. பிரேம்குமார் | 334—338 |
| *திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 339—345 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 369—371 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, ஏப்ரல் 2, வியாழக்கிழமை

பங்குனி 19, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''சுழன்றும்ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை''.

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### காட்பாடி தொகுதியில் லத்தேரி கி. வா. குப்பம் ஊராட்சிகளை பேரூராட்சியாக்குதல்.

245—(*வினா எண். 1765) திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி கி.வா. குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் லத்தேரி, கி.வா. குப்பம் ஊராட்சிகளைப் பேரூராட்சியாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கி. வா. குப்பம் காவனூர் மற்றும் பழைய கிருஷ்ணாபுரம் ஆகிய மூன்று ஊராட்சிகளை இணைத்து ஒரு பேரூராட்சியாக தரம் உயர்த்துவதற்கான செயற்குறிப்பினை பேரூராட்சிகளின் இயக்குநர் அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

லத்தேரி ஊராட்சியைப் பேரூராட்சியாக்கும் திட்டம் ஏதுமில்லை.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கி.வா. குப்பம், காவனூர் மற்றும் பழைய கிருஷ்ணாபுரம் ஆகிய பஞ்சாயத்துக்களை ஒன்றிணைத்து பேரூராட்சியாக்குவதற்கான குறிப்புகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது நீண்ட நாட்களாக, ஏறக்குறைய 2

ஆண்டுக்காலமாக, ஆய்வில் இருக்கிறது, குறிப்பில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, துரித நடவடிக்கை எடுத்து இவைகளை ஊராட்சியாக்குவதற்கான முயற்சிகளுக்கு அமைச்சர் உதவி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் நடைபெற்ற காரணத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிமன்றங்களின் தீர்மானங்களைப் பெற்று அனுப்புமாறு வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அது தான் காலதாமதத்திற்குக் காரணம்.

**திரு. கோ. இரகுபதி:** தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள் இப்பொழுது கிராம ஊராட்சி மன்றங்களாக இருக்கின்றன. பேரூராட்சியாக்கப்படுவதற்கான நிலைபற்றி கிராமத் தலைவர்களைக் கேட்டால், நிச்சயமாக அவர்கள் ஒப்புதல் தர மாட்டார்கள் என்ற நிலையிருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துக்களுடைய தலைவர்களுடைய எண்ணங்கள் அப்படித்தான் பிரதிபலிக்கும் என்ற நிலையிருக்கிறது. அங்கே வளர்ச்சியின் நலனைக் கருதி, மக்கள் நலனைக் கருதி, மேலும் அரசினுடைய நிதி ஆதாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்க, பேரூராட்சிகளை உருவாக்குகிறோம். ஆனால், தற்சமயம் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் ஒத்து வர மாட்டார்கள். ஆகவே அந்த முடிவினை எடுப்பதற்காக அவர்களுடைய தீர்மானத்தை ஏற்காமல், அரசே முடிவு எடுக்க வழி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

லத்தேரி ஊராட்சி, அதன் பக்கத்தில் இருக்கிற கண்ணங்குடி போன்றவற்றை ஒன்றிணைத்து ஒரு பேரூராட்சியாக்கப்படுமா? கி.வா. குப்பம் ஊராட்சியை பேரூராட்சியாக்க எந்த அளவுக்குக் கோப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளனவோ, அதைப்போல் லத்தேரியையும் பேரூராட்சியாக்கினால், அது ஒரு சாதாரண நகரமாக இருப்பதால், வளர்ச்சிக்கு உதவும். ஆக, என்னுடைய தொகுதிக்கு இரண்டு பேரூராட்சிகளை உருவாக்கித் தர முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, முன்னதைப் பொறுத்தவரையில் வழியிருந்தால் அரசு செய்யும். சுமார் ரூ.1 இலட்சமாவது ஆண்டு வருமானம் பேரூராட்சியாக்குவதற்கு இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. லத்தேரியைப் பொறுத்தவரையில் அதன் வருமானம் ரூ. 43,137 தான். ஆகவே அதற்குச் சாத்தியம் இல்லை.

**திரு. ப. ந. ராமச்சந்திரன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்பொழுது இருக்கிற ஊராட்சிகள் எல்லாம் 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் அதனுடைய தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. அந்த அடிப்படையில் எடுக்கப்பட்டவை. இப்போது பல்வேறுபட்ட ஊராட்சிகள், பெரிய, பெரிய ஊராட்சி மன்றங்களாக இருக்கின்றன, நிர்வாகத்திற்கு சிரமமாக இருக்கிறது. அந்த அடிப்படைத் தகுதிகள் உள்ள ஊராட்சி



மன்றங்களைப் பேரூராட்சி மன்றங்களாக அல்லது நகராட்சி மன்றங்களாக உயர்த்தித் தருவதற்கு ஒரு தனிக் குழுவை மாநில அரசு நியமிக்குமா? அப்படி உத்தேசம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

**திரு. வே. ரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பல்வேறு பேரூராட்சிகள் தங்களை மீண்டும் ஊராட்சிகளாக தரம் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்துள்ளார்களா? அப்படியென்றால் அத்தகைய கோரிக்கைகள் எத்தனை அரசுக்கு வந்துள்ளன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காட்பாடி தொகுதி சம்பந்தப்பட்ட ஒரு கேள்வியாகும். பொதுவான விவரங்கள் வேண்டுமானால் தனித்தனியே கேள்விபோட்டால் தர இயலும்.

**தஞ்சை மாவட்ட பாசன வாய்க்கால்களை குடிமராமத்து செய்தல்.**

83—(*வினா எண். 4218) **திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா பாசன வாய்க்கால்களையும் அரசு செலவில் குடிமராமத்து செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண். 245, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 27-3-1986ல் தஞ்சை மாவட்டத்தில் 1986-87 ஆம் ஆண்டு கோடை கால மாதங்களில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பொதுப்பணித் துறையைச் சேர்ந்த வாய்க்கால்களில் குடிமராமத்துப் பணிகளைச் செய்வதற்கு ரூ. 15 லட்சம் அரசு அனுமதித்து ஆணையிட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு (198-87) நிதி ஒதுக்கீட்டில் மிகையான குடிமராமத்து மான்யமாக (Excess Kudi-maramathu Grant) ரூ. 38,000 தஞ்சை மாவட்டத்திலுள்ள வாய்க்கால்களின் பராமரிப்பு பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

**திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே பல்வேறு காலக் கட்டங்களிலே கிராமங்களில் வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிற காரணத்தாலும் கிராமங்களிலே ஒற்றுமைக் குலைவு இருக்கிற காரணத்தினாலும், இந்த ஆண்டு வறட்சி வெகுவாக பாதிக்கிற அறிகுறியிருக்கிற காரணத்தினாலும் அரசு எல்லா வாய்க்கால்களையும் தூர் எடுக்கிற நிலையை ஏற்படுத்தி மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கம் செய்கிறபோது இக்கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பொதுப்பணித்துறை மூலமாக ஏ அண்ட் பி வாய்க்கால்களை வெட்டுகிறது. அதே நேரத்திலே ஊராட்சி ஒன்றியங்கள் சி அண்ட் டி கிளை வாய்க்கால்களை—அதே வாய்க்காலின் கிளை வாய்க்கால்களை வெட்டுவதில்லை—மாறி மாறி வெட்டுகிற காரணத்தினாலே தொடர்ந்து நீர்ப்பாசனம் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. ஆகவே ஒரே நேரத்திலேயே பொதுப்பணித்துறை மூலமாகவும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் எல்லா வாய்க்கால்களையும் வெட்ட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை ஏ பிரிவு வாய்க்கால்களைப் பராமரிக்கிறது. பி அண்ட் சி வாய்க்கால்களை குடிமக்களே பராமரிக்க வேண்டுமென்பதுதான் கொள்கை. இரண்டு தரப்பினரும் கோடை காலத்திலே ஒரே நேரத்திலே அந்தப் பணியைச் செய்தால் இந்தப் பிரச்சினை தீரும்.

திரு. துரை. கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற பாசனம் பெறுகிற சிறிய வாய்க்கால்களை குடிமராமத்து ஊர் மக்களே செய்வதுதான் சாலப் பொருத்தமாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் 50 சதவீதம் பணம் தந்து அந்த வாய்க்கால்களைச் சீர்படுத்த வேண்டுமென்று சொல்லப்படுகிறது. 50 சதவீதம் என்று திட்ட மதிப்பீட்டிலே கொடுத்தாலும் அதிலே 10 சதவீதம் குறைத்து செலவிடுகிற காரணத்தினாலே நெல் உற்பத்தியை அதிகமாகச் செய்யக்கூடிய தஞ்சை மாவட்டத்திற்கு வருகிற தண்ணீர் 2, 3 ஆண்டுகளாக தடைபடுகிற காரணத்தினாலே உற்பத்திப் பெருக்கம் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, உற்பத்திப் பெருக்கத்தின் அடிப்படையில் ஏதாவது முன்னுரிமை தந்து அந்த வாய்க்கால்களை சீர் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்க்கால்களைச் செப்பனிட முழுவதும் உதவி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே உள்ள பாசன வாய்க்கால்களை சீர்படுத்த ஒவ்வொரு ஆண்டும் செலவு செய்கிறோம். அந்த வாய்க்கால்களின் கரைகளிலே சீமை காட்டாமணி அதிகமாகப் படர்ந்து வேகமாகப் பரவி ஆறுகளே மேடிட்டு விடுவதால் தண்ணீர் விவசாயத்திற்குத் துரிதமாக போக



முடியாத நிலை ஏற்படுகிறது, அது மட்டுமல்ல, கரைகளில் செங்கல் காளவாய் வைக்கக் கூடியவர்கள் அந்த மண்ணை எடுப்பதன் காரணமாக அந்த இடத்தில் உடைப்பு ஏற்பட்டு சேதம் ஏற்படுகிறது. ஆகவே செங்கல் காளவாய் வைக்கிறவர்கள் மண் எடுப்பதனைத் தடுப்பதற்கும் சீமைக் காட்டாமணிகளை சுத்தமாக அகற்றுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே உள்ள பாசன வாய்க்கால்களைப் போலவே தமிழகத்திலே உள்ள கிட்டத்தட்ட எல்லா பாசன வாய்க்கால்களும் குறிப்பாக ஆறு, குளம், கண்மாய்களுக்கு வரத்து வாய்க்கால்களாக இருக்கின்றவைகளில் தூர் எடுக்காத காரணத்தினாலே தண்ணீர் வீணாகிறது. எனவே ஒட்டு மொத்தமாக ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து ஒரு கால அளவுக்குள்ளே எல்லா வாய்க்கால்களையும் சீரமைப்பதற்கு அரசு முன் வருமா?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காவிரி நீர்ப்படுகை என்கிற காரணத்தால் கோடை காலத்தில் மட்டுமே செய்ய வேண்டிய பணிகள் இவை. மற்ற பகுதிகளிலும் இவை செய்யப்பட வேண்டிய பணிகள் என்கிற காரணத்தால் பொதுப்பணித் துறை அது குறித்து ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையை ஒட்டியுள்ள சிதம்பரம், காட்டுமன்னார் கோவில் தாலுக்காக்களுக்கு, தஞ்சை ஜில்லாவுக்குள்ள எல்லா சட்டத் திட்டங்களும் பொருந்தியிருப்பதால், அங்கேயுள்ள ரெவின்யூ சானல்களைப் பொதுப்பணித்துறை மூலமாக, ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், வெட்டித் தருமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நியாயமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது ஏ பிரிவு வாய்க்கால்களை அரசு பழுது பார்க்கிறது; பி.அன்ட்.சி. வாய்க்கால்களை விவசாயிகளே, மக்களே செப்பனிட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அவற்றைச் செப்பனிடும் போது

[1987 ஏப்ரல் 2

பாதித்தொகையை வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் பாதித் தொகையை நில உபயோகிப்பாளர்களும் கொடுக்க வேண்டுமென்ற முறையில் அமுல் நடத்தப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் இதற்கு முன்னாலே, முதலிலே அரசு அந்தச் செலவைச் செய்து விட்டு, பாதித் தொகையை விவசாயிகளிடமிருந்து நில வரியோடு வசூல் செய்து வந்தது. இப்பொழுது பாதித் தொகையை விவசாயிகள் கொடுத்தால்தான் மீதி பாதித் தொகையை அரசு கொடுக்கும் என்ற நிலையிருப்பதால் அந்த வேலைகள் பாதிக்கப்படுவதாலே, முன்னாலே இருந்ததைப் போல், அரசே முழுவதையும் செலவு செய்து விட்டு அந்தப் பாதித் தொகையைக் குடிமராமத்து செய்துவிட்டு நில வரியோடு சேர்த்து வசூல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதே போல், காவிரியின் பிரதான வடிகால் பகுதியாக இருக்கக் கூடிய கிருதுமால் ஆறு சீமைக்காட்டாமணியால் பெரும் அளவுக்குச் சீர் கெட்டிருக்கிறது. அதைச் சீர்படுத்துவதற்கான முயற்சியையும் அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இவ்வாண்டு நிதி ஒதுக்கம் செய்கிற பொழுது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை கருத்திலே கொள்ளப்படும். சீமைக் காட்டாமணியை அகற்றுவதற்கு, செப்பனிடுகின்ற பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலப்பாளையத்தில் பீடி சுற்றும் பெண் தொழிலாளர்களின் நலத் திட்டங்கள்.

84—(*வினா எண் 9174) திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலப்பாளையத்தில் பல ஆயிரம் பீடி சுற்றும் பெண் தொழிலாளர்கள் பணி செய்து வருவதால் அவர்களுடைய நலத்திட்டங்களுக்கு தனிப் பணியாளரை நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமனம் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் கூறினார்கள். அதற்கு நன்றி. இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு நல்ல அமைப்பினை அப்பகுதியிலாவது ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தித் தரவேண்டும். அப்படி ஏற்படுத்தித் தந்து நன்றி சொல்ல எனக்கு ஒரு வாய்ப்பை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே' 1966 ஆம் வருட பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 206 உதவி ஆய்வாளர்கள், 30 துணை ஆய்வாளர்கள், 17 துணை ஆய்வாளர்கள் (குறைந்தபட்சக் கூலி), மற்றும் 19 தொழிலாளர் துறை ஆய்வாளர்கள், ஆண் அல்லது பெண் என்ற பாகுபாடு ஏதும் இல்லாமல் பீடிசுற்றும் தொழிலாளர்களின் நலத் திட்டங்களை அமுல் செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி பெண்களுக்கு மட்டும் போடப்படுமா என்பது. இதிலே பாகுபாடு வேண்டாம் என்கின்ற வகையிலேதான் அந்தப் பதில் இல்லையென்று வந்திருக்கிறது. ஆகவே இப்பொழுதே நன்றி சொல்லலாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக மேலப்பாளையத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மிகப் பெரும்பாலோர் பெண்களாக இருக்கிற காரணத்தால், ஒரு பெண் ஆய்வாளரை நியமிப்பது பற்றி அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆய்வாளர்கள் என்று பொதுவாக இருக்கிறது. ஆய்வாளர்களிலே பெண்கள் இருக்கிறார்களா என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை மணல்மேட்டில் ஈ. எஸ். ஐ. மருத்துவமனை அமைத்தல்.

85—(*வினா எண் 10838) திரு. மு. தங்கமணி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை, மணல் மேடு கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மயிலாடுதுறையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துமனை (E. S. I. Hospital) ஏற்படுத்த கருத்துரு ஏதும் இல்லை. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் (E. S. I. Dispensary) ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற் குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். மயிலாடுதுறை கூட்டுறவு நூற்பாலையில் 800—க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அதற்கு மேலாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்னுடைய தொகுதியில் தொடங்கப்பட்டிருக்கிறது. அதில்

400-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள் எனவே, வருகிற ஆண்டில் துரிதமான நடவடிக்கை எடுத்து, தொழிலாளர்களுக்கு சிறப்பு வைத்தியம் செய்வதற்கு ஈ எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்தித் தர செயற்குறிப்பு உள்ளதா என்பதையும், அது எவ்வளவு மதிப்பீட்டில் செயல்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அப் பகுதியில் ஈ.எஸ்.ஐ. மொபைல் டிஸ்பென்சரி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நடமாடும் மருந்தகம் ஒன்றை அமைக்கலாம் என்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மண்டல இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார். இதை அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

### வடஆற்காடு மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை.

246—(*வினா எண் 7378) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை ஒன்று அமைக்க அரசிடம் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், போளூர் என்ற ஊரில் அரசுக்குச் சொந்தமான நிலத்தில் நவீன அரிசி ஆலை ஒன்றை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கட்டி வருகிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நவீன அரிசி ஆலையைக் கட்டுவதற்கு ஆகின்ற மொத்தச் செலவு எவ்வளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சுமார் 125 இலட்சம் ரூபாய் ஆகும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள மொத்த நவீன அரிசி ஆலைகள் எவ்வளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தற்பொழுது இருப்பது 13 ஆலைகள். அமைக்க இருப்பது 6 ஆலைகள். தனியாரிடத்திலேயிருந்து, சிதம்பரத்திலே இருந்து ஒன்றை எடுத்து நடத்தி வருகிறோம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் போளூரில் நவீன அரிசி ஆலை அமைய இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள்



1987 ஏப்ரல் 2]

மாவட்டம் இரண்டாகப் பிரிய இருக்கின்ற காரணத்தால் வேலூர் பகுதியிலே இன்னொரு நவீன அரிசி ஆலையை அமைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தற்பொழுது வாய்ப்பு இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மாவட்டமாகிய தர்மபுரி மாவட்டத்தில் நவீன அரிசி ஆலையை ஏற்படுத்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அத்தகைய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு அருகே சிவக்கோட்டையில் வாணிபக் கழகத்தின் மூலமாக நவீன அரிசி ஆலை ஏற்படுத்த உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உத்தேசம் உண்டு.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு நவீன அரிசி ஆலைகள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக் கிறது என்று அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் இடம் பெற்றிருக் கிறதா என்ற தகவலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இடம் பெற்றிருக்கிறது.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலே யிருந்து ஏராளமான நெல் வருகிறது. ஆகவே, காஞ்சிபுரத்தில் ஒரு நவீன அரிசி ஆலையை அமைக்க அமைச்சரவர்கள் இந்த ஆண்டு ஏற்பாடு செய்வார்களா என்றும், அமைக்கப்பட இருக் கின்ற ஆறு நவீன அரிசி ஆலைகளிலே ஒன்று காஞ்சிபுரத்தில் அமைய இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, துரதிருஷ்டவசமாக இல்லை.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் அரிசி ஆலை உரிமம் பெற வேண்டு மென்றால் அதற்கு முதல் கட்டமாக ஐந்து கிலோ மீட்டர் தூரம் வரை ஒரு கணக்கெடுத்து ஒரு ஆலைக்கு 12,000 டன் நெல் உற்பத்தியாக வேண்டுமென்ற விதியை வைத்திருக்கிறார்கள். இதனால் புதிதாக இந்த அரிசி ஆலையை உருவாக்க முடிய வில்லை. எனவே, இந்த விதி ரத்து செய்யப்படுமா? அல்லது

இந்த விதியைக் கொஞ்சம் தளர்த்தி அந்த ஏரியாவிலே வருகிற ஒரு ஆலைக்கு 7,000 அல்லது 8,000 டன் என்ற அந்த விதியைத் தளர்த்தி மேலும் கிராமப்புறங்களில் இதுபோன்ற அரிசி ஆலைகள் உருவாவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது ஒரு நல்ல கேள்வி. தனியாகப் போடவும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, நவீன அரிசி ஆலை தர்மபுரி மாவட்டத்திலே இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பின் தங்கிய மாவட்டத்தில், அதேநேரத்தில் தேவையான அளவிற்கு நெல் உற்பத்தி ஆகக்கூடிய மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை அமைக்கக் கூடிய உத்தேசம் இல்லாததன் காரணம் என்ன? இனி மேலாவது அங்கே ஒரு நவீன அரிசி ஆலையை உருவாக்கக்கூடிய வழிவகைகளை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, காரணம் வேறொன்றுமல்ல; மாவட்டப் பற்றுக்குப் பதிலாக மாநிலப் பற்றுதான் காரணம்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற ஆறு நவீன அரிசி ஆலைகள் எங்கெங்கு அமைக்கப்பட இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, வடாற்காடு, புதுக்கோட்டை, தென்னாற்காடு, இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் அரிசி ஆலைகள் அரசுக்குத் தர வேண்டிய கொள்முதல் அரிசியினுடைய அளவு மிகவும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் பல பகுதிகளிலே தனியார் ஆலைகள் இயங்க முடியாமல் பல தொழிலாளர்கள் வேலையிழந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா? குறிப்பாக பெரியார் மாவட்டத்திலே அதுபோன்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, கொள்முதல் அரிசி யின் அளவைக் குறைப்பதற்கு ஏதாவது கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா? ஆமெனில் அதன்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

(முற்பகல் 10-20)

திரு. கா. சொர்ணலிங்கம்: தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கிற நவீன அரிசி ஆலை திருவாடானையில் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அது எப்போது அமைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இராமநாதபுரம் திருவாடானை வட்டத்தில் ஒரு நவீன அரிசி ஆலை அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த ஆலை எப்போது அமைக்கப்படும் என்ற விவரம் இல்லை.

திரு. வி. கோ. செல்லப்பா: தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு நவீன அரிசி ஆலை அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த நவீன அரிசி ஆலை தென்னாற்காடு மாவட்டத்தில் எந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நெய்வேலியில் அமைக்கப்படும்.

திரு. எஸ். பி. மணவாளன்: தலைவரவர்களே, சென்ற நிதி ஆண்டில் நவீன அரிசி ஆலை அமைக்க தனியார் யாருக்கேனும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர முடியும்.

டாக்டர் அ. பொன்னுசாமி: தலைவரவர்களே, பெரியார் மாவட்டம் ஊத்துக்குளியில் 10 இலட்சம் ரூபாய்ச் செலவில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் ஒரு கிடங்கு கட்டப்பட்டி ருக்கிறது. அந்த ஊத்துக்குளி ஊரைச் சுற்றிலும் 60-க்கு மேற் பட்ட அரிசி ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த ஊத்துக்குளி பகுதியில் ஒரு நவீன அரிசி ஆலை அமைக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த நவீன அரிசி ஆலைகள் எல்லாம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டு, செயல்படுத்தப்படவிருக்கிற திட்டங்கள். மேற்கொண்டு நவீன அரிசி ஆலைகளைச் செயல் படுத்தும்போது இத்தகைய யோசனைகளை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஆர். தியாகராசன்: தலைவரவர்களே, இந்த நவீன அரிசி ஆலைகளை ஆரம்பிக்கின்றபோது தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் திட்டம் எந்த ஆலையிலாவது இணைக்கப்பட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சீர்காழி வட்டத்தில் எருப்பூர் பகுதியில் அமைக்கப்படவிருக்கின்ற நவீன அரிசி ஆலையில் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்கும் திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

### சேலம் மாவட்டம், ஓமலூரிலுள்ள தோல் சந்தையை வேறு இடத்திற்கு மாற்றுதல்.

247—(*வினா எண் 10079) **திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூரில் தற்போது புதிதாகக் கட்டப்பட்டு வரும் பஸ் நிலையத்திற்கு அருகில் சுகாதாரக் கேடாக இருக்கும் தோல் சந்தையை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கே. அன்பழகன்: தலைவரவர்களே, ஓமலூரில் அரசு தற்போது கட்டிவரும் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் தோல் சந்தை இருக்கிறது. அங்கிருந்து வெளியாகும் கழிவுநீர், கழிவுப் பொருளால் அந்தப் பகுதியின் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் தோல் சந்தையிலிருந்து வீசுகின்ற கெட்ட நாற்றத்தினால் அங்கே காத்திருக்கின்ற பஸ் பயணிகளுக்கு சுகாதார பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, பொது மக்கள் நலன் கருதி புதிய பஸ் நிலையத்திற்கு அருகிலிருந்து அந்த தோல் சந்தையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அது தோல் வணிகம் நடைபெறுகின்ற இடமே தவிர தோல் பதனிடும் இடம் அல்ல. இருப்பினும் கழிவு நீரையும் கழிவுப் பொருளையும் அகற்ற வேண்டியது அந்தப் பேரூராட்சியின் பொறுப்பாகும். அந்தப் பேரூராட்சி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. கே. அன்பழகன்: தலைவரவர்களே, தோல் சந்தையிலிருந்து உப்புநீர் வெளி வருவதால் புதிய பேருந்துக் கட்டடம் பாதிக்கும் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எஞ்சினியராக இருப்பதால் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, பொதுமக்கள் நலன் கருதி அந்தப் பேரூராட்சிக்கு அறிவுரை கூறி, அந்தத் தோல் சந்தையை அங்கிருந்து அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எஞ்சினியருக்குத் தெரிந்து பயனில்லை; அந்தப் பேரூராட்சிக்குத் தான் தெரிய வேண்டும்.



### வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருப்பவர்களின் எண்ணிக்கை.

248—(*வினா எண். 10605) திரு. க. பாரமலை: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 31-3-1986-ல் உள்ளவாறு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து காத்திருப்போர் பட்டியலில் உள்ள இளநிலை—முதுநிலை பட்டதாரிகள் மொத்தம் எத்தனை பேர்?

(ஆ) அதில் தமிழ் பயிற்று மொழி மூலம் படித்து பட்டம் பெற்றுள்ளவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இவ்வித புள்ளி விவரங்கள் அரை யாண்டுக் கால அளவில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே 31-12-85 அன்றைய நிலவரப்படியும் 30-6-86 அன்றைய நிலவரப்படியும் உள்ள புள்ளி விவரங்கள் பின்வருமாறு:—

| வரிசை எண். | கல்வித் தகுதி. | 31-12-85 அன்றைய நிலவரப்படி உயிர்ப்பதி வேட்டில் வேலைக்காக காத்திருப் போர். | 30-6-86 அன்றைய நிலவரப் படி உயிர்ப்பதி வேட்டில் வேலைக் காக காத்திருப் போர். |
|---|---|---|---|
| 1. | இளநிலைப் பட்டதாரிகள் | 1,41,725 | 1,51,647 |
| 2. | முதுநிலைப் பட்டதாரிகள் | 36,646 | 39,729 |

(ஆ) இது பற்றிய விவரங்கள் இல்லை.

திரு. க. பாரமலை: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரத்தில் வேலை இல்லாமல் இருக்கிற பட்டதாரிகளில் தமிழைப்பயிற்சி மொழியாகக் கொண்டு படித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லப் படுகிறது. அதற்குக் காரணம் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படித்தவர்களுக்கு வேலையில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற கொள்கை அரசுக்கு இருந்தாலும் அந்தக் கொள்கை சரிவர அமுல்படுத்தப்படவில்லை என்பதால் ஊக்கத் தொகை கொடுத்தும் கூட தமிழைப் பயிற்சிமொழியாக ஏற்று படிக்க மாணவர்கள் முன்வரவில்லை என்று சொல்லப்படுகிறது. இது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யும்போது பயிற்றுமொழி யாது என்ற விவரம் சேகரிக்கப் படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி வந்ததற்குப் பிறகுதான் பயிற்று மொழி பற்றிய விவரத்தையும் சேர்த்து பதிவு செய்யவேண்டுமென்று வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு இப்போது அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் முதலில் பதிவு செய்யட்டும். பிறகு முன்னுரிமை அளிப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏறக்குறைய 1,51,000 இளநிலைப் பட்டதாரிகளும், 39,000 முதுநிலைப் பட்டதாரிகளும் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நாம் வயது வரம்பு நிர்ணயித்திருக்கிறோம். ஒரு காலத்தில் படித்துவிட்டு வந்தவுடனே வேலை கிடைக்கும் நிலை இருந்ததால் ஒரு குறிப்பிட்ட வயதுக்குள் வேலைக்குப் போக வேண்டும், இல்லை என்றால் அது அவர்களுடைய பொறுப்பு என்ற அடிப்படையில் வயது வரம்பு நிர்ணயித்திருந்தோம். ஆனால் இன்றைக்கு வேலை வாய்ப்பே இல்லாமல் பல ஆண்டுகளாக, 10 ஆண்டுகளுக்கும் மேலாகக் கூட இன்டர்வியூ கிடைக்காத நிலைமையில் இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பது அவர்களுடைய பொறுப்பல்ல. எனவே இந்த வயது வரம்பினை மேலும் தளர்த்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெகுவாக இந்த வயது வரம்பு தளர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் இதைத் தளர்த்த வேண்டுமா என்பது பற்றி அரசு பரிசீலிக்கும். இப்போது 35 வயது வரை என்று இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 40 வயது வரை என்று இருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து அரசு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மட்டுமே வேலைக்கான ''இன்டர்வியூ'' அனுப்புகிறார்கள். தமிழகத்தில் இருக்கின்ற தனியார் நிறுவனங்களும் இந்த வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தான் ஆட்களை வேலைக்கு எடுக்கவேண்டுமென்ற நிலை வந்தால் இப்படி வேலை வாய்ப்பில்லாதோருடைய பட்டியலில் உள்ள எண்ணிக்கை குறைய வாய்ப்பு இருக்கும். எனவே அந்த வகையில் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்திருத்தம் தேவை. இந்திய அரசுதான் செய்ய வேண்டும்.





திரு. எ.எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இளநிலைப் பட்டதாரிகளும், முதுநிலைப் பட்டதாரிகளும் கிட்டத்தட்ட 2 இலட்சம் பேர்களுக்கு மேல் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அந்த இரண்டு இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து அவர்களுடைய வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைக்க என்ன நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தைப் பொறுத்த வரையில் யாராவது பட்டியல் கேட்டால் அதனைத் தருகிற இடத்தில்தான் இருக்கிறதே தவிர, வேலை வழங்குவது வேலைவாய்ப்பு அலுவலகம் அல்ல. அது மற்ற நிர்வாகங்கள் செய்கின்ற காரியம். ஆகவே தனிக்கேள்வி போட்டு தக்கவர்களிடத்திலிருந்து விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுக்காகப் பாடுபடக்கூடிய, போர்க்களத்தில் ஈடுபடக்கூடிய இராணுவ வீரர்கள் அவர்கள் வேலையை விட்டுவிட்டு வந்தபிறகு இங்கே அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதற்காகத்தான், இந்த வேலைவாய்ப்பு அலுவலகம், அவர்களுக்குப் பயன்படுவதற்காகத்தான் ஏற்பட்டது. ஆனால் இப்போது படித்தவர்கள், வேலை கிடைக்காதவர்கள் மற்றும் எல்லோரும் வேலை வேண்டுமென்று போய், போர்க்கோலத்தை உருவாக்கக்கூடிய நிலைமை இருப்பதால் இந்தத் துறையினை மாற்றியமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வேலையில்லாதவர்கள் பற்றிய விவரங்களைப் பதிவு செய்கிறோம். யாராவது ஆட்கள் வேண்டுமென்று கேட்கிறபோது உரிய பட்டியலை அனுப்புகிறோம். அந்த அளவில்தான் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பணி இருக்கிறதே தவிர, வேலையினைத் தேடித் தருவது என்கிற முயற்சியில் வேலை வாய்ப்புத்துறை ஈடுபட இயலாது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இளநிலைப் பட்டதாரிகளும், முதுநிலைப் பட்டதாரிகளும் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படித்திருக்கிறார்களா என்பது பற்றிய விவரத்தையும் சேர்த்து, வேலை வாய்ப்பலுவலகங்களில் பதிவு செய்கிறபோது பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பட்டம் பெற்ற மாணவர்களுக்குப் பட்டம் தருகிறபோது அதிலே அவர்கள் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படித்தார்கள் என்பது குறிப்பிடப்படவில்லை. இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படி

அந்த விவரத்தையும் சேர்த்துத் தருகின்ற சூழ்நிலை வந்தால்
தமிழில் படித்த பட்டதாரிகள் என்று அதிகாரிகள் ஏளனம்
செய்கிற சூழ்நிலை வருமே, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்
பட்டிருக்கின்றது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்
களே, தமிழ் படித்தவர்களை ஏளனம் செய்கிற காலம் மலை
யேறி விட்டது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாவட்டங்களில் உள்ள வேலைவாய்ப்
பலுவலகங்களில் இளநிலைப் பட்டதாரிகள்தான் பதிவு செய்து
கொள்ள முடிகிறது. போஸ்ட் கிராஜுவேட்ஸ் என்று சொல்லப்
படுபவர்கள் அத்தனைபேரும் சென்னையில்தான் பதிவு செய்
வதற்கு வசதி இருக்கிறது. சென்னையில் இருக்கின்ற போஸ்ட்
கிராஜுவேட்ஸைப் பொறுத்தவரையில் அவர்கள் அடிக்கடி அதி
காரிகளைக் கவனித்து வேலை வசதி பெறுகின்ற வாய்ப்பு இருக்
கிறது. ஆனால் மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு அந்த
வாய்ப்பு இல்லை. ஆகவே மாவட்டத் தலைநகரங்களில் உள்ள
வேலைவாய்ப்பு அலுவலகங்களில் போஸ்ட் கிராஜுவேட்ஸும்
பதிவு செய்கிற முறை அமலுக்கு வருமா என்பதை நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர்
அவர்களே, அதுபற்றி அரசு ஆராயும். பயிற்றுமொழி பற்றிய
விவரங்களை சம்பந்தப்பட்ட பட்டதாரிகளிடமிருந்து வாய்
மொழியாகக் கேட்டு அறிந்து பதிவேடுகளில் குறித்துக்கொள்ள
சார்நிலை அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்
பட்டுள்ளன.

(முற்பகல் 10-10)

திரு. டி. எம். வெங்கடாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே
வேலைவாய்ப்பலுவலகங்களில் பதிந்து பத்தாண்டுகளுக்கு மேல
கியும் வேலை இல்லாமல் இருப்பவர்களின் நிலைமை குறித்து
அரசு தனிக்கவனம் செலுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.
அதே நேரத்திலே வேலை ஒருவருக்கு அளிக்கின்ற நேரத்திலே
என்ன விகிதாச்சார அடிப்படையிலே நேர்முகத் தேர்வுக்குக்கடிதம்
அனுப்பப்படுகிறது? ஒருவருக்கு 5 அல்லது 10 என்ற விகிதத்தில்
இருக்கிறதா? அது எல்லாத் துறைக்கும் ஒரே நிலையில் இருக்
கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
அவற்றை எல்லாம் மானியக் கோரிக்கையிலே விரிவாக விவாதிக்
கலாம்.



அம்பா சமுத்திரம் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்

249—(* வினா எண் 5678) திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரத்திலுள்ள இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம், அதைச் சுற்றியுள்ள 60,70 கிலோ மீட்டருக்குத் தாண்டித்தான் இந்த நீதிமன்றம் உள்ளது. ஏழை எளிய மக்கள் வழக்குக்குச் செல்ல வேண்டி வந்தால் மிகவும் சிரமப்பட்டுச் செல்ல வேண்டியதோடு முதல் நாளே செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு அம்பாசமுத்திரம் பகுதியில் அந்த முதல் வகுப்பு நீதி மன்றத்தை உருவாக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, சேரன்மாதேவியில் ஒரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பை உயர்நீதி மன்றத்தில் இருந்து அரசுபெற்றிருக்கிறது. அம்பாசமுத்திரத்தை பொறுத்த வரையில் உயர்நீதிமன்றத்தோடு கலந்து ஆலோசித்துப் பிறகு அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. அதை இந்த ஆண்டே அனுமதிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய செயற்குறிப்பைப் பெற்ற பிறகு அது குறித்து அரசுபரிசீலிக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவியில் முன்சீப் கோர்ட் ஆரம்பிக்கப்படும் விவரங்களைச் சொன்னார்கள். முன்சீப் கோர்ட்டுக்குப் பதிலாக எஸ்.டி.எம். கோர்ட்டை அமைக்கும் செயற்குறிப்பை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அது குறித்தும் பரிசீலித்து வருகிறது.

## மாலை நேரக் கல்லூரி வகுப்புகள்.

250—(* வினா எண். 8648) திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாலை நேரக் கல்லூரி வகுப்பு நேரத்தை மாற்றியமைக்க வேண்டி கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலகங்களிலும், அரசுத் துறைகளிலும் பணி புரிபவர்களுக்கு தங்களுடைய கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்வதற்கு வசதியாகத்தான் இந்த மாலை நேரக் கல்லூரிகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டன. முன்பெல்லாம் அலுவலகங்களின் பணி நேரம் மாலை 5 மணியோடு முடிவடைந்ததால் 5½ அல்லது 6 மணிக்குக் கல்லூரிகளுக்குச் செல்ல அவர்களுக்கு வசதியாக இருந்தது. இப்போது வாரத்திற்கு இரண்டு நாள் விடுமுறையோடு மாலை நேரப்பணிநேரம் 5½ வரை என்று ஆகிவிட்டதால், உரிய நேரத்திலே கல்லூரிகளுக்குச் செல்ல முடிவதில்லை. எனவே இவைகளைக் கருத்தில் கொண்டு, கோரிக்கை வரவில்லை என்று சொன்னாலும் 1மணி நேரம் தாண்டி அந்த வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாலை 3 மணிக்குப் பிறகு ஆரம்பிக்கும் நிலை இருக்கிறது. வேண்டுமானால் தற்போது மாலை நேர வகுப்புகளில் படிப்பவர்களுடைய கருத்தையும் அறிந்து அவர்களுடைய வசதிக்கு ஏற்ப அது குறித்து என்ன செய்யலாம் என்று அரசு பரிசீலிக்கும்.

## உசிலம்பட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

251—(*வினா எண். 9503) திரு. பி.கே.எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (District Munsiff Court) ஏற்படுத்த அரசு ஏதும் திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே உசிலம்பட்டியில் முன்சீப் கோர்ட் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். எனவே இந்த நிதி ஆண்டிலாவது, நடப்பு ஆண்டிலாவது ஆரம்பிக்க இருக்கும் நீதிமன்றங்களில் ஒன்றாக இதையும் சேர்த்து ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு தொடர் இனச் செலவு 4 லட்சமும், தொடரா இனச் செலவு 2.13 இலட்சமும் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இது போன்ற கோரிக்கைகள் பல பகுதிகளில் இருந்தும் வந்திருக்கின்றன. இன்றியமையாத தேவை எது என்பதை உயர்நீதிமன்றத்தோடு கலந்து அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கும் நிலை இருக்கிறது. காரணம் நிதிப் பற்றாக்குறை. நிதி நிலைமைக்கு ஏற்ப அரசு இதைப் பரிசீலிக்கும்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, நிதி நிலைமைக்கு ஏற்ப எடுத்துக்கொள்வது என்ற முறை மற்ற பகுதிகளைப் பொறுத்தவரையில் இருந்தாலும்கூட பரவாயில்லை. உசிலம்பட்டியைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகாலமாக இந்தக் கோரிக்கை இருந்து வருகிறது. அங்கு அதிகமான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. பக்கத்தில் இருக்கிற திண்டுக்கல் பகுதியிலிருந்துகூட வழக்குகளை அங்கே நடத்துகிற சாத்தியக்கூறுகள் இருப்பதால் உசிலம்பட்டியில் அந்த நீதிமன்றத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் சொல்கிறோம். அதை அரசு ஏற்று விரைவில் உசிலம்பட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை ஏற்படுத்த ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, கொள்கை அளவில் அந்தப் பகுதியில் இருக்கிற தேவையை அரசு உணர்ந்திருக்கிறது. அங்கே நிச்சயம் டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் வேண்டுமென்பதை அரசு உணர்ந்திருக்கிறது. நிதி நிலைக்கு ஏற்ப கோரிக்கையை ஏற்று விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ச. கோவிந்தசாமி: தலைவர் அவர்களே, சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருச்செங்கோட்டில் நடைபெற்று வருகிறது. அது எப்போது சங்ககிரிக்கு மாற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கொள்கை அரசிடம் இல்லை காரணம் ஒரு இடத்தில் இருக்கிற நீதிமன்றத்தை இன்னொரு இடத்திற்கு மாற்றி அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு இன்னலைத்

நடுவண் அரசினுடைய நோக்கமல்ல. ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியைக் கேட்டு இதே அவையில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் என்ற முறையிலே நீதிமன்றத்தை அமைக்கவேண்டுமென்று அரசு முடிவு செய்து, அதற்கேற்ற நடவடிக்கையை எடுத்து வருகிறது. நிதிநிலைக்கு ஏற்ப எல்லா வட்டத்திற்கும் டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் நீட்டிக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் முதியவர் கல்வி மையம்.

252 (*வினா எண் 9786) திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் முதியவர் கல்வி மையம் எவ்வளவு உள்ளது?

(ஆ) இதன்மூலம் எத்தனை மக்கள் பயன் அடைந்து உள்ளனர்?

(இ) இதற்காக எவ்வளவு தொகை அரசு செலவு செய்து உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 900 வயது வந்தோர் கல்வி மையங்கள்.

(ஆ) இதுவரை மொத்தம் 1,41,180 பேர் பயனடைந்துள்ளனர். 1986—87-ல் இத்திட்டத்தின் மூலம் 27,391 பேர் பயன் அடைந்து வருகின்றனர்.

(இ) மாநில அரசு ரூ. 17,18,598-ம்

நடுவண் அரசு ரூ. 17,07,917-ம்

ஆக மொத்தம் ரூ. 34,21,515 இத்திட்டத்திற்குச் செலவு செய்யப்பட்டுள்ளது.

திரு. ஜே. முகம்மது கனி: தலைவர் அவர்களே, புதுக்கோட்டை ஒன்றியம் மற்றும் கந்தர்வக்கோட்டை ஒன்றியத்திலே இருக்கிற ஆதிதிராவிட மக்கள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பயனடைவதற்கு பல கிராமங்களில் முதியோர் கல்வி மையங்களைக் கேட்கிறார்கள். அந்தக் குறிப்பு அரசிடம் வந்திருக்கிறதா? அப்படியானால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே புதுக்கோட்டை மாவட்டம் மட்டுமல்ல, எல்லாப் பகுதிகளிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டுதான் இந்தத் திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. பட்டிதொட்டிகளிலும் இந்தத் திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இது அங்கே நடந்து வருகிறது.



திரு. ஜே. முகம்மது கனி: தலைவர் அவர்களே, இந்த முதியோர்கள் நாங்களும் பள்ளிகளில் படிக்கிறோமே எங்களுக்கும் சத்துணவு தரப்படுமா என்று கேட்கிறார்கள். அவர்களுக்கும் சத்துணவைத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஏழை முதியவர்களுக்கு ஏற்கனவே சத்துணவுத் திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. வைசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, எழுத்தறிவு இல்லாதவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்கும் முயற்சி மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. முதியோர் கல்விக் கென்று மாலை நேரத்தில் பயிற்சி பெறுவதற்குத் தனியாக நியமனம் செய்வதைத் தவிர்த்து, மாணவர்கள் தகுதி நிர்ணயத்தை அடிப்படையாக வைத்துகூட, மாநிலம் முழுவதும் இருக்கிற பிளஸ் 2 படிக்கிற மாணவர்கள், பட்டப்படிப்பு படிக்கிற மாணவர்கள் கோடைக் காலங்களில் குறிப்பிட்ட முதியவர்களுக்குக் கல்வியறிவைப் புகட்ட வேண்டும், எழுதப் படிக்கச் செய்யவேண்டும் என்கிற ஒரு நியதியை வைத்து, அதையே மாணவர்களின் தகுதியை நிர்ணயிக்க ஒரு அடிப்படையாக வைத்துச் செய்ய அரசு புதிய முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, என்.எஸ்.எஸ்., ஸ்கவுட்ஸ், கைட்ஸ் போன்ற பிரிவுகளில் மாணவர்கள் இதுபோன்ற பணியை மேற்கொண்டு பல்வேறு பகுதிகளில் இது செம்மையாகச் செய்யப்பட்டு வருகிறது.

டாக்டர் ந. மாசிலாமணி: தலைவர் அவர்களே, முதியோர் கல்வித் திட்டத்தை மாநில அரசும் மத்திய அரசும் செயல்படுத்துகின்றன. அதிலே பணியாற்றுகின்ற ஊக்குநர்களுக்கு மாநில அரசு ஒரு ஊக்கத் தொகையும், மத்திய அரசு ஒரு வகையில் ஊக்கத் தொகையும் வழங்குகின்றன. அதிலே வித்தியாசம் இருக்கிறது. எனவே இந்த வித்தியாசத்தை மாற்றுகிற வகையில் மாநில அரசு வழங்குகிற ஊதியத் தொகையை உயர்த்துவதற்கு நம்முடைய அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மத்திய அரசினுடைய நிதி நிலைமை என்னவென்பதும், மாநில அரசினுடைய நிதிநிலைமை என்னவென்பதும் தெரியும். ஆகவே நிதிநிலைமையைப் பொறுத்துத்தான் அரசு இதிலே நடவடிக்கையெடுக்க வேண்டியிருக்கிறது.

[1987 ஏப்ரல் 2

(முற்பகல் 10-40)

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் மொத்தம் எத்தனை முதியோர் மையங்கள் இருக்கின்றன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரத்தைத் தருகிறேன். தற்போது இது குறித்த குறிப்பு என்னிடத்தில் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, முதியோா கல்விமையத்திற்கு முதியோர்கள் ஒழுங்காகவருகிறார் களா என்பதை அறிய ஆஜர் எடுக்கப்படுகிறதா? வருகிறவர் களுடைய எண்ணிக்கையைப் பெருக்குகிற வகையில், அவர்களை உற்சாகப்படுத்த அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? காலாண்டுத் தேர்வு, அரையாண்டுத் தேர்வு, ஆண்டுத் தேர்வு மற்றும் மாதாந்திர தேர்வு போன்ற தேர்வுகளை வைத்து, அவர்கள் எப்படி அந்தத் தேர்வுகளிலே வெற்றி பெறுகிறார்கள் என்று கண்காணிக்கப்படுகிறதா? மேலும் அவர்களுக்கு இலவசக் காலணி, சீருடை வழங்கும் திட்டமும் அரசிடம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறியாமையில் இருக்கிற, ரொம்பவும் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கிற மக்களுக்கு எழுத்தறிவைத் தரவேண்டும் என்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். தேர்வு நடத்தி, அதிலே அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பது இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் அல்ல. இந்தத் திட்டத்தில் பயன் பெறுகிற ஏழை முதியோர்களுக்கு ஏற்கனவே சத்துணவுத் திட்டம் நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு இலவசமாக ஆண்டுக்கு இரண்டு முறை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, அங்கே ஆசிரியர்கள் சரியான முறையிலே, அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அரசு மேல்நிலைப் பள்ளிகளிலே ஆசிரியர் பயிற்சிக்கு என்று புதிதாக வகுப்புகளைத் துவங்கியிருக்கிறார்கள். அதில் படித்த மாணவர்கள், ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் ஓய்வாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு முதியோர் பள்ளிகளில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு கொடுப்பதன் மூலம், இவர்கள் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அப்படிப்பட்ட ஆசிரியர் பயிற்சி பெற்றிருக்கிற மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு கொடுக்கப்படுமா, இந்த மூன்று மாதத்திலே என்பதை அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைச் செம்மையாக நடை முறைப்படுத்த போதிய அளவிற்கு ஊக்குவிப்பதற்குப் பயிற்சி யாளர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையையும் அரசு பரிசீலிக்கும்.

நீதிமன்றங்களிலிருந்து வசூலாகும் கட்டணம்.

253—(*வினா எண். 10223) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதிமன்றங்களில் வசூலிக்கப்படும் கட்டணங்களினால் அரசுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

(ஆ) அக்கட்டணத்தை நீக்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, (அ) 1984-85 ஆம் ஆண்டில் நீதிமன்றங்களில் வசூலிக்கப்பட்ட கட்டணங்களினால் அரசுக்கு ரூ. 8,29,07,000 வருமானம் கிடைத்துள்ளது.

(ஆ) இல்லை.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றங்களிலே இருக்கிற அதிகமான கட்டணத்தின் காரணமாக பல பேர்கள் நீதியைப் பெற முடியாமல் போகிற நிலை இருப்பதால், அந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்காகவாவது அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும், மாநில அரசுகளும் இது குறித்து ஏற்கனவே ஆய்ந்து வருகின்றன. விரைவில் ஒரு முடிவு அறிவிக்கப்படும்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட அளவு வருமானம் இல்லாத மக்களுக்கு நீதிமன்றங்களில் இந்தக் கட்டணம் கட்டப்பட வேண்டாம் என்ற வரைமுறையை வைக்க அரசு முன்வருமா என்பதையும், ஏழை எளிய மக்கள் வசதி இல்லாத காரணத்தால் நீதிமன்றங்கள் வர முடியாமல், அவர்கள் நியாயம் பெற முடியாமல் இருக்கிற நிலையை மாற்றுவதற்கு ஒரு குறைந்தபட்ச வருமானத்தை நிர்ணயம் செய்து, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த பிரிவு மக்களுக்கு இலவச கட்டணச் சலுகை அளிக்கவேண்டும். முழுமையான விதி விலக்கு அளிக்கவேண்டும் என்ற கொள்கை முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அரசு இதை விரைவில் நடைமுறைப் படுத்தும்.

திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஃபிரீ லீகல் எய்டு போர்ட் மூலமாகத் தொடுக்கப்படுகிற வழக்குகளிலே, அந்தக் கட்டணம் கட்டுவது என்பது, 'இன்பார்மல் ஆப்பரேசன்' என்ற முறையில் வழக்குகளைத் தாக்கல் செய்து வருகிறார்கள் அப்படிச் செய்யாமல், லீகல் எய்டு கேஸ்கள் என்றால், அதற்குக் கட்டணமே இல்லாத வகையில் செய்வதற்கு அல்லது அந்தக் கட்டணங்களைச் சீர்திருத்தி அமைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச சட்ட உதவி மூலமாக பயன் பெறுவோர்களுக்கு இத்தகைய சலுகையை அளிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி வகுப்புகள்.

254—(*வினா எண். 10568) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழி போதனா மொழி வகுப்புகளுக்கும் கூடுதல் வகுப்புகளை அரசு அனுமதிப்பதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்புகளைத் துவக்க தற்போது அரசு அனுமதிக்கவில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கிவருகிற பள்ளிகளிலே, ஒரு பிரிவு ஆங்கிலப் பிரிவு இருந்தாலும்கூட, அங்கே மாணவர்கள் கூடுதலாகச் சேர விரும்புகிற அந்த நோக்கத்தைக் காரணமாகக் காட்டி இன்னொரு அடிசனல் பிரிவை உருவாக்கத் தொடங்கினால் அரசு அனுமதிக்கவில்லை என்ற விவரங்களைச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்களும் அதற்கு அனுமதி இல்லை என்று தெரிவ்





னார்கள். உண்மையிலே சில முக்கியமான இடங்களில்
மாவட்டத் தலைநகரங்களில் உள்ள பள்ளிகளில் உள்ள ஆங்கிலப்
பிரிவிலே, ஆங்கிலம் போதனா மொழியாக இருக்கும் பிரிவுகளிலே,
கூடுதல் பிரிவைக் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கவேண்டும்.
காரணம் இப்படிப்பட்ட ஆங்கிலப் பிரிவிலே இடம் கிடைக்காமல்
மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். உதாரணமாகச்சொல்லவேண்டு
மென்றால், மாவட்டத் தலைநகராக உள்ள திண்டுக்கல்லில்
இயங்கி வருகிற எம்.எஸ்.டி. சோலைநாடார் பள்ளி அந்த
மாவட்டம் முழுமைக்கும் இருக்கிற ஒரு பள்ளியாகும். அதிலே
சேர்க்கப்படுகிற 70 மாணவர்களிலே, 40 மாணவர்கள் வேறு
மாவட்டங்களிலே இருந்து வந்து சேர்ந்துவிடுகிறார்கள். அங்கே
500 மாணவர்களுக்கு மேல் ஆங்கில போதனா மொழியில்
சேரவேண்டும் என்று வருகிறார்கள். இப்படிப்பட்ட
சூழ்நிலையை கருத்தில் கொண்டாவது இயங்கி வருகிற பள்ளி
களில் கூடுதல் பிரிவுகளை ஆங்கில வழி போதனா மொழியில்
கொடுப்பதற்கு அரசு வருகிற கல்வி ஆண்டிலாவது பரிசீலிக்குமா
என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பள்ளிப் படிப்பைப் பொறுத்தவரைக்கும்
தாய் மொழியில் தான் பயிற்றுவிக்க வேண்டும் என்பது
அரசினுடைய கொள்கை. அதற்கு ஏற்ப இந்த நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் மாணவர்கள் தமிழ்
பயிற்சி மொழியை, தாய் மொழிப் பயிற்சி மொழியை வேண்டாம்
என்று சொல்லி ஆங்கிலம் தான் வேண்டும் என்று கேட்கின்ற
முறை இருக்கத்தான் செய்கிறது. அது குறித்து அரசு தனியாகப்
பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
(பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகுபேரவைத் தலைவர்
அவர்களே, அகில இந்திய அளவில் திறமைக்கான போட்டித்
தேர்வுகள் நடைபெறும் போது கூட விஞ்ஞானப் பாடங்கள்
எல்லாம் முழுமையாக இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ தான்
நடத்தப்படுகின்றன. அதனால் தமிழகத்தில் இருக்கின்ற
மாணவர்கள் திறமையாக இருந்தால் கூட அந்த ஆங்கிலத்தை
எழுத முடியாத காரணத்தால் அந்த ஆங்கிலப் பயிற்சி மொழியில்
படிக்க முடியாத ஒரு வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படாத காரணத்
தால் இப்படிப்பட்ட திறமைக்கான தேர்வில் கூட வெற்றி
பெறுகிற வாய்ப்பை இழக்கிறார்கள். எனவே, இதைக் கருத்தில்
கொண்டு விஞ்ஞானப் பாடங்களை எல்லாம் பல பள்ளிகளில்
ஆங்கில போதனா மொழியில் பயிற்றுவிப்பதற்கு அரசு வருகிற
கல்வி ஆண்டில் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்கள் கூறுகிற கூற்றில் உண்மையிருக்கிறது. இல்லாமல் இல்லை.

அகில இந்தியப் போட்டிக்குச் செல்கிறபோது தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், எங்கெங்கே எந்தெந்தத் தாய் மொழியில் விஞ்ஞானப் பாடங்களைப் படிக்கிறார்களோ அவர்கள், அந்தத் தேர்வில் குறைந்த மதிப்பெண்கள் வாங்குவதுடன் 'medium of instruction' ஆங்கிலம் என்ற முறையில் இருக்கின்ற பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் அதிகமான எண்ணிக்கையில் மதிப்பெண் களை வாங்குகின்ற நிலை ஆய்வில் இருந்து கண்டு அறியப்பட்டு இருக்கிறது. விஞ்ஞானப் பாடங்களை அந்த அளவுக்குப் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு ஆங்கில அறிவை மாணவர்களுக்கு அதிகமாக ஊட்டுவது அவசியம். இரு மொழிக் கொள்கையை அரசு நடைமுறையில் கடைப்பிடித்து வருகிறது. அதற்கு ஏற்ப நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கில வழி போதனா மொழி வகுப்புகளில் குறைந்தது இத்தனை மாணவர்கள் இருக்கவேண்டும் என்று ஏதாவது விதி இருக்கிறதா? அப்படி எண்ணிக்கை குறைவாக இருக்கிறவகுப்புகள் முதன் முதலாவதாகத் துவக்கப்பட்டு அதற்குப் பின்னால் எண்ணிக்கை குறைந்து இருக்குமானால் அந்த வகுப்புகள் இல்லாமல் போய்விடும் என்று சொல்லுகிறார்கள். அந்த நிலை இல்லாமல் குறைந்தது 15 மாணவர்கள் என்று சொன்னாலும் கூட அடுத்த ஆண்டு வளர்ந்து வருகிற இந்த சமுதாயத்தினைக் கருத்தில் கொண்டு எவ்வளவு மாணவர்கள் இருந்தாலும் துவங்கப் பட்ட அந்தக் கல்வி போதனா மொழி வகுப்புகள் நீடித்து இயங்கு வதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலை ஏற்படவில்லை. பொதுவாக ஆங்கில போதனா மொழி இருக்கவேண்டும் என்ற கோரிக்கை தான் அரசுக்கு அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. ஆனால் தாய் மொழியில் தான் பயிற்சி மொழி என்பது அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. இதை அரசின் மூலம் ஆய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் படிக்கின்ற அனைத்து மாணவர்களும் தமிழைக் கட்டாய மொழிப் பாடமாகப் படிக்கவேண்டும் என்று தனிச் சட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்பு கிறேன். சில பள்ளிகளில் தெலுங்குப் பள்ளிகள், கன்னடப் பள்ளிகளில் இவைகளில் மொழிப் பாடமாகக் கூட தமிழை வைக்க வில்லை என்பதை அரசு அறியுமா? ஆகவே, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற, எங்கே படித்தாலும் அது ஆரம்பக் கல்வி யாக இருந்தாலும், உயர்நிலைக் கல்வியாக இருந்தாலும் மொழிப் பாடமாகத் தமிழைக் கட்டாயம் கற்று ஆகவேண்டும் என்று தனிச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வருமா என அறிய விரும்பு கிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Minority Insitutions are enjoying certain Constitutional rights. அதனால் இதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. இதுகுறித்து அரசு தீர ஆராயும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாய் மொழியில் தான் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை என்று சொன்னார்கள். ஆனால் அதேநேரத்தில் அகில இந்திய அளவில் தேர்வுகள் எழுதும்போது தமிழில் படித்த மாணவர்களுக்கு அதனால் சிக்கல் ஏற்படுகிறது, அவர்கள் திறமை சாலிகளாக இருந்தாலும் கூட தேர்வில் முதலாவதாக இடத்தைப் பெற இயலவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த அடிப்படையில் அரசு தன்னுடைய கொள்கையினை மறு பரிசீலனை செய்து தனியார் பள்ளிகளிலாவது ஆங்கிலத்தை போதனா மொழியாக நீடிக்க அனுமதியை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்கும் ஆங்கிலத்திற்கும் சமமான முக்கியத்துவத்தை நடைமுறையில் அரசு கொடுக்க முடிவு செய்திருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த மட்டில், நாம் இரு மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, எல்.கே.ஜி., யூ.கே.ஜி. என்று பெற்றோர்கள் தங்கள் குழந்தை களை ஆங்கிலம் நன்றாகப் படிக்க வேண்டுமென்று சேர்த்து விடுகிறார்கள். ஐந்தாவது வகுப்பு வரை படித்துவிட்டு, பிறகு உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கும்போது அங்கே ஒரு செக்ஷன் தான் இருக்கிறது. அந்த ஒரு செக்ஷனில் 70, 80 குழந்தைகளைச் சேர்க்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் அப்படி எங்கெல்லாம் அதிகமான அளவில் குழந்தைகள் சேர்க்கப் படுகின்றார்களோ, அதை இரண்டாகப் பிரித்துக் கொடுத்து, ஆசிரியர் போடுகின்ற நிலையை அரசு கொண்டுவருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னேன். பள்ளி ஆசிரியர், மாணவர் மத்தியில் இத்தகைய கோரிக்கை இருந்து வருகிறது. அரசு அதை யோசித்து வருகிறது.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்கள் கீழ் பணியாற்றும் அங்கன்வாடி பணியாளர்கள்.**

255—(*வினா எண். 3848) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (ICDS) பணியாற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு 1–1-1985 முதல் ஊதிய உயர்வை வழங்குவதற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருந்தும் தமிழக அரசு இந்தப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வை வழங்கவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதனை வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) அங்கன்வாடிப் பணியாளர்கள் மட்டுமல்லாமல் நம்முடைய முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திலும் இங்கே இதுபோன்ற பணிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய விகிதத்தை 1-1-1985-ல் இருந்து மாற்றி அமைக்கவேண்டுமென்று ஒரு தாக்கீதையும், அதைப்போலவே 1-7-1986-ல் இருந்து ஊதியத்தினை மேலும் மாற்றி அமைக்கவும் மற்றொரு தாக்கீதையும் மத்திய அரசு அனுப்பியிருக்கிறது. பின்னது அரசினுடைய நிதிநிலைக்கேற்ப நாம் செயல்படுத்துவதற்கு பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணியாற்றுகின்ற அங்கன்வாடி பணியாளர்களுக்கு மத்திய அரசு கொடுக்கின்ற அந்தத் தொகையை வைத்து தாங்கள் தரக் கூடாதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். அதே போன்று முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திலும் பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றால், இவர்களுக்கும் வழங்க வேண்டி வரும். ஆகவே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நான்காவது ஊதியக் கமிஷன் கூட இதுபற்றிச் சொல்லாவிட்டாலும், தமிழக முதலமைச்சர் அவர்கள் அமைப்பாளர்களுக்கு ரூ. 195 ஆகவும், ஆயாக்களுக்கு ரூ. 70 ஆகவும் உயர்த்தியிருக்கிறார்கள்.

திரு. ஆர். ரெங்கசாமி: தலைவர் அவர்களே, மாநில அரசு நடத்தும் திட்டங்களுக்கான உதவித் தொகையை உங்களுடைய நிதியிலிருந்து தரவேண்டும். ஆனால், மத்திய அரசு கொடுக்கின்ற சம்பளத்தைக் கூடத் தருவதில்லை. அதை உடனடியாகத் தரமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் மத்திய அரசுக்கு நாம் ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். பணியாளர் அமைப்பு, அதுபோன்று ஊதிய விகிதம், இவைகளையெல்லாம் அந்தந்த மாநில அரசு மட்டத்திற்கே விட்டுவிடவேண்டுமென்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 5 கேள்விகள் இருக்கின்றன. 7 நிமிடத்தில் முடிக்கவேண்டும்.

**தமிழக முதல்வர் சத்துணவுத் திட்டத்திற்கு தனியார் வழங்கிய நன்கொடை:**

256—(*வினா எண். 7676) திரு. கே. உச்சி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்குத் தனியார் வழங்கிய நன்கொடை எவ்வளவு (1984-85 ஜூன் வரை)?

(ஆ) அது எந்த அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு, ஏப்ரல் 1984 முதல் ஜூன் 1985 வரை தனியார் வழங்கிய நன்கொடை ரூ. 32,09,589.75.

(ஆ) இந்த நன்கொடைத் தொகை ஊராட்சி ஒன்றியங்களில் குழந்தைகள் சத்துணவுக்கூடங்கள் கட்டுவதற்குப் பயன் படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய தொகையில், மிகப் பிரம்மாண்டமான ஒரு திட்டமாக சத்துணவுத் திட்டத்தைத் தமிழக அரசும், புரட்சித் தலைவர் அவர்களும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதிலே பணியாற்றக்கூடிய அமைப்பாளர்களுக்கு ஊதியம் மிகவும் குறைவு என்ற நிலை இருக்கிறது. அதை உயர்த்தித் தர ஏதாவது திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஊதியக் கமிஷனிடம் நம்முடைய சத்துணவுப் பணியாளர்கள் தங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஆனால், அந்த ஊதியக் கமிஷனின் பரிந்துரைகளிலே எதுவும் சொல்லாவிட்டாலும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய நலன் கருதி அவர்களுக்குச் சம்பளத்தைத் தற்போது உயர்த்தியிருக்கிறார்கள்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றக் கூடிய எல்லா அதிகாரிகளுக்கும் மலைப்படி வழங்கப்படுகின்றது. அதேபோன்று இந்த அமைப்பாளர்களுக்கும் மலைப்படியைச் சேர்த்துத்தர குறிப்பு ஏதாவது உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மலைப்பகுதியிலே இருக்கின்றவர்கள் தான் அந்தப் பணியிலே அமர்த்தப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கென்று தனிச் சலுகைத் தேவையில்லை.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற சம்பள விகிதம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இரண்டு விதமான சம்பள விகிதங்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள்.

257—(*வினா எண். 9054)—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை இயங்க வைக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இயங்காமல் உள்ள சங்கங்களை அவைகளின் அருகாமையிலுள்ள செயல்படும் சங்கங்களுடன் ஒருங்கிணைத்து செயல்பட வைக்க தக்க நடவடிக்கையினை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் எடுத்து வருகிறது.

### பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் நல்லாறு அணைக்கட்டு

258—(*வினா எண். 440)—திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி. கந்தசாமி,. திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் நல்லாறு என்னுமிடத்தில் அணைகட்டும் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா



(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் குறித்து பொதுப்பணித் துறையும் தமிழ்நாடு மின்வாரியமும் இணைந்து ஒரு கூட்டு அறிக்கை தயாரித்து வருகிறது. இவ்வறிக்கை அரசுக்கு கிடைத்தபின் இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து கேரள மாநில அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் கீழ் நல்லாறு என்னுமிடத்தில் அணை கட்டுவதன் மூலம் எத்தனை ஏக்கர்கள் பாசன வசதி அடைகிறது? எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்படுகிறது? எப்போது ஆய்வு வேலை முடியும் என்று அறிய விரும்புவதோடு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் மொத்தத்தில் எத்தனை ஏக்கர் பாசன வசதி அடைகிறது, விரிவுபடுத்துவதால் கூடுதலாக எவ்வளவு ஏக்கர் பாசன வசதி அடையும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பு சுமார் 81.50 கோடி ரூபாய் ஆகும். இந்தத் திட்டம் இப்போது ஆய்விலே இருந்துக் கொண்டிருக்கிறது. மின் வாரியமும், பொதுப்பணித் துறையும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியிருப்பதால் இந்தத் திட்டத்தை இரண்டு பேரும் சேர்ந்து ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். இப்போது மொத்தம் நான்கு இலட்சத்து இருபதாயிரம் ஏக்கர் பாசன வசதி பெற்றுக்கொண்டிருக்கிறது, இதன் மூலமாக இப்போது கிடைக்கின்ற அந்த பாசன வசதி உறுதி செய்யப்படும்.

### சித்தேரி ஏரிக்கு மஞ்சினை ஓடையிலிருந்து புதிய கால்வாய்.

259—(* வினா எண். 3961)—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்தேரி ஏரிக்கு மஞ்சினை ஓடையிலிருந்து புதிய கால்வாய் வெட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திருமதி தா. இராசாம்பாள் : தலைவர் அவர்களே, இந்த சித்தேரி ஏரிக்கு எந்தவிதமான வரத்து வாய்க்காலும் இல்லாத காரணத்தினால் எல்லா நேரத்திலும் இந்த சித்தேரி ஏரி நீர்ப்பிடிப்பு இல்லாமல் இருந்து வருகிறது. ஏற்கனவே அங்கே மழை நீரைத் தேக்குகின்ற ஒரு சூழ்நிலை இருந்தது. இப்போது அதுவும் இல்லாத நிலையில் அங்குள்ள நிலங்களை பட்டா செய்து கொடுத்துவிடுவதால் எந்தவித நீர்வரத்தும் இல்லாமல் இருக்கிறது. ஏறக்குறைய 100 ஏக்கர் பரப்புள்ள இந்த ஏரி 200 ஏக்கருக்கு மேற்பட்ட 250 ஆயக்கட்டுக்காரர்களை உள்ள டக்கிய இந்தப்பகுதிக்கு மஞ்சினி ஓடையிலிருந்து புதியதாக ஒரு வாய்க்கால் வெட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த கண்மாய்க்கு வசிஷ்ட்டா நதியிலிருந்து காட்டுக்கோட்டை மற்றும் தலைவாசல் ஆகிய இரண்டு அணைகள் மூலமாக தண்ணீர் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அதிகாரிகள் கொடுத்த புள்ளி விவரத்தின்படி பார்ப்போமானால் ஒரு வருஷம் தவிர மீதிவருஷம் ஏறக்குறைய 70%, 80% அளவுக்கு அங்கே விவசாயம் நடந்திருக்கிறது. ஓடையிலிருந்து இங்கே தண்ணீர் கொண்டு வருவதென்றால் நடுவிலே 53 அடி அளவிற்கு உயரமான நிலப்பரப்பு இருக்கிறது. அதை வெட்டி கால்வாய் அமைப்பதற்கு மிக அதிகமான பணம் செலவாகும் என்பதால் அதை அரசு ஏற்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

### பெரியகுளம் வட்டம் மஞ்சளாறு நீர்த்தேக்கம்.

260—(*வினா எண். 5638) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பெரியகுளம் வட்டம் மஞ்சளாறு நீர்த்தேக்கத்தில் மண்மேடு பரவி நீர் கொள்ளளவு குறைவதைத் தடுக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

டாக்டர் த. முகம்மது சலீம் : தலைவர் அவர்களே, மஞ்சளாறில் உள்ள கேச்மெண்ட் ஏரியா என்று சொல்லக்கூடிய மஞ்சளாறு அணையில் தண்ணீர் தேங்கக்கூடிய இடத்தில் தனியார்கள் நிலப்பரப்பை ஆக்கிரமித்து, அதை தங்களுடைய விவசாயிகளைக் கொண்டு நடத்தி, மேலே இருந்து வருகின்ற தண்ணீரை அணை போட்டு அணைக்கு வராமல் தடுப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், இதுகுறித்து அரசு எந்தவித நடவடிக்கை எடுத்திருக்கிறது என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் அரசினுடைய கவனத் திற்கு வரவில்லை. அப்படிப்பட்ட தவறு நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சரியாக எழுதி கொடுத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

### கேரள மாநில ஆலடியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டம்.

261—(* வினா எண் 13397)—திரு. க. சோலைராசு மற்றும் திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரள மாநிலம், ஆலடியிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) கேரளாவிலிருந்து வேறு திட்டங்கள் மூலம் தண்ணீர் தமிழ்நாட்டிற்கு கொண்டு வரும் சாத்தியக் கூறுகள் உண்டா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கேரளா மற்றும் தமிழக மாநிலங்களிடையே ஏற்படுத்தப்பட்ட நதிநீர் உடன்பாட்டில் ஏற்கனவே பெரியார் படுகை இடம் பெற்றுள்ள தால், திரு. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் மத்திய அரசால் நியமிக்கப் பெற்ற தொழில்நுட்பக் குழு 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் அளித்த தனது அறிக்கையில் பெரியார் படுகையைச் சேர்த்துக்கொள்ளவில்லை. 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மத்திய பாசனத் துறையால் ஏற்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த குழுவின் ஆய்வு எல்லைக்கு, கேரளாவிலுள்ள வாமனாபுரம், அச்சன்கோயிலாறு மற்றும் கல்லடா படுகைகள் மட்டுமே உட்படுத்தப்பட்டது. எனவே, பெரியாறு படுகையிலுள்ள உபரி நீரை கேரளாவிலுள்ள ஆலடியிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டுவரும் இவ்வரசின் செயற்குறிப்பினை இக்குழுவினால் பரிசீலிக்க இயலாது என மத்திய நீர்வளக் குழு தற்பொழுது தெரிவித்ததுள்ளது.

(ஆ) ஆம்.

(முற்பகல் 11-00)

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தத் திட்டம் மட்டும் அரசினுடைய பரிசீலனையிலே இல்லை என்று சொல்லியிருக் கிறார்கள். 2-12-1982 அன்று நம்முடைய தமிழக அரசினுடைய ஆணையர் மற்றும் செயலர் மாதவ சர்மா அவர்கள் கேரள அரசு தனிச் செயலர் அவர்களோடு இரு முனைப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும், இத்திட்டத்தை பரிசீலனையில் எடுத்துத்

கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்றும் தகவல் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு சென்ட்ரல் வாட்டர் கமிஷன் இதற்கு எழுதுகிற பதிலிலே, இத்திட்டத்தை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று விரைவாக அதற்குரிய சில தாக்கீதுகள் வரவில்லை என்று சொன்னார்கள். தமிழக அரசினுடைய துணைச் செயலாளர் திரு. மான்சிங் அவர்கள் எழுதியிருக்கிற பதிலில் இத்திட்டத்தைக் குறித்து சென்ட்ரல் வாட்டர் கமிஷனுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம் என்று எழுதியிருக்கிறார்கள். இதிலுள்ள விவரங்களில் ஏதாவது முரண்பாடு இருக்கிறதா அல்லது ஏதாவது இத்திட்டம் வருவதற் குரியசாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்தமட்டிலும், இத்திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கருதுகிறது. அதன்மூலமாக நமக்கு இலாபம் இருக்கும் என்ற எண்ணத்தோடு, இத்திட்டத்தை வற்புறுத்திக்கொண்டும் தொடர்ந்து அதற்கு வேண்டிய, முயற்சிகளை எல்லாம் செய்து கொண்டும் இருக்கிறோம். ஆனால் கேரளாவிலே நீர்த்தேக்கத் திட் டத்திற்கும், பெரியார்நீர்த்தேக்கத் திட்டத்திற்கும் நடுவிலே இந்த ஆலடித் திட்டம் இருக்கிறது; இடுக்கி நீர்த்தேக்கத் திட்டத்தை மிகப்பெரிய அளவில் கட்டி மின்உற்பத்தி செய்துகொண்டிருக்கிற காரணத்தால், அங்கே 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் அந்தத் தண்ணீர் வெள்ளமாகப் போகிறது; ஆகவே, குறைவான நீர்த் தேக்கத்தண்ணீர்தான் அங்கே இருக்கிறது; ஆகவே ஆலடித திட்டத் திற்கு நாங்கள் ஒப்புதல் கொடுக்க முடியாது என்று சொல்லி கேரள அரசு மறுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

அரசு மூலம் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ள கிராமங்கள்

வினா 559—திரு. த. புஷ்பராஜ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் எத்தனை கிராமங்களுக்கு அரசு மூலம் தொலைக்காட்சி பெட்டி வழங்கப்பட்டுள்ளது?

விடை—

31–5–1986 வரை 5,218 ஊராட்சிகளுக்கு 5,264 சமுதாயத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.



குப்பைப்பட்டியில அடி குழாய் அமைத்தல்

2—வினா 2240—திரு மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், சிறுகுடி பஞ்சா யத்து குப்பைப்பட்டியில் குடிநீர் கஷ்டம் நீங்க 'அடி பைப்' போட அரசு திட்டமிட்டுள்ளதா?

விடை—

இல்லை, இக்கிராமத்தில் ஒரு அடி குழாயும், ஒடுக்கம்பட்டிக் கிராமக் குடிநீர்த் திட்டத்திலிருந்து ஒரு பொதுக் குழாயும் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. எனவே இக்கிராமத்திற்கு மற்றுமொரு அடி குழாய் அமைக்க திட்டமேதும் தற்போது இல்லை.

அந்தோணிமுத்து கொட்டத்தில் புதிய அடிகுழாய் அமைத்தல

3—வினா 2247—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, கூவனூத்து பஞ்சாயத்து, அந்தோணி முத்து கொட்டத்தில் உள்ள அடிகுழாய் மூலம் போதுமான குடிநீர் வராதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய அடி பைப் நிறுவ அரசு முன் வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கூவனூத்து பஞ்சாயத்திலுள்ள அந்தோணிமுத்து கொட்டம் புதிதாக அமையப்பெற்ற கிராமமாகும். இங்கு திறந்த வெளிக் கிணறொன்று போதுமான அளவு குடிநீருடன் உள்ளது. கிராமங்களின் தற்போதைய குடிநீர் வசதிபற்றியும், மாநிலத்தி லுள்ள நீராதாரங்கள் குறித்தும் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தினர் மறு ஆய்வொன்றினை மேற்கொண்டுள்ளனர். இந்த ஆய்வின் போது மேற்படி கிராமம் குடிநீர் பற்றாக்குறை யானதென கண்டறியப்பட்டால் அருகிலுள்ள நீராதாரங்களின் துணை கொண்டு மேலும் குடிநீர் வசதி செய்துதர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் நடவடிக்கை மேற்கொள்ளப் படும்:

[1987 ஏப்ரல் 2

### கோட்டைகாரன் பட்டியிலுள்ள அடிகுழாயை பழுதுபார்த்தல்

4—வினா 2260—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், கணவாய் பட்டி பஞ்சாயத்து. கோட்டைக்காரன்பட்டியில் உள்ள அடிகுழாய் பழுதடைந்துள்ளது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பழுது பார்த்து குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆம்: வறட்சி நிவாரணத்தின்போது இக்கிராமத்தில் போடப்பட்ட ஒரு ஆழ்குழாய் கிணறு தூர்ந்துவிட்டது. அதைத் தூரெடுத்து அடிகுழாய் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இக்கிராமம் வகை 6—ன் கீழ் அமைந்துள்ளது. மாநிலத்தி லுள்ள நீராதாரங்கள் குறித்து தமிழ்நாடு குடிநீர்—வாரியத் தினர் மேற்கொண்டுள்ள மறு ஆய்வின்போது இக்கிராமம் குடிநீர் பற்றாக்குறையுள்ளதாகச் கண்டறியப்பட்டால் அருகிலுள்ள நீராதாரங்களைக் கொண்டு குடிநீர் வசதியைப் பெருக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

### கட்டப்புளிப்பட்டியில் அடிகுழாய் அமைத்தல்

5—வினா 22[illegible]—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், சின்னமுளையூர் கட்டப்புளிப்பட்டியில் குடிநீருக்காக அடிகுழாய் போட்டுத்தர அரசு முன்வருமா?

விடை—

இல்லை. நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், சின்ன முளையூர் கிராமம் வகை 6—ல் உள்ளது: ஒன்றியத்தால் கட்டப் பட்ட 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி ஒன்று நல்லமுறையில் இங்கு இயங்கிக்கொண்டிருக் கிறது.

கட்டப்புளிப்பட்டி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிராமமாகும் இக்கிராமத்தில் திறந்த வெளி கிணறு ஒன்று உள்ளது. அதிலிருந்து மக்கள் தங்களுக்குத் தேவையான குடிநீரைப் பெற்றுக் கொள்கின்றனர். மேலும் இக்கிராமம் சின்னமுளையூர் கிராமத்திற்கு வெகு அருகில் இருப்பதால் மக்கள் சின்னமுளையூர் கிராமக் குடிநீர் திட்டத்தில் அமைந்துள்ள பொதுக் குழாய்களின் வழியாக குடிநீர் பெற்றுக் கொள்கின்றனர். இக்கிராமத்திற்குக் குடிநீர் வசதி செய்வதற்கான திட்டம் ஏதுமில்லை.



1987 ஏப்ரல் 2]

மேலும் மாநிலத்திலுள்ள நீராதாரங்கள் குறித்து மறு ஆய்வொன்றினை தமிழ் நாடு குடிநீர்—வடிகால் வாரியத்தினர் மேற் கொண்டுள்ளனர். ஆய்வின்போது இக்கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறையாயுள்ளதாகக் கண்டறியப்பட்டால், அருகிலுள்ள நீராதாரங்களைக் கொண்டு குடிநீர் வழங்குவதற்கான நட வடிக்கைகளை தமிழ் நாடு குடிநீர்—வடிகால் வாரியம் மேற் கொள்ளும்.

### பரளிபுதூரில் குடிநீர் வசதி அமைத்தல்

6—வினா 2267—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் பரளிபுதூரில், குடிநீர் வசதிக்காக போர்வெல் போட அரசு முன்வருமா?

விடை—

இல்லை. நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், பரளிபுதூர் கிராமத்தில் மூன்று அடிகுழாய்கள் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இக்கிராமம் வகை 6—ல் உள்ளது. தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மறு ஆய்வின்போது இக்கிராமம் குடிநீர் பற்றாக்குறை யுள்ளதாகக் கண்டறியப்பட்டால், தேவையான குடிநீர் வசதி செய்து தர திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

### பூனூத்தில் மேல்நிலைத் தண்ணீர் தொட்டி அமைத்தல்

7—வினா 3324—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், கல்வார்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த பூனூத்தில் உள்ள கிணற்றின் அருகே மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டி, அருகே உள்ள கருதியகவுண்டன்பட்டி சேரி, அய்யாக்கவுண்டன்புதூர், சிங்கிளக்காம்பட்டி ஆகிய ஊர்களுக்கு குடிநீர் கொண்டு செல்லக் கேட்டு அரசுக்கு விண்ணப்பம், வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை. இந்தக் குடியிருப்புகளுக்குத் தேவையான குடிநீர் வழங்க போதிய வசதி செய்யப்பட்டுள்ளது.

பேரூர் தொகுதியில் முதியோர் உதவித்தொகை கேட்டு விண்ணப்பித்தோர் எண்ணிக்கை

8—வினா 4326—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் பேரூர் தொகுதியில் முதியோர் உதவித் தொகை கேட்டு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எத்தனை பேருக்கு வழங்கப்பட உள்ளது

விடை—

(அ) மற்றும் (ஆ): பேரூர் தொகுதியில் 1984–85 ஆம் ஆண்டில் முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வரப்பெற்ற மனுக்கள் மற்றும் அனுமதிக்கப்பட்டவை விவரம் பின் வருமாறு:—

| | | வரப்பெற்ற மனுக்கள். | அனுமதிக்கப் பட்டவை. |
|---|---|---|---|
| 1 | முதியோர் உதவித் தொகை சாதாரணம். | 309 | 218 |
| 2 | ஆதரவற்ற விதவைகள் உதவித் தொகை. | 113 | 89 |
| 3 | ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை. | 36 | 32 |
| 4 | ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் உதவித் தொகை. | 45 | 44 |
| | மொத்தம் .. | 503 | 383 |

வெள்ளளூர் மயானப் பாதையைச் செப்பனிடல்.

9—வினா 4357—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வெள்ளளூரில் உள்ள மயானப் பாதை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் குறுக்கே உள்ள வாய்க்காலில் பாலம் கட்டி அப்பாதையை செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

(அ) ஆம்.



(ஆ) கோவை மாவட்டம், வெள்ளளூர் பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள மயானத்திற்குச் செல்லும் பாதை தனியாருக்குச் சொந்தமான பாதையானதால், இப்போதைய அரசு திட்டம் மூலம் செப்பனிட இயலவில்லை.

கள்ளர் சீரமைப்புத்துறை மூலம் மகளிர் பல்தொழிற் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம்.

10—வினா 4386—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் கள்ளர் சீரமைப்புத் துறை மூலம் மகளிர் பல்தொழிற்பயிற்சி கல்லூரி ஏற்படுத்த திட்டமிட்டுள்ளதா?

விடை—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் கள்ளர் சீரமைப்புத் துறை மூலம் மகளிர் பல்தொழிற்பயிற்சி கல்லூரி ஏற்படுத்த திட்டம் ஏதும் இல்லை.

நத்தம் தொகுதி கிராமங்களுக்கு குடிநீர் வசதி.

11—வினா 4431—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், வேலம்பட்டி கிராமம், துவராபதியில் குடிநீர் வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் வசதி செய்து தரப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வகை 6-ன் கீழ் அமைந்துள்ள இக்கிராமத்தின் தற்போதைய மக்கட்தொகை 385, இடைக்கால மக்கட்தொகை 443 மற்றும் உச்சக்கட்ட மக்கள் தொகை 500 ஆகும். தற்பொழுது திறந்த வெளிக் கிணறு ஒன்றினை ஆதாரமாகக் கொண்டு 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி ஒன்று ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டு வருகிறது. இந்த வேலை முடிந்தவுடன், இக்குடிநீர் மக்களுக்கு வழங்கப்படும்.

12—வினா 4435—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், செந்துறை பஞ்சாயத்து நல்லபிச்சம்பட்டியில் குடிநீர் வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிக்கான குடிநீர் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

(அ) செந்துறை பஞ்சாயத்து நல்லபிச்சம்பட்டியில் ஒரு அடிகுழாய் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதைததவிர நான்கு திறந்த வெளிக் கிணறுகள் உள்ளன. மக்கள் இவைகளிலிருந்து தங்களுக்குத் தேவையான குடிநீரை பெற்றுக் கொள்கின்றனர்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

13—வினா 4438 திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், சாத்தம்பாடி கிராமத்தில் குடிநீர் வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது 'அடி பைப்' போடப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): நத்தம் ஒன்றியம், சாத்தம்பாடி கிராமத்திற்கு தற்போது ஊராட்சி ஒன்றியத்தினால் கட்டப் பட்டுள்ள 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி மூலம் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இக்கிராமம் வகை எண் 6—ன் கீழ் உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மாநிலத்திலுள்ள நீராதாரங்கள் குறித்த மறு ஆய்வின்போது, இக்கிராமம் குடிநீர் பற்றாக்குறையுள்ளதாகக் கண்டறியப் பட்டால் அருகிலுள்ள நீராதாரங்களின் துணை கொண்டு இங்கு குடிநீர் வசதியை மேம்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

பொ. மெய்யூர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் நியமனம்

14—வினா 4654—திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருக்கோயிலூர் ஒன்றியத்தில் உள்ள பொ. மெய்யூர் உயர்நிலைப் பள்ளியில் போதிய ஆசிரியர்கள் இல்லாததை அரசு அறியுமா?



(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருக்கோயிலூர் ஒன்றியத்தில் பொ. மெய்யூர் என்ற ஊரில் உயர்நிலைப் பள்ளி ஏதுமில்லை. அவ்வூரில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. அங்கு ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரப்படி 5 ஆசிரியர்கள் பணிபுரியலாம். தற்போது 4 ஆசிரியர்கள் பணியிடங்கள் அப்பள்ளிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அப்பணியிடங்களில் பணிபுரிந்த 4 ஆசிரியர்களில் ஒருவர் திண்டிவனம் கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த வானூர் ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டதால் அப்பணியிடம் தற்போது காலியாக உள்ளது. காலியாக உள்ள அந்த இடத்தை நிரப்ப நியமன அலுவலரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பழகல் ஊராட்சி மன்றத்தால் செலுத்தப்படும் மின் கட்டணம்.

15—வினா 4752—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தொகுதியில் பழகல் ஊராட்சி மன்றத்தில் மின் கட்டணம் கட்டாத காரணத்தால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பழகல் பேரூராட்சிக்கு வழிவகை முன்பணமாக ரூ 15,000 அனுமதிக்கப்பட்டு மின் இலாகாவிற்கு பேரூராட்சி ரூ. 15,141.50 செலுத்தி, இணைப்புகள் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் தேதி அன்று திரும்ப பெறப் பட்டன.

நெல்லை மாவட்டத்திலுள்ள ஊட்டச்சத்து மற்றும் மகளிர் நலத்துறை.

16—வினா 4795—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் ஊட்டச்சத்து மற்றும் மகளிர் நலத்துறைகளில் பதவி உயர்வு புறக்கணிக்கப்பட்ட வர்களின் சார்பில் 1984-85 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திற்கு ஏதேனும் கோரிக்கைகள் வந்ததுண்டா?

(ஆ) ஆம் எனில், அவை என்ன நிலையில் உள்ளன?

விடை—

(அ) நெல்லை மாவட்டத்தில் ஊட்டச்சத்து மற்றும் மகளிர் நலத் துறைகளில் 1984-85 ஆம் ஆண்டுகளில் பதவி உயர்வில் எவரும் புறக்கணிக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நெடுஞ்சாலைத் துறை அலுவலகங்கள்.**

17—வினா 4925—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலம் முழுவதும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் நெடுஞ்சாலைத் துறை அலுவலகங்கள் எத்தனை?

(ஆ) ஆண்டுக்கு அரசு வாடகையாகக் கொடுக்கும் தொகை எவ்வளவு?

விடை—

(அ) மற்றும் (ஆ) : விவர அட்டவணை * இணைக்கப்பட்டுள்ளது.

**கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மூலம் வசூல் செய்யப்பட்ட சிறு சேமிப்புத் தொகை.**

18—வினா 4983—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் மேலூர் சட்டமன்றத் தொகுதி கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மூலம் 1983-84, மற்றும் 1984-85 ஆம் ஆண்டில் வசூல் செய்யப்பட்ட சிறு சேமிப்பு எவ்வளவு?

விடை—

மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்றத் தொகுதி கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மூலம் 1983-84, மற்றும் 1984-85 ஆம் ஆண்டில் வசூல் செய்யப்பட்ட சிறு சேமிப்புத் தொகை முறையே ரூ. 12,21,250 மற்றும் ரூ. 13,38,953 ஆகும்.

---

*372ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



**மல்லிகுந்தம் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி அமைக்கும் திட்டம்.**

19—வினா 5192 திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் மல்லிகுந்தம் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி செய்து தரும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ): அத்தகைய செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**மல்லிக்குந்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள்.**

20—வினா 5193— திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம் மல்லிக்குந்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் எந்த நிலையில் உள்ளன?

(ஆ) அவை எப்போது நிறைவேற்றி முடிக்கப்படும்?

விடை—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம் மல்லிக்குந்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நவீன விளையாட்டுத் திடல் அமைத்தல்**

21—வினா 5358—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நவீன விளையாட்டுத் திடல் அமைக்க அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட சிமெண்ட்.

22— வினா 5480—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1984–85-ல் உற்பத்தியான சிமெண்டின் அளவு என்ன?

(ஆ) தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட சிமெண்ட்டின் அளவு என்ன?

விடை—

(அ) தமிழகத்தில் 1984–85-ல் 38,47,143 மெ. டன் சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தமிழகத்திற்கு 1984 ஆம் ஆண்டில் முதல் மூன்று காலாண்டிற்கு 1,52,000 மெ. டன்கள் வீதமும் நான்காவது காலாண்டிற்கு 1,62,700 மெ. டன்கள் வீதமும், லெவி சிமெண்ட் ஒதுக்கப்பட்டது. இது தவிர குடிநீர் வடிகால் திட்டங்களுக்காக 9,628 மெ. டன்கள் லெவி சிமெண்ட் ஒதுக்கப்பட்டது.

1985-ம் ஆண்டில் ஒவ்வொரு காலாண்டிற்கும் 1,62,700 மெ. டன்களும் மற்றும் குடிநீர் வடிகால் திட்டங்களுக்காக ஒவ்வொரு காலாண்டிற்கும் 9,628 மெ. டன் லெவி சிமெண்ட்டும் ஒதுக்கப்பட்டது. இது தவிர, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 20,000 மெ. டன்கள் லெவி சிமெண்ட் சிறப்பு ஒதுக்கலும், இலங்கை அகதிகளுக்கு வீடு கட்டுவதற்காக 4,000 மெ. டன்களும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### கருங்கல் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கட்டிட வசதி.

23—வினா 5696—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கருங்கல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கட்டடங்கள் இல்லாத காரணத்தால் மாணவர்களின் சேர்க்கை விகிதம் குறைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?



விடை—

(அ) மற்றும் (ஆ) : இப்பள்ளியில் மாணவர் எண்ணிக்கை குறைந்துள்ள விவரம் தற்போது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டத் தேவையான கருத்துருக்களைப் பெற பள்ளிக் கல்வி இயக்குநர் அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### சித்தாபுதூரிலுள்ள பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு ஊழியர்கள் நியமனம்.

24—வினா 5750—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாநகரம், சித்தாபுதூரில் உள்ள பெண்கள் உயர்நிலைப்பள்ளி செயல்பட ஆரம்பித்தது முதல் நாளது நாள் வரை பள்ளிக்குத் தேவையான வாட்சுமேன், ஸ்வீப்பர், எழுத்தர் போன்ற ஊழியர்கள் கொடுக்கப்படாமலிருந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கோயம்புத்தூர் மாநகராட்சியின் சித்தாபுதூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்குத் தேவையான பணி இடங்களை தோற்றுவிக்க மாநகராட்சியின் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### கிராமியக் கலைஞர்களுக்கு உதவும் திட்டம்.

25—வினா 5830—திரு. க. சோலைராசு : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமியக் கலைஞர்களுக்கு அரசு உதவ திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன உதவிகள் செய்துள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) (1) நலிவடைந்த நிலையிலுள்ள கிராமியக் கலைக் குழுக்களுக்கு ஆடை அணிகலன்கள், இசைக் கருவிகள், மேடைப் பொருள் வாங்கவும், புதிய படைப்புகள் உருவாக்கவும் அரசு மானியம் அளித்து வருகிறது.

(2) ஆண்டுதோறும் கிராமியக் கலைஞர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து 'கலைமாமணி' விருதும் பொற்கிழியும் பண முடிப்பும் வழங்கி கௌரவித்து வருகிறது.

(3) ஆண்டுதோறும் சுமார் 200 வறுமையால் வாடும் வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ. 150 வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் வாயிலாக இது வரையில் தமிழகமெங்கும் 1,767 வயோதிகக் கலைஞர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இதில் சுமார் 100 முதிய கிராமியக் கலைஞர்கள் பயனடைந்து வருகின்றனர்.

திருப்பூர் தொகுதி மங்கலத்திலுள்ள நெடுஞ்சாலை.

26—வினா 5835—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதிக்குட்பட்ட மங்கலத்தில் உள்ள நெடுஞ்சாலை மிகவும் பழுதுபட்டு பள்ளமாகக் கிடப்பதோடு கழிவு நீர் வடிகால் இன்றி இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுது பார்க்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத் திற்கு உட்பட்ட மங்கலம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சாலை நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்ததாகும். திருப்பூர்–சோம னூர் சாலையின் ஓரத்தில் கழிவு நீர் தேங்காமல் இருப்பதற்கு 1985–86 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 60,000 மதிப்பீட்டில் 335 மீட்டர் நீளத் திற்கு சாக்கடை கட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 150 மீட்டர் நீளத்திற்கு சாக்கடை கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 185 மீட்டர் நீளத்திற்கு சாக்கடை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

வரதட்சணைக் கொடுமையால் நடந்த கொலைகளின் எண்ணிக்கை.

27—வினா 6071—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழகத்தில் 1983 முதல் 1985 வரை வரதட்சணைக் கொடுமையால் நடந்த கொலைகள் எத்தனை?

(ஆ) கொடுமைப்படுத்தியதாக காவல் துறையினர் போட்ட வழக்குகள் எத்தனை?

(இ) அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) தமிழகத்தில் 1983 முதல் 1985 வரை வரதட்சணைக் கொடுமையால் நிகழ்ந்த மொத்த மரணங்கள் (தற்கொலை மற்றும் கொலை உட்பட) வருட வாரியாக கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1983 ஆம் வருடம் | 4 பேர் |
| 1984 ஆம் வருடம் | 18 பேர் |
| 1985 ஆம் வருடம் | 40 பேர் |

(ஆ) வரதட்சணைக் கொடுமை சம்பந்தமாக காவல் துறையினர் போட்ட வழக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1983 ஆம் வருடம் | 5 வழக்குகள் |
| 1984 ஆம் வருடம் | 9 வழக்குகள் |
| 1985 ஆம் வருடம் | 66 வழக்குகள் |

(இ) வரதட்சணைக் கொடுமையால் உயிர் இழக்கும் பெண்கள் பற்றி விசாரிக்கவும் வரதட்சணை கொடுமை பற்றிய வழக்குகளில் விசாரணை மேற்கொள்ளவும், காவல் பிரிவு ஒன்று தற்போது தமிழகத்தில் நடைமுறையில் உள்ளது. வரதட்சணை சம்பந்தப்பட்ட வழக்குகளில் விசாரணையை மேற்கொள்ள அனைத்து மாவட்டங்களிலும் சென்னை நகரிலும் சிறப்பு குழுக்கள் (வரதட்சணை வழக்குகள்) தலா ஒன்று என்ற விகிதத்தில் உடனடியாக இயங்க பணித்துள்ளது. மேலும், இக் குழுக்கள் ஒவ்வொன்றும் ஒரு ஆய்வாளரின் கீழ் இயங்குமெனவும் வழக்குகள் விசாரணை செய்வதற்காக இக்குழுக்கள் காவல் நிலையங்களாகக் கருதப்படலாமெனவும் இதற்கென தற்போதுள்ள எண்ணிக்கையிலிருந்து ஒரு ஆய்வாளரையும், அவருக்கு கீழ் இயங்க கூடுதல் காவல் பணியாளர்களையும் உடன் நியமிக்கலாமெனவும் பரிந்துரை செய்யப்பட்டு அதன்படி தற்போது இயங்கி வருகின்றன.

எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் புதிதாக படுக்கைகள் அமைத்தல்.

28—வினா 6187—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை படுக்கைகள் புதிதாக அமைக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 250 படுக்கைகள்.

பேரூர் தொகுதியிலுள்ள குறிச்சி ஹவுசிங் யூனிட் வீடுகள்.

29—வினா 6212 —திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பேரூர் தொகுதியிலுள்ள குறிச்சி ஹவுசிங் யூனிட் வீடுகள் ஐந்து ஆண்டுகள் பணம் செலுத்தியவர்களுக்கு கிரயம் செய்து தரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேருக்கு கிரயம் செய்து தரப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பொய்யாம்பட்டியிலிருந்து வீரசிங்கம்பட்டி வரை சாலை அமைத்து மெட்டல் போடுதல்.

30—வினா 6919—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் பொய்யாம்பட்டியிலிருந்து வீரசிங்கம்பட்டி வரை 6 பர்லாங் தூரம் சாலை அமைத்து மெட்டல் ரோடு போட்டுத்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

நத்தம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பொய்யாம்பட்டியிலிருந்து மேற்படி ஒன்றிய எல்லை வரை (கி.மீ. 7/6) சாலை போடப்பட்டு மெட்டல் போடும் வேலை நடைபெற்று வருகிறது. பின்னர் ஒன்றிய எல்லையிலிருந்து, அதாவது பொய்யாம்பட்டியிலிருந்து வீரசிங்கம்பட்டி வரை உள்ள பகுதி (சுமார் 1.6 கி.மீ.) தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலமாக உள்ளது. ஆதலால் இத்தனியார் சாலையை ஊராட்சி ஒன்றியம் மூலமாக மேம்பாடு செய்ய இயலாது.



கோவை—கூடலூர் நெடுஞ்சாலையிலுள்ள புளிய மரங்கள்

31—வினா 7343 :—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கோவை மாவட்டம், வட கோவை, கூடலூர் மாநில நெடுஞ்சாலையில் காரமடை எல்லை வரை சாலையின் இருபுறமும் மாநில அரசுக்குச் சொந்தமான புளியமரங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் மூலம் மாநில அரசுக்கு வருட வருமானம் எவ்வளவு?

விடை—

(அ) மொத்த புளிய மரங்களின் எண்ணிக்கை: 1,380

(ஆ) வருட வருமானம் : ரூ. 34,811

—Number of alleged bootleggers arrested during the year 198

32 வினா 7376 திருமதி பா. வளர்மதி

Will the Hon the Minister for Touris m, prohibition and Electricity be plcased to state—

The total number alleged bootleggers arrested during the year 1985 (till September, 1985) by the prohibition Enforcement Wing in the Madras city and beit areas

விடை—

| (1) | சென்னை நகரம் (2) | செங்கல் பட்டு கிழக்கு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| ஆண் .. | 3,482 | 3,336 | 6,818 |
| பெண் .. | 2,758 | 1,648 | 4,406 |
| இளங்குற்றவாளிகள் (jeveneils) | 262 | 80 | 342 |
| மொத்தம் | 6,502 | 5,064 | 11,566 |

காமராசர் மாவட்டத்தில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி துவங்கும் திட்டம்.

33—வினா 7400—திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

காமராசர் மாவட்டம், கட்டனூர் மற்றும் ஏ. முக்குளத்தில் ஆதி திராவிட மாணவர்களுக்காக 1986–87 ஆம் ஆண்டில் விடுதி துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

1986–87ஆம் ஆண்டில் பல்வேறு மாவட்டங்களில் பதினைந்து (15) புதிய விடுதிகள் துவக்க அரசு ஆணையிட டுள்ளது. அந்தப் பட்டியலில் காமராஜர் மாவட்டம், கட்டனூர் மற்றும் ஏ. முக்குளம் மாணவர் விடுதி இடம் பெறவில்லை.

**பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் இணை விரிவுரையாளர்கள் எண்ணிக்கை.**

34—வினா 7408:—திரு. க. பாரமலை: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்திலுள்ள அரசு மற்றும் நிதி உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் (Associate Lecturers) மொத்தம் எத்தனை பேர்?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

| | |
|---|---|
| (அ) தமிழகத்தில் உள்ள அரசு பொறியியற் கல்லூரிகளில் பணிபுரியும் இணை விரிவுரையாளர்கள் எண்ணிக்கை (31–12–1985 அன்று நிலவரப்படி) | 178 |
| நிதி உதவி பெறும் தனியார் பொறியியற் கல்லூரிகளில் பணிபுரியும் இணை விரிவுரையாளர்கள் எண்ணிக்கை (31-12-1985 நிலவரப்படி) .. .. .. | 102 |
| ஆகமொத்தம் .. | 280 பேர் |

அதில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் விபரம்—

| | |
|---|---|
| (ஆ) அரசு பொறியியற் கல்லூரிகளில் | 13 |
| நிதி உதவி பெறும் தனியார் பொறியியற் கல்லூரிகளில் | 1 |
| ஆக மொத்தம் .. | 1 |

**பழையனூரில் அரிசன மாணவர்களுக்கு விடுதி வசதி.**

35—வினா 7411—திரு. க.பாரமலை: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மானாமதுரை வட்டம் பழையனூரில் அரிசன மாணவர்களுக்கு ஹாஸ்டல் 1986–87ஆம் ஆண்டில் திறக்க அரசு முன்வருமா?

விடை—

பல்வேறு மாவட்டங்களில் 15 இடங்களில் 1986–87 ஆம் ஆண்டில் ஆதி திராவிட மாணவ/மாணவியர்கள் விடுதி துவங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. அந்தப் பட்டியலில் பழையனூர் இடம் பெறவில்லை.

**வணிச்சம்பட்டியில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி மூலம் குடிநீர் வழங்கல்.**

36—வினா 7499—திரு.செ. செம்மலை: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தார மங்கலம் யூனியன், நுட்டம்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட வணிச்சம்பட்டியில் ஒரு மேல் நிலை குடிநீர்த் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

வணிச்சம்பட்டி குடியிருப்பின் மக்கட் தொகை 439 ஆகும். இங்கு ஏற்கனவே இரண்டு கைப்பம்புகள் போடப்பட்டுள்ளன. இக்குடியிருப்பின் மக்கட் தொகைக்கு இவ்வசதி போதுமானதாகும். மேல்நிலைத் தொட்டி கட்டும் உத்தேசம் எதுவும் இல்லை.

**நீலகிரி மாவட்டததிலுள்ள குழந்தைகளுக்கான நூலகங்களின் எண்ணிக்கை.**

37—வினா 7645—திரு. சே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள குழந்தைகளுக்கான நூலகங்கள் எத்தனை?

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் எத்தனை நூலகங்கள் உள்ளன?

(இ) மேலும் அதிகரிக்க அரசு முன்வருமா?

விடை—

(அ) தனியாக குழந்தைகளுக்கு மட்டும் நூலகம் ஏதும் இல்லை. ஆனால் மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்களில் குழந்தைகளுக்கென தனிப் பிரிவுகள் செயல்படுகின்றன. அவ்வாறு செயல்படும் மாவட்ட மைய நூலகங்கள்—10, கிளை நூலகங்கள்—8.

(ஆ) 39

(இ) தற்போதைக்கு இல்லை.

**ஜெயங்கொண்டம் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.**

38—வினா 7820—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு நிதி ஒதுக்கீடு எவ்வளவு?

(இ) கட்டிடம் கட்டுமானப் பணி எப்போது துவங்கும்?

விடை—

(அ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

**ஆடுதுறை பேரூராட்சியிலுள்ள அரசினர் மருத்துவமனையை விரிவு படுத்தல்.**

39—வினா 8342—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறை பேரூராட்சியில் உள்ள அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தவும், பெண் மருத்துவர் ஒருவரை நியமிக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): அத்தகைய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

**மூங்கில் ஊரணி காலனிக்கு தெரு மின்விளக்கு அமைத்தல்.**

40—வினா 8410—திரு. க. பரமலை: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—



மானாமதுரை ஒன்றியம், மானாமதுரைக்குச் சமீபமாக உள்ள மூங்கில் ஊரணி காலனிக்கு தெரு மின்விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

மூங்கில் ஊரணி காலனிக்கு தெருவிளக்கு கோரி விண்ணப்பம் ஏதும் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை.

**பட்டு வளர்ச்சிக்கு வெளிநாட்டு உதவி.**

41—வினா 8479—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டு வளர்ச்சிக்கு வெளிநாட்டு உதவி ஏதேனும் கிடைக்கிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் மகளிர்களுக்கென தனியாக வேலை வாய்ப்பு உருவாக்கும் வகையில் பட்டு வளர்ச்சித் திட்டங்களுக்கு ஃபோர்டு பவுன்டேஷன் 2.80 அமெரிக்க நாட்டைச் சார்ந்த இலட்சம் டாலர் நிதி ஒதுக்கியுள்ளது. இந்திய அரசும் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளதால், ஃபோர்டு பவுன்டேஷன் நிதி உதவியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**காடம்பாறை அணைக்கட்டில் தண்ணீர் கசிவதைத் தடுத்தல்**

42—வினா 8389—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காடம்பாறை அணைக்கட்டில் தண்ணீர் கசிவு ஏற்படுவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

காடம்பாறை அணைக்கட்டில் தண்ணீர் கசிவு ஏற்படுவதை குறைக்க காடம்பாறை அணை நீர்த் தேக்கப் பகுதியில் செரி ஊட்டப்பட்ட 'எபாக்சி' (EPOXY) கொண்டு கட்டுமான இணைப்புக்காரை பூசப்பட்டது.

**கொள்முதல் செய்த நெல்லுக்கு ஊக்க போனஸ்**

43—வினா 8454—திரு. எஸ். இராசாராமன்; மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1-11-1985-க்கு முன் கொள்முதல் செய்த நெல்லுக்கு ரூ. 15 ஊக்க போனஸ் கொடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

(அ) 1—10—1985 முதல் (1—11—1985-க்கு முன்) காவிரி டெல்டா பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு இடுபொருள் மான்யமாக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 20 மதிப்புள்ள உரக்கூப்பன் வழங்கப்பட்டது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் புதிய சிறைச்சாலைகள் அமைத்தல்.

44—வினா 8667—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் புதிய சிறைச்சாலைகள் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

தற்போது மத்திய சிறை மற்றும் கிளைச் சிறைகளின் அமைப்பு சாதாரண நிலையில்தான் உள்ளது. தற்போது உள்ள ஏற்பாடுகள் புதிய மாவட்டங்களில் நன்முறையில் இயங்கி வருகின்றன. ஆகவே, தற்போது தமிழ்நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் புதிய சிறைச்சாலைகள் கட்டும் உத்தேசம் ஏதும் இல்லை.

மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல் வாரியாகப் பெற்றுள்ள தொகை.

45—வினா 8684—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984-85 ஆம் ஆண்டு மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல் வரியாக எவ்வளவு ரூபாய் பெற்றுள்ளன?

விடை—

1984-85 ஆம் ஆண்டில் நூலக ஆணைக் குழுக்கள் மொத்தம் ரூ. 1,44,32,052 (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து நான்கு லட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து ஐம்பத்து இரண்டு மட்டும்) நூலக வரியாகப் பெற்றுள்ளன.



ஜெயங்கொண்டம் தொகுதியில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகை.

46—வினா 8812—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் 1984–85, 1985-86 ஆகிய ஆண்டுகளில் NREP திட்டத்தில் எவ்வளவு நிதி செலவிடப்பட்டது?

(ஆ) NREP திட்டத்தின் மூலம் கட்டிய கட்டிடங்கள் எத்தனை?

(இ) எவ்வளவு நிதி செலவிடப்பட்டது?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ): 1984–85 மற்றும் 1985-86-ம் ஆண்டுகளில் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செலவு செய்யப்பட்ட நிதி, முடிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை மற்றும் இவற்றுக்கான செலவு பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு. | செலவிடப் பட்ட நிதி. | முடிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை. | கட்டிடங் களுக்கான செலவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | (ரூபாய் இலட்சத்தில்). |
| 1984–85 .. | 8.29 | 41 | 2.26 |
| 1985–86 .. | 9.42 | 23 | 2.73 |

47—வினா 8814—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1984–85-ம் நிதியாண்டில் NREP திட்டத்தில் எவ்வளவு நிதி செலவிடப்பட்டது?

(ஆ) NREP திட்டத்தின் மூலம் கட்டிய கட்டிடங்கள் எத்தனை? எவ்வளவு நிதி செலவிடப்பட்டது?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதியிலுள்ள தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1984-85-ம்

[1987 ஏப்ரல் 2

ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் அவற்றுக்கான செலவு விவரம் பின்வருமாறு:—

| செலவிடப்பட்ட நிதி. | கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள். | கட்டடங்களுக்காக செலவு செய்யப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (ரூபாய் இலட்சத்தில்). | | (ரூபாய் இலட்சத்தில்). |
| 8.75 | 45 | 5.01 |

48—வினா 8819—டாக்ட ந. மாசிலாமணி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1985-86-ம் நிதியாண்டில் NREP திட்டத்தில் எவ்வளவு நிதி செலவிடப்பட்டுள்ளது?

(ஆ) NREP திட்டத்தின் மூலம் கட்டிய கட்டிடங்கள் எத்தனை? எவ்வளவு நிதி செலவிடப்பட்டது?

விடை—

(அ) மற்றும் (ஆ): 1985-86-ம் நிதியாண்டில் ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட நிதி, முடிக்கப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றுக்கான செலவு விவரம் பின்வருமாறு:—

| செலவிடப்பட்ட நிதி. | முடிக்கப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை. | கட்டடங்களுக்கான செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (ரூபாய் இலட்சத்தில்). | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 10.59 | 29 | 3.01 |

**நேசமணி மற்றும் கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகங்களில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள்.**

49—வினா 8846—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—



1987 ஏப்ரல் 2]

நேசமணி போக்குவரத்துக் கழகம்/கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் 1984-85 ஆண்டுகளில் எத்தனை தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்—

(அ) விபத்து சம்பந்தமாக.

(ஆ) பயணச் சீட்டு ஒழுங்கீனம் சம்பந்தமாக.

(இ) வேலைக்கு வருகை தராமை, இதர குற்றச்சாட்டுகள்.

விடை—

பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் விவரம் கீழ் வருமாறு:—

| | க.போ.க. | | நே.போ.க. | |
|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1984 | 1985 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) விபத்து சம்பந்தமாக | 7 | .. | 3 | 8 |
| (ஆ) பயணச் சீட்டு ஒழுங்கீனம். | 5 | 10 | 4 | 13 |
| (இ) வேலைக்கு வருகை தராமை, இதர குற்றச்சாட்டுகள். | 11 | 13 | 8 | 15 |
| மொத்தம் .. | 23 | 23 | 15 | 36 |

**கடலூரிலுள்ள சேவை இல்லத்தில் பயன்பெறும் பெண்கள்.**

50—வினா 9079—திரு. துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம் : மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூரில் செயல்படும் சேவை இல்லத்தில் பயன்பெறும் பெண்கள் எத்தனை பேர்?

விடை—

கடலூரிலுள்ள சேவை இல்லத்தில் பயன் பெறும் பெண்களின் எண்ணிக்கை—125.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் வண்ணப் பூச்சுகளின் மீது சுண்ணாம்பு பூசுவதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. குறளரசு பாரதி அவர்கள் இங்கே, நான் தேர்ந்தெடுக்கப்பட்ட காஞ்சிபுரம் தொகுதியிலே உள்ள பெரிய கோயில் ஏகாம்பரேசுவரர் கோயிலைப் பற்றி, தினமணி பத்திரிகையிலேயும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலேயும் வந்த ஒரு செய்தியை, அந்தத் தவறான தகவலை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 35 ஆண்டுகளுக்கு முன்னாலே காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலுக்கு வெள்ளித் தேர் செய்யப்பட்டது. அந்த வெள்ளித் தேர் செய்யப்பட்ட இடம் ஆயிரக்கால் மண்டபம். ஆகவே 30 ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கே வெள்ளை அடிக்கப் பட்டிருக்கலாம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். நானும் நேரடியாகச் சென்று பார்த்தேன். ஆனால், அங்கே இப்போது தான் வெள்ளை அடிக்கப்பட்டதாகவும், அதே நேரத்தில் அங்கே பணியாற்றுகின்ற குருக்களுக்கு ஊதியங்கள் வழங்கப்படவில்லை என்றும்கூட, அந்தப் பத்திரிகைகளிலே வந்ததை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குருக்களுக்கு அங்கே ஊதியம் வழங்கப் படுவது கிடையாது. அங்கே வசூலாகின்ற பணத்தில் ஒரு பகுதியைத்தான் அவர்களுக்குப் பங்காகக் கொடுக்கிறார்கள். ஆகவே, ஒரு தவறான தகவலை வெளியிட்ட அந்தப் பத்திரிகை மீது நிர்வாகம் வழக்குத் தொடர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட செய்திகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கின்ற நேரத்திலே அது சரிதானா என்று நேரடியாகச் சென்று பார்த்து விட்டு வந்து இங்கே சொல்லவேண்டும். புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள ஆலயங்களை எல்லாம் சீராக்கவேண்டும்; குளங்களை எல்லாம் சீர்படுத்த வேண்டும் என்கிற நல்ல காரியங்களைச் செய்கின்ற நேரத்தில், அந்தப் பத்திரிகையும், இந்த உறுப்பினரும் இப்படி தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

### (ஆ) மதுரையில் குடிநீர்த் தட்டுப்பாடு.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு.... (குறுக்கீடு)

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, எனக்கு வாய்ப்புக் கொடுங்கள்...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன் முத்துராமலிங்கம் முடிக்கட்டும். நான் வரிசையாகக் கூப்பிட்டுக் கொண்டு வருவேன்.







திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மதுரை மாநகரில் கடுமையான ......(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் பேசும் போது அவர் அவையில் இல்லை, (குறுக்கீடு) அவைக் குறிப்பில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. தங்கவேலு, உங்கள் இடத்தில் போய் அமரவேண்டும். திரு. பொன் முத்துராமலிங்கம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மதுரை மாநகரில் கடுமையான .....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடித்தவுடன் உங்களை அனுமதிக்கிறேன். அதில் ஒன்றும் தவறில்லை. நான் அவரைப் பேச அழைத்துவிட்டேன். முடிக்கட்டும். ஒரு நிமிடத்தில் ஒன்றும் ஆகப் போவதில்லை. (குறுக்கீடு)

திரு. பொன் முத்துராமலிங்கம் ; மதுரை மாநகரத்தில் கடந்த 10 நாட்களாக கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. தாய்மார்கள் எல்லாம் தெருவுக்கு வந்து பேருந்துகளை மறித்துப் போராட்டம் நடத்துகின்ற அடிப்படையிலேயும், தாய்மார்கள் எல்லாம் சாலையை மறித்துக் கொண்டு தொடர் போராட்டம் நடத்துகின்ற அடிப்படையிலேயும்......(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தெய்வநாயகமும் சேர்ந்தே கேட்கலாம். திரு. தெய்வநாயகத்தின் பெயரையும் இணைத்துக் கொள்கிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : சாலையிலே அமர்ந்து போராட்டம் நடத்தி, பல மணிநேரங்கள் கழித்து...... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இன்று மானிய கோரிக்கை வருகிறது. அதிலே எல்லாவற்றையும் சேர்த்துப் பேசி விடலாம். தண்ணீர் பிரச்சினை தானே? மானியக் கோரிக்கையிலே பேசும் போது பேசலாம். (குறுக்கீடு)

திரு. பொன் முத்துராமலிங்கம் : தாய்மார்கள் இன்றைக்கு ரோடுகளிலே.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எழுப்பியதும் ரெக்கார்ட் ஆகி இருக்கிறது. அனுமதித்து விட்டேன். அமைச்சர் அவர்கள் பேசும்போது பதில் சொல்வார்கள். (குறுக்கீடு)

[1987 ஏப்ரல் 2

திரு. பொன் முத்துராமலிங்கம் : இந்தப் போராட்டம்
தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. குடிதண்ணீர் பஞ்சம்
அங்கே கடுமையாக இருக்கிறது. மாநகராட்சியிலே ஆணையாளர்
இல்லை. இந்த அவலமான சூழ்நிலையை உடனடியாகப்
போக்கவேண்டும்; உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். பதிலை
இப்போதே தந்து அது பத்திரிகையிலே வந்தால்தான் மதுரை
மாநகரத்து மக்களுக்கு ஆறுதலாக இருக்கும். எனவே விளக்கம்
வேண்டுமென்று பேரவைத் தலைவர் மூலமாக கேட்டுக்
கொள்கிறேன்.

(அ) காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் வண்ணப் பூச்சுகளின்
மீது சுண்ணாம்பு பூசப்படுவதாகக் கூறப்படுவது குறித்து—தொடர்ச்சி.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத்
தலைநாயகர் அவர்களே, நம்முடைய வணக்கத்திற்குரிய
உறுப்பினர் திரு. பாலாஜி அவர்கள் தனிப்பட்ட முறையில்,
சொல்லாத கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.
நான் அதைச் சொல்லத் தயாராக இல்லை. நான் பிறந்தது
காஞ்சி மாநகரத்தில். அவர்களைவிட காஞ்சியைப்பற்றி
எனக்கு நன்றாகத் தெரியும். நானும் செங்கற்பட்டு
மாவட்டத்தில் இருக்கிற உறுப்பினர்தான்.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதிரி வார்த்தை
யெல்லாம் நல்லது அல்ல. இதையெல்லாம் யார் கேட்டார்கள்?
காஞ்சிபுரம்தான் உலகத்திலிருக்கிறவர்களுக்கெல்லாம் சொந்தம்
ஆயிற்றே.

திரு ஜி. கே. ஜெ. பாரதி : பேரவைத் தலைநாயகர்
அவர்களே, ஏகாம்பரநாதருடைய கோயிலில் நானும் ஒரு
அமைச்சரும் அந்த இடத்தைப் பார்த்தோம். தினமணியில்
வந்த கருத்துக்களை வைத்து நான் பார்க்கவில்லை. நானே
பார்த்தேன். அங்கே வண்ணப்பூச்சுகள் அழிக்கப்பட்டிருக்
கின்றன. வரலாற்றுச் சிறப்புடைய அதிலே சுண்ணாம்பு
அடித்திருக்கிறார்கள். சுண்ணாம்பு அடித்திருப்பதால் 5 ஆம்
நூற்றாண்டு ஓவியங்கள் பாழ்பட்டிருக்கின்றனவே அதை மீண்டும்
பெற முடியுமா? அதைப் பாதுகாக்க வேண்டாமா என்றுதான்
கேட்டிருக்கிறேன். அங்கேயுள்ள பூசாரிக்குச் சம்பளம் கொடுக்க
வில்லை என்று சொன்னார்கள். அதுபற்றி நான் கேட்கவும்
இல்லை, பேசவும் இல்லை. ஆகவே சொல்லாத கருத்துக்களை
யெல்லாம், தவறாகச் சொல்லுவது மாண்புமிகு உறுப்பினருக்கு
அழகல்ல. வரலாற்றுச் சிறப்புடைய கோயில்களிலே......
(குறுக்கீடு) அவர் கருத்தை திரும்பப் பெற்றுக் கொள்ள
வேண்டும் — (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு உறுப்பினர்களும்
பேசி இருக்கிறீர்கள். இதிலே நான் என்ன தீர்ப்பை அளிப்பது?
(குறுக்கீடு) என்ன தீர்ப்பு வழங்குவது. நீங்களே சொல்லுங்கள்
(குறுக்கீடுகள்).



1987 ஏப்ரல் 2]

(இ) பத்திரிகையாளர் மாடத்தில் இருக்கை மாற்றம்.

திரு. இ. மனோகரன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்
அவர்களே, உங்களது மேலான கவனத்திற்கு ஒரு செய்தியைக்
கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு முன்பு மகிழ்ச்சியோடு
ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த 10, 15 நாட்களாக
மிக அமைதியாக, பொறுப்பாக, இந்த அவையில் இருக்கிற
உறுப்பினர்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்
தங்களது கருத்துக்களை எடுத்து வைத்து உங்கள் பளுவையும்
சிரமத்தையும் பெருமளவுக்குக் குறைத்திருக்கிறார்கள் என்பதை
நீங்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான்
நம்புகிறேன். எனக்கு இன்றைக்கு கிடைத்திருக்கிற செய்தி,
தமிழ்நாடு சட்டமன்ற பத்திரிகையாளர் மாடத்தில் இருக்கை
மாற்றம் செய்தல் சம்பந்தமாக.. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மாண்புமிகு நாஞ்சில்
அவர்களுக்குச் சொல்கிறேன். இது என்னுடைய ஆளுகைக்கு
உட்பட்டது. பார்வையாளர்கள் மாடம், அதிகாரிகள் மாடம்,
பத்திரிகையாளர் மாடம் போன்றவையெல்லாம் என்னுடைய
ஆளுகைக்கு உட்பட்டவை. அவற்றை சில நிலைமைகளுக்கு ஏற்ப
மாற்றுவது வழக்கம் (குறுக்கீடு) நான் ஒன்றும் செய்ய முடியாது
(குறுக்கீடு) உண்மையிலேயே செய்ய முடியாது. (குறுக்கீடு) நான்
உங்களைக் கேட்கிறேன். எந்த அடிப்படையில் நீங்கள்
பேசுகின்ற பத்திரிகைகளுக்கு இங்கே இடம் ஒதுக்கப்பட்டது?
இதை நான் கேட்க வேண்டுமா? இத்தனை ஆண்டுக்காலம்,
இந்து பத்திரிகைக்கும் இல்லை, எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கும்
இல்லை. தினமணிக்கும் கிடையாது; தினத்தந்திக்கும் கிடையாது;
டி.வி.க்கும் கிடையாது; ஏ.ஐ.ஆர்.க்கும் கிடையாது. (குறுக்கீடு)
இதையெல்லாம் நான் சொல்லவேண்டுமா? நம்முடைய ஏ.ஐ.ஆர்.
நண்பர்களும், டி.வி. நண்பர்களும் என்னிடம் வந்து எங்களுக்கு
முன் வரிசையில் இடம் ஒதுக்குங்கள் என்று கேட்டார்கள்.
(குறுக்கீடு) பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கும்போது
சர்க்குலேஷனைப் பார்த்து ஒதுக்கி இருக்கவேண்டும். முன்பே
அதைச் செய்து இருக்கவேண்டும். காலந்தாழ்த்தி செய்வது
தவறா? (குறுக்கீடு) பொதுமக்களுக்குப் போய் சேரக்கூடிய
காரியங்களை செய்யக்கூடிய பத்திரிகைகளை வரிசைப்படுத்தி
இருக்கிறேன். (குறுக்கீடு) இதை நீங்கள் கேட்கவே அவசியம்
இல்லை. நான் ஏதாவது செய்தால் அதில் பொது மக்களுக்கு
ஒரு நன்மை இருக்கும் என்று கருதிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)
திரு. மலர்மன்னன் பேசாதீர்கள் (குறுக்கீடு) நான்தான் பேசிக்
கொண்டிருக்கிறேன். இது என்னுடைய அலுவல் சம்பந்தப்பட்ட
பிரச்சினை. எனவே இதை ஒரு பிரச்சினையாக உருவாக்க
வேண்டாம். இது பிரச்சினையே இல்லை....

(முற்பகல் 11-10)

திரு. இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் பகுதிகள் அனைத்தும் உங்களது ஆளுகைக்

[திரு. இ. மனோகரன்] [1987 ஏப்ரல் 2

குட்பட்டவை என்பது எனக்குத் தெரியும். அந்த உரிமை
உங்களுக்கு உண்டு என்றும் தெரியும். 1971 ஆம் ஆண்டிலிருந்து
இரண்டாவது இடத்திலிருந்த 'முரசொலி' நிருபர் துடரெலறு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நானும்
கேட்கிறேன். 1971-ல் எப்படி அங்கே வந்தது? இப்போது
நான் அங்கே 'அண்ணா' பத்திரிகையையா போட்டிருக்கிறேன்?
அதையல்லவா போட்டிருக்க வேண்டும், 1977-ல். ஆக அது ஒரு
பிரச்சினையே அல்ல. அதை யோசியுங்கள். 'அண்ணா'
பத்திரிகை பின்னால்தான் இருக்கிறது. மக்களுக்கு செய்தியை
அதிகமாகத் தருகிற பத்திரிகைகளை வரிசைப்படுத்தியிருக்கிறேன்.
இதைக்கூட நான் செய்யவில்லை என்றால் 1971 ஆம் ஆண்டு
சபாநாயகரே இங்கே அமர்ந்திருக்கலாம். மக்களுக்கு
அதிகமான செய்தியைக் கொடுக்கிற பத்திரிகைகளை வரிசைப்
படுத்தியிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் கேட்க முடியாது.
(குறுக்கீடு)

It is not your right; it is my power, I say. இது முறையல்ல
(குறுக்கீடு). 1971 ஆம் ஆண்டிலே எந்த அடிப்படையில் முரசொலி
பத்திரிகைக்கு இந்த இடம் ஒதுக்கப்பட்டது? ஆளுகிற கட்சியாக
இருந்தது. அப்படியானால் ஒரு பத்திரிகை ஆளுகிற
கட்சியை ஒட்டி இருந்தால்தான் இங்கே அமர முடியும்? (குறுக்கீடு)
இங்கே கட்சியில்லை. அது தேவையில்லை (குறுக்கீடு)
அதை இங்கே பேசக்கூடாது. பேசுவது முறையல்ல. (குறுக்கீடு)
1971 ஆம் ஆண்டு வந்தது. 1977 ஆம் ஆண்டு போயிருக்க
வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் 1977 ஆம் ஆண்டு அங்கே
இருந்தீர்கள். இப்போது அங்கே இருக்க முடியுமா?
(குறுக்கீடு) அது முறையல்ல. என்னுடைய அறைக்கு வாருங்கள்.
இது என்னுடைய அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினை
(குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வாருங்கள். திரு.
ரகுமான்கான் இதைக் கேட்க முடியாது. நான் செய்யாமல்
இருந்ததற்குப் பாராட்டிவிடுங்கள். 10 ஆண்டுகளாக உங்களை
அனுமதித்து இருக்கிறோம். (குறுக்கீடு) மக்களுக்குப் போக
வேண்டிய செய்தி வேகமாகப் போய்ச் சேரவில்லை. இனி
போய்ச் சேர வேண்டும். அதற்காகத்தான் இட மாற்ற ஏற்பாடு.
(குறுக்கீடுகள்) நான் மதிப்போடு சொல்லுகிறேன். அதோடு
சொல்லுகிறேன், வேறு எந்தப் பிரச்சினையையும் இங்கே
உருவாக்க வேண்டாம். இது பிரச்சினையே இல்லை (குறுக்கீடு)
இது தவறு அல்ல. அரசியல் உள்நோக்கம் அல்ல. அரசியல்
உள்நோக்கம் என்றால் 'முரசொலி பத்திரிகை' அவையின்
நடவடிக்கைகளை — நான் இங்கே எக்ஸ்பஞ்ச் பண்ணுகிற
விவரங்களையெல்லாம் போட்டிருக்கிறது. அதற்காக நான்
நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். காழ்ப்புணர்ச்சி என்றால்
நான் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இங்கேயிருந்து அதை
வெளியேற்றி இருக்க வேண்டும். விலக்கப்பட்டிருக்க வேண்டும்.



1987 ஏப்ரல் 2] [பேரவைத் தலைவர்]

நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் (குறுக்கீடு) இங்கே இரண்டு
நாட்களுக்கு முன்பாக ஆனந்த விகடன் பத்திரிகையின் மீது
எழுப்பப்பட்ட பிரச்சினையைக் குறித்து அது ஒரு பக்கம்
எழுதியிருக்கிறது. (குறுக்கீடு) உங்களையும் சேர்த்துத்தான் நான்
சொல்லுகிறேன், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் தான்
பாதுகாப்பு தருகிறேன், யாருடைய மரியாதையை நான்
காப்பாற்றுகிறேன் என்றால் இங்கே இருக்கிற 224 சட்டமன்ற
உறுப்பினர்களின் மரியாதையை நான் பாதுகாத்துக் கொண்டிருக்
கிறேன். ஆனால் அதற்கு ஒரு பக்க விளம்பரம் (குறுக்கீடு)
காழ்ப்புணர்ச்சி என்றால் அதற்கு நான் நடவடிக்கை எடுத்திருக்க
வேண்டும். ஆனால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை.
(கூச்சல்-குறுக்கீடு) திரு. ரகுமான்கான் இதை விட்டுவிடுங்கள்
(குறுக்கீடு). 10 ஆண்டுக்காலம் பெரிய மனது வைத்து
விட்டிருக்கிறார்கள்.

திரு. இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அமருவது
நல்லது (குறுக்கீடு). வார்த்தைகளைப் பேசாமல் இருப்பது
நல்லது. தயவு செய்து நீங்கள் பேசினால் நானும் பேச வேண்டி
வரும். அதனால் பிரச்சினையை உருவாக்க வேண்டாம்.
(குறுக்கீடு) உங்கள் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார்.
ஒரு முறையைக் கையாளுங்கள். சட்டமன்றம் என்றால்
ஒரு முறையைக் கையாளுங்கள். இதைப் பார்த்து
விட்டுத்தான் சில மஞ்சள் பத்திரிகைகள் நாள்தோறும் எழுதிக்
கொண்டிருக்கின்றன. நம்மை வைத்துப் பிழைப்பை நடத்து
கிறார்கள். (குறுக்கீடு) இது முறையல்ல. நீங்கள் அமருங்கள்.
அதற்காகத்தான் சொல்லுகிறேன். (குறுக்கீடு) பேசக் கூடாது.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே
இரண்டு தினங்களாக அவையில் நடைபெறுவதைப் பற்றி நான்
ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் இங்கே பேசிக் கொண்டி
ருக்கிற நேரத்தில் பலரும் சபையிலே இருந்து ஒரே நேரத்தில்
பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்சியினுடைய தலை
வருக்கு முன் வரிசையில் ஓர் இடம் ஒதுக்கப்பட்டு அங்கேயிருந்து
அவர் பேசுகிறார். அப்படிப் பேசிக் கொண்டிருக்கின்றபோது
பின் இருக்கையில் இருந்து மூன்று, நான்கு பேர் ஒரே நேரத்தில்
எழுந்து நின்று பேசுவதும், இது போன்று பல முறை சபையின்
நேரத்தை எடுத்துக் கொண்டு இருப்பதும் சரிதானா? இதற்கு
ஒரு முறையான தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்கிறேன்.

இனிமேல் இந்தச் சபையில் முறையாக இந்தச் சபையினுடைய விதிமுறைகளைக் கடைபிடித்து, பல பெரியவர்கள் தந்த பல்வேறு உறுதிமொழிகளின் அடிப்படையில் மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள்தான் பேசுகின்ற போது அவருக்குப் பின்னால் இருந்து பேசுகின்றவர்களை அமர வைத்துவிட்டு தன்னுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்ல வேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உறுப்பினர் பேசும் போது இன்னொரு உறுப்பினர் பேசுவது முறையல்ல, விதிக்கு அப்பாற்பட்டு பேசுவது சரியல்ல. ஒவ்வொருவருக்கும் வாய்ப்புக் கொடுத்துக்கொண்டு தான் வருகிறேன்.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் சொல்லியதைப் போல கட்சியின் தற்காலிகத் தலைவனாக இங்கே இயங்கிக் கொண்டிருக்கிற நான் பேசும் போது என்னாலேயே தனியாகப் பேச முடியும் என்ற நம்பிக்கை இருக்கும்போது மற்றவர்கள் சத்தம் போட வேண்டிய அவசியமில்லை, சத்தம் போடமாட்டார்கள் என்று உறுதியளிக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என் அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினை. என்னுடைய அறையில் உட்கார்ந்து பேச வேண்டிய பிரச்சினை. இதை அவையின் பிரச்சினையாக ஆக்க வேண்டும் என்றால் அதிலே அரசியல் கலந்துவிடும். பிரச்சினைகள் உருவாக்கப்படும்.

திரு. கி. மனோகரன் : அரசியலுக்குப் போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த சிறிய விஷயத்திற்குப் பேச வருகிறீர்கள், இந்த நாட்டு மக்களுக்காகப் பேச வரவில்லையே !

திரு. கி. மனோகரன் : சபாநாயகர் அவர்களே, நான் கேட்டுக் கொள்வது --- What is your immediate provocation ? அந்த நிருபர் இருந்த இடத்திலே உட்கார்ந்து கொண்டு செய்தியைத் திரட்டிக் கொண்டிருக்கும்போது, திடீரென்று இரண்டாவது இடத்திலேயிருந்து 19-வது இடத்திற்கு தள்ளப் பட்டிருக்கிறார் என்று வரும்போது, இது தேவைதானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைத் திருப்பிக் கேட்கிறேன். உங்கள் மனம் புண்பட்டுவிடும் என்பதால் கேட்காமல் இருந்தேன். அந்தப் பத்திரிகை இரண்டாவது இடத்திலேயா பத்திரிகை உலகத்திலே இருக்கிறது? எப்படி 1971 இல் வந்தது? முரசொலிப் பத்திரிகை, பத்திரிகை உலகத்தில் இரண்டாவது இடத்திலேயா இருக்கிறது? (குறுக்கீடு) இது முறையல்ல, இதனாலேதான் என்னைப் பேச வைக்கிறீர்கள்

என்றேன். பேச வைத்துவிட்டு நீங்கள் போய்விடுகிறீர்கள். வெளியே இருக்கக்கூடிய சில வியாபாரிகள் இதைக் கட்டுரையாக எழுதி விற்றுப் பிழைப்பை நடத்துகிறார்கள்.

திரு. இ. மனோகரன் : தயவுசெய்து நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், இது தேவையில்லாத காரியம். இரண்டாவது, பத்திரிகை எண்ணிக்கையைப்பற்றி நீங்கள் சொன்னீர்கள். பத்திரிகைகளின் எண்ணிக்கையை வைத்து இட மாற்றத்தை இங்கே வலியுறுத்திக் கொண்டிருக்கிறீர்கள். முரசொலிப் பத்திரிகை பல்லாயிரக்கணக்கான பிரதிகளை இந்த நாட்டு மக்களுக்குத் தந்து கொண்டிருக்கிற பத்திரிகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றப், பத்திரிகைகளோடு ஒப்பிட்டுப் பேச வேண்டும். 'தினத்தந்தி', 'தினமணி', 'எக்ஸ்பிரஸ்', 'இந்து', 'ஏ.ஐ.ஆர்.', 'டெலிவிஷன்' அதற்குப் பிறகுதான் அவர்களைப் போட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினை வரும் என்றுதான், யாரும் இதைச் செய்யவில்லை. நான் பிரச்சினையைச் சமாளிக்கத் தயாராக இருக்கிறேன். ஆகவே இதைச் செய்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகள் எந்த இடத்திலே இருக்க வேண்டும் என்பதைத் தாங்கள் தீர்மானித்திருக்கிறீர்கள். தங்களுடைய முடிவு பற்றிப் பேசக் கூடாது என்று தெரிவித்து விட்டீர்கள். இப்போது படிப்படியாக விமர்சனமும், விவாதமும் ஏற்பட்டு இங்கே அதைப் பற்றியே பேசி விவாதம் வளர்ந்து கொண்டு வருகிறது. நான் தெரிவித்துக்கொள்வது—நடுநிலையுணர்வுடன் நல்ல பாரம்பரியத்தோடும், தரத்தோடும் நடக்கின்ற பத்திரிகைகள், இந்த அவையிலே நடப்பதைப் பற்றி பொது மக்களுக்குத் தரத்தோடு நல்ல பாரம்பரியத்தோடு எடுத்து விளக்கக்கூடிய பத்திரிகைகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை தருவதில் எந்தவிதமான தவறுமில்லை. 1971 இல் வளைந்த செங்கோலைத் தாங்கள் நிமிர்த்தியதற்காகத் தங்களை இந்த மன்றம் பாராட்டத்தான் செய்யுமே தவிர எதிர்க்காது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்தோடு விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) இப்படி நான்கு பேர் எழுந்திருக்கலாமா? இது ஒரு பிரச்சினையல்ல. முரசொலி பத்திரிகையின் நடவடிக்கையைப் பற்றி நான் இதுவரையில் சொல்லவில்லை. அதனுடைய நடவடிக்கையைப் படித்துவிட்டு நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்.

திரு. இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி விடை பெறுகிறேன். 1975-க்கு முன்னால் பாரம்பரியம் மிக்க பத்திரிகை என்று நமது மதிப்பிற்

குரிய அமைச்சர் அவர்களால் பாராட்டப்பட்ட பத்திரிகையின் பெயர் 'முரசொலி'. 1977க்குப் பிறகு அவரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்தவர். நல்லது. வரவேற் கிறோம்.

(முற்பகல் 11–20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் அரசியல் வேண்டாம். வெளியில் பேசலாம். இது அவைக் குறிப்பில் இருப்பது நல்ல தல்ல. நீங்கள் பேசுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னைப்பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். நான் அதைப்பற்றிக் கவலைப்பட வில்லை. தங்களைப் பற்றியும் இந்த அவையைப் பற்றியும் எவ்வளவு தரக் குறைவாகவும், கண்ணியக் குறைவாகவும் அந்தப் பத்திரிகை எழுதுகிறது என்பதையும், அந்தப் பத்திரிகையை அனுமதிப்பதே தங்களுடைய பெருந்தன்மை தான் காரணம் என்பதையும் நடுநிலையோடு பார்க்கிறவர்கள் கட்டாயம் ஏற்றுக் கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைச் சொல்ல வேண்டா மென்று நினைத்தேன். அமைச்சரவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) அந்தச் சொல்லக்கூடாது.

திரு. கி. மனோகரன் : கடைசியாக, பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேவையின்றி நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டவில்லை. ஆனால் ஏன் இந்தக் காரியத்தில் நீங்கள் ஈடு பட்டிருக்கிறீர்கள் என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவையிலே தேவை யில்லை. இந்த விவாதம் தேவையில்லை. இது என்னுடைய அலுவல் விவகாரம். ஏதாவது குறையிருந்தால் என்னுடைய அறையிலே பேசலாம். என்னை இங்கே பதில் சொல்ல வைப்பது ........(குறுக்கீடு) It should not be against me, Against the Chair (குறுக்கீடு) வேண்டாம். (குறுக்கீடு) எனக்குத் தெரிகிறது. நீங்கள் லீடர் என்பதால் கண்டிப்பாக, பேசித்தான் ஆகவேண்டும். I accept it. (குறுக்கீடு) வேண்டாம்.

திரு. கி. மனோகரன் : அந்த அடிப்படையிலே தான் உங்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்வது; Will you please reconsider your decision again ? Please.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எப்படி முடியும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோலை வளைக்கப் போகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையை வரிசைப் படுத்திப் பாருங்கள். மாண்புமிகு நாஞ்சிலாரைக் கேட்டுக் கொள்கிறேன். மாடத்தைப் பாருங்கள். யார் இருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். (குறுக்கீடு) தேவையில்லை. (குறுக்கீடு) இந்து பத்திரிகை,, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை, தினமணிப் பத்திரிகை....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவரவர்களே, தாங்கள் அனுமதித்ததன் பேரில் மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் இங்கு ஓர் ஐயப்பாட்டை எழுப்பினார்கள். அதற்கான நிலைமைகள் குறித்து விளக்கம் தந்துவிட்டீர்கள். ஆக பிரச்சினை அதோடு முடிந்து விட்டது. விவாதம் இதற்கு மேல் போகுமானால் வேறு எங்கெங்கோ போய்ச் சேரும். ஆகவே, இதோடு இதை முடித்துவிட்டு, அடுத்த கட்டத்திற்குப் போகுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்கே போகப்போகிறீர்கள் ? (குறுக்கீடு) இதற்குக்கூடவா வெளியே போகப் போகிறீர்கள் ? இது தேவையில்லாதது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. பல பத்திரிகைகள் வரவில்லை. பல பத்திரிகைகள் 1971-லே வந்தன, இன்றைக்கு வரவில்லை. அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் அமருங்கள். நான் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அதல்ல. அதைக் கேட்பது வழக்கமல்ல. இது அவைத் தலைவருக்கு வழங்கப்பட்ட உரிமை. அதிகாரம் என்று கூடச் சொல்லவில்லை. உரிமைதான். (குறுக்கீடு)

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, அந்த உரிமையை மறுக்கவில்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்திருக்கிறவர்கள் எல்லாம் இலட்சக் கணக்கான பிரதிகளை நாள்தோறும் வெளியிடக் கூடியவர்கள். அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) ஆயிரம் பத்திரிகை அடிக்கிறவர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். 500 அடிக்கிறவர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். நான் பெருந் தன்மையோடு விட்டிருக்கிறேன். 500 தான் அடிக்கிறார்கள். 1000, 5000—இதற்குமேலே கிடையாது. (குறுக்கீடு) கடைசியில் அமர்ந்திருக்கிறார்கள். பல பேர் இருக்கிறார்கள் பெருந்

தன்மையோடு அந்தப் பத்திரிகைகளுக்கு இடம் கொடுத்திருக்கிறேன். இந்த அவையைக் குறைத்து எழுதக்கூடிய பத்திரிகைகளும் அமர்ந்திருக்கின்றன. குறைத்து எழுதக்கூடிய பத்திரிகைகளுக்கு நிருபர்களாக இருக்கிறவர்களும் அமர்ந்திருக்கிறார்கள். அதைக் கொண்டு வாழ்கிறவர்களும் இந்த நாட்டில் இருந்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே இங்கே விவாதம் செய்யக்கூடாது என்று சொல்லியும் அதற்குப் பிறகு விளக்கம் அளித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தற்காலிகத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள்—அவர் சொன்னதால் சொல்கிறேன், நம்மைப் பொறுத்தவரையில் தலைவர்தான்—வெளியே போகலாமா? அவருடைய உள் மனமே இதை ஏற்றுக் கொள்கிறதா? அவரை எவ்வளவு அந்தப் பத்திரிகை விமர்சனம் செய்தது என்பதைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கக் கூடாதா என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை வைத்தே சொல்லவில்லை. நீங்கள் அமருங்கள்.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் என்ற பெயரால் குழப்பத்தைத் தரக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாஞ்சிலார் அவர்கள் அமர்வது நல்லது.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறினர்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கருத்துக்களை சொல்லிவிட்டு வெளியேறிய காரணத்தினால் பரிமாறிய கருத்துக்கள் அத்தனையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இத்தனை நேரமும் விவாதம் தேவையில்லை. (குறுக்கீடு) உங்களை அனுமதிக்க வேண்டும் என்றுதான் அனுமதித்தேன். ஆனால் இந்த விவாதம் பலன் அளிக்காமல் போய்விட்டது. இனிமேல் அது தேவையில்லை. (குறுக்கீடு) இருப்பது நல்லது என்கிறீர்கள். இருக்கட்டும்.

### (ஈ) சில ஹோட்டல்களில் உணவுப்பண்டங்களின் விலையைக் குறைக்காதது.

திரு. கி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் பதில் அளிக்கின்றபோது டாக்டர் நாவலர் அவர்கள் ஓட்டல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த விற்பனை வரியை ரத்து செய்வது சம்பந்தமாக ரத்து செய்து



விட்டோம் என்று சொல்லிவிட்டு, ஓட்டல்களில் இட்லி போன்ற உணவுப் பண்டங்களைப் பழைய விலைக்கே விற்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தமிழகத்திலே பல ஓட்டல்களில் ஏற்றிய விலையைக் குறைக்காமல் இருக்கின்றார்களே அது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கருத்தைத் தெளிவாக இங்கே மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஓட்டல் உரிமையாளர்கள் சங்கமும் விளம்பரத்தின் மூலமாகவும் அறிக்கைகளின் மூலமாகவும் கேட்டுக் கொண்டுள்ளது. அப்படியிருந்தும் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்ற தகவல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர முழு உரிமையுண்டு, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

### (உ) பேரவை நடவடிக்கைகளின் சுருக்க வெளியீட்டிலுள்ள குறிப்பு.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வணிகவரி மானியத்திலே என்னால் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானம் அவையிலே குரல் வோட்டில் நிராகரிக்கப்பட்டது. சுருக்க வெளியீட்டிலே நான் வாபஸ் பெற்றதாக இருக்கிறது. அதைத் திருத்தியமைக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது கவனிக்கப்படும்.

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) ஆழ்துளைக்குழாய்க் கிணறுகள் அமைக்க கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகள்.

திரு. கி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வறட்சிப் பகுதிகளில் புதியதாக குழாய்க் கிணறு அமைக்க, அவ்விடத்தில் 500 பேர் மக்கள் தொகையும் மற்றும் புதியதாக அமைக்கும் குழாய்க் கிணறுகளுக்கிடையே 1 கி.மீட்டர் தொலைவும் இருக்கவேண்டும் என்ற விதிமுறையைக் கடைப்பிடிப்பதால் வறட்சிப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் குடிநீருக்கு இன்னல்படுவது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

தமிழகத்தில் குடிநீர் வழங்கும் திட்டங்களில் ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைத்தலும் ஒன்று. இப்பணியினை தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் தனது திட்டப்பணிகளின் கீழ் செயல்படுத்தி வருகிறது. வழக்கமான ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஒரு குடியிருப்பில் 750 க்கு குறைவாக மக்கள் தொகை இருந்தால் அக்குடியிருப்பு பகுதியில் 300 பேருக்கு ஒரு ஆழ்துளைக் கிணறு வீதம் தோண்டப்படுகிறது. இது தவிர, வறட்சி நிலவும் காலங்களில், வறட்சிப் பணிகளின் கீழும் ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைக்கப்படுகின்றன.

1985 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தனது திட்டங்களின் கீழ் 2,660 ஆழ்துளைக் குழாய் கிணறுகளும் வறட்சிப் பணிகளின் கீழ் 740 ஆழ்துளைக் குழாய் கிணறுகளும், 1986 ஆம் ஆண்டில் தனது திட்டங்களின் கீழ் 3,500 ஆழ்துளைக் குழாய் கிணறுகளும், வறட்சிப் பணிகளின் கீழ் 5,494 ஆழ்துளைக் குழாய் கிணறுகளும் அமைத்தது. தமிழகத்தில் இவ்வாறு போடப்பட்ட ஆழ்துளைக் குழாய் கிணறுகள் தற்போது 78,603 உள்ளன.

வறட்சி காலங்களில் போதிய மழையின்மையால், நிலத்தடி நீர்நிலை கீழே போய்விடுகிறது. ஆகவே ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் குழாய் கிணறுகள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வருடமும் 4,200 ஆழ்துளைக் குழாய் கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் திட்டத்தின் கீழும், 4,425 ஆழ்துளைக் குழாய் கிணறுகள் வறட்சிப்பணி திட்டத்தின் கீழும் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாறு கிணறுகளை நாம் அமைக்கும் போது நிலத்தடி நீர் கிடைக்கும் இடங்களை ஆய்வு செய்து ஆங்காங்கே போடப்படும். நமது மாநிலத்தில் நிலத்தடி நீர் போதிய அளவு இல்லாத் நிலையில் இவ்வாறு அதிக அளவில் ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைக்கும் போது சில விதிமுறைகளைக் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகிறது. இல்லையெனில், இதற்காக செலவிடப்படும் தொகை பயனளிக்காமல் போய்விடுவதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் கிடைக்காமல் போய்விடலாம் எனவும் அஞ்சப்படுகிறது. இருப்பினும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயனளிக்கும் வகையில் ஆழ்துளைக் குழாய் கிணறுகள் மாவட்ட ஆட்சியர்களின் நேர்முகப் பார்வையின் கீழ் தோண்டப்படுகின்றன.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவ மழை பெருமளவிற்கு பொய்த்து விட்டதன் காரணமாக தமிழகத்திலே வறட்சி மிக பயங்கரமாக இருந்து கொண்டிருக்கின்றது. கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து





மழை இல்லாத காரணத்தினாலேயே நிலத்தடி நீர் குறைந்து
கொண்டே செல்கிறது. இந்த நேரத்திலே 500 பேர் மக்கள்
தொகையும் மற்றும் புதியதாக அமைக்கும் குழாய்க் கிணறுகளுக்
கிடையே 1 கிலோ மீட்டர் தொலைவும் இருக்கவேண்டும் என்ற
விதிமுறையைக் கடைப்பிடிப்பதன் காரணமாக கிராமப்பகுதி
களிலும், அதிலேயும் குறிப்பாக குக்கிராமங்களிலும், கிராமத்தை
சுற்றியுள்ள மக்கள், அங்கு வாழ்கின்ற மக்கள் குடிநீருக்காக
அல்லல் படுகின்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு முன்பு
வறட்சி பணியினை செய்கின்றபோதெல்லாம் இந்த விதிமுறைகள்
கடைப்பிடிக்கப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால்,
அண்டை மாநிலங்களிலேயும், ஆந்திரா, கர்நாடகம் போன்ற
மாநிலங்களிலேயும் இப்படிப்பட்ட விதிமுறைகள் கடைப்பிடிக்கப்
படாமல் இருக்கின்றன. அந்தந்த இடத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப
விதிமுறைகளைத் தளர்த்தி 200 பேர்களுக்கு ஒரு புதிய குழாய்க்
கிணறு அமைக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சில பல கட்டுப்பாடு
களும் மற்றவைகளும் இல்லாவிட்டால் பணம் தான் விரயம்
ஆகும். இப்போது எங்கெங்கு தண்ணீர் இருக்கிறதோ அங்கே
ஆழ்துளைக் கிணறுகள் போடவேண்டும். தண்ணீர் நிச்சயமாக
இருந்தால் அதற்கான விதிமுறைகளை நாம் வகுக்கலாம்.
இப்போது விதிமுறைகள் இருக்கிற நிலையிலேகூட, பல ஆயிரக்
கணக்கான ரூபாய்கள் செலவழித்து ஆழ்துளைக் கிணறுகள்
போட்டாலும் தண்ணீர் வருவதில்லை என்று இருக்கிறது.
தண்ணீர் இல்லாமல் கிணறு ஆழமாகச் சென்றுகொண்டிருக்கிறது.
சாதாரணமாக பாசன கிணறுகளுக்கு நிலவள வங்கிகள் எல்லாம்
கூட கடன் தருகின்றன. அப்படி கடன் தருகின்றபோதுகூட 50
மீட்டர் முதல் 200 மீட்டர் இடைவெளி இருக்கவேண்டும் என்று
இருக்கிறது. ஆகவே அதற்கு நிபந்தனைகள் வைத்திருக்கின்
தரவேண்டிய அவசியம் இருக்கின்றது. இந்த நிபந்தனைகள் ஏன்
வைக்கப்பட்டிருக்கின்றன என்றுசொன்னால் ஆழ்துளைக்கிணறுகள்
தண்ணீரை உறிஞ்சுகின்ற சூழ்நிலைகூட ஏற்படுகின்றது. நிலத்தடி
தண்ணீர் ஆய்வாளர்கள் மற்றும் புவியியல் ஆராய்ச்சியாளர்கள்
ஆலோசனையின் படிதான், விதிமுறைகள் அமைக்கப்பட்டிருக்
கின்றன. செய்யக்கூடாது என்பது அல்ல அரசின் கருத்து.

[முற்பகல் 11.30]

ஆக, தண்ணீர் போதுமான அளவுக்குக் கிடைக்கும் என்கிற
சூழ்நிலை ஏற்படுகின்றபோது வேண்டுமானால் விதிகளை நாம்
தளர்த்தலாம். அந்தவகையில் 500 மக்கள் இருக்கிற இடங்களில்
மட்டுமல்லாமல் 300 மக்கள் இருந்தால் கூட தண்ணீர் கிடைக்கும்
என்றால் குழாய்க் கிணறுகளை போடலாம் என்கிற வகையில்
ஆங்காங்கே விதி தளர்த்தப்படுகிறது. ஆனால் ஒன்று உறுதிப்
படுத்தப்பட வேண்டும். அங்கே ஆழ் குழாய் கிணறு போட்டால்
தண்ணீர் நிச்சயம் கிடைக்கும் என்கிற சூழ்நிலை இருந்தால்
மட்டும் அந்த விதிகள் தளர்த்தப்படலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சியின்போது இந்த விதியை கடுமையாக கடைப்பிடிக்க வேண்டியதில்லை, மாவட்ட ஆட்சித் தலைவர்களே அந்தந்த இடத்திற்கு ஏற்ப விதிகளைத் தளர்த்தி ஆழ் குழாய் கிணறுகளை அமைக்கலாம் என்கிற வகையில் அரசு அனுமதித்து ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இதுகுறித்து ஏற்கெனவே அறிவுரைகள் வழங்கப் பட்டிருக்கின்றன. இப்பொழுது 800 ஆழ் குழாய் கிணறுகள் போடுகிறோம் என்றால் அதிலே 100, 80 கிணறுகள் அளவுக்கு தண்ணீர் வராமல் இருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, இதிலே எல்லாம் ஜாக்கிரதையாகத் தான் இருக்க வேண்டியிருக் கிறது. தக்க அறிவுரைகள் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) ஊராட்சி துப்புரவுப் பணியாளர்களின் ஊதியம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் கு. அ. செங்கோட்டையன், பு. கோ. நாராயணன், ச. பால கிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழகம் முழுவதும் உள்ள ஊராட்சி மன்றங்களில் துப்புரவுப் பணியாளர்கள் நீண்ட காலமாக குறைந்த சம்பளத்தில் (மாதம் ரூ. 100) பணியாற்று வதால், துப்புரவுப் பணிகள் சரியான முறையில் நடைபெறுவ தில்லை என்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

ஊராட்சிகளில் பணிபுரியும் அனைத்து துப்புரவு பணியாளர் களும் பகுதி நேர பணியாளர்களே, மேலும் இதே போன்று ஊராட்சி பகுதி நேர எழுத்தர்கள் மேல்தல நீர் தேக்கத் தொட்டி இயக்குபவர், (O. H. T. Operator) வானொலி இயக்குபவர், தொலைக்காட்சி இயக்குபவர், சுகாதார பணியாளர்கள் அனைவரும் பகுதிநேர பணியாளர்களே ஆவர். ஊராட்சி எல்லை குறுகிய விஸ்தீரணத்தில் உள்ளதால் முழுநேர துப்புரவு பணியாளர்கள் தேவை இருக்காது. துப்புரவு பணியாளர்களை முழுநேர பணியாளர்களாக ஆக்க தற்போது ஊராட்சி நிதி



நிலையும் இடம் தராது. ஊராட்சிகளின் நிதி நிலைமை, பணி யாளர்கள் செய்யும் வேலையின் அளவு, காலத்தினைப் பொறுத்து மாவட்ட நிலவரப்படி, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பிரதி மாதமும் நிர்ணயிக்கப்பட்ட ஊதியமாக ரூ. 100 பகுதி நேர துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையிலே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே பகுதி நேர பணியாளர்கள் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. குறிப்பாக ஊராட்சி மன்றங்களில் பணியாற்றுகிற துப்புரவு பணியாளர்கள் முழு நேரமும் பணியாற்றிக் கொண் டிருக்கிறார்கள். பேரூராட்சி மன்றங்களிலும், நகராட்சிகளிலும், நகர மன்றங்களிலும் பணியாற்றுகின்ற துப்புரவு பணியாளர் களுக்கு அடிப்படை சம்பளம் 600 ரூபாய் என்றும், அதேபோல பேரூராட்சிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு 350 ரூபாய் என்றும் வழங்கப்படுகிறது. அதையும் கருத்தில் கொண்டு, இந்த 100 ரூபாயை வைத்துக்கொண்டு அவர்கள் அடிப்படை தேவையை கூட பூர்த்தி செய்ய முடியாத நிலை இருப்பதையும் கருத்தில் கொண்டு ஊராட்சி மன்றங்களில் துப்புரவுப் பணியாளர்களாக பணியாற்றுகிறவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களும் தங்கள் நிதி வசதிக்கு ஏற்ப இவர்களுடைய ஊதியத்தை நிர்ணயம் செய்துகொள்ளலாம். அதற்கேற்ற வகையில் அரசு உத்தரவு பிறப்பிக்கும்.

திரு. பு. கோ. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களில் பணியாற்றுகின்ற துப்புரவு பணியாளர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக் கின்றன. அதாவது அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குதல், ஒன்றியங்களிலும், ஊராட்சிகளிலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஊழியர்களை நியமித்தல், சம்பளத்தை உயர்த்தி நிர்ணயித்தல், இப்படி பல்வேறு பிரச்சினைகள் அவர்களுக்கு இருப்பதால் இவைகளை எல்லாம் ஆய்வு செய்து, ஊராட்சி மன்றங்களில் பணியாற்றுகின்ற துப்புரவு பணியாளர்களுடைய பணி நிலைமையை செம்மைப்படுத்த 'ஓர்க் நார்ம்ஸ் கமிட்டி' போன்ற ஏதாவது ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு தன்னுடைய பரிந்துரையை அரசுக்கு அளிக்கும் வகையில் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்படுமா? மேலும் என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின்கீழ் வீடுகள் கட்டி தரும்போது ஊராட்சி மன்றங்களில் பணியாற்றுகின்ற துப்புரவு பணியாளர்களுக்கும் வீடுகளை தர அரசு ஏற்பாடு செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடுகளை ஒதுக்குவது பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம். இப்பொழுது பணியாளர்கள் நிலைமை குறித்து ஆராய தனிக் குழு போடத் தேவையில்லை. அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கே நிலைமைக் கேற்ப அந்தந்த ஊராட்சி மன்ற ஊழியர்கள் நலன் சம்பந்தப் பட்ட பொறுப்பையும், ஊதிய உயர்வு, பணி நிலைமை குறித்த முடிவினையும் எடுக்கின்ற உரிமையும் இருக்க வேண்டும் எனவே அத்தகைய உரிமையை உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்குவது தான் பொருத்தமாக இருக்கும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே ஊராட்சி எல்லை குறுகிய விஸ்தீரணத்தில் உள்ளதால் முழு நேர துப்புரவு பணியாளர்கள் தேவையிருக்காது என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஒரு சில மாவட்டங்களில் ஊராட்சி மன்றங்களின் எல்லைகள் குறுகிய விஸ்தீரணத்தில் இருக்கின்றன. ஆனால் பெரியார், கோவை போன்ற மாவட்டங்களில் ஒரு ஊராட்சி மன்றம் என்பது குறைந்தபட்சம் 20 ஊர்களைக் கொண்ட ஊராட்சி மன்றங்களாக இருக்கின்றன. அதற்கு நிச்சயமாக ஒரு துப்புரவாளரே போதாது என்கின்ற நிலைமை இருக்கின்ற பொழுது அரசு இதைக் கவனத்திலே கொண்டு மேற்படி ஊராட்சி துப்புரவுப் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கி, அவர்களுக்கு மற்ற அரசுப் பணியாளர்கள் எந்த விகித அடிப்படையிலே சம்பளம் பெறுகின்றார்களோ அந்த விகித அடிப்படையிலே வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே அதற்காகத்தான் குறிப்பிட்டேன். இதையெல்லாம் அந்த ஊராட்சிகள், பேரூராட்சிகள்தான் செய்வது நல்லது. ஏனென்றால் சில ஊராட்சிகள் சிறிய எல்லைக்கு உட்பட் டிருக்கும்; சில ஊராட்சிகள் பெரிய எல்லைக்கு உட்பட்டிருக்கும். அவர்கள் எவ்வளவு நேரம் பணியாற்றுகிறார்கள் என்பதை யெல்லாம் பொறுத்து ஊதியம் நிர்ணயம் செய்வது, அவர்களுடைய நிதி நிலைமைக்கேற்ப நிர்ணயம் செய்வது என்பவை போன்ற வற்றையெல்லாம் அவர்களே மேற்கொள்ளுகின்ற வகையிலே அரசு உத்தரவு வழங்கும்.

**(இ) திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டிட வசதியின்மை**

திரு. என்.எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் இல்லாமல் மாணவ மாணவியர்களுக்கு மரத்தடியில் பாடம் கற்பிக்கப்படுவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கட்டிடப் பற்றாக்குறை, பரவலாக தமிழகத்தில் உள்ள பல பள்ளிக் கூடங்களிலும் உள்ளது. இக்கட்டிடங்களைப் பழுது பார்ப்பதற்கும், புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கும் அரசு இவ் வாண்டு [1986-87] சுமார் ரூ. 158 இலட்சம் ஒதுக்கி செலவு செய்து வருகிறது. இது தவிர, முன்னாள் மாவட்ட கழக பள்ளிகளை பராமரிக்க ஏற்கனவே ரூ. 1 கோடி ஒதுக்கப்பட் டுள்ளது வரும் நிதியாண்டில் இப்பள்ளியின் தேவையை ஓர் அளவுக்கு பூர்த்திசெய்ய நிதிநிலையைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சரவர்கள் அவைக்குக் கொடுத்திருக்கின்ற இந்த விவர அறிக்கையின் இறுதியிலே, "வரும் நிதியாண்டில் இப்பள்ளியின் தேவையை ஓர் அளவுக்கு பூர்த்தி செய்ய நிதி நிலை பொறுத்து நடவடிக்கை எடுக்கப் படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, திருமங்கலத்திலே இருக்கின்ற இந்த உயர் நிலைப்பள்ளி, தொகுதியின் தலைமையிடமாக மட்டுமல்லாது, தாலுக்காவின் தலைநகரம், பொருளாதாரத்தில் மிக பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, போதிய நிதி வசதி இல்லாமல், கட்டிடங்கள் இல்லாமல் மாணவர்கள் அவதிப்படு கின்ற காரணத்தினாலே உங்கள் மூலமாக மாண்புமிகு நிதி யமைச்சரவர்களையும், கல்வியமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்வது, இந்த ஆண்டிலே ஒரு கட்டிடமாவது, இரண்டு வகுப்புகள் நடக்கின்ற அளவிற்குக் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே விவர அறிக்கையில் கூறியுள்ளவாறு இதுபோன்ற பழுதுபட்ட நிலையில் பல கட்டி டங்கள் இருக்கின்றன, அவற்றையெல்லாம் சரி செய்வதற்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. இதனால்தான் நிதிப்பற்றாக்குறை ஒரு பிரச்சினை என்று சொல்லப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட பள்ளியினுடைய தேவை என்ன என்பதனை பள்ளிக் கல்வி இயக்குநர் மூலமாக ஆய்ந்து அந்த அறிக்கையைப் பெற்று அதற்கேற்ப பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சரவர்கள் கொடுத் திருக்கின்ற இந்த விவர அறிக்கையிலே புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு 1986-87 ஆம் ஆண்டு சுமார் 158 இலட்சம்

ஒதுக்கி செலவு செய்து வருகிறது. இது தவிர முன்னாள்மாவட்ட கழக பள்ளிகளை பராமரிக்க ஏற்கனவே ரூ. 1 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மொத்தம் இரண்டரை கோடி ரூபாய் என்பது மிகக் குறைவாக இருக் கிறது, தமிழகத்திலே இருக்கின்ற பள்ளிகளை ஒட்டு மொத்தமாக எடுத்துக்கொண்டால் இரண்டரை கோடி ரூபாய் என்பது, யானைப் பசிக்கு சோளப்பொறி என்பதைப்போலத்தான் இருக் கிறது ஆகையினாலே, அருள்கூர்ந்து இந்த நிதியைக் கொஞ்சம் அதிகமாக்கி, பரவலாகத் தேவை உள்ள இடங்களில் கட்டிடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களும், நிதியமைச்சர வர்களும் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றியமையாத் தேவையின் அடிப்படையில், எவையெவை இன்றியமையாத் தேவையோ அவைகளுக்கு முன்னுரிமை தந்து நிதி ஒதுக்கப்படுகிறது. அப்படி இன்றியமையாத் தேவைகள் பல இருக்கின்றபொழுது கட்டிடங்கள் பின்தள்ளப்படுவது இயற்கை. அந்த அடிப்படை யில்தான் இந்த அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ச) அரசு விலையில் பள்ளிப் புத்தகங்கள் கிடைக்காதது**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் எஸ். இராசாராமன், சு. சிவராஜ், டாக்டர் க. நல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பள்ளிப் பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் அரசு நிர்ணயித்த விலையில் பள்ளிகளிலும், கடை களிலும் கிடைக்காத நிலையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவது குறித்த" அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

பள்ளிப் பாடப்புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் மாணவ மாணவியருக்கு நிர்ணயித்த விலையில் கிடைக்கச் செய்வது பற்றிய நிலைமை பின்வருமாறு:—

**பள்ளிப் பாடப் புத்தகங்கள்**

2. தமிழ் நாட்டில் அனைத்துப் பள்ளிகளுக்கும் பாடப் புத்தகங்களை தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் அச்சிட்டு வெளி யிட்டு வருகிறது. 1—8 வகுப்புகளில் பயின்று சத்துணவுத் திட்டத்தில் பயனடையும் மாணவ மாணவியர்களுக்கு இலவச



பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் இதற்காக 13 கோடி இலவச பாட நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த இலவச பாடநூல்கள் விநியோகம் பற்றி இதுவரை எந்தவிதமான புகாரும் இல்லை.

3. பொது விற்பனைக்கான பாட நூல்களைப் பொறுத்த வரை 1986-87ம் ஆண்டில் பாடநூல் நிறுவனம் ரூ. 46 கோடி மதிப்புள்ள பாட நூல்களை விநியோகித்தது. இப்பாட நூல்கள் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள் 58-க்கு நேரடியாக விநியோகிக்கப்பட்டு 2062 கூட்டுறவு சில்லறை விற்பனை யாளர்கள் மூலமும் 1043 தனியார் சில்லறை விற்பனையாளர்கள் மூலமும் தமிழகம் முழுவதும் சீராக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் குறித்த காலத்தில் உடனுக்குடன் அனுப்பி வைத்து வருகிறது. எனவே பள்ளிப் பாடப்புத்தக பற்றாக்குறை எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை, அதனால் புத்தகங்கள் நிர்ணயித்த விலைக்கு அதிகமான விலையில் விற்கப்படும் நிலை இல்லை.

**நோட்டுப் புத்தகங்கள் (குறிப்பேடுகள்).**

4. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் தமிழ்நாடு பாடநூல் நிறு வனமே செய்து வருகிறது. 1986-87ம் ஆண்டில் அவ்வாறு ரூ. 4 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் 95 மொத்த கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன. இவற்றில் ரூ. 3 கோடி மதிப்புள்ள குறிப்பேடு களைத்தான் அச்சங்கங்கள் எடுத்துள்ளன. குறிப்பேட்டின் விலையினை மத்திய அரசு நிர்ணயம் செய்கிறது அதாவது 192 பக்கமுள்ள குறிப்பேட்டின் அரசு நிர்ணயம் செய்த விலை ரூ. 3/— 1986-87ம் ஆண்டில் வெளிச் சந்தையில் குறிப்பேடுகள் தாராளமாக அதே விலைக்கு விற்பதால் குறிப்பேடுகள் அரசு நிர்ணயித்த விலைக்கு கூடுதலாக விற்கப்பட வாய்ப்பு இல்லை. வரும் கல்வி ஆண்டான 1987-88லும் பாடப் புத்தகங்கள் மட்டு மின்றி குறிப்பேடுகளும் அரசு நிர்ணயித்த விலையில் மாணவ மாணவியருக்கு தடையின்றி விற்பதற்காக அனைத்து நடவடிக்கை களையும் பாடநூல் நிறுவனம் இப்போதே எடுத்து வருகிறது

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த அறிக்கையைப் பார்க்கின்றேன். இந்த அறிக்கையில் பாடப்புத்தகங்கள் பற்றாக்குறை ஏதும் இல்லை என்ற கருத்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிறகு என்ன காரணத் தினாலே பள்ளிகளுக்கு உரிய காலத்தில் புத்தகங்கள் வழங்கப் படவில்லை? அவைகள் ஆண்டுத் தேர்வு சமயத்தில்தான் கிடைக் கின்ற நிலைமை இருக்கிறது. இலவசமாகக் கொடுக்கப்பட

வேண்டிய புத்தகங்கள்கூட அங்கே விலைக்கு விற்கப்படுகின்றன. அந்த விலையிலும் அதிகமான விலைக்கு விற்கப்படுகின்ற நிலைமையெல்லாம் இருக்கின்றது. ஆகவே, அங்கே உரிய நேரத்தில் புத்தகங்கள் கிடைப்பதற்கும். அவைகள் உரிய விலையில்கிடைபதற்கும், அத்துடன் இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டிய புத்தகங்கள் இலவசமாகக் கொடுக்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் இலவசமாக 1 முதல் 8-ம் வகுப்பு வரையில படிக்கின்ற மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்குகின்ற சலுகை இருக்கிறது. அந்த மாணவர்களுக்கு தேவையான குறிப்புப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-46)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவரவர்களே, காலதாமதமாக பாட நூல்கள் வழங்கப்பட்டன என்பது உண்மை. அதற்குக் காரணம் பாட நூல்களுக்குத் தேவையான காகிதத்தை மைய அரசிடமிருந்து பெற வேண்டியிருக்கிறது. மைய அரசு தேவையான காகிதத்தைத் தராமல் குறைவாகத் தந்தது. தேவையான அளவுக்குத் தரவேண்டுமென்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தி, பெற வேண்டியிருந்ததால் அதிலே கால தாமதம் ஓரளவுக்கு ஏற்பட்டது. பின்னால் மைய அரசு அனுமதித்தும் அந்தக் காகிதங்கள் நமக்கு கிடைப்பதில் சிறிது தாமதம் ஏற்பட்டது. இந்தக் காரணங்களால் இலவச பாட நூல்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது நடப்பாண்டில் இந்தப் பிரச்சினை ஏற்படாமல் இருப்பதற்காக தமிழக அரசுக்குச் சொந்தமான புகளூர் காகித ஆலையிலிருந்து பாட நூல்களுக்குத் தேவையான காகிதத்தை முழுமையாகத் தரவேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. இலவசமாக வழங்க கொடுக்கப்பட்ட பாட நூல்கள் வெளியே விலைக்கு விற்கப்பட்டிருக்கின்றன என்பது சரியான தகவல் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. சிவராஜ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற விவர அறிக்கையில் 2062 கூட்டுறவு சில்லரை விற்பனையாளர்கள் மூலமும் 1,043 தனியார் சில்லறை விற்பனையாளர்கள் மூலமும் பாடப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் விநியோகிக்கப் பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தனியார் சில்லரை விற்பனையாளர்கள் மூலமாக விநியோகிக்கப்பட்ட கடைகளில்தான் செயற்கையான ஒரு பற்றாக்குறையைத் தோற்றுவித்து, அதன் மூலமாக பாடப் புத்தகங்களின் விலையை ஏற்றிக்கொண்டிருக் கிறார்கள் என்ற குறைபாடு இருக்கிறது. அதைக் களைகின்ற வகையில் தனியாருக்குக் கொடுக்கின்ற உரிமத்தை கூட்டுறவுத் துறைக்கே மாற்றி பாடப்புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங் களையும் விநியோகிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவரவர் களே, இதைப்போன்ற பிரச்சினைகள் சில இடங்களில் எழலாம். ஆனால் நடப்பாண்டைப் பொறுத்தவரையில் வெளியே குறைந்த விலைக்குக் காகிதங்கள் கொடுக்கப்பட்டு, 3 ரூபாய்க்குள்ள நோட்டுப் புத்தகங்கள் ரூ. 2.50; ரூ. 2.75-க்கு விற்கப்பட்டிருக்கின்றன. அதனால் பிரச்சினை இல்லை, இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று மாணவர் கூட்டுறவு அமைப்பின் மூலம் இந்த விற்பனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

## 4. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**திரு. கே. ஆர். கணபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அவைக்கு அளிக்கிறேன்:

[அ] இந்தியத் தணிக்கைத் துணைத் தலைவரின் 1976-77 ஆம் ஆண்டிற்கான அறிக்கைமீது [வருவாய்-வரவினங்கள்] பொதுக் கணக்குக் குழு (1980-82) அளித்த பன்னிரெண்டாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை.

(ஆ) 1976-77 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகளின் மீதும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகளின் மீதும் பொது கணக்குக் குழு [1980-82] அளித்த பதினைந்தாவது அறிக்கை [ஏழாவது பேரவை]யில் அளித்துள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்திரண்டாவது அறிக்கை.

(இ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 ஆம் ஆண்டிற்கான அறிக்கைமீது (வருவாய் வரவினங்கள்) பொதுக் கணக்குக் குழு அளித்த பதினான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்திமூன்றாவது அறிக்கை.

5. வரவு செலவுத்திட்டம் 1987—88 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,37,58,15,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,37,58,15,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப் படையிலான பணிகளை நத்தம் தொகுதி திம்மணநல்லூர், வேம்பார்பட்டி, கோம்பைபட்டி ஊராட்சி பகுதிகளில் மேற் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்பட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,37,58,15,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு விவசாயிக்கும் மானிய விலையில் தார்பாய் வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,37,58,15,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு சமுதாயக் குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம் கைவிடப் பட்டது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்,



''மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,37,58,15,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண் 49 குடிநீர் வழங்கல்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ.,1,17,78,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்,''

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,17,78,68,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் வட்டத்தில் சுமார் 15 கிராமங்கள் பயன்பெறும் முன்னூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தை உடன் நிறைவேற்றி முடிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,17,78,68,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகை வட்டம் அக்கரைப்பேட்டை, கீசான் குப்பம் கல்லார் ஆகிய பகுதிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கிணறுகள் அமைக்கப்பட்டும் குடிநீர் தேக்கத் தொட்டிகள் கட்டவும், குழாய்கள் பொருத்தவும், வேலைகள் துவக்கப்படாததால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறும் ரூ. 1,17,78,68,000—இல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகர் குடிநீர்த் திட்டத்தை முழுமைப்படுத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக்கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,17,78,68,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப் பேட்டை நகரம், இடையூர், திருத்துறைப்பூண்டி நகரம் இன்னும் சில கிராமங்களுக்கு பட்டுக்கோட்டை தாலுக்கா இராஜா மடத்திலிருந்து கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் கொண்டு வருவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,17,78,68,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(இ) கோரிக்கை எண். 50 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 50— வேளாண்மை குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,95,23,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,95,23,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு-குறு விவசாயிகளுக்கு குத்தகை நிலங்களை விலைக்கு வாங்கவும், மின்சார மோட்டார்கள் ஆயில் இன்ஜின்கள் வாங்கவும் மானியத்துடன் வட்டியில்லாக் கடன் வழங்கப்படுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



''மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,95,23,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா கிராமங்களிலும் அரசு செலவில் சிமெண்ட் களங்கள் அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண்.50—வேளாண்மை குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,95,23,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை, குடிநீர் வழங்கல் மற்றும் வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகளும், செயல்முறைத் திட்டங்கள் பற்றிய குறிப்புகளும்** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்னமேயே அனுப்பப்பட்டு இருக்கின்றன. காலமின்மை காரணமாக அவற்றை நான் இந்தப் பேரவையில் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். வேளாண்மை உற்பத்திப் பெருக்கம், குடிநீர் வழங்கல் மற்றும் அதிகரிப்பு ஆகியவை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்ட பிறகு என்னுடைய உரையிலே நான் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 1.00 மணிக்கு முடிவுற்று மாலை நிகழ்ச்சிகள் மாலை 4.00 மணிக்குத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை குடிநீர் வழங்கல், வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் இந்த விவாதத்தை நான் தொடங்கி வைக்கிறேன்.

---

**373, 421ம் பக்கங்களில் இணைப்பு அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. ந. சிவஞானம்] [1987 ஏப்ரல் 2

இந்த ஆண்டு வறட்சியால் தமிழகம் பூராவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக நெல் உற்பத்தியும், பயறு உற்பத்தியும் குறைந்துவிட்டது. ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பில் சென்ற ஆண்டை விட அந்த ஆண்டு 10 விழுக்காடு அதிகமாக உற்பத்தி செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வேளாண்மைக்கு ஆதாரமாக இருப்பது நீர் வளம். இந்த நீர் வளம் குறைந்து விட்டது. எனவே அண்டை மாநிலமான கேரளாவில் இருந்து மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆற்று நீரை கிழக்கு நோக்கித் திருப்புவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அதேபோல மகாநதியில் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடுகிறது. கங்கை காவிரி இணைப்பு திட்டத்திற்கு முதல் படியாக மகா நதியின் நீரை காவிரி நீரோடு இணைக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவி னுடைய பொருளாதார வளர்ச்சி வேளாண்மையில் இருக்கிறது. தமிழ்நாட்டினுடைய பொருளாதாரவளர்ச்சியும் வேளாண்மையில் தான் இருக்கிறது. அப்படிப்பட்ட வேளாண்மைக்கு அடிப்படை யாக இருக்கிற நீர் ஆதாரங்களை செம்மைப்படுத்த நீண்ட நெடும் திட்டங்களை அரசு உருவாக்க முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்''

என்ற குறளுக்கு ஏற்ப விவசாயத்திலே ஈடுபடுபவர்கள் மிகக் கடுமையாக உழைத்தாலும் அவர்களுக்கு கிடைப்பது மிக சொற்பமான வருமானம். ஆகவே அவர்களுடைய பிரச்சினையை அரசு முதலில் கவனிக்க வேண்டும். அதேபோல காவிரி நீர் பிரச்சினைக்கு கர்நாடக அரசோடு தமிழக அரசால் செய்து கொள்ள முடியாத ஒப்பந்தத்தை, டிரிப்யூனலை அமைத்து செய்துகொள்ள வேண்டும். அதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும். இதற்கு ஒரு கால வரையறை இல்லாத காரணத்தால் தமிழக அரசு, டிரிப்யூனலை வைக்க வேண்டும் என்று மத்திய அரசை தூண்ட ஒரு ஊர்த்தாலே செய்ய முயற்சி செய்ய வேண்டும், என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால் தான் கர்நாடக அரசிடமிருந்து நாம் கேட்பதை பெறமுடியும் என்ற காரணத்தால் அந்தச் சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கிட வேண்டும். தமிழ்நாட்டிலே உற்பத்தி அதிகமாக இருக்கிற தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 16 லட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரி நீர் வறண்ட காரணத்தால் கீழே இருக்கிற தண்ணீரை எடுக்க வேண்டிய கட்டாயத்தில்



1987 ஏப்ரல் 2] [திரு. ந. சிவஞானம்]

இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தை இரண்டு வகையாகப் பிரித்து கிழக்கு தஞ்சை, மேற்கு தஞ்சை என்று பிரித்த ஆழ் குழாய் கிணறுகளை போட்டு, நீர் ஆதாரத்திற்கு வழி காட்ட வேண்டும். அப்படி ஒரு நல்ல சூழ்நிலையை முனைப்புத் திட்டமாக வைத்து, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக அதிகமாக கடன் வசதிகளை அளித்து விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும். 400 அடி 500 அடி கீழே இருக்கிற தண்ணீரை மேலே கொண்டு வர தனியாக ஒரு அமைப்பை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் போட்டு, விவசாய இலாகாவையும் மின்சார இலாகாவையும் இணைத்துக் கொண்டு முனைப்போடு செயல்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் ஏராளமான மின்சார மோட்டார்கள் இருக்கின்றன. அவைகளுக்கு கால வரையறை எதுவும் நிர்ணயிக்காமல் எல்லா மோட்டார்களுக்கும் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து விவசாயத்திற்கு ஆதாரமாக இருப்பது விதை. இந்த விதைகள் உற்பத்தி அதிகமாக வேண்டும். அந்தப் பயிர், நெல்லாக இருந்தாலும், பயிறு வகையாக இருந்தாலும், எண்ணெய் வித்துக்களாக இருந்தாலும் விதைப்பயிர் உற்பத்தி ரகங்கள் அதிகமாக வேண்டும். தரமான விதைகளை உற்பத்தி செய்தால்தான் உற்பத்தியில் உயர்வினை நாம் காண முடியும். அப்படி உற்பத்தி செய்வதற்காகத்தான் தமிழர் திருநாளான பொங்கல் நாளன்று புதிய விதைகளை தரமான விதைகளை அறிமுகப்படுத்துவது வழக்கம். நெல்லாக இருந்தாலும் பயறு வகையாக இருந்தாலும், கரும்பு வகையாக இருந்தாலும், எண்ணெய் வித்துக்களாக இருந்தாலும் அன்றைக்கு அறிவிப்பது வழக்கம். அப்படி அறிவிக்கப்பட்டதே இந்த ஆண்டு மிக மிக குறைவாகத்தான் இருக்கிறது.

கடலையைப் பொறுத்த வரையில் குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக விளைவது நம்முடைய தமிழகத்தில்தான். அப்படிப்பட்ட கடலைக்கு புதிய ரக விதை உற்பத்தி என்று இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியது ஒரே ஒரு ரகம்தான். அது போன்று இல்லாமல் புதிய ரக விதைகளை அதிகமாக அறிமுகம் செய்ய அரசு முனைப்பாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவதற்கு அரசு பெருமுயற்சி செய்ய வேண்டும். தண்ணீரை எப்படி சிக்கனமாக பயன் படுத்துவது என்பது குறித்து வேளாண்மைத்துறையின் மூலமாக விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும், புதிய பாசன முறைகளையும், சொட்டு பாசன முறைகளையும் கொண்டுவர வேண்டும். அரசு இதற்கு பிரத்யேகமான முயற்சிகளை மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இப்போது தமிழகம் முழுவதும் வறட்சி நிலவி வருகிறது.
இதுபோன்று வறட்சி ஏற்படுகிற காலங்களில் பயன்படுகிற
அளவிற்கு கசிவுநீர் குட்டைகளை ஏற்படுத்துவது அரசின்
தலையாய கடமையாகும். கொள்கைக் குறிப்பில் இதற்காக
குறைவான பணம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு
எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு வறட்சி ஏற்பட்டிருக்கிறது.
கிணறுகளில் தண்ணீரை சேமித்து வைத்துக் கொள்வதற்கு
வாய்ப்பாக இருக்கும் வகையில் கசிவுநீர்க் குட்டைகளை அதிக
மாக ஏற்படுத்த வேண்டும். இதற்காக அரசு அதிகமான
பணத்தை ஒதுக்கி நல்லமுறையில் பணியை செய்ய வெண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து துளைபோடும் கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கு
விடப்படுகின்றன. ஒரு நாளைக்கு அதற்காக வசூலிக்கப்படும்
வாடகை மிகவும் அதிகமாக இருக்கிறது. இந்த வாடகையை
குறைக்க வேண்டும் முன்னால் இருந்ததைப் போல 50 ரூபாய்
என்று இதனைச் செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதைப்போல உங்களுக்கு நன்றாகத் தெரியும், விவசாயப்
பெருங்குடி மக்கள் விவசாயத்தை செய்வதற்கு உரிய கடன்
களைப் பெறுவதில் கஷ்டப்படுகிறார்கள். போர்-வெல் போடு
வதற்கு அதிகமான கடன்களை கூட்டுறவு வங்கிகள் மூலமும்,
தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமும் வழங்குவதற்கு நல்ல
திட்டங்களை அரசு தீட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைய தினம் எண்ணெய் வித்துக்கள் என்பது
மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன. நம்முடைய
நாட்டில் கேரளாவில்தான் தென்னை மரங்கள் அதிகமாக
இருக்கின்றன. அதற்கு அடுத்தபடியாக நம்முடைய தமிழ்
நாட்டில் தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. தென்னை
யிலிருந்து செய்யப்படும் பொருட்களை ஊக்குவிப்பதற்கு
இன்றைக்கு ஏராளமான முறைகள் இருக்கின்றன. மத்திய
அரசினால் நடத்தப்படும் 'காயர் போர்டு' என்பது கேரளாவில்
கொச்சியில் இருக்கிறது. அதற்கு ஒரு ரீஜனல் ஆபீஸ் சென்னை
யிலோ இல்லாவிட்டால் தஞ்சையிலோ துவங்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய
மாநிலத்தில் மத்திய அரசினால் எண்ணெய் வித்துக்களுக்கு
வழங்கப்படுகிற எல்லா விதமான மானியத்தையும் அதிகமாக
பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
இதற்காக மத்திய அரசு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்
ஏராளமான பணம் ஒதுக்கி இருப்பதாக அறிகிறேன். அவற்றை
நம்முடைய மாநில அரசு முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள
வேண்டும். காயர் போர்டிலிருந்து அதிகமான மானியத்தை நாம்
பெறுவதற்கு முயற்சிகளையெடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காயர் போர்டிற்கு ஒரு
ரீஜனல் ஆபீஸ் தஞ்சையில் துவங்கினால் மிகவும் நலமாக



இருக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து தென்னை
வளர்ப்பு முறையில் உதவிகளைச் செய்வதற்கு அரசு பல்வேறு
முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தஞ்சையில் குறிப்பாக காட்டுத் தோட்டத்தில்
விவசாயக் கல்லூரி ஏற்படுத்தப்படுமென்று முன்னாள் விவசாயத்
துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே அறிவித்திருந்
தார்கள். சமீபத்தில் நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள்
ஆடுதுறைக்கு வந்திருந்த போது அதில் ஏதோ மாற்றம்
இருப்பதாக தெரிவித்ததாக பத்திரிகைகளில் படித்தேன். இந்த
விவசாயக் கல்லூரி 1986—87 ஆம் ஆண்டிலேயே ஏற்படுத்தப்
பட்டிருக்க வேண்டும். என்ன காரணத்தினாலோ இதில் கால
தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலாவது இந்த
விவசாயக் கல்லூரியை அரசு தஞ்சையில் ஏற்படுத்த வேண்டும்.
தஞ்சையை சுற்றி பல இடங்கள் இருக்கின்றன. புறம்போக்கு
நிலங்களும் ஏராளமாக இருக்கின்றன. ஒரு காலக்கட்டத்தில்
வேளாண்மைத் துறை அதிகாரிகள் வந்து பார்வையிட்டுதான்
காட்டுத்தோட்டத்தில் இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்படுமென்று
மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் அறிவிப்பை
செய்தார்கள். இதிலே எந்த சிரமமும் இருப்பதாக எனக்குத்
தெரியவில்லை. தஞ்சையை சுற்றியுள்ள பகுதியில் இதனை
ஆரம்பிப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முயற்சியெடுத்து
எந்த இடத்தில், எந்த தேதியில் ஆரம்பிக்கப்படும் என்ற
விவரத்தை தன்னுடைய பதிலுரையில் தெரிவிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி டெல்ட்டா பகுதியில் குவிண்டாலுக்கு 35 ரூபாய்
இடுபொருளாக மாநில அரசு கொடுத்து வருகிறது. இதனை
நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலேயே
தமிழகத்தில்தான் விவசாயத்தில் உற்பத்தி செலவு அதிகமாக
இருக்கிறது. குவிண்டாலுக்கு 35 ரூபாய் இடுபொருளாக வழங்கு
வதை 50 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று
அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய அமைச்சர் அவர்கள் தமிழகத்தில்
புதியதாக 30 சர்க்கரை ஆலைகள் அமைவதற்கு வாய்ப்புண்டு
என்று சொல்லி இருக்கிறார்கள். எத்தனை சர்க்கரை ஆலை
களுக்கு அனுமதி கேட்டு மாநில அரசிடமிருந்து மத்திய அரசிற்கு
அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை.
இருப்பினும் தர்மபுரி மாவட்டத்தில் ஹரூர் கூட்டுறவுச் சர்க்கரை
ஆலையினை ஏற்படுத்த தமிழக அரசு மத்திய அரசுக்கு எழுத
வேண்டும் எனவே அங்கே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை
ஏற்படுத்த அரசு முழுமூச்சாக பாடுபட்டு, அதை நிறைவேற்ற
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்து குடிநீரைப் பொறுத்தவரையில், ஒன்றிரண்டு
வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இன்றைக்கு இந்தக் குடிநீர் வழங்குகிற திட்டத்தை மூன்று

[திரு. ந. சிவஞானம்] [2987 ஏப்ரல் 4

வகையாகப் பிரித்திருக்கிறார்கள். சென்னைப் பெருநகர்த்
திட்டம், ஊரக குடிநீர்த்திட்டம், நகர்ப்புற குடிநீர்த் திட்டம்,
என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு, இன்றைக்கு அவைகளை
நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக சென்னை
நகருக்கு குடிநீர் வழங்க முன்பு வீராணம் திட்டம் வந்தது. அது
வீணாகப் போய்விட்டது. அடுத்து கிருஷ்ணா நதி நீர்த்திட்டம்
வந்திருக்கிறது, அது கிடைக்குமா என்ற ஏக்கத்தில் எல்லோரும்
இருக்கிறார்கள். சென்னை போன்ற பெருநகரத்திற்கு,
இந்தியாவின் விடுதலைக்குப் பிறகு குடிநீர்த்திட்டம்
வருவதிலே ஏதோ ஒரு தேக்க நிலை இருக்கிறது. அந்த தேக்க
நிலை என்ன என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சென்னை
நகரத்திற்குத் தண்ணீர் வராதா என்ற ஏக்கத்திலே மக்கள்
இருக்கிறார்கள். எனவே அந்தத் தேக்க நிலை என்ன என்பதை
ஆராய்ந்து, அதை நிவர்த்தி செய்து, சென்னைக்குத் தண்ணீர்
கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். கடலில் இருக்கிற தண்ணீரை சுத்திகரித்து,
நம்முடைய சென்னைக்குக் கொடுத்தால், மிகவும் நன்றாக
இருக்கும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நம்முடைய அரசு
பரிசீலனை செய்து, விரைவாக அத்தகைய திட்டத்தைக்
கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
அப்படிக் கொண்டு வந்தால், நன்றாக இருக்கும் என்ற
என்னுடைய அபிப்பிராயத்தையும் நான் தெரிவிக்க விரும்பு
கிறேன்.

சென்னைக்கு குடிநீர் வழங்குகின்ற புழல் ஏரி மிகவும் வறண்டு
போய், மிக மோசமான நிலையில் இருக்கிறது. 1982 ஆம்
ஆண்டிலே ஏற்பட்ட வறட்சியைவிட இப்போது இருக்கிற
நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. 40 கோடி கன அடி
தண்ணீர்தான் இருப்பதாக சொல்லப்படுகிறது. சட்டமன்ற
விடுதிக்குக்கூட தண்ணீர் வரவில்லை என்று சொல்லக்கூடிய
அளவிற்கு நிலைமை போய்விட்டது. நம்முடைய மாண்புமிகு
உறுப்பினர் இங்கே காலையில் பேசும்போது சுட்டிக்காட்டி
னார்கள். மதுரையில் எப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்று
சொன்னார்கள். எனவே தமிழகம் முழுவதும் வறட்சி
ஏற்பட்டிருக்கிற இந்த நிலையில் எல்லா இடங்களிலும் போர்
களைப் போடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,
அதற்காக நடவடிக்கைகளை எடுத்தது சம்பந்தமாகக் கூட
இங்கே ஒரு அறிக்கையை வாசித்தார்கள். அதற்காக என்னுடைய
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் வறட்சி
ஏற்பட்ட எல்லா இடங்களிலும், தண்ணீர் கிடைக்க, பாதுகாக்கப்
பட்ட குடிநீர் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த
நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 2] [திரு. ந. சிவஞானம்]

அடுத்து, நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள
பி.வி.சி. பைப்புகள் எல்லாம் தரமில்லாத பைப்புகளாக
இருக்கின்றன. தரமில்லாத பைப்புகளை வாங்குவதாகச் சொல்
கிறார்கள். ஆகவே தரமுள்ள பைப்புகளை வாங்குவதற்கு
ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். விலை அதிகமாக இருந்தாலும்
தரமுள்ள பைப்புகளை வாங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.
அதேபோல் விசைப் பம்புகளைக் கூட வாங்கும் போது நல்ல
ஸ்டான்டர்டு உள்ள பம்புகளாக வாங்க வேண்டும். ஐ.எஸ்.ஐ.
மார்க் இருக்கிற நல்ல, தரமுள்ள விசைப்பம்புகளை, மோட்டார்
களை வாங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
தரக்குறைவான மோட்டார்களை துறை வாங்குவதாகச
சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லாமல், தரமுள்ள
மோட்டார்களை வாங்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் உங்களுக்கு நன்றாகத் தெரியும். வறட்சி ஏற்
பட்ட எல்லா இடங்களிலும், தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்
கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு ஆழ் குழாய்க் கிணறுகளைப்
போட வேண்டும். அப்படி ஆழ்குழாய்க்கிணறுகளைப் போடுகின்ற
பல இடங்களில் ரிக்குகள் சரியாக வேலை செய்யவில்லை என்று
சொல்கிறார்கள். மேலும் போதிய அளவிற்கு சரியான ரிக்குகள்
இல்லை என்றும் சொல்கிறார்கள். தனியார்களிடத்திலே
வாடகைக்கு அவைகளை வாங்குவதாகவும் சொல்கிறார்கள்.
எனவே குடிநீர் வடிகால் வாரியம் போதிய ரிக்குகளை வாங்கு
வதற்கு ஏற்பாடுகளைச் செய்து, உடனடியாக தமிழகம்
முழுவதும் எற்பட்டிருக்கிற குடிநீர்ப் பிரச்சனையை சமாளிப்
பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த
வரையிலும் எல்லா இடங்களிலும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது.
தஞ்சையிலே வறட்சி என்றால், தமிழகத்திலே வறட்சி என்று
சொல்லவும் வேண்டுமா? எனவே அப்படிப்பட்ட நிலைமையிலே
ஏராளமான குழாய்க் கிணறுகளை போடுவதற்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும் என்று நான்
இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக கும்பகோணம் பகுதியிலே இப்படிப்பட்ட ஒரு
நிகழ்ச்சி நடந்திருக்கிறது. கொள்ளிடத்திலேயிருந்துதான்
தண்ணீர் வரவேண்டும். அங்கே 4 மணி நேரத்திற்குத்தான்
மின்சார மோட்டார் போடுகிறார்கள் என்று சொல்லப்
படுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள், சாதாரண மக்கள்,
2, 3, 4 கிலோ மீட்டர் தூரம் சென்று தண்ணீர் எடுத்துவர
வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட
சூழ்நிலை இருப்பதால், எல்லா இடங்களிலும், ஆழ்துளைக்

கிணறுகளைப் போடவேண்டும். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில், பாதிக்கப்பட்ட இடங்களில் நிச்சயமாக ஆழ் குழாய்க் கிணறுகளைப் போட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கும்பகோணம் நகருக்கு பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவரப்பட்டு, 6 பிரிவுகளாக அதைப் பிரித்து அதைச் செயலாக்கும் செய்திருக்கிறார்கள். அதில் ஒரு பிரிவு வேலை தொடங்கி முடிந்துவிட்டது. பாக்கியுள்ள 5 பிரிவுகளில் உள்ள வேலைகளை முடிக்க அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கும்பகோணம் என்றால் கொசு விற்கு பெயர் போன இடம். எனவே அப்படிப்பட்ட இடத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் எவ்வளவு முக்கியமான ஒன்று என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்து, கும்பகோணம் வாழ் மக்களுக்கு இந்த அவசியமான பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒரு சில கருத்துக் களை சொல்ல விழைகிறேன்.

சோதனைக் காலங்களில் சாதனைகளை நிகழ்த்தி வருகின்ற தமிழக விவசாய பெருமக்களை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் அத்தகைய சாதனைகளை அடைவதற்கு வேளாண்மைத்துறை எடுத்து வருகிற முயற்சி களையும், அந்த வேளாண்மைத்துறை எடுத்து வருகிற முயற்சி களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து இவ்வளவு பெரிய சாதனை களை அடைவதற்கு உறுதுணையாக இருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு தமிழக விவசாயிகள் சார்பில் இந்த நேரத்தில் நன்றியைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நெல் உற்பத்தியில் இந்தியத் துணைக் கண்டத்தில் 2-ஆவது இடத்தையும், கரும்பு உற்பத்தியில் முதல் இடத்தையும், தென்னை உற்பத்தியில் கேரளாவை மிஞ்சுகின்ற அளவுக்கு இன்றைக்குத் தமிழகம் இருக்கிறது என்று சொன்னால் வேளாண்மைத் துறையினுடைய வியக்கத்தக்க சாதனை இது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லி ஆகவேண்டும். அந்தத் துறையில் இப்படி பாடுபட்டுக் கொண்டு இருக்கின்ற அந்த விவசாயப் பெரு மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் எந்தச் சங்கடத்திற்கும் ஆளாகக் கூடாது என்பதற்காகத்தான் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கூட்டுறவு வங்கிகளிலே வாங்கிய கடன்களுக்கு வட்டிகளை எல்லாம் இன்றைக்குத் தள்ளுபடி



செய்து இருக்கிறார்கள். அதேபோல் விவசாயத்தை பெருக்கு வதற்காக இலவச மின்சாரத்தை இன்றைக்கு வழங்கியிருக் கிறார்கள். அதேபோல் விவசாயிகள் நீருக்காக தேடி கம்ப்ரசர் மோட்டார்களை வைத்து அதனால் மின்சார வாரியத்தால் பிடி பட்டு விதிக்கப்பட்ட அபராதத்தைக் கூட இன்றைக்கு ரத்து செய்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட உதவிகளைப் பெற்றும் இன்றைக்கு விவசாயிகள் சலிப்பு இல்லாமல் இருக்கிறார்களா அல்லது நிம்மதி யாக இருக்கிறார்களா என்றால் இல்லை என்ற பதில்தான் நமக்கு கிடைத்து வருகிறது. ஏன் என்ற அந்தக் கேள்விக்குத்தான் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிற இந்த வேளாண்மைத்துறை விரைவாக பதில் கண்டு ஆகவேண்டும். இன்றைக்கு விவசாயிகளுக்கு இருக்கின்ற யதார்த்த நிலைமை உழைப்புக்குத் தகுந்த ஊதியம் இல்லை; போடுகின்ற முதலீட்டுக்குத் தகுந்த லாபம் இல்லை என்பதுதான். இன்றைக்கு 8 மணி நேரம் உழைக்கின்ற குமாஸ்தாவுக்கு இருக்கின்ற மரியாதை, மதிப்பு கூட சமுதாயத்தில் விவசாயிகளுக்கு இல்லையே என்ற அந்த ஏக்கம்தான் இருக்கிறது.

ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தன்னுடைய மகன் தனக்குப் பின்னால் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாகத்தான் வரவேண்டும் என்று விரும்புகிறான். ஒரு டாக்டர் தன்னுடைய மகன் தனக்குப் பின்னாலே ஒரு டாக்டராகத்தான் வரவேண்டும் என்று விரும்பு கிறார். ஒரு இன்ஜினியர் தன்னுடைய மகன் தனக்குப் பின்னால் ஒரு இன்ஜினியராகத்தான் வரவேண்டும் என்று விரும்புகிறான். ஆனால் எந்த விவசாயியும் தன்னுடைய மகன் தனக்குப் பின்னால் அந்த விவசாயத் தொழிலில் ஈடுபடவேண்டும் என்று விரும்புவதே கிடையாது. என்ன காரணம் என்பதை தயவுசெய்து நான் மட்டும் அல்ல, இந்த மன்றத்தில் உள்ள அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால் நிலத்தை விற்றுவிட்டு அந்தப் பணத்தை முதலீடு செய்து அதாவது வங்கியில் பிக்ஸட் டெபாசிட்டில் போட்டு அதற்கு வட்டி வந்தால் கூட போதும் என்ற அளவுக்கு இன்றைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

வேறு தொழிலை எடுத்துக்கொண்டால் கூட ஒரு பேனா செய்கின்ற தொழிற்சாலையை நடத்துகிறவன் கூட அந்த உற்பத்திச் செலவை வைத்துதான் அந்தப் பொருளினுடைய விலையை நிர்ணயிக்கிறான். ஒரு பேனாவை செய்வதற்கு, அதை உற்பத்தியாக்குவதற்கு 8 ரூபாய் செலவு ஆகிறது என்று சொன்னால் அதன்மேல் 4 ரூபாயை லாபம் வைத்து அந்த பேனாவை 12 ரூபாய்க்கு விற்பனை செய்கிறான். இப்படி அந்த விலையை நிர்ணயிக்கிற உரிமை அந்த தொழிலை செய்கிறவனுக்கு இருக்கிறது. ஆனால் சொந்த நிலத்திலே, தன்னுடைய சொந்தப் பணத்தை வைத்து அந்தத் தொழிலை செய்கிற விவசாயிக்கு தன்னுடைய உற்பத்தி பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யக்கூடிய உரிமை இல்லை என்பதுதான் இன்றைக்கு வருந்தக்கூடியதாக

இருக்கிறது. ஆனால் அரசாங்கமும், நாமும் என்ன காரணத்தைச் சொல்லிக்கொண்டு இருக்கிறோம்? விவசாயியினுடைய உற்பத்திப் பொருளுக்கு விவசாயியே விலை நிர்ணயித்தால் கன்ஸ்யூமர்ஸ் அதாவது வாங்கி உபயோகம் செய்பவர்களுக்கு நஷ்டம் வரும் என்று சொல்கிறோம். நான் அதை ஒத்துக்கொள்கிறேன். தாய்ப் பசு, விவசாயி என்று சொன்னால், அதனுடைய கன்று வாங்கி உபயோகிக்கிறவர்கள். எனவே கன்றினுடைய நன்மைக்காக, கன்று நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக தாய்ப் பசுவை யாரும் கொன்றுவிட மாட்டார்கள். எனவே அந்த வகையில் இது மிகப்பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது. உற்பத்தி விலையை பெருக்குவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை இந்தத் துறை தயவுசெய்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். உற்பத்திப் பொருளுக்கு அதிகமான விலை கொடுத்தால் உண்மையிலேயே உபயோகம் செய்பவர்கள் கஷ்டப்படுவார்கள்; நஷ்டப்படுவார்கள். எனவே நாம் விவசாயிகளுடைய உற்பத்திச் செலவை குறைத்தாக வேண்டும். அப்படிக் குறைத்தால் தான் விவசாயிகளுக்கும் நன்மையாக இருக்கும், அதே சமயத்தில் வாங்கி உபயோகம் செய்பவர்களுக்கும் நன்மையாக இருக்கும். (குறுக்கீடு) குறுக்கீடு வராமல் தான் நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். தயவுசெய்து குறுக்கீடு வேண்டாம். இன்னும் வாட்டர் போர்டு பற்றி நான் பேசவேண்டும். இப்படி குறுக்கீட்டில் நேரம் போய் விட்டால் பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு அனுமதி தர மாட்டார்கள்.

(பிற்பகல் 12–10)

எனவே உற்பத்திச் செலவை குறைக்கவேண்டும். உற்பத்திச் செலவை குறைப்பதன் மூலம்தான் வாங்கி உபயோகம் செய்பவர்களுக்கும் நன்மையாக இருக்கும்; விவசாயிகளுக்கும் நன்மையாக இருக்கும். எனவே கன்சுமர்ஸ் பாயின்ட் ஆப் வியூவில் எடுத்துக்கொண்டால் கூட இது நன்மையாக இருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். எனவே இன்றைக்கு என்னைப் பொறுத்தவரையில் அந்த விவசாயி பொருட்களை உற்பத்தி செய்கிறபோது அந்த உற்பத்திச்செலவில் விவசாயிகளோடு இந்த அரசாங்கங்களும் பங்கு கொள்ள வேண்டும். இதைத்தான் இந்த மன்றத்தில் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மாநில அரசு மட்டும் அல்லாமல் மத்திய அரசும் இதில் பங்கு கொள்ளவேண்டும். மத்திய அரசு வேளாண்மைத் துறையை கன்கரண்ட் லிஸ்டில் வைத்துக்கொண்டு, ஏதோ பைலட் ஸ்கீம் என்று போட்டுவிட்டு, மத்திய சர்க்கார் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து மேட்சிங் கிராண்ட்டாக நீங்களும் பாதியைப் போடுங்கள் என்று அங்கே டில்லியில் இருந்துகொண்டு, ஆலோசனை சொன்னால் மட்டும் போதாது. எனவே முழுக்க முழுக்க வேளாண்மை சம்பந்தப்பட்டது மாநில அரசுத் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருப்பதால், வேண்டுமானால் நாம் சொல்வதுபோல் விவசாயியினுடைய உற்பத்திச் செலவை குறைந்தபட்சம் 50 சதவீதத்தையாவது மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டால்தான் அந்த விவசாயி நல்ல



முறையில் இருப்பான். அதற்கான வழி வகைகளை இந்தத் துறை
மேற்கொள்ள வேண்டுமென்பது என்னுடையகருத்து. இன்றைக்கு
அரசாங்கம் உதவி செய்யவில்லையா என்று மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்கள் கூட கேட்கலாம். ஆனால் அரசாங்கம் விவசாயி
களுக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்கிறது. புரட்சித் தலைவர்
அரசாங்கம் செய்யாத உதவிகள் விவசாயிகளுக்கு இல்லை. அந்த
அளவிற்கு, எந்த அரசாங்கமும் செய்யாத அளவிற்கு, புரட்சித்
தலைவர் தாயுள்ளத்தோடு பல்வேறு நன்மைகளை விவசாயி
களுக்கு செய்து வருகிறார்கள். துணைத் தலைவர் அவர்களே,
உங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன். இன்றைக்கு நாம் வழங்கி வருகிற உதவி, விவசாயி
களுடைய நஷ்டத்திற்கு கிடைக்கிற ஒரு நிவாரணமாகத்தான்
இருக்கிறதே தவிர, அவனுடைய தேவைக்கு, காலாகாலத்திலே
கிடைக்கிற உதவியாக அது இல்லை என்பதை மன வருத்தத்தோடு
தெரிவித்துக்கொள்கிறேன். உதவிகளைச் செய்கிறபோது அது
உற்பத்தியில் பங்காக இருக்கவேண்டுமென்பது என்னுடைய
கருத்து. எனவே இந்தத் துறையால் வழங்கப்படுகின்ற உதவிகளை
மறுபரிசீலனை செய்ய வேண்டும். இன்றைக்கு கவனித்துக்
கொண்டு வருகிறோம், நடைமுறையில் எவ்வளவோ சங்கடங்கள்
இருக்கின்றன. எனவே மாற்று முறைகளை இந்தத் துறையிலே
பணியாற்றுகின்ற அதிகாரிகள் தயவுசெய்து கவனிக்க வேண்டு
மென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்
கிறேன். கிணற்றிலே விவசாயி நீர் இறைத்து வாய்க்கால்
வழியாக வயலுக்குப் பாய்ச்சுகிறான். அவன் வயலுக்கு தண்ணீர்
வரும் என்று காத்திருக்கிறான். ஆனால் வாய்க்காலிலேயே
உடைப்பெடுத்து தண்ணீர் வெளியே போய்விடுகிறது. உடைப்
பெடுத்தால் வயலுக்கு தண்ணீர் போய்ச் சேராது.

எனவே அரசாங்கத்தினுடைய நிவாரணம் அப்படித்தான்
இன்றைக்கு விவசாயி அடைய முடியாத ஒரு நிலைமையில்
இருக்கிறது. நான் பணிவன்போடு இந்த அதிகாரிகளைக்
கேட்கிறேன். இன்றைக்கு விவசாயிகளுக்கு எவ்வளவோ உதவி
களைச் செய்து வருகிறோம். 'இன்புட்ஸ்' என்ற வகையிலே
உபகரணங்களை எல்லாம் கொடுக்கிறோம். இடுபொருட்களை
கொடுக்கிறோம். ஆனால் அது விவசாயிகளுக்குப் போய்ச்
சேர்கிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு ஏதாவது 'மானிட்டரிங்'
நம்முடைய நடைமுறையில் இருக்கிறதா என்றால் நிச்சயமாக
இல்லை. ஏதோ ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தைச் செலவழித்தால்
மட்டும் போதும் என்ற ஒரு நிலைமைக்கு இந்தத் துறை தள்ளப்
பட்டுவிடக் கூடாது. இன்றைக்கு உரம் கொடுக்கிறோம், விதைகள்
கொடுக்கிறோம். மருந்துகள் கொடுக்கிறோம். எனவே விவசாயி
களுக்கு அது போய்ச் சேர்கின்ற வகையில் வழிவகைகளை இந்தத்
துறை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதற்கு இந்தத் துறை மட்டும்
ஒத்துழைத்தால் போதாது. துணைத் தலைவர் அவர்களே, அதற்கு
மற்ற துறைகளோடு 'கோ-ஆர்டினேஷன்' வேண்டும். இதிலே
சம்பந்தப்பட்ட கூட்டுறவுத் துறை, மின்துறை, நீர்ப்பாசனத்
துறை, இவைகள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். அந்த வகையில்
இந்தத் துறை இணைந்து செயல்பட வேண்டுமென்று இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே முக்கியமான ஒரு விஷயம். விவசாயத்திற்கு அடிப்படை தேவை என்ன என்று பார்க்க வேண்டும். அதற்கு அடிப்படை தேவை தண்ணீர்தான். இன்றைக்கு பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தால், தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தண்ணீரை சரியான முறையில் நாம் பகிர்ந்து அளித்து தண்ணீருக்கு வழிவகை செய்துவிட்டால், அந்த விவசாயிக்கு வேறு எந்த உதவியும் தேவையில்லை. எனவே 'வாட்டர் மேனேஜ்மெண்ட்' என்ற வகையில் இன்றைக்கு அங்கே தண்ணீரை சேமித்து வைக்கிறோம். இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் 'பெர்க்கொலேஷன் பாண்ட்ஸ்' போன்ற பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டங்களை இன்றைக்கு வேளாண்மை பொறியியல் துறை நல்லமுறையில் செய்து வருகிறது. அதை நான் பாராட்டுகிறேன். எனவே தண்ணீரை சேமித்து வைத்தால் மட்டும் போதாது. தண்ணீரை மேனேஜ் செய்யவேண்டும். அதுதான் இன்றைக்கு பிரச்சினை. அதிலே சில மாற்றங்களை எதிர்காலத்திலே கொண்டுவரவேண்டும். என்னைப் பொறுத்தவரையில், ஒரு ஆலோசனையாகச் சொல்வது. இன்றைக்கு பாசன சீரமைப்பு என்கிற நிலைமைபொதுப்பணித் துறையில் இருக்கிறது. நம்முடைய நீர் நிர்வாகம் அதைத் தனியாகப் பிரித்து சிறப்பாக பணியாற்றுகின்ற வேளாண்மைப் பொறியியல் துறைக்கு அந்த நிர்வாகத்தை ஒப்படைத்து, அந்த நிர்வாகத்திலே நல்ல அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து இங்கே 'ஜாயின்ட் செகரட்டரி' என்ற அளவிலே ஒரு அதிகாரியைப் போட்டு, ஒரு தனித் துறையாக ஆக்கி,—'வாட்டர் மேனேஜ்மென்ட் பிரிவுகள்' என்ற வகையில் கிட்டத்தட்ட 7 இடங்களில் இருக்கிறது. அதையெல்லாம் ஒருமைப்படுத்தி—'வாட்டர் மேனேஜ்மென்ட்' என்ற ஒரு பெரிய அமைப்பை உருவாக்கினால் அது நல்ல முறையில் அமையும்.

நதி நீர்ப் பங்கீடு என்ற வகையிலே மத்திய சர்க்கார் அதற்காக முழு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். காவிரி நீர்ப் பிரச்சினை. மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் திருப்பி விடுவது. அதுபோன்று இன்றைக்கு 'அக்ரிகல்சுரல் கமாடிட்டீஸ் பிரைசஸ் கமிஷன்' என்றெல்லாம் அவர்களுடைய அதிகாரத்தில் இருக்கிறது. அது போலவே இன்புட்ஸ் என்கின்ற வகையிலே உரம் அவர்களுடைய அதிகார வரம்பிற்குள்ளே இருக்கிறது. இவைகளை யெல்லாம் கருத்தில் கொண்டு மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் விவசாயிகளுடைய தேவைகளை அறிந்து எந்த அளவிற்கு விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்க முடியுமோ அந்த அளவிற்கு இருக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு ஒரே ஒரு கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன். வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில், இங்கே நிர்வாகக்குழு உறுப்பினர்களாக இருந்த மாண்புமிகு சின்னராஜ் அவர்களும் மாண்புமிகு குப்புசாமி



போன்றவர்களும் வலியுறுத்திய ஒரு கருத்து. அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற உதவிப் பேராசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 700 ஆக இருக்கிறது. அவர்கள் ஆராய்ச்சியிலே ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு விடுமுறையும் இல்லை. ஆனால் கலைக் கல்லூரியில் இருக்கின்ற உதவிப் பேராசிரியர்கள் ரூ. 1,100 பெறுகிறார்கள். இந்த பாரபட்சம் கூடாது. அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று சொன்னால் இந்த சம்பளத்தை உயர்த்தி அவர்கள் கேட்கின்ற நியாயமான கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்த மானியத்தின் வாயிலாகத் தெரிவித்துக் கொண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். துணைத் தலைவர் அவர்களே, இந்த வாட்டர் போர்டை பொறுத்த வரையில் சிறப்பாக பணியாற்றிக் கொண்டு இருக்கிறது. அதிலே எந்தவித குறைபாடோ, ஐயப்பாடோ இல்லை. இன்றைக்கு மழை இல்லாத நேரத்தில், தண்ணீர் தட்டுப்பாடு இருக்கின்ற போது கிராம மக்களுக்கு குறிப்பாக போர்வெல்களை வழங்கி நல்ல முறையிலே பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கி வருகின்ற இந்த வாரியத்தைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வாரியத்திலே இன்னும் என்ன செய்ய வேண்டுமென்றால் இன்றைக்கு போர்வெல்ஸ் போடுவதையே ஒரு நிரந்தரத் தீர்வாக நாம் கருத முடியாது. போர்வெல்ஸ் போடுவது ஏதோ ஒரு தற்காலிக பரிகாரமாகத்தான் இருக்க முடியும். எனவே, இன்றைக்கு ஆயிரம் போர்வெல்ஸ் போடுகிறோம் என்றால், போடுகின்ற ஆயிரத்திலே அடுத்த ஆண்டு 500 ஃபெய்லியூர் ஆகிவிடுகின்றன அல்லது வறண்டு விடுகின்றன. காரணம் நீர் மட்டம் கீழே போய் விடுகிறது. நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது இதை ஒரு தற்காலிகப் பரிகாரமாகத்தான் இந்தத் துறை, இந்த வாரியம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சேலத்திற்கு வந்தார்கள், தர்மபுரிக்கு வந்தார்கள். அங்கே ஒகேனக்கல் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். மேட்டூர், ஆத்தூர் குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இப்படி எங்கெங்கு நீர் ஆதாரம் இருக்கிறதோ, அது அணையாக இருந்தாலும் சரி, நீர்த்தேக்கமாக இருந்தாலும் சரி, அப்படிப் பட்ட ஆதாரங்களை கண்டுபிடித்து திட்டங்களை பெரிதாக்கி, தேவைப்படுகின்ற இடத்திற்கு, நிறைவேற்றி விட்டு, அப்படிப் பட்ட வாய்ப்பு இல்லாத இடத்திற்கு போர்வெல்களை, இந்தத் துறை, இந்த வாரியம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று காம்பென்சேட்டரி போர்வெல். இப்போது போர்வெல் போட்டு ஒரு திட்டத்தை நிறைவேற்றி நாம் உள்ளாட்சி அமைப்புகளிடம் விட்டுவிடுகிறோம். ஆனால் அதை பராமரிப்பதற்கு கூட அவர்களிடம் வசதி வாய்ப்புகள் இல்லை. அப்படி கொடுத்த பிறகு அதிலே ஏதாவது ஒரு போர்வெல்

பொய்த்து விட்டால் அதற்கு, காம்பென்சேட்டரி போர்வெல் போடுவதற்கு இப்போது புரொவிஷன் இல்லை. வாய்ப்பு இல்லை. ஒரு வேளை வாரியத்தின் உயர் அதிகாரிகளுக்குத் தெரியுமோ தெரியாதோ—அங்கேயிருக்கின்ற பீல்ட் ஆபீசர்ஸ்—ஸ்தல அதிகாரிகளைக் கேட்டால் எங்களுக்கு அப்படி உத்திரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே ஒப்படைக்கப்பட்ட அந்த திட்டத்திலே ஏதாவது குறைபாடு இருந்தால் அதை காம்பன்சேட் செய்வதற்கு காம்பென்சேட்டரி போர்வெல் போடுவதற்கு வழிமுறை இல்லை என்று சொல்கிறார்கள். அதை இந்த வாரியம் ஆராய வேண்டும். இன்றைக்கு ஆயிரம் போர்வெல்களுக்கு அரசாங்கம் பணம் ஒதுக்குகின்றது என்று சொன்னால் போடப்படுகிறபோதே போர்வெல் பெய்லியூராகி விடுகிறது. அதற்கு ஆல்டர்நேட்டிவ் போர்வெல் போடுவதற்கு வழியில்லை. எனவே போர்வெல் போட்டுவிட்டு அவர்கள் பேசாமல் வந்துவிடுகிறார்கள். அந்த இடத்தில் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு முன் வரவில்லை. அதையும் கவனிக்க வேண்டும். அதைப்போலவே இன்றைக்கு மெயின்டெனன்ஸ் பொறுத்தவரையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கொடுத்திருப்பதால் ரிப்பேர் செய்வதற்கும், பராமரிப்பதற்கும் காலதாமதம் ஆகிறது. என்னுடைய கருத்து அந்த வாரியத்திலேயே இன்னொரு செப்பரேட் விங், அதாவது இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீமை நடைமுறைப்படுத்துவதற்கும், மெயின்டெனன்ஸ் செய்வதற்கும் ஒரு தனி பிரிவை ஏற்படுத்த வேண்டும். எனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்ட பிறகு ஏதாவது அதில் இம்ப்ரூவ்மெண்ட் செய்ய வேண்டும் என்றால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிநிலைமை இல்லை. அதையும் இந்த வாரியம் செய்தாக வேண்டும். அதில் ஒரு தனிப் பிரிவை ஆரம்பித்துச் செய்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் கூட அடிக்கடி சொல்லியிருக்கிறீர்கள். இந்த போர்ட் ஆப் டைரக்டர்ஸை மாற்றிஅமைக்க வேண்டும். இந்த வாரியத்தை பொறுத்தவரையில், வாட்டர் போர்டை பொறுத்தவரையில் போர்ட் ஆப் டைரக்டர்ஸை மாற்றி அமைக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் அதிலே ஒரு தலைவர், ஒரு எம்.டி. போதும் என்று நினைக்கிறேன். 10 ஐ. ஏ. எஸ். ஆபீசர்கள் நவக்கிரகங்களைப் போல் உட்கார்ந்து கொண்டு அவர்கள் ஒரு டெசிஷனும் எடுக்காமல் தள்ளித்தள்ளி போய்க் கொண்டே இருக்கிறது என்கிறார்கள். காரணம் பத்து அறிவாளிகள் சேர்ந்தால் ஒரு முடிவை எடுக்கவே முடியாது. ஆளுக்கு ஆள் ஒரு ஐடியாவைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். எனவே இதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த உள்ளாட்சி அமைப்புகளில், ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி, பேரூராட்சி இயக்குநர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்த பிறகு, பேரூராட்சி சார்பாக, நகராட்சி சார்பாக, கிராமப்



பஞ்சாயத்துக்கள் சார்பாக, அங்கே பொது மக்கள் பிரதிநிதிகளை நீங்கள் நாமினேட் செய்து இந்த போர்டிலே அங்கம் வகிக்க வைப்பீர்களானால் நடைமுறையிலே பிராக்டிக்கலாக என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்கள் தெரிவிப்பார்கள்.

(பிற்பகல் 12-20)

எனவே, அப்படிப்பட்ட அந்த வாரிய நிர்வாகத்திலே இருக்கிற அந்த நிர்வாக அமைப்பை மாற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, என் தொகுதியினுடைய வேண்டுகோள்—மாண்புமிகு நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு பல காரியங்களை இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்காகச் செய்து கொடுத்திருக்கிறார்கள். மேட்டூர், ஆத்தூர் குடிதண்ணீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி முடித்துக் கொடுக்க வேண்டும். தாரமங்கலம், இல கண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி ஆகிய பேரூராட்சிகளுக்கென்று ஒரு தனித் திட்டம் வாரியத்தினாலே பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பூலாம்பட்டியிலிருந்து, காவிரி நதியிலிருந்து நீரை எடுத்து குடி தண்ணீரைக் கொண்டு வந்து அந்த 4 பேரூராட்சிகள், பக்கத்திலே இருக்கிற குக்கிராமங்கள் ஆகியவற்றிற்குக் கொடுப்பதற்கான அந்தத் திட்டத்தினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவுபடுத்தி முடித்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, இந்த இரண்டு துறைகளைப் பொறுத்தவரையில், இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற— —உரிமையோடு சொல்கிறேன்,— எங்கள் மாவட்ட அமைச்சர் நல்ல முறையில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் சிறப்புக்கு சிறப்பு சேர்க்க வேண்டும். நான் சொன்ன கோரிக்கைகளையும் முடித்துத்தர வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. வி. பி. சிந்தன் : முக்கியமான கேள்வியை, துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்கிற பண்டங்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசியதை முழுக்க நான் ஆதரிக்கிறேன். ஆனால் அது இந்த மன்றத்திலே மட்டும் முடிவு எடுக்கப்படுகிற ஒரு பிரச்சனை அல்ல. மத்திய அரசினுடைய கொள்கைப் பிரச்சினை. மாநில முதலமைச்சர்களுடைய மாநாட்டில், அது கூடும்போது—எனக்குத் தெரிந்த தகவலை வைத்துச் சொல்கிறேன்-ஒவ்வொரு தடவையும் இதற்காகச் சண்டை நடக்கிறது. தமிழக ** என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு உறுப்பினர் எப்படி பதில் சொல்ல முடியும்? நீங்கள் டிமாண்டிலே பேசும் போது பேசினால், அமைச்சர் பதில் சொல்ல முடியும். எனவே, அதை எடுத்து விடலாம்......

**திரு. வி. பி. சிந்தன் :** இது ஆளும் கட்சியினுடைய கொள்கை பல்வேறு பாநிலங்களில் நடக்கக்கூடிய இயக்கங் களுடன் ஆளும்கட்சி சேருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க இராசாராம் :** துணைத்தலைவர் அவர்களே, மத்திய அரசு, மாநில முதல்வர்களை அழைத்துப் பேசுகிற அந்த மாமன்றத்தில், இப்படிப்பட்ட குரலை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இரண்டு பிரச்சினைகளை நாம் அணுகிப் பார்த்தாக வேண்டும். ஒரு பக்கத்தில் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும். வாங்குகிறவர்களுக்கு வாங்குகிற சக்தி அதிகமாக இருக்க வேண்டும். அவர்களும் பாதித்து விடக்கூடாது. அந்த வகையிலேதான் தற்போது விலைகள் நிர்ணயம் செய்யப் படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப் போராடுகின்ற இயக்கங்களுடன் நீங்களும் சேருவீர்களா என்று மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய சிந்தன் அவர்கள் கேட்டார்கள். எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரை, ஒரு இயக்கத்துடன் சேர்ந்துதான் ஒரு காரியத்திலே வெற்றி பெற வேண்டும் என்பதில்லை, தனித்து நின்றே காரியத்தைச் செய்து வெற்றி பெறுவார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. மா. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியத்தின் மீது எங்களுடைய கட்சியின் சார்பாக என்னுடையச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நடப்பு ஆண்டில் பருவ மழை தவறிய காரணத்தினால் மாநிலம் பூராவும் வறட்சியைப் பற்றி பத்திரிக்கைகள் மட்டுமல்ல, பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், வறட்சியை எப்படி சமாளிப்பது என்ற முறையிலே தங்களுடைய கருத்துக்களை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதே முறையில் இந்த அரசும் வறட்சியைப் பற்றி உணருகின்ற ஒரு கட்டாயத்தில் இருக்கின்றது. இருந்தாலும் எனது தொகுதியான வேதாரண்யம் தொகுதி, மானாவாரிப் பகுதி என்பது அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசிற்கும் தெரியும். அந்தத் தொகுதியில் மானாவாரிப் பயிர் முற்றிலும் பாழாக்கப்பட்டு, கடலைபோன்ற விதைகள், நவதானியங்கள் எல்லாம் தற்போது விளைவு கம்மியாக இருந்து மக்களெல்லாம் அவதிப்படுகின்ற ஒருநிலை இருக்கிறது.



வருகிற ஆண்டிலாவது, அவர்களுக்கு உரம், தரமான விதைகள் போன்றவற்றை அளித்து அவர்கள் விவசாயத்தை ஊக்கப்படுத்த வேண்டும் என்று இந்த அரசை வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைத் துறையினால் கொடுக்கப் படுகின்ற விதைகள், பருப்பு வகைகள், கடலை விதைகள் போன்றவைகள் மினி-கிட்டுகளில் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்படுகின்றன. இவைகளை சாகுபடி செய்யும் ஆரம்ப காலத்திலேயே தருவதில்லை. காலம் தாழ்த்தித் தருவதனாலே அந்த விவசாயிகளுக்கு அது சரியாகப் போய்ச் சேராதது மட்டுமல்ல: அதனாலே விவசாயமும் பாதிக்கப்படுகிறது. விலையும் அதிகமாக இருக்கின்றது.

வெளி மார்க்கட்டிலே வாங்குவதை விட, இங்கே அதிக விலை கொடுத்து கடலை போன்ற விதைகள் வாங்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அதோடு, மேலும் இந்த ஏழை விவசாயி களுக்கு அரிசனங்களுக்கு மானிய விலையில் கொடுப்பது, சரியாக, முறையாக நடைபெறவில்லை. அந்தச் சலுகையை வைத்துக் கொண்டு, பெரிய விவசாயிகள் கூட, தங்களுடைய நிலப் பட்டாவை வைத்துக் காட்டி, குறைந்த பட்டா புத்தகத்தைக் காட்டி அதைப் பெற்றுக் கொள்கின்ற ஒரு நிலைமைகூட, இன்றைய தினம் நாட்டிலே இருக்கின்றது. இதில் அதிகாரிகள் கவனம் எடுத்துக் கொள்வதும் இல்லை. அந்த இந்த அரசு கவனம் செலுத்தி ஏழை விவசாயி களுக்கும், அரிசனங்களுக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமை வராமல் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வெளி மார்க்கெட்டில் கிடைப்பதைவிட அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இங்கே கடலை, நெல் போன்றவைகளின் விலை ஏறி இருக்கிறது. இந்த ஆண்டு கூட நெல் விதை விலையை அதிகப்படுத்துகின்ற ஒரு நிலைமை இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அதையும் குறைத்து விவசாயிகளுக்கு மானிய விலையிலே கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு எங்களுடைய பகுதியிலே முந்திரி, மா, கடலை இவைகளுக்கு 50 சதவீத மானியத்தில் உரங்கள் கொடுத் தார்கள். ஆனால் இந்த ஆண்டு அதை நிறுத்தி விட்டார்கள். மானாவாரி, நாகப்பட்டினம் தாலூகாவிலும் வேதாரண்யம் தாலூகாவிலும் அதிகமாக இருக்கிறது. அங்கே முந்திரி, மா, கடலை போன்றவை அதிகமாக சாகுபடி ஆகின்றன. காய்கறி களெல்லாம் நிறைய உற்பத்தி ஆகின்றன. அதற்கு 50 சதவீத மானியத்தில் மீண்டும் மருந்துகள் தரவேண்டுமென்று இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

எண்ணெய் வித்துத் துறை என்று ஒரு துறை இருப்பது உங்களுக்குத் தெரியும். இந்தத் துறையிலே நடக்கின்ற ஊழல் களைப்பற்றி சொல்ல வேண்டுமென்றால் உண்மையிலேயே நீண்ட நேரம் ஆகும். அதற்கு தலைவர் அவர்கள் அனுமதி தர மாட்டார்கள் என்று சுருக்கமாகவே சொல்கிறேன். எண்ணெய் வித்துத் துறையில் வருகின்ற பொருள்கள் அத்தனையும் இங்குள்ள விவசாயிகளுக்கு 90 சதவீதம்கூட போய் சேருவதில்லை அந்த வாங்கிக்கொண்டு வந்து கொடௌனில் வைத்து விடுகி றார்கள். வாங்கிக்கொண்டு வந்து வைக்கின்ற கடலை, எள், சூரியகாந்தி போன்ற விதைகளாவது சரியான விதைகளாக இருக்கிறதா என்றால் இல்லை. நான்கூட வரும்போது அந்த கடலை மற்றும் விதைகளை பொட்டலம் கட்டி எடுத்துக்கொண்டு வந்து இங்கே காட்டலாம் என்று நினைத்தேன். அதற்கு எனக்கு நேரம் கிடைக்காததால் அவைகளைக் காட்ட முடிய வில்லை. அவ்வளவு மோசமான கடலை விதைகளையெல்லாம் இந்தத் துறை வாங்கிக்கொண்டு வந்து,-அதையும் இங்கே புஞ்சை நிலத்தில் சாகுபடி செய்வதற்கு கார்த்திகை, மார்கழி மாதங் களில் கொடுக்க வேண்டும். நஞ்சை நிலத்திலே தை, மாசி போன்ற மாதங்களிலேதான் சாகுபடி செய்ய முடியும். இந்த மாதங்களெல்லாம் முடிந்ததற்குப் பிறகு, காலந்தாழ்த்தி, விவசாயி களுக்குத் தேவையில்லாதபோது தருவதாகச் சொல்லுகிறார்கள்.

அதோடு, இந்த விதைகளெலலாம் எங்கே கிடைக்கும் என்று விவசாயிகளுக்குத் தெரிவது இல்லை. எந்த டெப்போவிலே கிடைக்கும் என்று அவர்களுக்கு விளம்பரத்தின் மூலம் தெரிவித் தால்தான் அவர்களால் அவைகளைப் பெறமுடியும். அவ்வாறு பெற்றுக்கொள்வதற்கான சூழ்நிலையை இந்த எண்ணெய் வித்துத்துறை அறவே மூடி மறைத்து அவைகளை சில இடங் களிலே—15, 20 தினங்களுக்கு முன்னாலே கூட அந்தத் துறையைச் சார்ந்த ஒரு அதிகாரியினுடைய வீட்டிலேகூட, எண்ணெயை ஆட்டி, டின்னிலே எண்ணெய் இருந்ததைக்கூட கண்டுபிடித்ததாக பத்திரிக்கையிலே ஒரு செய்தி வந்தது— விற்கப் படுவதாகவும் தெரிய வருகிறது. அப்படிப்பட்ட ஒரு மோசடி யான எண்ணெய் வித்துத்துறை நம் நாட்டிலே இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, விவசாயத் துறையை 4, 5 பிரிவுகளாகப் பிரித்து எண்ணெய் வித்துத்துறை, பொதுத் துறை, தோட்டக் கலைத் துறை, விவசாய விற்பனை விதைச் சான்றளிப்புத் துறை போன்று இங்கே 4, 5 பிரிவுகள் இருக்கின்ற காரணத்தினாலே, விவசாய மக்கள் சரியாகப் புரிந்து கொண்டு எந்தெந்தத் துறையில் பொருள்கள் கிடைக்கும் என்பதைப் புரிந்து கொள் கின்ற அளவிற்கு மக்களுக்கு தெரியாததாலே, இதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. இதை பழைய முறையிலே கூட ஒரே துறையாக வைத்து இங்கே ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு



அதிகாரியை நியமித்து, எல்லா பொருள்களும் ஒரே இடத்தில் கிடைப்பதற்கு, காம்ப்ளக்ஸ் என்ற வகையிலே அமைத்து கொடுத்தால்தான் விவசாயிகள் அந்தப் பொருள்களை வாங்கி அதிகமாகப் பயன்படுத்துவார்கள்.

நெல் விதை விலையை கூட இந்த ஆண்டு, 0.30, 0.35 காசுகள் அதிகப்படுத்தப் போவதாகக் கேள்விப்படுகிறோம். அதை குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெல் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு இப்போது குவிண்டாலுக்கு 35 ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் அந்த ஊக்கத் தொகை சரியான முறையிலே பயன்படுத்தப்படுகிறதா என்றால், இல்லை. ஒரு ஏக்கருக்கு நெல் விளைச்சலை சராசரியாக கணக் கிட்டால் 1,800 கிலோ உற்பத்தி ஆவதாக கணக்கு. ஆனால் 35 ரூபாய் வீதம் பார்த்தால் 650 ரூபாய் இங்கே ஊக்கத் தொகை யாக நாம் கொடுக்கிறோம். ஆனால் இந்த 650 ரூபாய்க்கும் உரத்தை பயன்படுத்துகிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை. நமது அரசும், விவசாயத் துறையும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு பரிந்துரை செய்கின்ற உரத்தின் அளவை கணக்கிட்டு பார்த்தால்கூட 400 ரூபாய், 450 ரூபாய்க்குள்தான் பரிந்துரை செய்கிறார்கள். ஆனால் அரசு கொடுப்பது 640 ரூபாய். இந்த உரங்களெல்லாம் எங்கே போகிறது என்றால்; கள்ள மார்க்கெட்டிலே விற்கிறார்கள். விவசாயிகள் அதை சரியாகப் பயன்படுத்துவதில்லை. அதை வெளி மாநிலங்களுக்கு கடத்துகிறார்கள்

(பிற்பகல் 12-30)

ஆக, உரம் கொடுப்பதைவிட விவசாயிகளுக்குப் பணமாக கொடுப்பது நல்லது. ரூ. 35 என்பதற்குப் பதிலாக ரூ. 50 ஆக உயர்த்தி ஊக்கத் தொகை கொடுத்தால் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அவர்களும் பயனடைவார்கள். ஏழை, நடுத்தர விவசாயிகள் தற்போதைய முறையின் காரணமாக எந்தப் பயனும் அடைவதாகத் தெரியவில்லை. ஆகவே அதை உடனடியாகத் தவிர்த்திட அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொளகிறேன்.

அடுத்து, புதிய நெல் ரகங்கள் என்று சில நேரங்களில் இலாக்காவிலிருந்து அறிவிக்கிறார்கள். அந்த நெல் ரகமெல்லாம் இலாக்காவிலிருந்து வெளி வருவதற்கு முன்னால் சில விவசாயிகள் தரமாகத் தயாரித்து வெளியே நல்ல விலைக்கு விற்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் 9408 என்ற சம்பா நெல் விவசாய இலாக்காவிலிருந்து சரியாக இன்னும் வெளியிடவில்லை. ஆனாலும் இந்த ஆண்டு வெளி மார்க்கெட்டில் தனியார்களிடமிருந்து அந்த நெல் ரகத்தை வாங்கிக் கொண்டு வந்து நல்ல மகசூல் பெற்றிருக்கிறார்கள். எனவே இதைப் போன்ற முறையைத் தவிர்த்து, விவசாய இலாக்காவிலிருந்து உரிய நேரத்தில் நல்ல விதைகள் கிடைக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பொறுத்தவரையில் எல்லா மருந்துகளும் கிடைப்பதில்லை. அதிலும் குறிப்பாக விவசாய இலாக்காவிலிருந்து கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. தனியாரிடத்தில் தான் கிடைக்கிறது. தற்போது என்டோசல்பான், டெமோக்ரான் போன்ற மருந்துகளை மட்டும்தான் விவசாய இலாக்காவினர் விற்பனை செய்கிறார்கள். அதிலும்கூட பல ஊழல்கள் இருந்தாலும் தரமான மருந்துகளாக இல்லை. விவசாயிகளுக்குத் தரமாகக் கிடைப்பதில்லை. அந்த அடைப்பான் பழுதுபட்டு சிந்தி வீணாகிற நிலைமை இருக்கிறது. எனவே எல்லா வகையான மருந்துகளும் விவசாய இலாக்காவிலேயே கிடைக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வேளாண்மை அலுவலர்கள் 10 ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தாலும், 20 ஆண்டுக்காலம் ஆகியிருந்தாலும்கூட சில பேருக்குத் தேர்வுநிலை கிடைக்காத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் போக்கப்பட வேண்டும். அதோடு இப்போது ஏ.ஓ. (அக்ரி) என்ற பதவி இருக்கிறது. 3, 4 அல்லது 5 டெப்போவுக்கு ஒருவர் என்று நியமித்து அவர்கள் எந்த டெப்போவில் எப்போது இருக்கிறார்கள் என்ற விவரமே விவசாயிகளுக்குத் தெரியாமல் அவர்கள் சங்கடப்படுகிறார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி ஒரு முறையின் கீழ் கொண்டு வந்தால்தான் விவசாயிகள் அவர்களைச் சந்தித்து தங்களுக்குள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள முடியும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன.

காவிரி நீர்ப்பாசனம் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். காவிரி நீர்ப் பிரச்சினை தீர்க்க முடியாத பிரச்சினையாக ஆகிவிடுமோ என்ற கவலை திருச்சி தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கும், தமிழக விவசாயிகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. எனவே விரைவில் அதற்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மானாவாரி பயிரைப் பற்றி மானியக் கோரிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதாரண்யம், நாகப்பட்டினம் போன்ற கடலோர தாலுக்காக்களில் மானாவாரி பயிர் நிறைய இருக்கிறது. அதற்குத் தேவையான விதைகளையும் இங்கே சரியான முறையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மானாவாரி பயிர்களுக்கு என்றே ஒரு தனியான விதைப் பண்ணை மற்றும் ஆராய்ச்சிப் பண்ணை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் மானாவாரிப் பயிர் இங்கே செழிப்பாக வளரும். விவசாயமும் சிறக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து வேதாரண்யம் பகுதியில் கடலை, எள், பருத்தி போன்றவற்றிற்கு சரியான சான்றளிக்கப்பட்ட விதைகள் கிடைப்ப தில்லை. மோசமான விதைகள்தான் கிடைக்கின்றன. அதுவும் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. உரிய நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாகப்பட்டினம், வேதாரண்யம் பகுதியில் மானாவாரியில் காய் கறி உற்பத்தி நிறைய நடக்கிறது. அந்தத் தோட்டக்கால்களி லிருந்து நிறைய காய்கறி கிடைக்க விவசாயிகளுக்கு நல்ல விதை களை மான்ய விலையில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அங்கெல்லாம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை கட்டித் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் வேதாரண்யத்தில் மல்லிகை அதிகமாக உற்பத்தியாகிறது. நமது மாநில அரசால் ஏற்கெனவே மல்லிகை செண்ட் தயாரிக்க ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. எனவே, மல்லிகை அங்கே நிறைய உற்பத்தியாவதால் வேதாரண் யத்தில் ஒரு மல்லிகை சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரிசி விலையைப் பற்றியும் உணவு தானியங்களின் விலையைப் பற்றியும் எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் மிகவும் விரிவாகப் பேசினார்கள். நாங்கள் கூட அதை மிகவும் ஆர்வமாகக் கேட்கிற அளவுக்கு அவருடைய உரை இங்கே அமைந்திருந்தது என்பதில் மிகுந்த மகிழ்ச்சி. நாங்கள் பேசுவதைவிட ஆளும் கட்சி உறுப்பினர் பேசினால் அதன் அடிப்படையில் அமைச்சரவை எடுக்கும் முடிவு நல்ல முடிவாக இருக்கும் என்றுதான் எதிர்பார்க்கிறேன். எல்லா வகையான பொருள்களும் இன்றைக்கு விலை ஏறிக் கொண்டே போகின்றன. நேற்றைய தினம் எங்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திருச்சி மலர்மன்னன் அவர்கள் நீண்ட பட்டியலே போட்டு இங்கே படித்துக் காட்டினார்கள். ஆனால் நெல்விலை உயர்ந்ததா என்றால் இல்லை.

அதை கூட நேற்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் மறுத்திருக் கிறார்கள். அரிசியின் விலை குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பற்றி உண்மையிலேயே வெட்கப்பட வேண்டியதொரு நிலையிலே இருக்கிறோம். இந்த மாநிலம் ஒரு விவசாய மாநிலம். விவசாயிகள் அத்தனை பேரும் இன்று என்ன நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி விட்டார்கள். நானும் அதையே திருப்பிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. விவசாயத்தை ஒரு வர்த்தக ரீதியாக அணுகி அல்லது ஏதாவது ஒரு வகையில் ஊக்கம் தருகிற வகையில் விளை, பொருள்களுக்கான விலையை உயர்த்த வேண்டும். வட மாநிலங் களில் உள்ள கோதுமைக்கு விலை உயர்த்தியிருக்கிறார்கள். தென் மாநிலங்களில் விளைகிற நெல்லுக்கு சரியான விலை கொடுக்க முடியாத நிலைமை நமது மாநிலத்தில் இருக்கிறது. இதை முக்கியமாக கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று

அடுத்தபடியாக குடிநீர் பிரச்சினை. வேதாரண்யம், தலை ஞாயிறு, திருத்துறைப்பூண்டியில் ஒரு பகுதி, நாகப்பட்டிணத்தில் ஒரு பகுதி ஆகியவற்றில் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆய்வு செய்து நிலத்தடி நீரை எடுக்கக்கூடாது என்ற முறையை வகுத்தார்கள். அப்படிப்பட்டதொரு மோசமான நிலைமை அந்தப் பகுதிகளிலே இருக்கிறது. நிலத்தடி நீரை எடுக்க முடியாத அளவிற்கு அந்த தாலுக்காக்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அங்கே குடிதண்ணீர் கிடைக்கவில்லை. இப்படிப் பட்ட மோசமான நிலைமை இருப்பதால் அங்கே குடிதண்ணீருக்கு முன்னுரிமை தர வேண்டும். குடிதண்ணீருக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் சில பட்டியலை ங்கே பார்த்தேன். அந்த பட்டியலில் வேதாரண்யம், நாகப்பட்டிணம், திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு ஆகிய தாலுக்காக்களை அந்த முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேதாரண்யம் குடிதண்ணீர் திட்டம் இன்றைக்கு அரசிடம் இருப்பதாக கேள்விப்பட்டேன். ஆனால் அதைப் பற்றி எந்தவிதமான அறிவிப்பும் கிடைக்கவில்லை. உடனடியாக வேதாரண்யம் பகுதிக்கு குடிதண்ணீர் கொடுக்கவும், தலைஞாயிறு பகுதிக்கு குடிதண்ணீர் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குடிநீர் வடிகால் வாரியத்தையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு சென்னை நகர குடிதண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மக்கள் எல்லாம் நம்பிக்கை இழக்கிற அளவிற்கு வளர்ந்திருப்பதாகத் தெரிகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு வீராணம் திட்டத்தை மீண்டும் எடுத்து நல்ல முறையில் செயல்படுத்தலாம் என்ற அறிக்கையை பல வல்லுநர்கள் தந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். முன்பு கூட வீராணம் திட்டத்தை நல்ல முறையிலே நிறைவேற்ற முடியும் என்றுதான் அறிக்கையைத் தந்தார்கள். ஆந்திர அரசோடும் மற்ற அரசோடும் உங்களுக்குள்ள மனமாச்சரியத்தால், மத்திய அரசிடம் உள்ள சங்கடத்தால் இந்தத் திட்டம் வர வாய்ப்பில்லை என்று நாங்கள் நினைக்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத் தால், நீங்களாவது வேறு எந்த கண்ணோட்டத்தோடும் பார்க்காமல் தயவு செய்து வீராணம் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தினால் சென்னை வாழ் மக்களுக்கு குடிநீர் பிரச்சினை தீரும் நிலைமை இருக்கும். அதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கை களை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்





வதற்கு முன்னால் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக, அமைச்சர் அவர்களின் மூலமாக பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்ட நெடிய காலமாக, பத்தாண்டுக் காலமாக வட்டியின் சுமையில் வாடிக்கொண்டிருந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய எப்போதாவது விடிவிலக்கு கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டிருந்த ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுடைய இதயத்திலே மகிழ்ச்சியை ஏற்படுத்துகிற வகையில் ஏறத்தாழ 125 கோடி ரூபாய் வட்டிச் சலுகையை அளித்து விவசாயப் பெருங்குடி மக்களுடைய இல்லங்களிலும் அவர்களுடைய உள்ளங்களிலும் மகிழ்ச்சி ஏற்படுத்தியதற்காக அவர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு பத்தாண்டுக் காலத்திற்கு முன்னாலே இந்தத் துறையிலே நெல்லாக இருந்தாலும், கரும்பாக இருந்தாலும், அதற்குத் தரப்படுகிற விலை போதுமானதாக இருக்கிறதா என்பதைப் பற்றி இந்த மன்றத்திலேயே விவாதித்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல் அந்த நிர்ணயிக்கும் விலைக்கு மாறாக வெளிச்சந்தையில் விற்கும்போது ஒன்றுக்கு மூன்றாக விற்றது. அதாவது 60 கிலோ கொண்ட நெல் மூட்டையின் நிர்ணயித்த விலை 50 ரூபாயாக இருக்கும்போது கோயம்புத்தூர், சேலம் போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் அதே எடையுள்ள மூட்டையை நூற்றுக்கு மேலே கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலையும், 40 ரூபாய், 50 ரூபாய் என்று உரங்களுக்கு விலை நிர்ணயித் திருக்கும்போது வெளிச் சந்தையில் 150 ரூபாய் வரையில் கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலையும் இருந்தது, கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து இன்றைக்கு உரம் இல்லை என்கிற நிலை இல்லாத அளவிற்கும், அதே நேரத்தில் ஒரு குவிண்டால் ஒன்றுக்கு 150 ரூபாய் பெறத்தக்க அளவிற்கும், கரும்புக்கு பத்தாண்டுக் காலத்திற்கு முன்பு 80 ரூபாய், 90 ரூபாய், 110 ரூபாய் என்று இருந்தது நாம் பல முறை போராடியதன் காரணமாக இன்றைக்கு மாறி 220 ரூபாய், 230 ரூபாய் டன்னுக்கு என்று உயர்த்திக்கொள்கிற அளவிற்கு அந்த விவசாயிகள் பெறுகிற நிலையை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது என்று சொன்னால் உள்ளபடியே இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40).

பல்வேறு திட்டங்களையும், பசுமைப் புரட்சியையும் ஏற்படுத்தியிருப்பதற்காக அரசைப் பாராட்டுகின்ற அதே நேரத்தில் ஒருசில கருத்துக்களை அரசினுடைய கவனத் திற்கு கொண்டுவருவதை நான் என்னுடைய கடமையாக கருதுகிறேன். இங்கே எனக்கு முன்னால் பல்வேறு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப் போல தமிழகத்திலுள்ள விவசாயிகள் விளைவிக்கின்ற விளைப் பொருள்களுக்கான விலையை நிர்ணயிப்

பதைப் பொறுத்தவரையில் நியாயமான விலையை நிர்ணயிப்பதற்கான வழி இல்லாமல் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். வட மாநிலங்களில் விளைகிற கோதுமைக்கான விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்கிறது. அதுபோல் தமிழகத்திலேயும் விளைவிக்கப்படுகின்ற நெல்லாக இருந்தாலும் சரி அல்லது கரும்பாக இருந்தாலும் சரி விலையை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் நம்மிடம் இருந்தால் நாமே நம்முடைய கருத்துக்களை எடுத்துச்சொல்ல முடியும். ஆகவே, மத்தியில் இருக்கிற வேளாண்மை விளைபொருள் விலை நிர்ணயக் குழுவில் தமிழகத்தின் சார்பிலும் ஓர் இடம் அவசியம் தர வேண்டும் என்பது என்னுடைய ஆசை. நாம் பலமுறை வாதிடுகிறபோது கூட வடக்கேயிருப்பவர்கள் அதிகமாக உற்பத்தி செலவு இல்லாமல் விளைவிக்கின்ற கோதுமைக்கு அதிகமாக விலை நிர்ணயிக்கப்பட்டு வருகிறது என்பதை எடுத்துச்சொல்லியிருக்கிறோம். ஆனால், நாம் உற்பத்தி செய்கின்ற கரும்பு, நெல் போன்றவைகளுக்கு உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கும் நிலையில், விலை குறைவாக இருக்கிற நிலைமையை பார்க்கிறபோது விவசாயிகள் என்னதான் சொன்னாலும், வள்ளுவர் குறளை பலமுறை மேற்கோளாகக் கொண்டாலும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்' என்று குறளில் சொல்லப்பட்டிருக்கும் கருத்தைப் பொறுத்தவரையில், என்னைப் பொறுத்தவரையில் அதனை கொஞ்சம் மாற்றி 'தொழுதுண்டு பின்செல் பவர் எல்லாம் உழுதுண்டு வாழ்வாரே' என்று சொல்லத்தக்க அளவுக்கு விவசாயிகளுடைய நிலைமை இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசுகிறபோது ஒன்றை சொன்னார்கள். நல்ல உயர்ந்த நிலையிலே இருக்கின்ற அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய குழந்தைகள் வருங்காலத்தில் அவர்களைப் போல ஆக வேண்டுமென்று நினைக்கிறார்கள், ஆனால், விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய குழந்தைகள் வருங்காலத்தில் விவசாயிகளாக ஆக ஆசையில்லையென்று இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். நான் கூட அதை எண்ணிப் பார்த்தேன். சென்னையிலே மிகப் பெரிய உயர்ந்த கல்வியை கற்று தருகிற ஒரு பள்ளிக்கூடத்துக்கு ஒருவர் தன் குழந்தையை அழைத்துச் செல்கிறார் என்றால், அங்கே போனவுடன் என்ன கேட்கிறார்கள்? தந்தை படித்திருக்கிறாரா, குழந்தையின் தாயார் படித்திருக்கிறாரா, டாக்டராக பணியாற்றுகிறாரா, வழக்கறிஞராக பணியாற்றுகிறாரா அல்லது அதை விட பெரிய உயர்ந்த பதவியில் இருக்கிறாரா என்றெல்லாம் கேட்கிறார்கள். அதோடு கூட கார் வைத்திருக்கிறாரா, அப்படியானால் தான் உங்கள் குழந்தையை சேர்த்துக்கொள்ள முடியும் என்று கேட்கிற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் எங்களைப் போன்ற படிக்காதவர்களின் குழந்தைகள், கார் வைத்திராதவர்களின் குழந்தைகள் எப்படி அந்த இடத்தில் போய் படித்து



நாளைய தினம் உயர்ந்த அளவில் உருவாக முடியும் என்றும் எண்ணிப் பார்க்கிறேன். ஆனால், ஒன்றை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் இன்றையதினம்
பல்வேறு வகைகளிலே விவசாயிகளை முன்னேற்றிக் கொண்டிருக்
கிறது. 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையோடு ஒப்பிட்டுப்
பார்க்கும் போது இன்றையதினம் எல்லாவகையிலும் விவசாயப்
பெருங்குடி மக்களுக்கு மானியங்கள் மூலமாகவும், பசுமைப் புரட்சி
மூலமாகவும் இந்தத் துறை ஆதரவு தந்து கொண்டிருக்கிறது.
விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கடமையாற்ற வேண்டுமென்ற
அடிப்படையில் இந்தத் துறை வறட்சியாக இருந்தாலும் சரி,
தண்ணீர் தட்டுப்பாடு இருந்தாலும் சரி, அரசு நிர்ணயித்திருக்கின்ற
குறியீட்டை எட்டுகின்ற அளவுக்கு, உற்பத்திப் பெருக்கத்தில்
தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை
விட இன்றைக்கு உற்பத்தி அளவு பெருகியிருக்கிறது என்று
சொன்னால் அதற்குக் காரணம் அந்தத் துறையிலே பணியாற்று
கின்ற அதிகாரிகளும், விளைபொருள் சம்பந்தமான ஆராய்ச்சி
யிலே ஈடுபட்டிருப்பவர்களும் எடுத்திருக்கின்ற பெரு முயற்சியின்
விளைவுதான் என்பதையும் அதனால் தான் நம்முடைய
குறியீட்டையும் எட்ட முடிந்திருக்கிறது என்பதையும் நாம் ஒத்துக்
கொள்கிறோம்.

ஆனாலும் கூட, அப்படிப்பட்ட வளர்ச்சி இன்றைக்கு
இந்தத் துறையிலே இருக்கிறது என்று சொல்கின்ற அதேநேரத்தில்
விவசாயத்தை மேற்கொண்டு இருக்கிறவர்களுக்கு அந்த
விவசாயத்தினுடைய உற்பத்திக்கு ஏற்றவாறு ஆண்டுதோறும்
இயற்கையினுடைய சீற்றம், தண்ணீரினுடைய பற்றாக்குறை
இப்படிப்பட்ட சூழ்நிலைகளினாலே அவர்களுக்கு ஏற்படுகிற
இடர்ப்பாடுகளில் நாம் தருகிற இடுபொருட்கள் அவர்களுக்குச்
சில இடங்களில் சரியாகப் போய்க் கிடைக்கவில்லை என்பதை
மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.
பத்தாண்டுகளுக்கு முன்னாலே — கோடிட்டுக் காட்டுவதற்குக்
காரணம் நானும் விவசாயக் குடும்பத்திலே இருக்கின்ற காரணத்
தாலே — ஒரு மூட்டை யூரியா வேண்டுமென்று சொன்னால்
அப்பொழுது அந்த இடத்திலே யூரியா கிடைப்பதில்லை. சூப்பர்
இருக்கும் என்று சொன்னோம். வேறு ஏதாவது ஒரு உரம்
வேண்டுமென்று சொன்னால் அதற்கு மாற்று உரமாக இருக்கும்.
இருந்தாலும் பக்கத்திலே இருக்கின்ற வெளிமார்க்கெட்டிலே
வாங்குகின்றபொழுது ஒன்றுக்கு இரண்டு மடங்கு விலைகள்
அதிகமாக இருக்கும். ஆனால் இன்றைக்கு அந்த நிலை இல்லை.
விலை உயர்ந்திருந்தாலும்கூட அந்த உரங்கள் அத்தனையும்
கிடைக்கின்ற அளவிற்கு இன்றைக்கு இருக்கிறது.

அதிலே ஒன்றைச் சொல்ல வேண்டும். தமிழகம் பூராவும்
இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு துறையின் மூலமாக
காட்டப்படுகின்ற படங்கள், ஒரு ஏக்கருக்கு இவ்வளவு போட
வேண்டுமென்று. செங்கல்பட்டிலே இருக்கிற விவசாயிக்கும்,
தஞ்சாவூரிலே இருக்கிற விவசாயிக்கும், கோயம்புத்தூரிலே
இருக்கின்ற விவசாயிக்கும் ஒரே முறையாகத்தான் படங்களை
வரைந்து காட்டுகிறார்களே தவிர, கோயம்புத்தூரிலே இருக்கின்ற
மண் வளத்திற்கும், செங்கல்பட்டிலே இருக்கின்ற மண் வளத்
திற்கும் தஞ்சாவூரிலே இருக்கின்ற காவிரிப்படுகையினுடைய
மண்வளத்திற்கும் ஏதாவது வேறுபாடுகளைக் காட்டுகிறார்களா
என்று கேட்டால், அதிகாரி பெருமக்கள் அதிலே சொல்வது,
கொஞ்சம் மண்ணைப் பாிசோதித்துப் பார்த்து அதற்கேற்றவாறு
நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்கிற நிலையில்தான் இன்றைக்கு
அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அரிசி கூட தஞ்சாவூரில் இன்றைக்குக் காவிரியினுடைய
தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்தபொழுதும் ஒரு இலட்சம் டன்
தான் குறைவாக நாம் இந்த ஆண்டில் நெல்லை உற்பத்தி
செய்திருக்கிறோம். ஆனால் இரண்டே முக்கால் டன் ஒரு
ஹெக்டரிலே விளைந்து கொண்டிருந்த நிலையை மாற்றி
இன்றைக்கு ஐந்து டன்கள் வரையிலே விளைவிக்க முடியும்
என்கிற அந்தப் பெரும் சாதனையை அந்தத் துறையிலே இருந்த
அதிகாரிப் பெருமக்கள் கண்டு பிடித்ததனுடைய அடிப்படையில்
இன்றைக்கு விவசாயிகளுக்கு ஓரளவிற்கு இலாபம் கிட்டக்கூடிய
அளவிற்கு, விவசாயத்தில் நாம் முனைப்போடு ஈடுபட வேண்டும்;
உற்சாகத்தோடு உழைத்தால் அதிலேயும் நமக்கு இலாபம்
கிட்டும் என்ற அடிப்படை நிலையை இன்றைக்கு அதிகாரிப்
பெருமக்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆனால் அப்படி உருவாக்கி இருப்பதில் தஞ்சை மாவட்டத்
திற்கு என்று மிக முக்கியமான சில பிரச்சினைகள்
இருக்கின்றன. எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர்
ஒருவர் கோடிட்டுக் காட்டியதைப் போல, தஞ்சாவூரிலே இருக்
கின்ற காவிரி நீர்ப் பிரச்சினை. இதில், கர்நாடகத்திலேயிருந்து
மேட்டூருக்கு தண்ணீர் குறைவாக வருகின்ற காரணத்தால்
தஞ்சாவூரிலேகூட இந்த இரண்டாண்டுக் காலமாக—தஞ்சாவூா
விவசாயிகள் கொஞ்சம் மற்ற விவசாயிகளால் பல நேரங்களில்
கேலியாகப் பேசப்பட்டிருக்கிறார்கள். தஞ்சாவூரிலே இருக்
கிறவர்கள் காலாலே மடையைத் தள்ளி தண்ணீரைத் தட்டி
விட்டுப் போகிறவர்கள், ஆனால் நாங்களெல்லாம் ஆழத்திலே
யிருந்து தண்ணீரை எடுத்து அதிக கஷ்டத்திலே விவசாயத்தைச்
செய்கின்றவர்கள் என்று கூறுவார்கள். தஞ்சாவூரிலே இருக்கின்ற
நீங்களெல்லாம் சோம்பேறிகள் என்று பலரும் சொல்வதை நான்
கேட்டிருக்கிறேன். காரணம் அவர்கள் சொல்வது சோம்பேறி
என்பதற்காக அல்ல, இருந்தாலும்கூட. கோயம்புத்தூரோடு
ஒப்பிடுகின்றபொழுது இதையெல்லாம் அவர்கள் சொல்வார்கள்;



சென்று பார்த்தேன்.
நான் ஒருமுறை கோயம்புத்தூருக்குச்
அங்கேயிருக்கின்ற விவசாய நிலங்களைப் பார்த்து விட்டு ஒரு
ஏக்கருக்கு விளைகின்ற அந்த நெல்லினுடைய அளவையும் நான்
பார்த்தேன். அந்தக் காலத்திலே இருந்த ஒரு நிலை ஒரு
ஏக்கரிலே ஐம்பது மூட்டை அளவிற்கு அவர்கள் நெல்லை விளை
வித்தார்கள்; தஞ்சாவூரிலே அன்றையதினம் உள்ள நிலையில்
ஒரு ஏக்கருக்கு முப்பது மூட்டை இருபத்தைந்து மூட்டைதான்.
ஆனால் இரண்டுக்கும் சேர்ந்து ஒன்றாகப் பார்க்கின்றபொழுது
ஐம்பது மூட்டை விளைவிப்பதோடு மட்டுமல்லாமல் தஞ்சாவூரிலே
இருப்பதைவிட இரண்டு மடங்கு விலை அதிகமாக அவர்
களுக்குப் பக்கத்திலே விற்கின்ற வாய்ப்பு இருந்தது. ஆனால்
அந்த விவசாயிகள் கொஞ்சம் பேர் விவசாயிகளாக உயர்ந்து,
பக்கத்திலே தொழில் வளர் மிகுந்திருந்த காரணத்தால்
கொஞ்சம் தொழிலிலேயும் ஈடுபாடு கொண்டு, கொஞ்சம்
மதிக்கத்தக்க விவசாயிகளாக சில காலத்தில் காட்சியளித்
தார்கள்.

தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள் ஒன்று,
வறட்சியிலே இருப்பது, இல்லையென்றால் வெள்ளப் பகுதியிலே
மாட்டிக்கொள்வது. அதனால் குறைவான அந்த நெல்லை
உற்பத்தி செய்வதன் மூலமாக அந்த விவசாயிகளுக்குச் சரியான
விலையும் கிடைப்பதில்லை. இன்றைக்கு இந்த அரசு வந்ததற்குப்
பின்னாலே அந்த நெல்லை எல்லாம் அரசே லெவியின்
மூலமாக கொள்முதல் செய்து ஊர்வாரியாக ஆங்காங்கு நெல்லை
வாங்குகிற வழிகளைச் செய்து, 35 ரூபாய் அவர்களுக்கு ஊக்க
போனஸ் என்கின்ற அடிப்படையில், அதையும் நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பணமாகத் தந்தால்
விவசாயிகளுக்கு நல்ல வசதியாக இருக்கும் என்று சொன்னார்கள்.
அதையும் நம்முடைய விவசாய அமைச்சரவர்கள் கொஞ்சம்
பார்க்க வேண்டும். சில நேரங்களில் 35 ரூபாய்க்குத் தருகின்ற
அந்த உரக் கூப்பன் என்று சொல்வது, தேவையற்ற நேரத்தில்
அந்த உரக் கூப்பன் அவர்களுக்குக் கிடைக்கிறது, நேரடியாக
நாம் பணத்தைக் கொடுத்தால் மத்தியிலே இருக்கிற அரசு ஏன்
நீங்கள் விலையை உயர்த்திக் கொடுக்கிறீர்கள் என்று கேட்பார்கள்
அதற்காக நாங்கள் இதிலே ஏதோ விவசாயத் துறையும்,
அதற்குப் பின்னாலே கூட்டுறவுத் துறைக்குப் பணம் தந்து
உரமாகத் தருகிறோம் என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12.50)

உரமாகத் தருகிறபோது அந்த உரம் அவர்களுக்குப் பயன்பட
வில்லை; அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யவில்லை.
உரத்தை வாங்கிக் கொண்டு போகிறபோது எங்காவது யாருக்
காவது மூட்டைக்கு பத்து ரூபாய், இருபது ரூபாய் குறைத்து
கொடுத்துவிடுகிறார்கள். மற்றவர்கள் அவர்களிடமிருந்து வாங்கு
கிறபோது இப்படி குறைத்துதான் வாங்குகிறார்கள், அதனால்

35 ரூபாய் ஊக்கப் போனசாகக் கொடுப்பது அர்த்தமில்லாமல்
போய்விடுகிறது. இந்த 35 ரூபாய் ஊக்கப் போனசை அவர்
களுக்கு பணமாகக் கொடுத்துவிட்டால் அந்த விவசாயப் பெருங்
குடி மக்களுக்கு அவர்களுடைய விளைபொருளுக்கு இன்னும்
அதிகமான விலை கிடைத்ததாக இருக்கும் என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வறட்சி பாதித்துள்ள இடங்களைப் பற்றி
அதிகாரிகள் கணக்கிடுகிறார்கள். இன்றைக்கு தமிழ்நாடு
முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்காகக்கூட
28 கோடி ரூபாயை நம்முடைய மாநில அரசு ஒதுக்கி, வறட்சி
நிவாரணப் பணிகளாக பல வேலைகள் நடைபெற்று வருகின்றன.
ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து எங்கெங்கே
வறட்சி இருக்கிறது என்ற விவரத்தைக் கேட்டால் அவர்கள்
ஆங்காங்கே இருக்கிற அதிகாரிகளை வைத்து, அந்த அதிகாரிகள்
கொடுக்கிற விவரங்களை வைத்து சுருக்கமாக அரசுக்கு ஒரு
அறிக்கை அளிக்கவேண்டும் என்பதற்காக சில இடங்களில்
இருக்கின்ற குறிப்புகளை மட்டும்தான் கணக்கில் எடுத்துக்
கொண்டு அந்தப் பகுதிகளை மட்டும்தான் வறட்சி பாதித்திருக்
கிறது என்று சொல்லிவிடுகிறார்கள். முறையாக எல்லா இடங்
களையும் அதிகாரிகள் பார்த்து உண்மையை அறிந்திருந்தால்
அவ்வாறு சொல்லமாட்டார்கள்.

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் காவேரி நீர்
பாய்வதால் அது பசுமை நிறைந்த பகுதியாக இருக்கிறது என்று
சொல்லி விடுகிறார்கள். தஞ்சை மாவட்டத்திலும் ஒரு பகுதி
இராமநாதபுரம் மாவட்டத்தைப் போன்று இருக்கிறது. அந்தப்
பகுதி திருச்சியிலிருந்து தஞ்சாவூர் வருகிற வழியில் இருக்கிற
பூதலூர் யூனியன், திருவோணம் யூனியன், தஞ்சாவூர் யூனியன்
ஆகிய மூன்று யூனியன்கள் அடங்கிய பகுதியாகும். அந்தப்
பகுதியிலே தண்ணீர் இல்லாமல், குடிப்பதற்குக் கூட தண்ணீர்
இல்லாத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட அந்தப் பகுதியிலே
வறட்சி என்று சொன்னால் அதை மறுக்க முடியாது. ஆனால்
அதிகாரிகளிடம் கேட்கிறபோது தஞ்சை மாவட்டம் வறட்சியிலே
எடுத்துக்கொள்ளப்படவில்லை; பசுமையாக இருப்பதால் தஞ்சை
மாவட்டம் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கிறார்கள்.
அதனால் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள
விரும்புவது என்னவென்றால் வறட்சியைப் பற்றி கணக்கிடுகிற
போது மாவட்ட வாரியாகப் பார்க்காமல் தாலுகா அளவில்
அல்லது ஒன்றிய அளவில் பார்த்து, வறட்சி நிவாரணப் பணிகள்
நடைபெறுகின்ற அளவுக்கு எடுத்துக்கொ ள வேண்டும்.



இப்போது பல்வேறு வழிகளிலே நம்முடைய விவசாயப்
பெருங்குடி மக்களுக்கு மானியங்கள் வழங்குகிறோம். மானிய
அடிப்படையில் பூச்சி மருந்துகள் கொடுப்பதன் மூலம், உரங்கள்
கொடுப்பதன் மூலம், இடுபொருள்கள் தருவதன் மூலம் அவர்
களுக்கு ஏற்படுகின்ற செலவினைக் குறைத்து அவர்களை ஊக்கப்
படுத்துகிறோம். அதுபற்றி இந்த நேரத்தில் ஒன்றை இங்கே
குறிப்பிட விரும்புகிறேன். சில இடங்களில் மானியங்கள்
குறிப்பிட்ட காலத்தில் சென்று சேருவதில்லை. இந்த மானியங்கள்
சென்று சேர காலதாமதம் ஏற்பட்டால் உற்பத்தியின் இலக்கினை
அவர்களால் எட்டமுடியாமல் போய்விடும். மானியம் உரிய
நேரத்தில் கிடைக்காமல் போய், உற்பத்தி குறைகின்ற
நிலையை பல இடங்களில் பார்க்கிறோம். ஆகவே, கொடுக்கின்ற
மானியத்தை, ஒரு குறிப்பிட்ட காலக் குறியீட்டை நிர்ணயித்து
அதற்கு முன்பே கொடுத்துவிட ஏற்பாடு செய்ய வேண்டும்
என்பதை என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயத்
துறையும், பாசனத் துறையும் ஒன்றாக இருக்க வேண்டும்.
இதிலே இப்போது இருக்கிற சிக்கல் என்னவென்றால் அதிக
விளைச்சல் தரக்கூடிய குறுகிய கால, நடுத்தர கால பயிர்களை,
இன்ன இடத்தில் இன்ன பயிரை இன்ன பருவத்தில் செய்ய
வேண்டுமென்று வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவிக்
கிறார்கள். முன்கூட்டியே விதைகளைத் தந்து, குறிப்பிட்ட
காலத்திலே விவசாயத்தை மேற்கொள்ள வேண்டுமென்று
அதிகாரிகள் சொல்லி, 3 மாதப் பயிர், 6 மாதப் பயிர், இப்படி
இப்படி விவசாயம் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள்.
ஆனால் பாசனத்தைப் பொறுத்தவரையில் காவேரி தண்ணீராக
இருந்தாலும் அல்லது குளம் குட்டை தண்ணீராக இருந்தாலும்
அந்தத் தண்ணீரை திறந்துவிடுவதற்கு ஒரு வரையறை வைத்திருக்
கிறார்கள். தண்ணீரை திறந்து விடும் அதிகாரிகள், விதை
வைக்க வேண்டும் அல்லது பயிரிட வேண்டுமென்றும்
சொல்லுகின்ற அதிகாரிகளைக் கலந்தாலோசித்து தண்ணீரைத்
திறந்து விடுவதற்கு கொஞ்சம் தாமதம் ஏற்படுகிறது. அதனால்
நீர்ப்பாசனத் துறையும், விவசாயத் துறையும் ஒன்றாக
இணைந்து இருக்க வேண்டும். ஒன்றாக இணைந்திருந்தால்
அந்தந்த காலத்திற்கு ஏற்றவாறு தாமதம் இல்லாமல் காரியங்
களைச் செய்ய வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

குறிப்பாக நேற்றையதினம் நிதிநிலை அறிக்கைமீது பேசிய
மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்
ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பழையகால முறைப்படி அவர்கள்
சொன்னார்கள். ''வரப்பு உயர நீர் உயரும்; நீர் உயர நெல்
உயரும்; நெல் உயர குடி உயரும்; குடி உயர கோன் உயரும்''
என்று சொன்னார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தைப்
பொறுத்தவரையில் இந்த ஆண்டும் இதற்கு முந்திய ஆண்டும்
வரப்பு குறைய நீர் குறைந்து, நெல் உயர்ந்திருக்கிறது. ஆக

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் முற்கால நிலைமை சற்று மாற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. முன்னால் சொல்லுகின்ற முறைப்படி இல்லாமல் வரப்பு குறைவாக இருந்ததால் எலித் தொல்லைகள் குறைந்து, நீர் குறைவாக இருந்து, காவேரி தண்ணீர் குறைவாக வந்ததால் கொஞ்சம் காய்ந்து, காய்ந்த வயலிலே தண்ணீர் பாய்ந்ததால் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. மற்ற எல்லா ஆண்டுகளையும் விட இந்த ஆண்டில் தண்ணீர் சரியாகக் கிடைக்காமல் கொஞ்சம் காய்ந்து, காய்ந்து.......

திருமதி. டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டு 57 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தியாகி இருக்கிறது என்று நாவலர் அவர்கள் பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு 60 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தியாகி இருக்கிறது. இது அதைவிட கூடுதலா, குறைச்சலா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் சொல்வது என்னவென்றால் தண்ணீர் குறைவாக இருப்பதால் தஞ்சாவூரில் ப்ரடக்ஷன் கூடி இருக்கிறது என்பதுதான். இதுபற்றி பத்திரிகை களிலே கூட எழுதி இருக்கிறார்கள்.

திரு துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தஞ்சை மாவட்டத்தை மட்டும்தான் சொன்னேன். நானும் விவசாயம் செய்கின்றவன் என்ற காரணத்தால் தான் சொல்கிறேன். இப்படிப்பட்ட ஒரு விளைச்சல் நிலைமை அங்கே இருப்பதால் நான் சொல்கிறேன்.

அடுத்து உடனுக்குடன் விவசாயிகள் தொடர்பு கொள் வதற்கு உதவுகின்ற வகையில் விவசாயக் கிடங்குகளில் தொலை பேசித் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்து குடிநீர் வழங்கும் திட்டத்தின் மூலம், முன்பு இருந்ததை விட அதிக அளவில் இன்றைக்கு நாட்டிலே ஊர். ஊராக பாதுகாக்கப்பட்ட நீர்நிலைத் தொட்டிகள் கட்டிக் கொடுத்து தண்ணீரை மக்களுக்கு தருகிறோம். அதைப் போல் 80,000 கையிறைப்பான்கள் இன்றைக்குத் தமிழகம் பூராவும் வைத்து அதற்கு ஆண்டுதோறும் பராமரிப்புச் செலவு செய்து வருகிறோம். இந்த ஆண்டு கூட 75 இலட்சம் ரூபாயை பராமரிப்புக்கு என்று கொடுத்து இருக்கிறோம். இந்த அறிக்கை யிலே ஓவர்ஹெட் டாங்குகளில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் 7 தினங்களுக்குள்ளாக சரிபார்க்க வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். இப்படி 75 இலட்சம் ரூபாய், 50 இலட்சம் ரூபாய் என்றெல்லாம் தருகிறபோது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக அந்தக் காரியங்களில் ஈடுபடுகிற நேரத்தில் ஒரு மாத காலம்





ஆகியும் கூட சில இடங்களில் பழுதடைந்த நிலைமையிலே இருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் காலையிலே இருந்து கழனியிலே வேலைபார்த்துவிட்டு, மாலை நேரத்தில் வந்து மகிழ்ச்சியோடு பைப்பைத் திறக்கிறபோது அங்கே இருக் கின்ற மின்சார மோட்டார் ஓடாத காரணத்தால், அல்லது அங்கே இருக்கின்ற அமைப்பு சரியாக வேலை செய்யாத காரணத் தால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு அவதிப்படுகிறார்கள்.

கடைசியாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்கிறேன். இந்த விவசாயத் துறையைப் பொறுத்த மட்டில் முக்கியமான ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆண்டுக் காண்டு நிலத்தடி நீர் கீழே போய்க் கொண்டிருக்கிறது. இவ்வாறு நிலத்தடி நீர் போன ஆண்டை விட 5 அடி 10 அடி இந்த ஆண்டு குறைந்துபோய் இருக்கிறது. இப்படி குறைந்து கொண்டே போகிற நிலைமை இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவும் நாம் தண்ணீரை மேலே எடுத்துக்கொண்டிருக்கிறோம். விவசாயத் திற்கும் தண்ணீரை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதனால் தண்ணீர் போன ஆண்டை விட இந்த ஆண்டு 10 அடி கீழே போய் இருக்கிறது. ஆழ்குழாய் இறக்குகின்ற பகுதியில் 600 அடி 700 அடி என்று இறக்கியும் அதற்கும் கீழே தண்ணீர் போகின்ற நிலைமை இருக்கிறது. இப்படி பலவித சிரமங்கள் பட்டு பம்ப் செட் வைத்து தண்ணீரை மேலே கொண்டுவந்து விவசாயம் செய்கிறோம். இப்படி தண்ணீர் கீழே போய்க்கொண்டே இருப்பதால் மிகப்பெரிய பயமாக இருக்கிறது. ஆண்டுக்காண்டு தண்ணீர் கீழே போகிற சூழ்நிலையில் கொஞ்சம் பேரால் மட்டுமே சப்-மெர்ஜர் என்று சொல்லப்படுகின்ற இயந்திரத்தை வைத்து 80 அடி, 90அடி, 100 அடி கீழேயிருந்து தண்ணீரை எடுக்க முடியும். இப்படிப்பட்ட மோட்டார்களையும், பம்ப்செட்களையும், பதித்துத்தான் சில இடங்களில் தண்ணீரை எடுத்துக்கொண்டிருக் கிறோம். ஆனால் எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமேயானால் குடிநீர் எடுக்கிற இடங்களில் கூட பாதிப்புகள் ஏற்படக்கூடும். எனவே விவசாயத்துறையின் மூலமாக ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்தி ஆங்காங்கே குளம், குட்டைகளில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றி, வெள்ளக்காலங்களில் பெருக்கெடுத்து வருகின்ற தண்ணீரைத் தேக்கி வைத்து பக்கத்திலே இருக்கின்ற சின்னஞ்சிறு குளங்களிலும், கிணறு களிலும் தண்ணீர் வருகின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டாண்டுகளாக மழை பொய்த்து இருப்பதால் தண்ணீரை வெளியே எடுத்துக் கொள்கிற அளவுக்கு அங்கே சேமித்து வைக்கப்படவில்லை. சேமித்து வைக்கத் தக்க அளவுக்கு ஒரு புதிய திட்டத்தை தீட்டி ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி ஆற்றினுடைய பகுதியிலே மிகப்பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன. கர்நாடகத்திற்கும், நமக்கும் இருக்கின்ற மிகப் பெரிய பிரச்சினையை ஒட்டி, உலக வங்கியினுடைய கடனுதவியுடன் காவிரியின் வாய்க்கால்களைச் சீரமைப்பதில் கொஞ்சம் இடையூறு இருக்கிறது. இந்த இடையூறைக் கொஞ்சம் தவிர்த்து, கர்நாடக அரசு நமக்கு அனுமதி தந்தால்தான் நாம் காவிரியினுடைய சீரமைப்புப் பணிகளைச் செய்ய முடியும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் எல்லாம் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தக்காலத்தில் கர்நாடக அரசு நமக்கு ஒப்புதல் தரப்போவதில்லை. அவர்கள் நமக்கு சம்மதம் தரப்போவதேயில்லை. ஆகவே மேட்டூரிலே இருப்பது 30 டி.எம்.சி. தண்ணீராக இருந்தாலும், 20 டி. எம். சி. தண்ணீராக இருந்தாலும் அதை சீரோடு எடுத்து பயன்படுத்துகிற வகையில் உரிய திட்டத்தைத் தீட்ட வேண்டும். பக்கத்தில் இருக்கிற கர்நாடகம் தண்ணீர் தருவதாக உத்தரவாதத்தைத் தந்தால்தான் உலக வங்கிக்காரர்கள் கடன் தருவார்கள் என்று சொல்லிக்கொண்டிருப்போமேயானால் இந்தக் காவிரி சீரமைப்புப் பணிகள் நடைபெறாது. இப்படிப்பட்ட சின்னஞ்சிறு வாய்க்கால் சீரமைப்புப் பணிகள் நடைபெறாமல் இருக்குமேயானால் இந்த ஆண்டை விட தஞ்சாவூரில் விவசாய நிலங்கள் குறையும். அவ்வாறு குறைவு ஏற்படாத அளவுக்கு அந்தப் பணியை வேறு நிலைமைக்கு மாற்றி நேரடியாக தமிழக அரசு எடுத்துக்கொண்டு அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். பின்னர் பேரவை பிற்பகல் 1.00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

(மாலை 4-00)

பிற்பகல் 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

5. வரவு–செலவுத் திட்டம் 1987–88 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 20—வேளாண்மை.
கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல்.
கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்து மூலதனச் செலவு—தொடர்ச்சி,

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டிருக்கக்கூடிய வேளாண்மைத் துறை, குடிநீர் வழங்கு துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நான் ஒரு சில கருத்துக்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கூறுகிறேன். குறிப்பாக எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் வேளாண்மைத் துறையும் குடிநீர் வழங்கும் துறையும் எவ்வளவு



அவசியமானவை, மக்களுக்கு அவர்களுடைய தேவையை நிறைவு செய்வதற்காக எவ்வளவு முக்கியமான துறைகளாக இருக்கின்றன என்பதையெல்லாம் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் ஆண்டுக்காண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

வேளாண்மைத் துறை என்பது ஆண்டுக்காண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது, ஏறத்தாழ 40 ஆண்டுக்கால ஆட்சியில் 30 லட்சம் டன் உணவுதானிய உற்பத்தியிலிருந்து 60 லட்சம் டன் என்ற அளவுக்கு உற்பத்தியை உயர்த்தியிருக்கக்கூடிய ஒரு துறையாக இந்தத் துறை வளர்ந்திருக்கிறது என்பது உண்மையாக இருந்தாலும் இந்தத் துறையிலே நாம் வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்று நாம் பெருமைப்பட்டாலும் 30 லட்சம் டன் என்ற தமிழகத்தின் உணவு உற்பத்தியை 60 லட்சம் டன்னாக உயர்த்தி, அதற்காக உழைத்த அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றைக்கு நிம்மதியோடு உற்சாகத்தோடு தாங்கள் செய்யக்கூடிய தொழிலிலே நம்பிக்கையோடு இருக்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைய தினம் வள்ளுவர் உயிரோடு இருந்தால் ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'' என்று பாடியிருக்க மாட்டார். உழுதுண்டு சாவாரே சாவார் என்றுதான் பாடியிருப்பார் என்பதை நாம் உணர முடியும். இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய அந்த மக்கள் எல்லாம் 40 ஆண்டுக்கால மாக உணவு உற்பத்தியைப் பெருக்கியதற்குப் பிறகும், மென்மேலும் விவசாயத் துறையில் வளர்ச்சியடைந்திருந்த போதும் அதிலே ஈடுபட்டிருக்கக்கூடிய அந்த மக்களுடைய வாழ்வு உற்சாகம் இல்லாமலிருப்பதற்கு என்ன காரணம் என்பதை வேளாண்மைத் துறையும் அரசும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக விவசாயிகளுக்கு மிக மிக அவசியமானதும் மிகவும் முக்கியமானதுமான முதன்மையான மூலப்பொருளாக இருப்பது தண்ணீர். அடுத்து விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு உரிய விலை, அடுத்து உற்பத்தியை எவ்வளவு கூட்டினாலும் அந்த உற்பத்தியைச் செய்தவர்களுக்கு உற்பத்திப் பொருள் கிடைக்கிறதா என்கின்ற சமூக நீதி, அவர்கள் உற்பத்திச் செய்யக்கூடிய பொருள்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலை கிடைக்கிறதா என்று பார்க்கிறபோது அது கிடைக்கவில்லை, அது கிடைக்காதவரையில் விவசாயத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்களின் உள்ளத்திலே அமைதியும் நம்பிக்கையும் ஏற்பட முடியாது என்பதை அரசு உணர்ந்து பரிசீலனை செய்து அதற்குரிய முறையிலே எதிர்காலத்திலே திட்டமிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கொள்கை விளக்கக் குறிப்பிலே கூட சொல்லப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கூட விவசாயத்தினுடைய அடிப்படை மூலப்பொருளாக இருக்கக்கூடிய தண்ணீர் கிடைக் காத காரணத்தினால் தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததன் விளைவாக 4.16 ஹெக்டேர் சாகுபடி செய்யவேண்டியதில் 2.2 ஹெக்டேர்தான் சாகுபடி செய்ய முடிந்தது.

அதே போல், வட கிழக்குப் பருவ மழை தவறியதாலும் 20 இலட்சம் ஹெக்டேரிலே சாகுபடி 16.78 இலட்சம் ஹெக்டே ரில்தான், ஆக, குறுவையில் 8 இலட்சம் ஏக்கர்களும் சம்பா சாகுபடியில் 5 இலட்சத்திற்கு மேலும், ஆக, மொத்தம் ஏறத் தாழ 13 இலட்சம் ஏக்கர்கள் சாகுபடி செய்ய முடியாத நிலைமை, உற்பத்தியிலே பாதிப்பு, தண்ணீர் பற்றாக்குறை யின் விளைவாக ஏற்பட்டிருக்கிறது. அப்படி 13 இலட்சம் ஏக்கருக்குச் சராசரி 1½ இலட்சம் டன் என்று கணக்கிட்டு பார்த்தால் கூட 20 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தி இழப்பு இந்த ஆண்டு மட்டும் ஏற்பட்டிருக்கிறது. இந்த உற்பத்தி இழப்பு, அதை நம்பியிருக்கக் கூடிய வேலை வாய்ப்பு, அதிலே இருக்கக்கூடிய பல்வேறுவிதமான சாத்தியக் கூறுகள், இவை முழுவதும் இன்றைக்குப் பாதிக்கப்பட்டு, இந்தக் கொள்கைக் குறிப்பிலே சென்ற ஆண்டு, 1986–87 ஆம் ஆண்டுக்குக் குறியீட்டு அளவு 66 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி என்று தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், 57 இலட்சம் டன் அளவுக்குத்தான் நம்மால் எடுக்க முடிந்தது. எனவே, மொத் தத்திலே 57 இலட்சம் டன்னை உற்பத்தி செய்திருக்கிறோம் என்று கூறியுள்ளோம். ஆனால் இழப்பு ஏற்பட்டிருப்பது ஏறக்குறைய 20 இலட்சம் டன் என்பது கொள்கைக் குறிப்பைப் பார்த்தாலே தெரியும். இவை முழுவதும் அடிப்படைத் தேவையான தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படாமல் இருப்பதன் விளைவாக ஏற்பட்டது. அதன் விளைவாக உற்பத்தி பாதிப்பு, அதன் விளைவாக, அதை நம்பியிருக் கக்கூடிய வேலை வாய்ப்புகளும், அதை நம்பியிருக்கக்கூடிய இலட்சக்கணக்கான விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலா ளர்களுடைய வாழ்வும் பாதிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு உற்பத்தி 57 இலட்சம் டன்னை எட்டியிருந் தாலும் தஞ்சை மாவட்டத்திலே அதிகமாக உற்பத்தியாகியிருக் கிறது. 1 இலட்சம் டன் அளவுக்குத்தான் குறைவாக இருக் கிறது என்று குறிப்பிலே இருக்கிறது. கண்ணம்பாடி வழிந்த தால்தான் இந்த உற்பத்தியை நம்மால் செய்ய முடிந்ததே தவிர, கடைசி நேரத்திலே கூட பண்ட மாற்று முறையிலே 5 டி. எம். சி. தான் கர்நாடகத்திடமிருந்து நம்மால் வாங்க முடிந்ததே தவிர, காவிரியில் நமக்கு உரிய பங்கு, எவ்வளவு கிடைக்கிறது என்பது அல்ல பிரச்னை. காவிரி தண்ணீர் ஒரு மாநில சொந்த சொத்து அல்ல. தமிழகத்து மக்களைச் சேர்ந்த சொத்து என்ற முறையிலே, அவர்களுக்குரிய



தண்ணீரை அவர்கள் எடுத்துக் கொண்டு, நமக்குரிய தண்ணீரை நாம் எடுக்க, எவ்வளவு மொத்தம் கிடைக்கிறதோ அதில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை, எடுக்க வேண்டிய முயற்சிகளை, சகல முயற்சிகளை எடுக்கத் தமிழக அரசு காலம் தாழ்த்துகிறது, மெத்தனமாகக் காரியம் ஆற்றுகிறது. அதன் விளைவு, தமிழகத்து மக்களை, உழுதுகொண்டிருக்கிற மக்களைப் பாதிக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, சிறு பாசனம் என்ற வகையிலே தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கூடிய முறையிலே, நிலத்தடி நீரைப் பயன்படுத்த 1979 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டது. ஊராட்சி மன்றங்களுக்கு இருக்கக் கூடிய பொது நிதியிலிருந்து, சமூகக் கிணறு அமைக்க வேண்டும். கிணறு வெட்ட கடன் பெற வேண்டுமென்றால், 2 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள்தான் சொந்தத்திலே குழாய்க் கிணற்றை அமைக்கமுடியுமே தவிர, அதற்குட்பட்ட நிலம் வைத்தி ருக்கக்கூடிய சிறு விவசாயிகள், ½ ஏக்கர், 1 ஏக்கர் வைத்திருக் கக்கூடியவர்கள் பயன்பெறக் கூடிய முறையில் சமுதாயக் கிணறு களை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் போட திட்டமிடப் பட்டு, சில இடங்களிலே அப்படிச் சமுதாயக் கிணறுகளும் அமைக்கப்பட்டன. அந்தத் திட்டம் தொடரப்படாமல் கை விடப்பட்டு, அதனால் அமைக்கப்பட்ட குழாய்களும் பழுதுபட்டு செயல்படாமல் இருக்கின்றன. எனவே, கைவிடப்பட்ட அந்தத் திட்டம் மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்று கேட்டுக் கொள்வ வதோடு, பரிசீலிக்க வேண்டுமென்றும் அந்தத் துறையைக் கேட்டுக்கொள்கிறேன்.

விதைப் பண்ணைகளைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு 45 விதைப் பண்ணைகள் இருந்ததாகக் குறிப்பிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 43 என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. 2 விதைப் பண்ணைகள் என்னவாயிற்று? அவை இருக் கின்றனவா? எந்த ஊரில் விதைப் பண்ணைகள் கலைக்கப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்,

தனியார் விதைப் பண்ணைகளிலே தயாரிக்கப்பட்டு விவசாயி களுக்கு விற்கக்கூடிய விதைகளுக்கு எல்லாம் அரசு விவசாயத் துறை ஒப்புதல் அளித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்,

விதை விநியோகத்தைப் பொறுத்தவரையிலே விவசாயி களுக்குப் பயன் அளிக்கக்கூடிய விதத்திலே அது இருக்க வேண்டும். குறிப்பாக, அரசு ஒரு விலையை நிர்ணயித்துக் கொள்முதல் செய்கிறது. ஆனால், விதையை விவசாயிகளுக்கு விற்கும்போது மார்க்கெட் விலையை வைத்து, விற்கிறது. எனவே, அதை மாற்றி, அரசு நிர்ணயித்த விலைக்கு விதைகளை விற்க வரப் போகிற ஆண்டிலாவது அந்த முறையைக் கடைப்பிடிக்க ஆவன செய்ய வேண்டும்.

(மாலை 4-10)

அதோடு லட்டுமல்லாமல், விதைகளை நாம் உற்பத்தி செய்யும்போது, புதிய புதிய விதைகளைக் கண்டு பிடிக்கும் போது வறட்சிக்கு ஏற்ற விதைகளை, வெள்ளத்தைத் தாங்கும் விதைகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளை எடுக்க வேண்டும். அதைப்போல நோய்வருவதைத் தடுக்கும் முறையில் அவைகளுக்குப் பூச்சி மருந்து கொடுக்கும் நேரத்தில், அவற்றை உபயோகப்படுத்தும் போது பூச்சிகள் புதிது புதிதாக உற்பத்தியாகிறதே தவிர பூச்சிகள் ஒழிக்கப்படாத நிலைதான் இருக்கிறது. எனவே 50 சதவிகிதம் மானியத்தில் அதைக் கொடுத்தாலும், அது விவசாயிகளுக்குப் பயன்படாமல் மேலும் மேலும் பயிர்கள் பூச்சித் தாக்குதலுக்கு ஆளாகின்றன. எனவே பூச்சிகளைச் சாகடிக்கும் மருந்துகளை விவசாயத் துறை உற்பத்தி செய்ய முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், உரத்தை பொறுத்தமட்டில் ரசாயன உரங்களை நம்பி விவசாயம் நடக்கும் நிலைமைகள் மாறிக்கொண்டிருக்கின்றன. இராசயன உரத்தை நம்பி விவசாயம் செய்வதை மாற்றி தழை, தொழு உரங்களை நம்பி விவசாயம் செய்யும் நிலையை உருவாக்க வேண்டும். இன்றைக்கு இராசயன உரத்தை நம்பி விவசாயம் செய்வது சாத்தியமற்றதாகும். எனவே தழை, தொழு, கம்போஸ்ட் உரங்களைப் பயன்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 18 பேர் பேச வேண்டும். ஒருவருக்கு 10 நிமிடம் கொடுத்தால்கூட 7 மணிக்குதான் முடியும். அதற்குப் பிறகு அமைச்சரவர்கள் பேச வேண்டும். திரு. துரைசாமி ........

* திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீதும், சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் குறித்து ஒருசில உணர்வுகளைச் சொல்ல விரும்புகிறேன்.

கடுமையான வறட்சி ஏற்பட்டாலும், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டாலும் அவைகளைச் சமாளித்து மக்களை காத்துக் கொண்டிருக்கிறது புரட்சித் தலைவரவர்களின் அரசு என்பதற்கு கடந்த கால நடவடிக்கைகள் எடுத்துக்காட்டாக நிரூபித்துக் காட்டுகின்றன. சென்னை பெருநகரில் குடிநீர் பிரச்னை இருந்தாலும் அந்தப் பிரச்சினையை குறையே இல்லாத அளவுக்கு தெருவெங்கும் ஆழ் குழாய் பம்புகளையும், டேங்குகளையும்



அமைத்து லாரிகளின் வாயிலாக சென்னை மாநகர மக்களின் குடிநீர் பிரச்சினையைப் போக்கும் வகையில் பல கோடி ரூபாய் களைச் செலவு செய்து, சென்னை மாநகர மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்துக் கொண்டிருக்கிற எங்களுடைய நாயகர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், செம்மையாக அந்த வாரியத்தை நிர்வகித்துக் கொண்டிருக்கும் வாரியத் தலைவர் ஜேப்பியார் அவர்களுக்கும், வாரியத்தின் பொறியாளர்களுக்கும், அனைத்து ஊழியர்களுக்கும் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் சென்னை மாநகரத்திலே இருக்கின்ற தனியார் தெருக்களில் எல்லாம் அடிப்படை வசதிகள் செய்ய வேண்டுமென்பதற்காக ஏறத்தாழ 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகளை முடுக்கிவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வாரிய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

இது போன்று வறட்சி ஏற்படுகின்ற நேரங்களில் குடிநீர் பிரச்சினையைச் சமாளிக்கவும், விவசாயத்தைப் பாதுகாக்கவும் ஏற்கெனவே செயற்கை மழையை உருவாக்க, விமானம் மூலம் அயோடைட் தெளித்து, செயற்கை மழையை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டோம். அந்த முயற்சி எந்த அளவுக்கு வெற்றி தந்தது என்பது தெரியவில்லை. அந்த முயற்சியைத் தொடர்ந்து செய்தால், கோடிக் கணக்கில் செலவு செய்வதைக் குறைப்பதோடு, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும், விவசாயத்தைப் பாதுகாக்கும். எனவே இந்த நல்ல முயற்சி நலம் பயக்கும் என்பதை வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, கடல் நீரை குடிநீராக மாற்ற வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் பரிசீலனை செய்து, அதை ஆய்வு செய்து, விரைந்து நடவடிக்கை எடுத்தால், அதுவும் நாட்டுக்கு நலம் தரும் திட்டமாக இருக்குமென்று கருதுகிறேன். அதைப் போல இன்றைக்கு சென்னை மாநகரத்தில் பாதிக்கப்பட்டிருக்கிற குழாய்கள் எல்லாம் 30 ஆண்டுகளுக்கு முன்பாகப் பதிக்கப் பட்டவை. ஆகவே இன்றைக்கு அவைகள் துரு பிடித்து, சரியான முறையில் சில இடங்களில் இல்லாமல் இருக்கின்றன. எனவே இதற்காக ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து, சென்னை விரிவாக்கம் செய்யப்பட்ட புதிய வட்டங்களையும் இணைத்து, புதிய குழாய்கள் பதிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது என்ன ஆகிறதென்றால் பைப்புகள் துருப் பிடித்து, சில நேரங்களில் பொல்யூஷன் ஏற்பட்டு குடிநீர் துர்நாற்றம் வீசும் அளவுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை மாற்றுவதற்கு ஒட்டு மொத்தமாக புதிய பைப்புகளை பதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1982ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சியின் வாயிலாக
ஆழ்துளைப்பம்புகள், நிறைய அளவிற்கு, ஆயிரத்திற்கு மேற்பட்ட
பம்புகள் போடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு சென்னை நகரத்
தில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது இந்தப் பம்புகள்
தான். எனவே அதை பராமரிக்க தனியாக ஒரு பொறியாளரை
நியமித்து அந்தப் பணியினை மாத்திரம் செய்வதற்கான
நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் இன்றைக்கு சென்னை நகர மக்களது குடிநீர்ப்
பிரச்சினையைத் தீர்த்து வைக்க கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை
விரைந்து செயலாக்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் சென்னை நகர மக்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து
வைக்க முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். அந்த
முயற்சியை விரைந்து செயலாக்க வேண்டுமென்பதில் இந்த
நேரத்திலே மற்ற மாநிலங்களின் அரசுகளும் ஒத்துழைத்து
சென்னை நகர மக்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவர அறிக்கையில் இருக்கின்றது. கோட்டூர் பாதாளச்
சாக்கடைத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது
உண்மை. அதில் ஒரு பகுதி நடைபெற்றிருக்கின்றது. இன்னும்
முழுமையாக கோட்டூர் பகுதி மக்களுக்குச் செய்வதாக கடந்த
ஆண்டு அறிவிக்கப்பட்டும், அந்தத் திட்டம் நடைபெறவில்லை.
அதை விரைந்து செயல்படுத்தவேண்டும். கோட்டூர் பாதாளச்
சாக்கடைத் திட்டம் நடைபெற வேண்டிய நடவடிக்கைகளை
எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈக்காட்டுத்தாங்கல் பகுதிக்கு ஏறத்தாழ ரூ. 30 லட்சம்
செலவில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுத்திருக்கின்ற சென்னை
குடிநீர் வழங்கு துறையைப் பாராட்டுகிறேன். அதே சமயம் 40
ஆண்டுக் காலமாக ஈக்காட்டுத்தாங்கலில், அந்தப் பகுதியில் பாதாள
சாக்கடைத் திட்டம் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்
கின்றார்கள். கடந்த வாரம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட
பார்வையிட்டார்கள். ஏறத்தாழ 15 ஆயிரம் மக்கள் வாழ்ந்து
கொண்டிருக்கின்ற அந்தப் பகுதியில் பாதாளச் சாக்கடை வசதி
யில்லை. அந்த பகுதியில் சர்வே 147-ல் ஒரு ஏக்கருக்கு மேலாக
அரசுப் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கு பம்பிங் ஸ்டேஷன்
அமைத்து பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அந்த
இடம் வாய்ப்பாக இருக்கிறது. அதையும் செயலாக்கவேண்டும்.
நடப்பு நிதி ஆண்டிலேயாவது அந்தப் பணியினைத் தொடங்
கினால் நலமாக இருக்கும். ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டு
விட்டன. அரசு அதற்குத் தொகை ஒதுக்கீடு செய்து அந்தப்
பணியினை நிறைவேற்றச் செய்ய வேண்டும்.

அதேபோல சென்னை மாநகரத்தில் இருக்கின்ற பழைய
கிணறுகளில் நல்ல தண்ணீர் தருகின்ற கிணறுகளும் நிறைய
இருக்கின்றன. அவைகளை எல்லாம் பராமரித்து, அந்தக் கிணறுகள்
வாயிலாக குடிநீர் வழங்குகின்ற அந்தக் பணியினைப் கடுமையான
வறட்சியின்போது மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல சாக்கடை அடைப்புகள் ஏற்படும்போது, அதிலே
தொழிலாளர்கள் இறங்கி வேலை செய்கின்றார்கள். இதனால்
அபாயம் ஏற்படுகிறது. அது கூட ஒரு வட்டாரத்திற்கு 2 பேர்
என்று இல்லாமல் 4 வட்டங்களுக்கு 4, 5 பேர்கள்தான் இருக்
கின்றார்கள். நகரத்திலே இப்படிப்பட்ட தொழிலாளர்கள் ஒரு
வட்டத்திற்கு, குறைந்தது 2 பேர்களாவது நியமிக்கப்படவேண்டும்
என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
அதேநேரத்திலே நவீனமான இந்தக் காலத்தில், நாகரீகமான இந்த
காலத்தில் இன்றைக்கும் அந்த மனிதன் அந்த சாக்கடை
நாற்றத்திலே மூழ்கி, பணி செய்வதைப் பார்ப்பதற்கு சங்கடமாக
இருக்கின்றது. ஆகவே அந்த முறையை நவீனப்படுத்தி, அப்படி
முழுகுகின்றவர்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற வகையிலே
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு வீடுகளுக்கெல்லாம் மீட்டர்களைப்
பொருத்தியிருக்கின்றார்கள். வீடுகளுக்கு அது தேவையில்லை.
கடைகள், ஓட்டல்கள், குளிர்பானக் கடைகள் இப்படிப்பட்ட
வியாபார நிலையங்கள் தண்ணீரை அதிகமாக பயன்படுத்து
(கின்றன.) தண்ணீரை எங்கே அதிகமாகப் பயன்படுத்துகிறார்
களோ அங்கே மீட்டரைப் பொருத்தினால் சரியாக இருக்கும்.
அதைச் சாதாரண வீடுகளில், ஒண்டுக்குடித்தனம் இருக்கின்ற
இடங்களிலே பொருத்துவது சரியல்ல. அதைப்பற்றி இந்த
அவையிலேயே பலமுறைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.
அந்த மீட்டரைப் பொருத்துவதைத் தவிர்க்கலாம். வியாபாரம்
நடக்கின்ற இடங்களில் பொருத்தலாமே தவிர வீட்டிற்குத்
தேவையில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான
அறிவிப்பையும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மடுவன்கரை பகுதி 40 ஆண்டுக்காலமாக சென்னை
நகரின் பகுதியாக இருக்கின்ற பகுதி. அந்தப் பகுதிக்கு இன்றைக்கு
டேங்க்குகள் மூலமாகக் குடிநீர் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.
அந்தப்பகுதிக்கு பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் பெருமுயற்சி
எடுத்து, ஏற்கெனவே பாதிக்கப்பட்ட பைப்புகளைப் பயன்படுத்தி
முட்டுக்காட்டுப் பகுதியில் இருந்து குடிநீர் வழங்கிக்கொண்டிருக்
கின்றார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறேன். இருந்தாலும் அந்தப் பகுதியிலே புதிய பைப்புகள்
பதிக்கப்படாமல் இருக்கின்றன. தெருக்களுக்கெல்லாம் புதிய
பைப்புகள் பதிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
ரூ. 250 லட்சம் செலவில் வேளச்சேரி திட்டம் தொடங்கப்
பெற்று நிறைவேறிக்கொண்டிருக்கின்றது. அத்துடன் இந்தத்
திட்டத்தையும் இணைத்துச் செயல்படுத்தவேண்டும் என்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல தனியார் தெருக்கள். இந்தத் தனியார் தெருக்களில் இரண்டுவிதமான பிரிவுகள் இருக்கின்றன. இரண்டாகப் பிரித்திருக் கிறார்கள். தனியார் தெருக்களில் 200 தெருக்களுக்கு வாரியம் இப் போது அங்கீகாரம் வழங்கியிருக்கிறது, அடிப்படை வசதிகளைச் செய்யலாம் என்று. அப்படி வழங்கியிருக்கிற அந்த தனியார் தெருக்களில் ஃபிசிபிலிட்டி, நான் ஃபிசிபிலிட்டி என்று சொல்லிப் பிரித்து, ஃபீசிபிலிட்டி இருக்கிற அந்தத் தெருக்களுக்கு முதலில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்கப்படும் என்று சொல்லப் படுகிறது.

[மாலை 4-20]

உதாரணமாக சேகர் நகர், ரங்கராஜபுரம், அபித் காலனி போன்ற பகுதிகளில் எல்லாம் இதிலே எடுத்துக் கொள்ள முடியாது என்று சொலகிறார்கள். அதை பொறியாளர்கள் எப்படிச் செய்வார்களோ தெரியாது. அந்தப்பகுதியிலே வாழ்ந்துக் கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளைத் தர வேண்டும். உங்களுடைய பொறியியல் திறனைப் பயன்படுத்தி எப்படியாவது அந்தத் தெருக்களுக்குப் பாதாளச் சாக்கடை வசதியைச் செய்து தரவேண்டும்.

அதேபோல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் வாரிய உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பது பல சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்து. மிகப்பெரிய வாரியத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களை வாரிய உறுப்பினர் களாக நியமிக்கப்பட வேண்டும். அப்போதுதான் எந்தந்த இடங் களில் எப்படிக்குடிநீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்யலாம்என்று பார்த்துச் செய்வார்கள். எனவே இதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறைமீது ஒரு சில கருத்துக் களைச் சொல்ல விழைகிறேன். தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் ஒன்று தஞ்சை மாவட்டத்தில் வடபாதிமங்கலத்தில் இருக் கிறது. அதை 1972 ஆம் ஆண்டு துவக்குகிறபோது 2 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கவேண்டும். ஆனால் 27.50 லட்சம் தான் மூலதனம் போடப்பட்டது. 16 சதவிதம் வட்டி ரூ. 74.88 இலட்சங்களாகும். இயற்கைச்சீற்றங்களினால் 73லட்சம் ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதனால்இவ்வளவுதூரம் நட்டப்பட்டு, அந்தக் கரும்புப் பண்ணையை தொடர்ந்து கண்காணிப்பதற்குப் பதிலாக மூடப்போகிறோம் என்று சொல்வது நல்லது அல்ல. 4,051 ஏக்கர் 71 செண்டு ஒரேஇடத்தில் இதுமாதிரி பண்ணைக்குக் கிடைப்பது மிகவும் அரிது. ஆகவே அரசு மறு பரிசிலனை செய்து அந்த நிர்வாகத்தை தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல குடிதண்ணீர்ப் பிரச்சினை சம்பந்தமாக



தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் உள்ள 80 ஆழ் துளைக் கருவிகளில் 60 கருவிகள் பத்து ஆண்டுகளுக்கு மேலாக உபயோகிக்கப்பட்டு தம்முடைய திறனை இழந்திருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வறட்சி வருகிறது என்று தெரிந்தும் கூட இந்த 60 கருவிகள் பயன்படாது வைத்திருப்பது கண்டிக்கத்தக்கது. ஆகவே எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்படுகிற வறட்சியைப் போக்க அந்தக் கருவிகளைத் திரும்பப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனி நபருக்கு சராசரி 73 லிட்டர் தண்ணீர் என்று அறிவிக்கப் பட்டிருந்தும் கூட இப்போது 10 லிட்டர் தண்ணீர் கிடைப்பது கூட மிக அரிதாகி சென்னையிலும் தமிழ்நாட்டிலும் குடி தண்ணீர்ப் பஞ்சம் தலை விரித்தாடுகின்றது. மக்கள் குடத்தை எடுத்துக் கொண்டு வீதிவீதியாக அலைகிறார்கள். சென்னை நகரத்தில் குழாய்கள் புதைக்கப்பட்டு 40, 50 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தப் பைப்புகள் பூராவும் துரு ஏறி உடைப்புகள் ஏற்பட்டு நல்ல தண்ணீர் சாக்கடை நீரோடு கலந்து வரக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே அந்தப் பைப்புக்கள் பூராவும் மாற்று வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

சென்னை நகர மக்களுக்கு கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்க மத்திய அரசும் தாமதம் காட்டுவதோடு ஆந்திர அரசு எந்த அளவுக்குத் தடை ஏற்படுத்த வழி இருக்கிறதோ அதையெல்லாம் செய்து வருகிறது. ஆகவே துரிதமாக கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தை அமல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இடைக் கால நடவடிக்கையாக ஆந்திராவிலிருந்து ரயில் மூலம் தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு கடலோரப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் உப்புத் தண்ணீரைத்தான் அருந்தக் கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் வாழக்கூடிய மக்களுக்குக் குடிதண்ணீர்ப் பிரச் சினையைத் தீர்ப்பதற்கு ஒரு பெரும் நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல விவசாயத் துறையில் 1978-79லிருந்து 1986-87 வரையிலும் நமக்கு வரக்கூடிய உணவு தானியங்கள் இன்றைக்கு உயர்ந்த பட்சமாக வர முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைத் துரிதமாகக் கண்காணித்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கப் போவதாக அறிவிக்கப்பட்டு ஐந்தாண்டுகள் ஆகின்றன. இன்னும் அந்தக் கல்லூரி அமைக்கப்படவில்லை. இந்த ஆண்டிலாவது அந்தக் கல்லூரியை அமைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல வேளாண்மை மானியத்தில சென்ற ஆண்டு வேலைகளின் பலன்கள் பற்றி பரிசீலிக்கப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டிலும் அதிகமாக வேலைகளை அறிவிக்கிறோமே தவிர அதன் பலன்கள் குறித்து பரிசீலிக்காமல் இருந்தால் அதில் பலனில்லை. வேளாண்மைத் துறையில் பணிகளின் முன்னேற்றம் குறித்துப் பரிசீலனை செய்ய வேண்டும். சென்ற ஆண்டு வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் என்ற பெயரால் 43 வட்டாரங்களுக்கு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 15 லட்சம் வீதம் ரூ. 645 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. சென்ற ஆண்டில் அறிவிக்கப்பட்டிருந்த அதே திட்டம் தான் இந்த ஆண்டிலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. புதியதாக ஒன்றும் போடவில்லை. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் அதிகமான வறட்சி இருக்கிறது. தொடர்ந்து வறட்சி இருக்கிறது. தொடர்ந்து வறட்சி இருப்பதால் சென்ற ஆண்டை விட அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்பதில் அரசுக்கு அக்கறை இல்லை, கவனமும் செலுத்தவில்லை. வழக்கமாகத் தயாரிக்கப்படுவதைப் போலத்தான் இந்த அறிக்கையும் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

தென்னை அபிவிருத்தித் திட்டத்தில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் எக்டேரிலிருந்து எட்டாயிரம் எக்டேர் பரப்பளவு அதிக மாக உயர்த்தி தேங்காய் உற்பத்தி செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்தில் குமரி மாவட்டம், செங்கை, சேலம், தஞ்சை போன்ற மாவட்டங்களில் தான் தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கே யிருக்கும் மரங்கள் வறட்சியால் லட்சக்கணக்கில் பட்டுப் போய் விட்டன. 20, 30 வருடங்கள் வளர்ந்து பலன் தந்த மரங்கள் இன்றைக்குப் பட்டுவிட்டன. அப்படி மரங்கள் பட்டுப் போனவர் களுக்கு அரசாங்கம் நஷ்டயீடு கொடுத்து, அவர்கள் மீண்டும் தென்னை வளர்க்கும் வகையில் தென்னம்பிள்ளைகள் கொடுக்க வேண்டும். தென்னை, பனை போன்ற மரங்கள் பட்டுப்போன தால் வருமானம் இழந்த விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் நஷ்டயீடாவது கொடுக்க வேண்டும்.

மத்திய அரசு நிதியுதவியோடு செயல்படுகிற தென்னை கார்ப்பரேஷன் கேரளாவில் இருக்கிறது. அதைப்போல தமிழ் நாட்டில் தென்னை உற்பத்தியாளர்களுக்குப் பாதுகாப்பு உதவி செய்யும் வகையில் மத்திய அரசிலிருந்து நிதி பெற வேண்டும்.

அதைப்போல நீர் வளப் பாதுகாப்பு, மண் வளப் பாதுகாப்பு பற்றி சொல்லப்படுகிறது. இன்றைக்கு மண் ஆராய்ச்சி என்பது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாதிரியாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் ஆராய்ச்சி என்று சொல்கிறார்களே தவிர, மண்வள ஆராய்ச்சி செய்து அதன்மூலமாக விவசாயத்தைப் பெருக்குவதற்கான எந்தவிதப் பலனும், விளம்பரமும் ஏற்பட





வில்லை. அதைப்போல வேளாண்மைத் துறையும், நீர்ப்பாசனத் துறையும் தனித்தனியாக இருக்கின்றன. வேளாண்மைத் துறையில் தனியாக ஒரு புள்ளி விவரம் கொடுக்கிறார்கள். நீர்ப் பாசனத் துறையில் அவர்கள் ஒரு நேரத்தில் தண்ணீர் திறக்கப் படுவதாக அறிவிக்கிறார்கள். ஆகவே முரண்பட்ட கருத்து வந்து விவசாயிகள் காலங்கடந்து விவசாயம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எதிர்காலத்திலாவது இரண்டு நிர்வாகத்தையும் இணைத்துச் செயல்படக்கூடிய அளவிற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மண், நீர் வளப் பாதுகாப்பு என்பதில் இன்றைக்கு நீர்ப்பிடிப்புப் பகுதியில் மற்றும் அதனைச்சார்ந்த இடத்தில் மரங்கள் அதிகமான அளவில் நடப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏரி, குளங்களில் எல்லாம் வேலிக் கருவை வளர்க்கப்பட்டுள்ளன. ஏரி, குளங்கள் மேடிட்டு இருப்பதை ஆழப்படுத்த வேண்டும். அப்படி ஆழப்படுத்தினால் தான் மழைக்காலங்களில் கிடைக்கிற தண்ணீரைத் தேக்கி வைத்து விவசாயத்திற்கும், குடிதண்ணீருக்கும் பயன்படுத்த முடியும். சீமை காட்டாமணி, வேலிக் கருவை மரங்கள் போன்ற பல்வேறு தழைகள் இன்றைக்கு உருவாகி ஏரி, குளங்கள் பூராவும் மேடிட்டு இருப்பதால் இன்றைக்கு அவை தரிசாக இருந்து கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் யூகலிப்டஸ் மரங்களை வளர்க்கிறார்கள். புதுக்கோட்டைப் பகுதியில் இந்த மரங்களை அதிகமாக வளர்த்து அங்கே அனுபவப்பட்டவர்கள் ஒரு கருத்தைத் சொல்கிறார்கள். இந்த மரங்களை நடுவதால் நீர்ப்பிடிப்பு பூராவையும் அவை எடுத்துவிடுகின்றன. அதனால் வறட்சி அதிகமாக வருகிறது. இந்த மரங்கள் இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். ஆகவே இந்தத் தைல மரங்களை எதிர் காலத்திலாவது பயிரிடாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்கிறது. அந்த ஆராய்ச்சி செய்யக்கூடியவர் களுக்கு நாம் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். காரணம் வேளாண்மைத் துறையில் பல அறிஞர்கள் ஆராய்ச்சி செய்வதால் தான் நமக்கு உற்பத்தி அதிகமாகக் கிடைக்கிறது. ஆனால் இந்த ஆராய்ச்சிகளின் பலன்கள் எந்த அளவிற்கு நேரடியாக விவசாயிகளுக்குப் போய்ச் சேர்கின்றன என்பதைப் பற்றி நாம் நிச்சயமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு உரக் கூப்பன்கள் 35 ரூபாய்க்கு வழங்கப்படுவதை வரவேற்கிறோம். ஆனால் அதனால் விவசாயிகளுக்குப் பலன் கிடைப்பதாகத் தெரியவில்லை.

இன்றைக்கு 100 ரூபாய்க்குக் கூப்பன் என்று சொன்னால், அதை
70 ரூபாய்க்கு விற்றுவிடுகிறார்கள். தனி நபர்கள் கூப்பனை
வாங்கிக்கொண்டு போய், வெளியிலே உரத்தை அதிகமான
விலைக்கு விற்றுவிடுகிறார்கள். நெல்லுக்குக் கட்டுப்படியான
விலையைக் கொடுப்பதற்கு மத்திய சர்க்கார் தயாராக இல்லை.
எனவே அதை—வண்டிச் சத்தம் என்ற பெயரால் இந்த 35
ரூபாயை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான கேட்டுக் கொள்
கிறேன்.

[மாலை 4–30]

கடைசியாக ஒன்று. விவசாயிகளுக்குத் தேவையான விதைகள்,
நெல், கடலை, போன்றவைகள் மானியவிலையில் கொடுப்பதாகச்
சொல்லப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் கூட ஒரு லோடு
கடலை சென்று பிறகு அது வேறு வகையில் விற்கப்பட்டு,
சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.
அதேபோன்று, தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடிக்கு வந்த
ஒரு லோடு கடலை கூட கைமாறிவிட்டது. எனவே இதுபோன்ற
விதைக் கடலைகளை விவசாயிகளுக்கு நேரடியாகக்
கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இன்றைக்கு விதைப் பண்ணை
களில் பெரும்பகுதி மூடக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே
இன்றைக்கு தமிழக அரசு விதை உற்பத்தி செய்வதற்கு, விதைப்
பண்ணைகளைப் பாதுகாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அதேபோல், மாங் கன்றுகள், தென்னங்கன்றுகள், பலாக்
கன்றுகள் போன்ற கன்றுகள் வேளாண்மைத்துறை மூலமாக
விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் உண்மையில் இவைகள்
எல்லாம் விவசாயிகளுக்குக் கிடைக்கிறதா என்றால், ஒருவர்
இருவருக்குத்தான் கிடைக்கிறதே தவிர, மற்றவர்களுக்குக் கிடைப்
பதில்லை. ஆனால் யூனியனுக்கு லாரி லாரியாக வருகிறவைகள்
எங்கேயோசென்று விடுகின்றன. எனவே இப்படிப்பட்ட கன்றுகளைக்
கிராமப்புறத்தில் வாழ்கின்ற விவசாயிகளுக்கு மாங்கன்றுகள்,
தென்னங்கன்றுகள், பலாக்கன்றுகள் போன்று இப்படி உற்பத்தி
யாகக்கூடிய அந்தப் பொருட்களை எல்லாம்—நேரடியாகச் சென்று
கொடுத்தால், தமிழக அரசுக்கு நல்லது, விவசாயிகளுக்கும்
நல்லது. விவசாயிகளுக்கு இனாமாகக் கொடுக்கிறார்கள்.
பஞ்சாயத்துக்களுக்கு இப்போது பிரசிடெண்டுகள் இருக்கிறார்கள்.
கிராம சேவக்குகள் இருக்கிறார்கள். எனவே பஞ்சாயத்து
வாரியாக இவைகளைக் கொடுப்பது பற்றி, தண்டோரா போட
வேண்டும், இப்போது இதைப்பற்றி எல்லாம் விளம்பரம் செய்வது
கிடையாது. எனவே விளம்பரம் மூலம் இவைகளைக் கொடுப்ப
தற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு எதிர்காலத்திலாவது
உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். அனுபவம் வாய்ந்த அமைச்சர் அவர்கள் வேளாண்மைத்



துறைக்கு அமைச்சராக பொறுப்பேற்றிருக்கிறார்கள். விவசாயிகள்
தான் இன்றைக்கு நாட்டினுடைய முதுகெலும்பு என்று நாமும்
சொல்கிறோம். மத்திய அரசாங்கமும் சொல்கிறது. ஆனால்
இன்றைக்கு விவசாயிகளுடைய இடுப்பை முறிக்கக்கூடிய அளவிற்கு
மத்திய சர்க்காரின் கொள்கை இருக்கிறது. அதனால்தான்
காவிரி நீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் காலம் கடத்தி
வருகிறார்கள். குஜராத் மாநிலத்தில் கூட, இன்றைக்கு
விவசாயிகள் போராட்டம் நடத்தி, 10 பேர்கள் செத்திருக்
கிறார்கள். ஆகவே நெல்லுக்குக் கட்டுப்படியான விலையையும்,
விவசாயிகளைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க,
மத்திய சர்க்காரை வலியுறுத்துவதற்கு நமது அமைச்சர்
அவர்கள் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று
கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இருதயம் போன்ற வேளாண்மைத்துறை
மானியக் கோரிக்கையின் மீது இந்திய தேசிய காங்கிரஸ்
கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை எடுத்து வைக்க
விழைகிறேன். மிகப் பெரிய கண்டுபிடிப்புகளையும் ஆராய்ச்சி
களையும் செய்து, சாதனை புரிந்து வருகின்ற நமது விவசாயப்
பல்கலைக்கழகத்தாரையும், விவசாய விஞ்ஞானிகளையும்,
நன்றியுடன் வணங்கி, எனது பாராட்டுதல்களை அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்தச் சாதனைகளை
சாதாரண விவசாயிகள் எளிதாகப் பின்பற்றி, பயன் அடைவதற்கு
உதவியாக நமது நிர்வாகம் இன்னும் திறமையாகவும்,
விசுவாசமுடனும் செயல்படவேண்டும் என்று சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

1984 மார்ச் மாதத்திலே என்னுடைய பகுதியில், ஆத்தூர்
தாலுக்காவில் ஒரு பகுதியில், திடீரென்று பெய்த மழையின்
காரணமாக வெள்ளச் சேதம் ஏற்பட்டது, ஆனால் இன்றைக்கு
ஏறக்குறைய 12, 13 ஆண்டுக்காலமாக இப்படி மாறி மாறி
வெள்ளச் சேதம், வறட்சி ஏற்பட்டுக்கொண்டிருந்தபோதிலும்
கூட என்னுடைய ஆத்தூர் வட்டத்தை இதுவரை வறட்சிப்
பகுதியாக அறிவித்து அதற்கான பணிகளைத் தொடங்கவில்லை
என்பதை நான் வருத்தத்துடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, குடிநீருக்காகக் குழாய்களை அமைக்கிறார்கள்.
அப்படி குடிநீருக்காகக் குழாய்களை அமைக்கிறபோது, 70 அடி,
80 அடி போட்டவுடனே தண்ணீர் கிடைத்துவிடுகிறது. அப்படி
தண்ணீர்கிடைத்தவுடன் அதைவிட்டுவிட்டுச்சென்றுவிடுகிறார்கள்.
அடுத்த ஆண்டு மீண்டும் மழை பொய்த்துவிடுகிற காரணத்தால்,
வேறு ஒரு இடத்திற்குச் சென்று அங்கே குழாய்களை அமைக்
கிறார்கள். இப்படி அமைத்துக்கொண்டே போகிற காரணத்தால்,
அரசாங்கத்திற்கு வேண்டுமானால், அதிகப்படியான செலவை
அவர்கள் காட்டலாமே தவிர, மக்களுக்குத் தேவையான குடிநீர்ப்

பிரச்சினையைத்தீர்க்க முடியாது என்ற என்னுடைய எண்ணத்தை தெரிவிக்க ஆசைப்படுகிறேன். 300 அடி வரை குழாய்களைப் போட வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் நான் பார்த்த எந்த இடத்திலேயும் உண்மையிலே அப்படி 300 அடி வரை போடுவது கிடையாது.

அதேபோல் நிலத்தடி நீரைப் பாதுகாக்கவேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள கூட நிறையப் பேர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்காக என்ன நடவடிக்கையை அரசாங்கம் இதுவரை எடுத்திருக்கிறது என்பதை விளக்கிக்கூற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

உலக வங்கிக் கடனோடு மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரை குடிநீர் கொண்டுவரப்படுகிறது. ஆனால் என்ன காரணமோ—தலைவாசலுக்கு பலமுறை கேட்டும் கூட—தலைவாசல் வரை அந்தக் குடிநீர் வர மறுக்கிறது. இதற்கான காரணம் புரியவில்லை. ஆத்தூருக்கும், தலைவாசலுக்கும் ஏறத்தாழ 16 கி. மீட்டர்தான் இடைவெளி இருக்கிறது. சேலம் மாவட்டம் தலைவாசலோடு முடிந்துவிடுகிறது. ஆகவே அதை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சாதாரணமாக ஒரு மாணவன் பி.எஸ்ஸி. அக்ரி. படிக்க வேண்டும் என்று சொன்னால் ஏழை எளியவர்கள் வீட்டுக் குழந்தைகள் மிகவும் சிரமப்பட்டு, கடன் பெற்றுத்தான் படிக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களுக்கு, அக்ரிகல்சர் படித்தவர்களை நேர்முகத் தேர்வுக்கு அழைத்தும்கூட இதுவரை அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்காமல் இருக்கிறது. அதற்கான காரணம் என்ன என்று கேட்டால் அவர்கள் கூறுகிறார்கள்—டிபார்ட்மெண்டில் இருந்தவர்களை பி.எஸ்ஸி அக்ரி படித்தவர்களை இந்த அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டில் இருந்தவர்களை 100 பேரை டெபுடேஷன் மூலம் அனுப்பியிருக்கிறார்கள். அதன் காரணமாக இவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே மீண்டும் அவர்களை டிபார்ட்மெண்டுக்கே எடுத்துக்கொண்டு அக்ரிகல்சர் படித்த அந்த மாணவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நெல்லுக்கு அரசு மானியமாக 35 ரூபாய் கொடுப்பதைப் பற்றி எல்லோரும் பேசிவிட்டார்கள். அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்த 35 ரூபாயை 50 ரூபாயாக உயர்த்தி அதை அவர்களுக்கு ரொக்கமாகவே கொடுக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் அவர்களுக்கு உர டோக்கன் கொடுத்தால் அதை வீணாக, குறைந்த விலைக்கு விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இன்றைக்கு நம்முடைய



விவசாயிகள் யாரும் பயிரிடும் போது உரம் போடாமல் பயிரிடுவது என்பது மிகவும் அரிதான நிலையில் இருக்கிறது. விவசாயிகள் உரங்கள் அனைத்தையும் கேட்டுப் பெற்றுப் பயன் படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் ரிசர்வ் வங்கி குறுக்கே இருக்கிறது என்று சொன்னாலும ரிசர்வ் வங்கிக்கு எழுதி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெற்று உரக் கூப்பன் களுக்குப் பதிலாக அவர்களுக்கு ரொக்கமாகக் கொடுக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காரணம் கூட்டுறவுத் துறையில் கூட கடனைத் தள்ளுபடி செய்ததை ரிசர்வ் வங்கி மறுத்து இருக்கிறது. ஆனாலும் அதை நாம் செய்து இருக்கிறோம். ஆகவே இதை எல்லோரும் வற்புறுத்திக் கேட்டு இருக்கிற காரணத்தால் இதை ரொக்கமாகக் கொடுக்கவேண்டும் என்றும் அதற்கு அரசு முன்வரவேண்டும் என்றும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கதிர் அடிக்கும் களம் என்பது மிக முக்கியமானது. முதலில் சமுதாயத் திட்டத்தின் மூலமாக பல இடங்களில் கதிர் அடிக்கும் களம் சிறிது சிறிதாக அமைத்து இருந்தார்கள். அவைகள் எல்லாம் இன்றைக்குப் பாழடைந்து விட்டன. ஆகவே ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடத்தில் சிமெண்ட் பலகைகள், சிலாபுகள் போட்டு மானிய விலையில் விவசாயிகளுக்குக் கொடுத் தால் தனிப்பட்டவர்கள் கூட அதைப் பெற்று தங்களுடைய இடத்தில் நிறுவி அதன் மூலமாக இந்த விவசாய விளைப் பொருட்களைக் கல், மண் இல்லாமல் நல்லமுறையில் உலர வைத்து தூசி இல்லாமல் செய்து எடுத்துக்கொண்டு போய் மார்க் கெட்டில் நல்ல விலையில் விற்பதற்கு ஒரு சூழ்நிலை ஏற்படும். அதுவும் கண்டிப்பாக டெல்டா பகுதியில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நான் அரசை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாப், அரியானா மாநிலங்களில்கூட கதிர் அடிக்கும் இயந்திரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல் நம்முடைய பகுதியில் கூட ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு கதிர் அடிக்கும் இயந்திரம், 2 டிராக்டர்கள், ஸ்பிரேயர்கள் எல்லாம் கொடுக்கப் பட்டு இருந்தன. நீண்ட நெடுங்காலமாக ஊராட்சி ஒன்றியங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவைகள் இதுவரை பயன்படுத்தப்பட்டு அவைகள் எல்லாம் சேதம் அடைந்து அவைகளை எல்லாம் ஏலம் விட்டுவிட்ட சூழ்நிலையில் இருக்கின்றன. மீண்டும் அவைகளைக் கொடுக்கவேண்டும். அதோடு தனியார் யாராவது அதற்கு முன் வந்தால் இந்தக் கதிர் அடிக்கும் இயந்திரத்தை மானிய விலையில் அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு உழவர்களுக்கு சிறிய உழவு இயந்திரங்களைச் சுமார் 25 ஆயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள அளவில் உற்பத்தி செய்து அவர்களுக்கு ஏராளமாகக் கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் தேவியாகுறிச்சியில் கே யப்புத்தூர் கடலூர் சாலையில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருந்தோம். அந்த இடம் ஏற்கனவே சமூகநலத் துறையின் கீழ் இருந்தது. இப்போது சிறைத் துறையின் கீழ் இருக்கிறது. அந்த இடம் அமைந்துள்ள ஊர்ப் தேவியா குறிச்சி. தரிசாக இருந்த அந்த இடத்தை ஊர்ப் பொது மக்கள் சமூகநலத்திற்காகக் கொடுத்தார்கள். அங்கே மறுவாழ்வு இல்லம் அமைக்கப்பட்டு இருக்கிறது. மொத்தம் 60 ஏக்கர் நிலம் அங்கே இருக்கிறது. அதில் துணை மின் நிலையம் கூட இப்போது நிறுவி இருக்கிறோம். அதற்குப் பக்கத்தில் உள்ள அந்த இடத்தை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கு 15 ஏக்கர் நிலம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன் இதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை. ஆனால் நீண்ட நெடுங்காலமாகக் கேட்டுக்கொண்டு இருந்தும் அந்த வேலை முடியவில்லை. அங்கே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கிடைத்தால் எங்கள் பகுதியில் உள்ள விவசாயிகள் கட்டிடம் கட்டி அங்கே நல்லமுறையில் தங்களுடைய பொருட் களை விற்பனை செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு நாம் இன்றைக்கு வறட்சி என்று சொல்கிறோம். மழை இவ்வளவு பெய்தது என்று சொல்கிறோம். எல்லா இடங்களிலும் இல்லை. ஆர்.ஐ. இருக்கின்ற அந்தத் தலைமை இடத்திலாவது அல்லது துணை மின் நிலையம் உள்ள அந்த இடத்திலாவது அல்லது ஒரு ஊராட்சி ஒன்றியத் தலைமை இடத்திலாவது ஒரு மழைமானியை நிறுவி அங்கே எவ்வளவு மழை பெய்தது என்பதைப் பொதுமக்கள் அறிகின்ற வகையில் அதை நாம் குறித்து ஒரு அட்டையில் தொங்க விட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4-40]

செக் டாம் நிறைய கட்டியிருக்கிறோம். இருந்தாலும் அது போதாது என்று தான் நான் கருதுகிறேன். எல்லா ஓடைகளிலும், சிற்றோடைகளிலும் தடுப்பு அணைகள் கட்டுவது அங்கேயுள்ள கிணறுகளுக்கு நல்ல ஊற்று கிடைப்பதோடு, ஆடுமாடுகள் மேய்ச்சலுக்குச் சென்று தண்ணீர் குடிப்பதற்கும், இன்றையதினம் கோடை காலத்தில், குடிநீருக்காக வறட்சியால் மிகவும் கஷ்டப்படுகின்ற மக்களுக்கும் அது ஒரு நல்ல சாதகமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





நீர்வளம், நிலவளம், மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தேவைப்படும் உணவுப் பொருள்களைக் கொடுத்து பயிரிடும் முறையை வகைப்படுத்தி, விவசாய வல்லுநர்களின் அறிவுரைகளை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும். நீர்வளம், நில வளத்திற்குத் தகுந்தாற்போல் அதிக விளைச்சல் தரக்கூடிய விளை பொருட்களைப் பயிரிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இப்போது கூட மண் வளத்தை எடுத்து பரிசோதனை செய்வதாகக் கூறப்படுவது, அது கூட இப்போது நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பது சந்தேகத்திற்குரியதாகத் தான் இருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் ஆணைமடுவு, கரியகோவில் அணை களைக் கட்டிக்கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் கீழ்ப்பகுதியில் வசிஷ்ட நதியின் ஆயக்கட்டுதாரர்களுக்காக, 20 ஏரிகளுக்கு அதிலிருந்து நீர்ப் பிடிப்பு வசதி கிடைக்கவேண்டும். இன்றைக்கு அந்த அணைகள் கட்டப்பட்டுவிட்டால், கீழேயுள்ள விவசாயி களுக்கு 20 ஏரிகளில் தண்ணீர் நிரம்பாது என்ற ஒரு அச்சம அவர்களிடையே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே 20 ஏரிகளிலும் தண்ணீர் நிரம்புகின்ற வரையில் விட்டுவிட்டு மீதமுள்ள தண்ணீரைச்சேமிக்க புதிய ஆயக்கட்டுகளுக்கு விநியோகம் செய்ய வேண்டி கேட்டுக்கொள்கிறேன்

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு நிறைய சலுகைகளை இந்த அரசு கொடுத்திருக்கிறது. அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குடிசைகளுக்கு விளக்கு போன்ற சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு 24 மணி நேரமும் தண்ணீர் இறைக்கின்ற ஒரு விவசாயியும், சாதாரணமாக ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரம் தண்ணீர் இறைக்கின்ற ஒரு விவசாயியும் ஒரே மாதிரியான கட்டணத்தைக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்து அவர்களிடமிருந்து நியாயமான கட்டணம் வசூல் செய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அத்தோடு மின்சார இணைப்புக் கொடுக்கும்போது தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்காக எந்தவித முன்னுரி மையும் கொடுக்கப்படவில்லை. ஆக அவர்கள் அந்த வரிசையிலே நின்று பெறவேண்டுமென்றால், அது இயலாத ஒரு காரியமாக இருக்கிறது. இன்றைக்கும் வடம் பறி வைத்து கமலை ஓட்டிக் கொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் நிறைய இருந்துகொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திட்டப்படி என்று வைத்து, அந்தத் திட்டத்தில் உள்ளவர்களை வரிசைப்படுத்தி அங்கே கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதுபோன்று மீண்டும் திட்டப் படி செய்வதற்கான ஒரு நிலையினை உருவாக்கவேண்டும் அல்லது தாழ்த்தப்பட்ட மலை வாழ் மக்களுக்காக, முன்னுரிமை கொடுத்து அவர்களது பம்புசெட்டுகளுக்கு மின்சார இணைப்பைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பெற்றது.

திரு. எம். வி. இரத்தினம் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, விவசாயம் மற்றும் குடிநீர் வடிகால் வாரிய மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கியமைக்கு முதலில் நான் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக புரட்சித் தலைவருடைய அரசு—பட்டிதொட்டி களில் எல்லாம் வாழ்கின்ற மக்களின் நலன் கருதி பாதுகாக்கப் பட்ட குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி வருகின்ற இந்த நேரத்தில் நான் இந்தத் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக உலக வங்கித் திட்டத்தின் கீழ், கோவை மாவட்டத்தில் அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை, மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய அவினாசி, பல்லடம், கோவை வட்டத்தைச் சார்ந்த சுமார் 400-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடிநீரைப் பெறுகின்ற வகையில், புரட்சித் தலைவருடைய அரசு நிறைவேற்றி வருவதற்கு கோவை மாவட்ட மக்கள் சார்பாக நான் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதுபோல ஐரோப்பிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஃபுளோரைடு அதிகமாக உள்ள பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க ஏறக்குறைய 87–88ஆம் ஆண்டுக்கு ரூ. 475.77 இலட்சம் தொகையை செலவு செய்ததை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இருப்பினும் ஐரோப்பிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடை பெறுகின்ற இந்தப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டியது, விரைவுபடுத்த வேண்டியது மிக முக்கியப் பொறுப்பு என்பதையும் நான் எடுத்துக்காட்ட விழைகிறேன். குறிப்பாக பொள்ளாச்சி வட்டத்தைச் சார்ந்த ஆளேஸ்வரன்பட்டி போன்ற பகுதிகளில் குடிநீர்ப் பஞ்சமானது மிகவும் கடுமையாக இருப்பதை நான அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக் கிறேன். அந்த ஒரு பேரூராட்சி மட்டும் அல்ல, இந்த ஃப்ளோரைடு திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 100க்கு மேற்பட்ட கிராம மக்கள் பயன்பெறத்தக்க வகையில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஆகவே கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பாகவே நிறைவேற்றப்பட் டிருக்கின்ற இந்த திட்டத்தை இந்த ஆண்டாவது முடித்துக் கொடுக்க வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் அதைப் போலவே பொள்ளாச்சி நகரத்தை பொறுத்தமட்டில் 1983-ஆம் ஆண்டு இம்மீடியட் வாட்டர் ஸ்கீம் என்ற திட்டத்தைத் தீட்டினோம். இம்மீடியட் என்ற அந்த வார்த்தைக்கு அர்த்தம் இல்லாத வகையில் கடந்த 4.5 ஆண்டுகளாக அந்தத் திட்டம் செயல்பட முடியாமல் இருப்பதை எண்ணுகின்றபோது, குடிநீர் வடிகால் வாரியத்தைத் தட்டிக் கேட்பது,அதைத்தட்டி எழுப்ப வேண்டியது அரசினுடைய கடமை என்பதை எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதைப்போல கோவை மாவட்டம் மேட்டுப்

பாளையம் தொகுதியைச்சேர்ந்த புகழ்மிகு காரமடை பேரூராட்சி இருக்கிறது. அந்த பேரூராட்சியில் அந்தத் திட்டம் 1972 ஆம் ஆண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்தத் திட்டம் மீண்டும் இந்த ஆண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆகவே குடிநீர் வடிகால் வாரியத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம்—உண்மையிலேயே பட்டிதொட்டிகளிலெல்லாம் குடிநீரை வழங்கியிருக்கிறீர்கள் என்பது ஒருபுறம் சந்தோஷப்படக் கூடிய விஷயம் தான்—அதே போல இதுபோன்ற தேங்கிக்கிடக்கின்ற பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல பொள்ளாட்சி நகருக்கு இரண்டாவது குடிநீர் திட்டத்தை ஆய்வு செய்து, வளர்ந்து வருகின்ற அந்த மக்கள் தொகைக்கு, பெருகி வருகின்ற அந்த நகர மக்களுக்கு உதவி செய்கின்ற வகையில் வாரியம் தன்னுடைய பணியைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பேரூராட்சிகளை இரண்டாகப் பிரித்து ஒன்று நகர்ப்புறப் பேரூராட்சிகள் என்றும் மற்றொன்று கிராமப்புறப் பேரூராட்சிகள் என்றும் இன்றைய தினத்திலே, குடிநீர் வாரியத்தின் மூலமாக கிராமப்புறப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அது நகர பேரூராட்சியாக இருந்தாலும் சரி, கிராமப்புற பேரூராட்சியாக இருந்தாலும் சரி, அதற்கு தண்ணீர் வழங்கவேண்டிய பொறுப்பு அரசினிடத்திலே இருப்பதினால் நகரம், கிராயம் என்பதை எடுத்துவிட்டு ஒரே பேரூராட்சியாகக் கருதி அரசே, குடிநீர் வடிகால் வாரியமே முழுத் தொகையைச் செலவு செய்து அந்தப் பேரூராட்சி மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டும் என்பதைக் கேட்டுகொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்

இன்றைய சூழ்நிலையில் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உறுப்பினர்களாக, வாரிய உறுப்பினர்களாக, பொதுமக்களுடைய பிரதிநிதிகளைப்போடவேண்டும் என்கின்ற அந்த வேண்டுகோளை என்னுடைய சார்பாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது மாநிலத்திற்கு அடுத்தபடியாக கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில், நம்மைப் பார்த்து குடிநீர் வாரியத்தை அவர்கள் அமைத்தார்கள். அங்கெல்லாம் பொதுமக்களுடைய பிரதிநிதிகளை வைத்து அந்த வாரியம் செயல்படுவதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக பல்கலைக்கழகத்திற்கெல்லாம் சிண்டிகேட் மெம்பராக செனெட் மெம்பராக இந்தச் சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்ற நீங்கள் தயவு கூர்ந்து குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பொதுமக்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது அவசியம் என்பதைத் தெள்ளத் தெளிவாக குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் அன்றாட மக்களுடைய பிரச்சினைகள் எங்கெல்லாம் நிலவி வருகின்றது, எங்கெங்கெல்லாம் மக்களுடைய

அத்தியாவசியத் தேவையான குடிநீர் இருக்கிறது என்பதை அறி கின்ற வாய்ப்பு அதிகமான அளவுக்குச் சட்டமன்ற உறுப்பினருக்கு இருக்கிறது என்ற வகையில், நீங்கள் தயவு கூர்ந்து குடிநீர் வடிகால் வாரியத்திற்குப் பொது மக்களுடைய பிரதிநிதிகளையும் வாரிய உறுப்பினர்களாகப்போட வேண்டும் என்கின்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல குடி நீரோடு வடிகால் வாரியமும் சேர்ந்திருக்கின்ற இந்த நேரத்தில் குடிநீருக்குத்தான் முக்கியத்துவம் இருக்கின்றதே ஒழிய அந்த வடிகால் வாரியத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு இடம் இல்லை என்கின்ற அளவுக்கு அந்தத் துறை இருக்கின்றது.

(மாலை 4-50)

குறிப்பாக, 1972 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கோவை மாநகர வடிகால் வாரியத் திட்டம் இன்னும் முடியவில்லை. ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒன்று, வடிகால் வாரியம் தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி செயல்படுத்த வேண்டும்; அல்லது, பொள்ளாச்சி போன்ற பகுதிகளுக்கு, அந்த நகராட்சிகளுக்கே அந்தப் பொறுப்பைக் கொடுத்தால் ஏற்றதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு விவசாய்களுக்குப் பல நன்மைகளைச் செய்து இருக்கிறது. அந்த வகையில், வேளாண்மைக் கிடங்குகளில், பொள்ளாச்சியைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய பல இலட்சம் ரூபாய்கள் பெறுமான முள்ள உரங்கள் எல்லாம், விவசாயப் பெருமக்கள் எல்லாம் வாங்குகின்ற அளவுக்கு இருக்கிறது. இருந்தும்கூட, ஒரு சாதாரண விவசாயி அந்தக் கிடங்கில் இருக்கக்கூடிய அதிகாரியை அணுகவேண்டுமேயானால், ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொலைபேசியின் மூலமாகத்தான் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, தயை கூர்ந்து வேளாண்மைக் கிடங்குகளில் தொலைபேசி வைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பொள்ளாச்சியில் வேளாண்மை சேவை மையம் கட்டுவதற்கு கடந்த ஆண்டு உலக வங்கித் திட்டத்தின் கீழ் ரூபாய் 8 இலட்சம் ஒதுக்கியும் கட்டமுடியாத சூழ்நிலை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இடத்தைத் தேர்வு செய்து அனுப்பியிருந்தும்கூட, என்ன காரணமோ தெரியவில்லை, அந்த இடத்தில் கட்டப்படவில்லை. மீண்டும் இந்த ஆண்டு ரூபாய் 8 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டாவது அந்த மையத்தைக் கட்டுவதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோல், வேளாண் பல்கலைக்கழகத்தில் ஆசிரியருடைய கோரிக்கைகளை விரைவில் ஏற்று போராட்டத்தைத் தவிர்க்க வேண்டுகிறேன். ஏறக்குறைய 750 ஆசிரியர் பதவிகள் அந்த வேளாண் பல்கலைக்கழகத்தில் காலியாக இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையில் நடந்த நேர்முகத் தேர்வில் 250 நபர்கள் நேரடித் தேர்வுக்கு வந்திருந்தும் ஆறு நபர்கள் மட்டும் அந்தப் பணியில் சேர்ந்து இருப்பதற்குக், காரணம், அந்த ஊதியமானது போதாது என்பதை வைத்துத் தான் வரவில்லை என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அதேபோல், கோவையில் 'டெபுடி டைரக்டர் ஆஃப் ஹார்ட்டிகல்ச்சர்' அலுவலகமானது மூடப்பட இருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. கோவை மாவட்டம் குறிப்பாக பெரியார், சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு ஒரு மையமாக அந்த 'டெபுடி டைரக்டர் ஆஃப் ஹார்ட்டிகல்ச்சர்' அலுவலகம் இருந்து வருகிறது. அங்கே இன்றையதினம் மல்லிகை சென்ட் தயாரிக்கிற தொழிற்சாலைகள் 6, 7 அங்கே செயல்பட்டு வருகின்றன. ஆகவே, மறு பரிசீலனை செய்து அதை மீண்டும் அங்கே செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தென்னை சாகுபடி, பொள்ளாச்சியைப் பொறுத்தவரை, மிகவும் வறட்சியின் காரணமாக இன்றைய சூழ்நிலையில் பாதிக்கப்பட்டு இருப்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன் இந்த வறட்சி நிலையில், அங்கே ஏறக்குறைய 20,000 ஏக்கருக்கு மேலாக தென்னை சாகுபடி செய்துகொண்டு வருகிறோம். அப்படியிருந்தும் அங்கே கருத்தலைப் புழுக்கள், காண்டாமிருக வண்டுகள் போன்றவை அந்த 20,000 ஏக்கரைத் தாக்குகிற போது ஒட்டுண்ணி மற்றும் பூஞ்சாண்கள் உற்பத்தி செய்யும் ஒட்டுண்ணி நிலையம் ஒரே ஒரு அலுவலரை வைத்து இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த இருபதாயிரம் ஏக்கர் நிலப்பரப்புக்கு விவசாயத் துறையைச் சார்ந்த ஒரே ஒரு அதிகாரி இருந்து அதைப் பராமரிக்க முடியுமா என்பதை அரசு கணக்கில் கொண்டு, தென்னை சாகுபடியாகும் நிலத்தின் பரப்பை அனுசரித்து, அங்கே அதை விரிவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதேபோல, இன்றையதினத்தில் சொட்டுநீர்ப் பாசன மானது தமிழக அரசு, புரட்சித் தலைவர் அவர்கள் அரசு 30 கோடி ரூபாயைக் செலவு செய்வதாக ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டி இருக்கின்ற நேரத்தில் நான் சொல்லிக் கொள்வது விவசாயத்திற்கு அத்தியாவசியமான தேவை ஒன்று தண்ணீர் இரண்டு, அங்கு விளைகின்ற பொருளுக்கு ஏற்ற விலை, மூன்றாவது மின்சாரம். அந்த விவசாயத்திற்கு, முக்கியமாக

வறட்சி இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் கிணறுகளில் தண்ணீர் இல்லை என்ற நிலை ஏற்படுவதன் காரணமாக, விவசாயப் பெருங்குடி மக்கள் எப்படியும் தங்களுடைய நிலத்தில் இருக்கக் கூடிய விளை பொருள்களை, குறிப்பாக, தென்னை மரங்களைக் காப்பாற்றுவதற்காக ஆழ்குழாய்க் கிணறுகளை அவர்களுடைய செலவில் ஏறக்குறைய 30 ஆயிரம், 35 ஆயிரம் செலவு செய்து போடுகிறார்கள். அப்படிப் போடப்படுகின்ற ஆழ்குழாய்க் கிணறுகளில் நீர் இறைக்கின்றபோது மின்சாரம் அதற்குத் தேவை இன்றையதினம் கம்ப்ரஸ்ஸரை வைத்து எடுத்துக்கொள்ளுங்கள் என்கிறார்கள். அந்த கம்ப்ரஸ்ஸரும் அந்த கிணற்றிலேதான் இருக்கவேண்டும். டியூபை அந்த போர்-வெல்லுக்கு கொண்டு செல்லவேண்டும். அங்கே இருக்கக்கூடிய தண்ணீர் அந்த கிணற்றில் விழ வேண்டும். இதை மின் மோட்டார் மூலமாக இயக்கவேண்டும். இந்த கண்டிஷன்கள் எல்லாம் தேவைதானா? இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற வகையில் அந்த ஆழ் குழாய் கிணறுகளுக்கு விரைவாக மின் இணைப்பு கிடைப்பதற்கு இந்த வேளாண் துறையானது எந்த நிபந்தனையும் இல்லாமல் ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் இருக்கக்கூடிய நீரை இறைப்பதற்கு ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் என்று புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத்து இருக்கக்கூடிய அந்த ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் அந்த விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற வகையில், விவசாயப் பெருங்குடி மக்கள் நிம்மதியாக இருக்கின்ற வகையில் நிச்சயமாக, எந்தவிதமான தங்குதடையின்றி, விதிகள் இன்றி அந்த மின் இணைப்பு பெறுவதற்கு இந்த அரசின் வேளாண்மைத் துறை முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தையும் விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தின் மீது நான் சார்ந்திருக்கிற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். முதலாவதாக, இந்த விவசாயத் துறை ஊழியர்களை வேலை உயர்விலே வருவாய்த் துறை ஊழியர்களைப்போல நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை என்றும் அதனால் அந்த ஊழியர்களின் வேலை உயர்வு பாதிக்கப்படுகிறது என்ற கருத்து அந்த ஊழியர்களின் மத்தியிலே இருந்து வருகிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, வருவாய்த் துறையிலே இருப்பது போன்ற நடைமுறையைக் கொண்டுவர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



தமிழ் மாநிலத்தைப் பொறுத்தவரை நெற்களஞ்சியம் என்று நம்மால் போற்றப்படும் தஞ்சைத் தரணி நெல் உற்பத்தியிலே முதல் ஸ்தானம் வகிக்கிறது. அதற்கடுத்து, நெல் உற்பத்தியிலே நெல்லை மாவட்டம் இரண்டாவது ஸ்தானம் வகிக்கின்றது என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே விவசாயிகளின் விவசாயப் பொருள் உற்பத்திக்கு, அந்த மாவட்டத்திலே உற்பத்தியாகும், தாமிரபரணி, மணிமுத்தாறு மற்றும் சிறிய அணைக்கட்டுக்களைக் கொண்டு விவசாய உற்பத்திக்காக நாம் தண்ணீரைப் பெறுகிறோம். அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பச்சையாறு அணைக்கட்டுத் திட்டத்தை ஏனோ தமிழக அரசு நிறைவேற்றித் தராமல் இருக்கிறது. அதற்கு கூறப்படும் காரணங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. அங்கே வாழும் சிங்கவால் குரங்குகள் அழிந்துவிடும் என்ற ஒரு காரணத்தைக் காட்டி அந்த அணைக்கட்டை கட்டித் தருவதிலே தமிழக அரசு தயக்கம் காட்டி வருகிறது. மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வரிடம் இதை கண்டிப்பாக எடுத்துச் சொல்லி அந்த மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பச்சையாறு அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். ஏனென்றால் இடவப்பதில் சீசன் என்று சொல்லப்படும் ஜூன், ஜூலை மாதங்களில் நிறைய மழை அப்பகுதியிலே பெய்து அங்கே உற்பத்தியாகும் அதிகமான நீர் கடலிலே கலந்துவிடுகிறது, அந்த நீரை தேக்கி வைப்பதற்கு அந்த அணைக்கட்டு மிகவும் உபயோகமாக இருக்கும். மூன்று விவசாயிகள் அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், விதைகள் நல்லமுறையிலே, உரிய நேரத்திலே கிடைக்கப்பெறாமல் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையிலே, நெல் விதை என்று கொடுத்து அந்த விதைகளை அவர்கள் பயிரிடும்போது வெறும் நெல்லையே அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த அடிப்படையிலே அந்த விவசாயிகள் சிரமங்களுக்கு உள்ளாகி கஷ்டப்படுகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயம் இல்லாத காலத்திலே, விவசாயிகளுடைய கைத்தொழிலுக்காக கொடுக்கப்படும் கடன்கள் உரிய நேரத்திலே அவர்களுக்கு கிடைப்பதில்லை 'தாட்கோ' மூலமாக அவர்கள் கடன் கேட்டு, 'தாட்கோ' வங்கிகளுக்கு பரிந்துரை செய்து அந்த கடன்களை கொடுக்கச் செய்கிறது. அதேநேரத்திலே வங்கிகளுக்குச் சென்றால் அவர்கள் கடன் தர மறுக்கிறார்கள். காரணம் கேட்டால் வங்கிகள், அந்த விவசாயிகள் இருக்கக்கூடிய பகுதியிலே இல்லை, அதனால் தரமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு 'தாட்கோ' மூலமாக பரிந்துரை செய்யப்படும் வங்கிகள் மூலமாக உடனடியாக விவசாயிகளுக்கு கடன் கிடைக்க ஆவன செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5.00)

மேலும் குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த வரையில் மூலப் பொருளான தண்ணீர் நிறைய இருக்கிறது. அதே நேரத்தில் பக்கத்து மாவட்டத்திலுள்ள கோவில்பட்டிக்கு நெல்லை மாவட்டத்திலேயிருந்து தண்ணீரைக் கொண்டு செல்கிறோம். ஆனால் எங்கள் மாவட்டத்திலேயே மற்ற பகுதிகளில் உள்ள மக்கள் அந்தத் தண்ணீரைக் கேட்கிறார்கள், அதைக் கொடுக்க வேண்டாம் என்று நான் மறுக்கவில்லை. இருந்தாலும் நெல்லை மாவட்டத்தில் இருக்கிற நாங்குநேரி மற்றும் பாளையங்கோட்டைப் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்துப் பகுதிகளெல்லாம் குடிநீருக்குக் கஷ்டப்படுகிற சூழ்நிலையில் நம்மிடம் இருக்கிற தண்ணீரை அந்தப் பகுதி மக்களுக்கும் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எங்கள் மாவட்டத்தில் நீர் ஆதாரம் ஓரளவுக்கு இருப்பதால் நிலத்தடி நீரும் அங்கே கிடைக்கிறது. விவசாயிகள் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி பயிர் செய்ய மின் இணைப்பு கேட்டால் உடனடியாக அவர்களுக்கு மின் இணைப்பு கிடைப்பதில்லை. இதிலே மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அம்மாதிரியான விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து மின் இணைப்புக் கிடைக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் காற்று மூலம் இயங்கும் காற்றாடி அமைத்து அது அசைவதன் மூலம் ஏற்படுகிற மின் சக்தியைப் பயன்படுத்தி நிலத்தடி நீரை மேலே கொண்டு வருவதற்கும் திட்டங்கள் தீட்ட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நீர் தேங்கும் பகுதிகளிலெல்லாம் தற்போது ஆகாயத் தாமரை என்ற விஷச் செடி பரவலாகப் பரவி நீரை அழிக்கிற சூழ்நிலை நெல்லை மாவட்டம் முழுவதுமாக இருக்கிறது. இதனால் மீன்கள்கூட பாதிக்கப்படுகின்றன. என்று அறிவியலார்கள் கூறுகிறார்கள். சூரிய ஒளி அந்த நீர்நிலைகளில் சரியாகக் கிடைக்காததால் மீன் இனம் அழிந்து விடுகிறது. அத்தகைய சூரிய ஒளி கிடைப்பதற்கு இடையூறாக ஆகாயத் தாமரைச் செடிகள் வளர்ந்திருக்கின்றன என்றும் ஆகாயத் தாமரை நீரை அதிகமாக எடுத்துக் கொள்ளுகிறது என்றும் சூரியன் தன்னுடைய சக்தியால் 40 சதவீதம் நீரை எடுத்துக் கொள்வதை விட அதிகமாக ஆகாயத் தாமரை எடுத்துக் கொள்ளுகிறது என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். இதை மனதில் கொண்டு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆகாயத் தாமரையை நீர்நிலைகளில் ஒழிக்கும் ஒரு பணியை விரைவில் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து நீண்டநாள் கோரிக்கையாக வைக்கப்பட்ட மேலப்பாளையம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ரூபாய் ஒரு கோடியே நாற்பத்த இரண்டு லட்சம் செலவில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தற்போது நிறைவேறுகிற நிலைமை இருக்கிறது. போன ஆண்டு முன்னாள் அமைச்சர் திரு.காளிமுத்து அவர்கள் அங்கே வந்திருந்த சமயத்தில் அவர்களைச் சந்தித்து இந்தத் திட்டத்தைச் சீக்கிரமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டபோது ட்வாட் போர்டு பொறியாளரை அழைத்து அவர்களும் கேட்டார்கள், அப்போது சென்ற ஆண்டு ஏப்ரல் திங்களிலேயே குடிநீர் விநியோகத்திற்கு திறந்து விடப்படும் என்று கூறினார்கள், ஆனால் இப்போதுள்ள நிலைமை பாளையங்கோட்டை நகராட்சியும் மேலப்பாளையம் நகராட்சியும் இணைந்த ஒரு கூட்டுக் குடிநீர் திட்டமாக இருப்பதால் அவர்களுக்கும் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதிகமான பணத்தைச் செலவழித்தும்கூட அந்த திட்டத்தைச் சரியாக நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. சரியான காரணங்களைக்கூட அவர்கள் கூறாமல் எப்படியோ இப்போது நிறைவேற்றக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே தற்போதைய குடிநீர்ப் பஞ்சத்தைக் கருத்தில் கொண்டு சீக்கிரமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர பொறியாளர்கள் பணிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

மேலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில் முக்கியமான தெருக்களுக்குக்கூட குடிநீர் குழாய்கள் அமைக்கப்படாது இருந்தது. அத்தகைய குறைகளைக்கூட இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகப் போக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று நிறைவேற்றித் தருவதாக இருந்தார்கள். ஆனால் இப்போது கூட்டுக் குடிநீர் திட்டம் ஆரம்பிக்கிற நிலையில்கூட அந்த பைப்புகள் அமைக்கப்படாமலேயே இருக்கின்றன. இதையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு உடனடியாக மெயின் பைப்புகளை அமைத்து தெருக்களுக்கும் குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கொண்டு வரப்பட்டிருக்கிற விவசாயம் மற்றும் குடிநீர் வடிகால் வாரிய மானியத்தின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். முதலாவதாக விவசாயம் பற்றி என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

'' சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''

'' உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து''

என்பதெல்லாம் தெய்வப் புலவன் வாய்மொழியால், விவசாயத்தின் சிறப்புத் தன்மைகளை நாம் நன்கு அறிகின்றோம். விவசாயிகள்தான் இந்திய நாட்டின் முதுகெலும்பு என்று இந்தியாவின் தந்தை காந்திஜி சொல்லி இருக்கிறார்.

நாட்டின் பொருளாதாரமே விவசாயத்தை நம்பித்தான் இருக்கின்றது என்பதை நாம் அறிகின்றோம். ஆனால் இன்றைய நிலையில் விவசாயம் 'கானல் நீராக' மாறி வருகின்றது. தற்பொழுது விவசாயத்தை நம்பி இருக்கின்ற மக்கள் தன்னம்பிக்கை இழந்து, இருண்ட சூழ்நிலையில்தான் வாழ்ந்து வருகின்றார்கள்,

இன்றையதினம் விவசாயி என்று சொன்னாலே மிகவும் ஏளனமாக, பரிதாபமாக பார்க்கக் கூடிய சூழ்நிலைதான் இருந்து வருகிறது. இந்த நிலைக்குக் காரணம் விவசாயியின் வாழ்க்கையில் பொருளாதார ஆதாரமே இல்லாத நிலைதான். குறிப்பாக இராமநாதபுரம், பசும்பொன் மாவட்டங்களில் கடந்த ஆறேழு வருடங்களாக மழை பொய்த்ததினால் மக்கள் விவசாயம் இன்றி பஞ்சத்தின் கோரப்பிடியில் சிக்கி வாழ்வுக்கு வழியற்ற சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. எனவே, இராமநாதபுரம் மாவட்டத்தையும், பசும்பொன் மாவட்டத்தையும் வறட்சிக்கு இலக்காகியுள்ள பகுதிகள் என்றும், வறட்சி மாவட்டங்கள் என்றும் அறிவித்து வறட்சி நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

''உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு நெல் மிஞ்சாது'' என்பார்கள். இதனை உறுதி செய்கின்ற வகையில் நமது முதல்வர் அவர்கள் சினிமாவில் பாடிய பாடலை நினைவுகூறக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

'' காடு விளைந்து என்ன மச்சான் நமக்கு கையும்
காலுந்தான் மிச்சம்''. ''காடு விளையட்டும் பெண்ணே
நமக்கு காலம் இருக்கிறது பின்னே''

என்று பாடியிருக்கின்றார்கள். விவசாயிகளின் நல்வாழ்விற்கு
உரிய காலம் பின்னே தள்ளிச் சென்று கொண்டேயிருக்கின்றது.
எனவே தமிழக அரசு விவசாயிகளின் மீதும் அவர்களின்
பிரச்சினை மீதும் பரிவு காட்டித் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.



அதற்காக விவசாயிகளின் கடன் சுமைகளை அகற்ற அரசு
முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் வாங்கி
யிருக்கின்ற கூட்டுறவு கடன்களை வசூல் செய்வதற்கு விவசாயம்
விளைச்சலுக்கு வரவில்லை என்பதனால் கடன் கட்ட வேண்டிய
காலக்கெடு நீட்டிக்கப்பட்டது. கடன் வசூல் செய்ய உரிய
காலக்கெடு நீட்டிக்கப்பட்டதற்குக் காரணம் விவசாயம்
விளைவிற்கு வந்த பின்பு வசூல் செய்து கொள்ளலாம் என்பது
தான். இந்த ஆண்டும் விவசாயம் வழக்கம்போல் பொய்த்து
விட்டது. ஓர் ஆண்டில் விவசாயம் விளைச்சல் இல்லையென்றால்
அதனால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட நான்கு ஆண்டுகள்
ஆகும். எனவே தொடர்ந்து இரண்டு மாவட்டங்களும் வறட்சி
யால் பாதிக்கப்பட்டு வருவதால் விவசாயிகளின் கடன்களையும்,
கூட்டுறவுக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். நில வரியையும், நிலுவையில் உள்ள வரியையும்
ரத்து செய்ய வேண்டும். பழைய வரி பாக்கிகளை வசூல்
செய்யக் கூடாது. கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்ய
இயலாது என்றால் விவசாயம் நன்கு விளைச்சலுக்கு வருகின்ற
வரையிலும் மேலும் நான்கைந்து ஆண்டுகளில் தவணை முறை
களில் கட்டுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். காலக்கெடு
நீட்டிப்புக்கு வட்டி சேர்த்து வசூல் செய்யக் கூடாது என்று
கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் இன்றைய நிலையில் வீட்டில் இருக்கின்ற
பண்டம் பாத்திரங்களை விற்று, நிலங்களை அடமானம் வைத்து
நிலத்தை ஒத்தி வைத்து அல்லது விற்றுதான் ஜீவனம் செய்ய
வேண்டிய கட்டாய அவலநிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே
விவசாயிகள் மீண்டும் விவசாயம் செய்யும் நிலை சிறிதுகூட
கிடையாது. ஆகவே விவசாயிகள் மீண்டும் பயிர் செய்ய
வேண்டும் என்றால் விவசாயிகளுக்கு விதைகள், உழவு மாடுகள்,
உழவுக்குத் தேவையான கருவிகள், உரங்கள், பூச்சி மருந்துகள்
அனைத்தையும் மானியமாக வழங்க வேண்டும், விவசாயம்
செய்ய, கிணறு வெட்ட வட்டியில்லாத கடன் வழங்க ஏற்பாடுகள்
செய்து கொடுக்க வேண்டும். விவசாய ஆழ்குழாய் கிணறுகளை
குறிப்பாக திருவாடானை தொகுதியில் உள்ள எல்லா கிராமங்
களுக்கும் அமைத்துக் கொடுக்க வேண்டும். விவசாயப் பெருங்குடி
மக்களுக்கும், விவசாய கூலிகளுக்கும் வேலை கொடுக்கின்ற
வகையில் எல்லா கிராமங்களில் இருக்கின்ற கண்மாய்களுக்கும்
மழை பெய்தவுடன் தண்ணீர் தங்குதடையின்றி வந்து சேர
வரத்துக் கால்களையும், நீர் நன்கு பெருக கண்மாய்களை ஆழப்
படுத்தியும் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்,

மேலும் வறட்சியைத் தாங்கக் கூடிய விவசாயப் பயிற்சி
முறைகளை அறிமுகம் செய்து ஊக்கப்படுத்த வேண்டுகிறேன்.
குறிப்பாக வறட்சியைத் தாங்கக் கூடிய பருத்தி, பயறு வகைகள்
புஞ்சை பயிர்கள் பணப் பயிர்கள் ஆகியவற்றை அறிமுகம்
செய்து பயிற்சி கொடுத்து விவசாயம் செய்ய ஊக்கப்படுத்த
வேண்டும்.

படித்த பட்டதாரிகளுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதைப் போலவும் மாதா மாதம் உதவித் தொகை வழங்குவதைப் போலவும், விவசாயத்தை மட்டும் நம்பி வாழ்கின்ற மக்களுக்கு கடனும், உதவித் தொகையும் வழங்க இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்கு தஞ்சாவூர் மாவட்டத்திற்கு உள்ளது போல் பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வந்தால்தான் தைரியமாக விவசாய செய்ய முடியும்.

பசும்பொன் மாவட்டத்தில் விவசாயத்தில் நாற்று பாவிய தோடும், நாற்று நட்டதற்குப் பின்பும், நாற்று பொறியாகி வருகின்ற பருவத்திலும், வந்த பின்பும் தண்ணீர் இல்லாத காரணத்தால் கிட்டத்தட்ட 20 இலட்சத்திற்கு மேல் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் கணக்கு எடுத்து அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கிற வகையில் அரசு பரிசீலனை செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் பிரச்சினையைப் பற்றி கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாலை 5-10)

குடிதண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் திருவாடானை ஊராட்சி ஒன்றியத்தில், குறிப்பாக கடற்கரை பகுதிகளில் குடி தண்ணீருக்கும், குளிப்பதற்கும் மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். கடற்கரைப் பகுதிகளாக இருக்கக்கூடிய எஸ்.பி. பட்டணம், பாசிப்பட்டிணம், தீர்த்தாண்ட தானம் வட்டாணம், தொண்டி, நம்புதாளை, முள்ளிமுனை, காரங்காடு, முகிழ்தல் மற்றும் கடற்கரை சார்ந்த பகுதிகளுக்கு குடி தண்ணீர் பிரச்சினை ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது. குறிப்பாக எஸ்.பி. பட்டணம் பகுதியில் வாழ்கின்ற முஸ்லீம் தாய்மார்களும், மீனவத் தாய்மார்களும் குடி தண்ணீருக்காக பல மைல்கள் பஸ்ஸில் சென்றும், கால்நடையாகச் சென்றும் ஆற்றில் ஊற்று தோண்டி தண்ணீர் கொண்டுவர வேண்டிய அவல நிலை இருக்கின்றது. இந்தப் பகுதி மக்கள் தண்ணீருக்காக ஒவ்வொரு குடும்பமும் நாள் ஒன்றுக்கு குறைந்தது 10, 15 ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலை இருக்கின்றது. பொது வாக திருவாடானை ஒன்றியத்தைச் சேர்ந்த மக்களுக்கு கடுமை யான வறட்சியால் வேலையின்றி, வருமானத்திற்கு வழியின்றி வாழ்க்கை ஒரு கேள்விக் குறியாகிவிட்டது. இந்த வறட்சியால் செலவுக்கு வழியின்றி வாழ்கின்ற இந்தக் கால கட்டத்தில் குடி தண்ணீருக்கு செலவு செய்ய முடியாத நிலை இருக்கிறது. எனவே எஸ். பி. பட்டணத்திற்கு 47 இலட்சம் மதிப்பில் போடப்பட்டு இருக்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.





இந்தத் திட்டம் நிறைவேற எந்தத் தடையிருப்பினும் அதை நிவர்த்தி செய்து முடித்துக் கொடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இதே போல் நான் முதலில் சொல்லியிருக்கின்ற ஊர்களுக்கும், திருவாடானை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாண்டுகுடி கூட்டு குடிநீர் திட்டம். ஓரியூர் கூட்டு குடிநீர் திட்டம் அனைத்தையும் விரைவில் நிறைவேற்றி, இதைச் சார்ந்திருக்கின்ற நூற்றுக் கணக் கான கிராமங்களுக்கு குடிநீர் விரைவில் கிடைக்க துரித நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். நான் முன்னால் சொன்ன குடிநீர்த் திட்டங்களுக்கு குழாய்கள் வராத காரணத் தினாலும், ஆழ்துளை இயந்திரங்கள் இல்லாத காரணங்களாலும் வேலைகள் தாமதப்படுவதாக அறிகிறேன். எனவே அதனை நிவர்த்தி செய்து, தண்ணீர் விரைவில் கிடைக்க வேண்டிய நடவடிக்கைகளைச் செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தேவக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விளாங்காட்டூர் குடிநீர்த் திட்டம் இன்னும் செயலுக்கு வராமல் இருக்கின்றது. இதனுடைய வேலைப்பாட்டின் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி செயலுக்கு விரைவில் கொண்டுவரக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தேவக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து பிரிந்து ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியத்தில் சேர்க்கப்பட்டுள்ள திராணி, குமாரவேலூர், உருவாட்டி, சருகனி, திருகேம்பத்தூர், உச்சாணி முப்பையூர், கற்களத்தூர், புதுக்குறிச்சி, காவுதகுடி, தாணுகுடி மற்றும் இதைச் சார்ந்துள்ள, சுற்றியுள்ள ஊர்களில் தண்ணீர் இன்றி மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் தண்ணீர் கிடைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கண்ணங்குடி ஒன்றியம். இதில் உஞ்சனை கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்முறைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்து, விரைவில் செயலுக்குக் கொண்டுவரக் கேட்டுக்கொள்கிறேன், இதனால் சிறுவாச்சிவரை உள்ள 40, 50 கிராமங்கள் பயனடையும். எனவே உடன் செயலுக்குக் கொண்டுவரக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, துடுப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்பொழுது நன்றாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் பல கிராமங் களுக்கு தண்ணீர் செல்லுகிறபோது. அருகில் உள்ள ஊர் களுக்கு, அரிசன் குடியிருப்புகளுக்கு, 10, 15 வீடுகள் உள்ள குடியிருப்புகளுக்கு தண்ணீர் கொடுக்க மறுக்கப்படுகிறது. இதற்கு 150 மீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்றும், 300 பேர் வசிக்க வேண்டுமென்றும் அரசு ஆணை இருக்கின்ற காரணம் சொல்லப்பட்டு, மறுக்கப்படுகின்றது. எனவே இவற்றை எல்லாம் தளர்த்தி, எல்லாக் குடியிருப்புகளுக்கும் தண்ணீர் வழங்க நிதி ஒதுக்கி, உதவக் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல எல்லா குடிநீர்த் திட்டங்களிலும் பிரச்சினைகள் இருககின்றன. இவற்றை எல்லாம் அரசு பரிசீலனை செய்து, எல்லா குக்கிராமங்களுக்கும், குடியிருப்புகளுக்கும் தண்ணீர் கிடைக்க ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

தேவக்கோட்டை நகராட்சியைப் பொறுத்தவரையில் தண்ணீர் பிரச்சினையை தன்னிறைவுக்குக் கொண்டு வரலாம். ஆனால் தேவக்கோட்டை நகரத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் போடப்பட்டுள்ள பம்புகள் 15, 20 வருடங்களுக்கு முன்பு போடப்பட்டன. இவைகள் அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன. கரண்ட் கட்டாகிவிடுகிறது. இதனால் நகரத்தில் காலை மாலை 1 மணி நேரம்தான் தண்ணீர் கொடுக்க முடிகிறது. எனவே இவற்றை எல்லாம் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் நகரத்தில் உள்ள தாய்மார்கள் தண்ணீர் குடங்களை வைத்துக் கொண்டு தண்ணீர் வண்டிகளை நோக்கி ஓடுவதும், பைப்பில் எப்பொழுது தண்ணீர் வரும் என்று எண்ணி வீட்டு வேலைகளை விட்டுவிட்டு, நீண்ட வரிசையாகக் குடங்களை வைத்துக்கொண்டு காத்திருப்பதும், இதனால் பல சமயங்களில் சண்டை வருவதைக் காண்கின்றபோது, மனத்திற்கு வேதனையாகவும், கஷ்டமாகவும் இருக்கிறது. எனவே இவற்றை எல்லாம் போக்க தேவக்கோட்டை நகருக்கு எல்லா பம்ப் செட்டுகளுக்கும் மேற்கொண்டு ஒவ்வொரு பம்ப்செட் கைவசம் வைத்துக்கொள்ளவும், மேலும் இரண்டு மூன்று ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து தண்ணீர் விநியோகத்தை எல்லாத் தெருக்களுக்கும் பொதுக் குழாய்கள் அதிகம் ஏற்படுத்தி எளிதாக விநியோகம் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

திரு ச. சங்கரலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற வேளாண்மை மற்றும் குடிநீர் வழங்கு துறை மானியக் கோரிக்கைகள்மீது நானும் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் பொற்கால முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே தமிழகத்திலே விவசாயத் துறை மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையும், கடந்த ஆண்டுகளில் விவசாயத் துறையில் பல புதிய நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டு, இன்றைக்கு வறட்சி நிலைமை ஏற்பட்டாலும்கூட தன்னிறைவு பெறுகின்ற அளவுக்கு இன்றைக்கு வளர்ந்து வருகின்ற விவசாயத்துறை அதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்பதையும் நான் அருள்கூர்ந்து ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.





எங்கு வறட்சி ஏற்பட்டாலும்கூட, இருக்கின்ற நீரை வைத்து பல சிறப்பான சாகுபடி முறைகளை விவசாயத் துறை இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை நான் பாராட்ட விரும்புகிறேன் விவசாயிகளின் வாழ்விலே மறுமலர்ச்சி ஏற்படுத்தவேண்டுமென்பதற்காகத்தான் விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் இதிலே இடம் பெற்றிருக்கின்றன. கடந்த காலத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட கடன் சுமையைக் குறைக்க பல கோடி ரூபாய்களை ஒதுக்கி தள்ளுபடி செய்திருக்கிறது. இலவச விதையும், இலவச உரம், இலவச பூச்சிகொல்லி மருந்து ஆகியவைகளையெல்லாம் கொடுத்து விவசாயிகளை மேலும் ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

விவசாயிகள் தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயம் நடைபெறாவிட்டால் தொழிலும் இல்லை வியாபாரமும் இல்லை. இன்னும் சொல்லப் போனால், சுருங்கச் சொல்வதாக இருந்தால், அனைத்துத் தொழிலும் நசித்துவிடும் என்பதுதான். அந்த காரணத்தினால் தான் விவசாயிகளை ஊக்கப்படுத்தவேண்டும் என்பதற்காக அரசு ஆண்டுதோறும் பல கோடிக்கணக்கான ரூபாய்களை விவசாயிகள் வாழ்விலே மறுமலர்ச்சியை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக வாரி வழங்கிக்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். விவசாயக் களிமண்ணிலிருந்துதான் தனவந்தர்கள், ஆலை அரசர்கள் அனைவரும் உருவாக்கப்படுகிறார்கள். அதனால் விவசாயிகள் நலம் பெறவேண்டும் என்று, வளம் பெறவேண்டுமென்று பல முன்னோடி திட்டங்கள் வந்திருக்கின்றன. என்னதான் சிறப்பான திட்டங்களைத் தந்தாலும், இயற்கை சதியின் காரணமாக வறட்சி ஏற்பட்டு சில நேரங்களில் வறண்ட பாலைவனமாக ஆகிறது. அப்படி பாலைவனமாக ஆகின்ற நிலங்களில், நிலத்தடி நீர்கூட இல்லாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. எங்கெங்கு நீர் வசதிகள் இருக்கிறதோ அங்கெல்லாம் அணைக்கட்டு அமைத்து அந்த பகுதியிலே விவசாய விளை நிலங்களை உருவாக்க வேண்டும் என்பதற்காக இந்த ஆண்டு பல சிறப்பான திட்டங்களை இதிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

என்னுடைய மாவட்டம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் என்னுடைய தொகுதி சங்கரநாயனார் கோவில் தொகுதி. அங்கு கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக மழை இல்லாமல் இருக்கின்றது. இந்த ஆண்டும் மழையில்லாமல் அங்கு இருக்கின்ற விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அங்கே விவசாயம் செய்து வருகின்றவர்கள் வளர்ந்து வருகின்ற கால்நடைகளைகூட விற்றுவிட்டு வேலை தேடி வெளியிடங்களுக்குச் செல்கின்ற நிலைமைகள் இருக்கின்றன.

அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கும் விவசாயக் கூலிகளுக்கும் மாற்றுத் தொழில் ஏதாவது தந்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கின்ற கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை அரசின் சார்பாக வழங்குகின்ற நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு அருகாமையில் 30 மைல் தூரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை இருக்கின்றது. கீரீ ஆறு என்று தமிழகத்தின் எல்லையில் உற்பத்தியாகி மேற்கே அரபிக் கடலில் கலக்கிறது. அது பற்றி இந்த சட்டமன்றத்திலேகூட எனக்கு முன்னர் வந்த உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள் அந்த கீரீ ஆறு கிழக்கே திருப்பி விடப்படுமானால், அந்த கீரீ ஆறு திட்டத்தின் மூலம், வாசுதேவநல்லூர், சங்கரன்கோயில், ஓட்டப்பிடராம், விளாத்திக்குளம். கோயில்பட்டி ஆகிய பல்வேறு பகுதிகளில் உள்ள பல லட்சக்கணக்கான ஏக்கருக்கு பாசன வசதி ஏற்படுத்தலாம். அப்படிப்பட்ட திட்டமாக இருக்கும். அந்த திட்டம் பாசன வசதி அளிக்கும் திட்டமாக மட்டுமல்ல, அந்த திட்டத்தினால் நிலத்தடி நீர் அந்த பகுதியிலே பெருகும். சாதாரணமாக ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக் கணக்கான ரூபாய்களை விரையம் செய்கின்ற நிலைமைகள் தடுக்கப்பட்டு, அந்த நிலத்தடி நீர் மூலம் குடிநீர் வழங்குகின்ற நிலைமை ஏற்படும். ஒரு மாற்று நிலைமை உருவாகும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த கீரி ஆறு திட்டத்தை இந்த ஆண்டிலேயாவது வேளாண்மை பொறி யியல் துறை, பொதுப்பணித் துறை ஆகிய இரண்டு துறைகளும் கலந்து ஆய்வு செய்ய வேண்டும். இந்த திட்டம் கருவாகி, உருவாகி, திருவாகிவிடும் என்றால், தென் பாண்டி மண்டலத்திலே திருநெல்வேலி சீமை தமிழகத்தின் நெற்களஞ்சியமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சங்கரன் கோயிலில் ஒரு குடிநீர் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

பல ஆண்டுக்காலமாக சங்கரன்கோவில் பகுதியில் குடிநீர் வசதி யில்லாத நிலைமை இருக்கிறது. கேட்பதை எல்லாம் கொடுக் கின்ற காமதேனுவாக, கற்பக விருட்சமாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வாளியும் கயிறுமாக தாய்மார்கள் பட்ட கஷ்டத்தைப் பார்த்து அவர்களுக்காக குழாய் மூலம் குடிநீர் வழங்குகின்ற நல்ல பல திட்டங்களை அமுல்படுத்தியிருக்கிறார்கள். அந்த வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எங்கள் பகுதியான சங்கரன்கோயில் பகுதிக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து வழங்குகின்ற ஒரு நிரந்தர திட்டத்தை உருவாக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு 16 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, ஆகவே சங்கரன்கோயில் நகராட்சி பகுதிக்கு இந்த நிரந்தர குடிநீர் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மீண்டும் கேட்டு, வேளாண்மை மற்றும் குடிநீர் வழங்கல் பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.



(மாலை 5-20)

* திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் குடிநீர் வழங்கல் பற்றிய மானியங்களின் மீதும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும் ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பருவமழை தவறிய போதிலும் நிலைமையை சமாளித்து 57 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு அரசு உணவு உற்பத்தி செய்திருப்பதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் பாடுபட்டு உணவு உற்பத்தித் திறனை பெருக்கி யிருப்பதற்காக அவர்களையும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பாராட்டுகிறேன். இன்றையதினம் 19 விதைப் பண்ணைகளை செம்மைப்படுத்த இருப்பதையும், சொட்டு நீர் பாசன வசதி களை ஏற்படுத்த இருப்பதையும், 400 கசிவு நீர்க் குட்டைகளை கட்ட இருப்பதையும், சத்துணவு அளிக்கும் பிரிவு ஒன்றை ஏற்படுத்த இருப்பதையும் மற்றும் பல்வேறு சிறப்பான அம்சங் களை இந்த அறிக்கையிலே மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பதற் காக அவைகளை எல்லாம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனாலும் உணவு உற்பத்தியைப் பொறுத்தமட்டில் அரசு திட்டமிடுகிறபடி நடை முறைப்படுத்தப்படவில்லை என்பதுதான் என்னுடைய எண்ணம். குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் வேளாண்மைத் துறையின் குறிக்கோள்கள் தவறி விட்டன என்பதை நான் மிக வருத்தத்துடன் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழகம் உணவு உற்பத்தியில் இன்னும் ஒருவகையில் பற்றாக்குறை மாநிலமாகத் தான் இருக் கிறது. குறிப்பாக அரிசி உற்பத்தியை எடுத்துக்கொண்டாலும் கடந்த சில ஆண்டுகளாக அதன் உற்பத்தி குறைந்துகொண்டே வருகிறது. 1978-79ல் 64 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி இருந்தது. 1979-80ல் 62 லட்சம் மெட்ரிக் டன்னாக மாறியது 1983-84ல் அது 50 லட்சம் மெட்ரிக் டன்னுக்கு வந்தது. 1984-85ல் 56 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், 1986-87ல் 57 லட்சம் மெட்ரிக் டன்னாகவும் குறைந்துள்ளது. இதை நான் எதற்காக சொல்கிறேன் என்றால் சாதகமற்ற பருவ நிலை இருக்கும்போதுகூட 1975-76-ல் 53 லட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தியாகியிருக்கிறது அந்த கணக்கை வைத்துப் பார்க்கும் போது கடந்த 10 ஆண்டுகளாக அரிசி உற்பத்தியைப் பொறுத்த வரையில் இந்த வேளாண்மைத்துறை பின்நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களுக்கு அடுத்தபடியாக தமிழகம் இருக்கிற அளவிற்கு அரிசி உற்பத்தியில் பின்தங்கி விட்டது. ஆகவே நமது தேவைக்கு அதிகமான அளவில் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் இந்தத் துறை இனி மேலாவது கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

[திரு கே. அன்பழகன்] [1987 ஏப்ரல் 2

அடுத்து, வேளாண்மைத் துறைக்கு அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும் செலவிடுகின்ற தொகைக்கு ஏற்ப உற்பத்தியின் அளவு இல்லை என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படு கிறேன். 1967ல் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது இந்தத் துறைக்காக 11,05,12,600 ரூபாய் செலவு செய்தார்கள் அப்போது மொத்த உற்பத்தி 54 லட்சம் மெட்ரிக் டன். 1975-76—ல் 86,56,11,000 ரூபாய் இந்த வேளாண்மைத் துறைக்கு செலவிடப்பட்டிருக்கிறது. அப்போது மொத்த உற்பத்தி 90 லட்சம் மெட்ரிக் டன். ஆனால் 1986-87ல் ஏறக்குறைய 117 கோடி ரூபாய் செலவிட்டும் கூட நாம் 96 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியைதான் எட்டியிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். செலவைக் குறைத்து, உற்பத்தியை அதிகப்படுத்துகின்ற சாதனையை செய்யாவிட்டாலும் கூட பரவாயில்லை. ஆனால் செய்கின்ற செலவுக்காவது திட்டமிட்டு குறிக்கோளை எட்ட வேளாண்மைத் துறை பாடுபட வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல விவசாயிகளுக்குத் தரமான விதைகளைத் தர வேண்டுமென்று அன்றையதினம் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபொழுது 210 விதைப் பண்ணைகளை நிறுவியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அந்த விதைப் பண்ணைகள் 70 விதைப் பண்ணைகளாகக் குறைந்து இன்றையதினம் 43 அரசு விதைப் பண்ணைகள் மட்டுமேதான் உள்ளன. விவசாயிகளுக்கு ஆதார விதைகளை உற்பத்தி செய்து தருவதில் காங்கிரஸ் கட்சி தனிக் கவனம் செலுத்தியதோடு மட்டுமல்லாமல் அதில் இலாப நஷ்டக் கணக்கை பார்க்க வில்லை. ஆனால் இன்றைக்கு விவசாயிகளின் தேவைக்கேற்ப அரசுப் பண்ணைகளும் இல்லை. ஆதார விதையின் உற்பத்தியும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொண்டு, அதிக அளவிலே விதைப்பண்ணைகளை உருவாக்கு வதற்கு வேளாண்மைத்துறை முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

நிலக்கடலை உற்பத்தியைப் பெருக்கக்கூடிய அளவிற்கு ஆதார விதையும், சான்றிதழ் விதையும் கிடையாது. திண்டி வனம் 2, 7 ஆகியவற்றிற்கு சேலம் மாவட்டத்தில் ஆதார விதையே இல்லை. நிலக்கடலை சான்றிதழ் விதைக்காக விவசாயிகள் என்ற பெயரிலே வியாபாரிகளிடமிருந்து தரமற்ற விதைகள் கொள்முதல் செய்யப்படுவதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நிலக்கடலை போன்ற எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்ய விதைப் பண்ணை களை அரசு அதிகமாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, விதை உற்பத்திக்காக ஒரு கார்ப்பரேஷனை அரசு உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 2] [திரு கே. அன்பழகன்]

வெற்றிகரமான வேளாண்மைக்கு இடுபொருட்களை காலத்திலும், போதுமான அளவிலும் தர வேண்டுமென்பது அரசின் குறிக்கோள். ஆனால் பல இடங்களிலே அது உரிய முறையிலே அங்குள்ள அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்படு வதில்லை என்பது உண்மை. பல இடங்களிலே பூச்சி மருந்துகள் சரியான நேரத்தில் தரப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சூரிய காந்திக்கு அடிக்கும் நோவாக்கிரான் மருந்து விவசாயக் கிடங்கிற்கு மார்ச் மாதம் தான் சப்ளை செய்யப்படுகிறது. நவம்பர், டிசம்பர் மாதங் களிலேயே சூரியகாந்தியினுடைய விளைச்சல் முடிந்து விடுகிறது. மார்ச் மாதம் சப்ளை செய்வதால் எந்தவிதமான பயனும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

அதுமட்டுமல்ல, சூரிய காந்தி விளைச்சலே இல்லாத பகுதி களுக்கு அந்த நோவாக்கிரான் மருந்தை வேளாண்மைத் துறை அனுப்பியிருக்கிறது. ஆகவே, எந்தப் பகுதிக்கு, எந்தப் பயிர் களுக்கு, எந்த மருந்து தேவையோ அதை உரிய காலத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னங்கன்றுகளைக் கொடுப்பதிலேகூட இந்த மார்ச் மாதத்திலே, வறட்சி மிகுந்த இந்த நேரத்திலே கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி வறட்சி மிகுந்த காலத்திலே கொடுக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டக் கலைத் துறையைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்றால் விவசாயிகளுக்கும் இந்தத் தோட்டக் கலைத் துறைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருப்பதாகத் தெரிய வில்லை. முன்பெல்லாம் விவசாயக் கிடங்குகளிலே விவசாயி களுக்கு வேண்டிய பழக்கன்றுகள், காய்கறி விதைகளையெல் லாம் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இன்றையதினம் அப் படிப்பட்ட நிலைமைகள் இல்லை. ஆகவே மீண்டும் வேளாண் கிடங்குகளிலே விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பழக் கன்று களையும், காய்கறி விதைகளையும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றையதினம் ஏற்காடு மலையிலே இருக்கக்கூடிய தோட்டக் கலைத் துறை பண்ணைக்கு கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய சாதாரண விவசாயி சென்று அங்கே இரண்டு, மூன்று பழக்கன்றுகளைப் பெற முடியுமா? ஆகவே, அத்தகைய வசதிகளை அந்தந்தப் பகுதியிலே, அந்தந்த ஒன்றியத்திலே கொடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

தனியார் நர்சரி இன்றையதினம் பழச் செடிகள், காய் கறிகள் ஆகியவைகளை விற்பனை செய்வதில் முன்னணியில் இருப்பதோடு, கொள்ளை இலாபம் அடிப்பதற்கு இந்தத் தோட்டக் கலைத்துறை உதவியாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. அன்பழகன்] [1987 ஏப்ரல் 2

குடிநீர் வடிகால் வாரியத்தைப்பற்றிக் குறிப்பிட வேண்டு மென்றால், இன்றையதினம் அரசிலே இருக்கின்ற பல்வேறு வாரியங்களிலே குடிநீர் வடிகால்வாரியம் மிகச் செம்மையாக கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களின் நல் வாழ்வுக்காக, நலனுக்காகப் பாடுபட்டு வருகிறது. அத்தகைய வாரியத்தை நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1987-88 ஆம் ஆண்டுக்கு 4,200 குடியிருப்புகளுக்கு ரூபாய் 47 கோடியை ஒதுக்கீடு செய்திருப்பதை வரவேற்கிறோம். ஆனால் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் இந்தத் தொகை போதுமானதாக இல்லை என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

கொள்கைக் குறிப்பைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு கொள்கைக் குறிப்பிலே மத்திய அரசு ஒதுக்கக்கூடிய விரைவு படுத்தப்பட்ட ஊரக குடிநீர்த் திட்டம், அடிப்படைத் தேவைகள் திட்டம் ஆகியவற்றிற்கு ஒதுக்கிய மானிய தொகை விவரம் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலே மத்திய அரசு கொடுத்த மானியத் தொகை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித் துக்கொள்கிறேன்.

(மாலை 5-30)

குடிநீர்ப் பிரச்சினையில் குடியிருப்புகள் அதிகரித்துக்கொண்டே போய்க்கொண்டிருக்கின்றன. கடும் வறட்சியில், மேலும் அதி கரித்துள்ளது. ஆனால் குடிநீர் வடிகால் வாரியம் கொடுத்துள்ள புள்ளிவிவரம் தவறானவை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1-4-85ல் குடிநீர் அளிக்கப்பட வேண்டிய குடியிருப்புகள் 13,022 என்று குறிப்பிட்டிருக்கிறார் கள். அதிலே 1985-86ல் குடிநீர் வசதி செய்யப்பட்ட குடி யிருப்புகள் 2,834. 1986-87ல் பிப்ரவரி வரை குடிநீர் வசதி செய்யப்பட்ட குடியிருப்புகள் 3,479. ஆக இதுவரை 6,313 குடியிருப்புகளுக்கு இன்றையதினம் வசதி செய்யப்பட்டிருப்ப தாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அரசு 8,628 ஆழ்த் துளைக் குழாய்க் கிணறுகளை அமைக்க உள்ளது. சேலம் மாவட்டத்தில் மட்டும் 3,000க்கும் மேற்பட்ட பிரச்னைக்குரிய குடியிருப்புகள் இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இன்னும் அதிகமான அளவில் ஆழ்குழாய்க் கிணறுகளை ஒதுக்கீடு செய்து இந்தக் கடுமை யான வறட்சியைச் சமாளிக்க அரசு முன் வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். ஓமலூர் ஒன்றி யத்தில் இருக்கக்கூடிய டால்மியா மெக்னைசட்டில் உள்ள நீரினை கருப்பூர், ஓமலூர் பேரூராட்சிகளுக்குத் தண்ணீர் வழங்கக்கூடிய திட்டத்தை அரசு விரைவாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல் தொப்பையாறு நீர்த் தேக்கத்திலிருந்து காடயாம்பட்டி ஒன்றி



1987 ஏப்ரல் 2] [திரு. கே. அன்பழகன்]

யத்திலுள்ள 12 ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை அரசு நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கி றேன், ஓமலூர் காடயாம்பட்டி ஒன்றியங்கள் கடும் வறட்சி யினால் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 75 ஆழ்க்குழாய் கிணறுகளை அரசு அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் பழவகைகளைக் கொண்டு வேளாண் தொழில் கழகத்தின் மூலமாக காடயாம்பட்டியில் ஒரு பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

டாக்டர் தே. குமாரதாஸ் : மாற்றுத்தலைவர் அவர்களே, வேளாண்மை குடிநீர் டிமாண்டுகள் மேல் பேசுவதற்கான ஒரு வாய்ப்பைத் தந்ததற்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வறட்சி நிவாரண பணியின் கீழ் இன்றையதினம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சியைச் சமாளிக்க அரசு நல்ல பல திட்டங்களை மேற்கொண்டாலும் கூட, சரியான நேரத்தில், சரியான சந்தர்ப்பத்தில் அதனுடைய பலன் கிடைக்க வேண்டியவர்களுக்குக் கிடைக்கின்றதா என்றால் இல்லை என்ற குறை ஏற்படுகிறது. இந்த அதிகாரிகள் உணர்ந்து அந்தக் குறைகளை எல்லாம் நிவர்த்திக்கும் முறையில் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வேளாண் துறையைப் பொறுத்த வரைக்கும், தமிழகத்திற்கு பூராவும் அந்தத் துறை இருந்தாலும் கூட, குறிப்பாக எங்களுடைய பகுதியில் உள்ள குளங்கள், ஏரிகள் எல்லாம் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் நீர்த் தேக்கம் இல்லாத நிலை ஏற்பட்டு வறட்சியினால் எங்கள் குமரி மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது. முன்பு இருந்தது போல் நீர்த்தேக்க வசதி இருந்திருந்தால் எங்களுடைய மாவட்டத்தில் வறட்சி நிலைமையைத் தடுத்திருக்க முடியும். ஆகவே, நான் அரசுக்கு வேண்டுகோளாக சொல்லிக்கொள்வது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எந்த எந்தப் பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றனவோ, அந்த ஆக்கிரமிப்புகள் நடைபெறுவது தெரிந்தவுடனே, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு அல்லாமல், ஆக்கிரமிப்பு செய்கிறவர்களுக்கு உடனே நோட்டீஸ் கொடுத்து, அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபடவேண்டும், இல்லை யெனில் அவர்கள் சட்டத்தைக் காட்டி நீதிமன்றத்திற்குச் சென்று தடைகள் வாங்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கொடுத்தால், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதோடு அல்லாமல், அந்தக் குளங்களிலும், ஏரிகளிலும் நீர்த்தேக்கம் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளாவிலிருந்து 150 கன அடி தண்ணீர் தமிழகத்தில் நெய்யாறு இடதுகரை கால்வாய்க்குத் தரவேண்டும் என்று ஒரு ஒப்பந்தம் உண்டு. ஆனால் காவிரியிலிருந்து மாத்திரம் தஞ்சை மாவட்டத்திற்குத் தண்ணீர் வரவேண்டும், தட்டுப்பாடு வருகிற நேரத்தில் ஓடிச்சென்று அமைச்சர் பெருமக்கள் அங்கே அந்த மாவட்டத்திற்குத் தண்ணீர் கொடுக்கிறார்கள், கொடுக்க வேண்டும். அவர்களும் தரவேண்டும். அதேபோல் இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் கேரளாவிலிருந்து குமரி மாவட்டத்திற்கு 150 கன அடி தண்ணீர் தரவேண்டும் என்று சொன்னால், அந்தத் தண்ணீரைப் பெற இதுவரைக்கும் அங்கே போய்ப் பார்த்ததாகத் தெரியாது, கேட்கவும் இல்லை. அங்கே 150 கனஅடி தண்ணீர் தந்தாலும் கூட, அந்தத் தண்ணீர் சானலுக்குப் போக வாய்ப்பு வசதி இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே இந்த நிலையில் அங்கே ஒரு நீர்த் தேக்கத்திற்கான வசதியைச் செய்துகொடுத்தால், தண்ணீர் கிடைக்கும் காலத்தில் அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொண்டு குறிப்பிட்ட காலத்தில் அதைப் பயன்படுத்த முடியும். ஆகவே அந்த நிலையில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

அது மாத்திரமல்ல, குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கு லட்சக்கணக்கான தென்னை மரங்கள், ரப்பர் மரங்கள் பட்டுப்போயிருக்கிற காரணத்தால் அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் என்பதற்குப் பதிலாக நஷ்டஈடு கொடுத்து அவர்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே ஆழ்குழாய்க் கிணறுகள் போட்டிருக்கிறார்கள். ஆழ்குழாய்க் கிணறுகள் போடுவது கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பயனுடையதாக இருக்காது. காரணம் என்னவென்றால் மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்டிருப்பதால், ஈரத்தன்மை நிறைந்த உப்புக் காற்று வீசுவதால் போடுகின்ற அடி பைப்புகள் போர்வெல்ஸ் எல்லாம் 6 மாதம், 9 மாதத்திற்குள் கெட்டு விடுகின்றன. ஒரு போர்வெல் போடுவதற்கு 30,000 ரூபாய் 35,000 ரூபாய் ஆகிறது என்றால் திறந்தவெளி கிணறு வெட்டுவதற்கு 50,000 அல்லது 60,000 ரூபாய் ஆகும். ஆழ்குழாய் கிணறுகள் போட்டால் சுமார் 9 மாதத்திற்குள் கெட்டுவிடுகின்ற சூழ்நிலை இருப்பதால் திறந்தவெளிக் கிணறுகளை அமைத்துக் கொடுத்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும். ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் புதிதாக அமைக்கின்ற கிணறுகளை திறந்தவெளிக் கிணறுகளாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அது மட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் கருங்கல் பகுதியில் ஒரு குடம் தண்ணீர் இரண்டு ரூபாய்க்கு விற்கிறது. இதை நான் 'எக்ஸாஜரேட்' பண்ணிச் சொல்லவில்லை. அந்த அளவுக்கு கடுமையான வறட்சியாக இருக்கிறது. அந்தப் பகுதிக்கு குடிநீர்த் திட்டம் வேண்டுமென்று கேட்டபோது ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த நீங்கள் பெருந்தன்மையோடு 4.5 கோடி ரூபாய்க்கான ஒரு கூட்டு குடிநீர்த் திட்டத்தைத் தந்திருக்கிறீர்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். அதை விரைவிலே செயல்படுத்தித் தரவேண்டுமென்று அல்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இப்போது கூட வறட்சியின் காரணமாக 33 போர்வெல்ஸ் போட்டிருக்கிறார்கள். அந்த 33-ல் 18 போர்வெல்ஸ் 'ஃபெயில்யூர்' ஆகியிருக்கிறது. அவ்வளவு தூரம் அங்கே வறட்சி பாதித்திருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலைகளால் அங்கே குடிநீர் பிரச்சினையைச் சமாளிக்க லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க வேண்டுமென்று கேட்டோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதற்கு ஏற்பாடு செய்து லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் அது போதுமானதாக இல்லை. ஆகவே, இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை அணையில் இப்போது ஐந்து அடி தண்ணீர் இருக்கிறது. அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமாக இருந்தாலும் குடிநீர்ப் பிரச்சனையைக் கருத்திற்கொண்டு அந்த அணையில் இருக்கிற தண்ணீரை தற்சமயம் திறந்துவிட்டால் கன்னியாகுமரி மாவட்டத்தில் 50 சதவீத மக்களின் குடிநீர் பிரச்சனை மழை வரும் வரையில் இல்லாமல் இருக்கும். நாங்கள் விவசாயத்திற்காக அந்தத் தண்ணீரைக் கேட்கவில்லை; குடிநீருக்காகக் கேட்கிறோம். அதை கருத்திற்கொண்டு அணையில் இருக்கிற தண்ணீரைத் திறந்துவிட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அது மட்டுமல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் . நிரந்தரமாக குடிநீர்ப் பஞ்சம் ஏற்படாமல் இருக்க நீங்கள் மாம்பழத்துறை அணைத் திட்டம், பரலியாறு அணைத் திட்டம், உலக்கருவி அணைத் திட்டம், பள்ளக்கோட்டை அணைத் திட்டம்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 ஏப்ரல் 2

ஆகிய திட்டங்களை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டங்களை நிறைவேற்றினால் அவை விவசாயத்திற்குப் பயன்படும் என்று நான் சொல்லவரவில்லை. மாறாக அந்தந்தப் பகுதியிலுள்ள குடிநீர்ப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்னொன்றையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 20 கோடி ரூபாய்க்கான செருப்பு வழங்குகிற திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அதைவிட முக்கிய மான குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மொத்தமாக 20 கோடி ரூபாய் செலவிட்டால், உங்கள் பெயரைச் சொல்லி, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற 20 இலட்சம் மக்களும் குடிநீர் வசதி பெறுவார்கள்; அவர்கள் நல்ல குடிநீர் குடிக்க முடியும். ஆகவே, அந்தப் பணத்தை இதற்கு 'டைவர்ட் பண்ண வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருமளவில் ஏற்பட்டிருக்கிற குடிநீர் பஞ்சத்தைப் பற்றி எனக்குப் பின்னாலே பேசவிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதியைப்பற்றிச் சொல்வார்கள், என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட மங்காடு வாவறை, கூட்டுத்துறைத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு எஸ்டிமேட் எல்லாம் போட்டு பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் திட்டம் வரவில்லை. அந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று பைங்குளம் பகுதியில் 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட்டு, அதற்கு எஸ்டிமேட் போட்டு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. மேலும் காலதாமதம் ஏற்படாமல் விரைவிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் குறிப்பாக நான் சொல்லுகின்ற பகுதிகள் எல்லாம் போர்வெல்ஸ் போட்டும், கிணறுகள் அடித்தும் தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கிறது. முள்ளங்காவிளை, தாளக்கா விளை, செங்குளம், பம்மம், விளியோடு, இனையம்புத்தன்துறை, குறும்பனை, மிடாலம், தேங்காப்பட்டினம், முள்ளூர்துறை போன்ற ஊர்கள் எல்லாம் பெரும்பாலும் கடற்கரை ஓரமாக இருக்கின்ற பகுதிகள். அங்கே தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள்; தண்ணீருக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள் அந்த ஊர் மக்களுக்கு தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 ஏப்ரல் 2

அதைப்போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட கருங்கல் மலைப் பகுதியில் ஒரு பழ ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. அங்கே 10,15 ஆண்டுகளுக்கு முன்னால் பழ ஆராய்ச்சிப் பண்ணை என்று போட்ட ஒரு போர்டு மட்டும் இப்போது தொங்கிக்கொண்டிருக் கிறது. 15 ஆண்டுகளுக்கு முன்னால் நடப்பட்ட சில மரங்களும் நிற்கின்றன; வேறு ஒன்றும் இல்லை. அங்கே யாரும் வருவது மில்லை; பழத்தையும் காணவில்லை. அந்தப் பழ ஆராய்ச்சிப் பண்ணை என்னவாயிற்று என்பதைக் கண்டுபிடித்து, மீண்டும் அங்கே பழ ஆராய்ச்சிப் பண்ணையை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-40)

அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் 47 பேர் விவசாயத் திற்காக மின் இணைப்பு கேட்டு மனு கொடுத்திருக்கிறார்கள் என்றால் ஓராண்டுக் காலமாகியும் 4 பேருக்குத்தான் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், இந்த அளவுக்கு மின்சார வாரியம் அவர்களுக்கு மின்னிணைப்பு கொடுத்தால் விவசாயம் எப்படி பண்ண முடியும் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். எனவே இவைகளை எல்லாம் விவசாய அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு மின்சார வாரிய அமைச்சரிடம் இந்தக் கருத்தைச் சொல்லி விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுத்து மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற வறட்சி காரணமாக அங்கேயுள்ள ஏழை எளிய மக்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். மற்ற பகுதிகளில் எல்லாம் 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகள் இருக்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில் 50 செண்ட், அல்லது ஒரு ஏக்கர் என்ற அளவுக்குத்தான் நிலம் வைத்திருக்கின்ற ஏழை விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அனைவரும் இப்போது வறட்சி காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எல்லாம் தூர்ந்துபோய் இருக்கின்ற சூழ்நிலை இருப்பதால் அனைத்து வரிகளையும் ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். கர்நாடக மாநிலத்தில் இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் ஒரு திட்டத்தை [illegible] கிறார்கள். அதை நீங்களும் நடைமுறைப்படுத்த [illegible] இருக்கும் என்றால் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வறட்சியினால் பாதிக்கப் பட்டிருக்கின்ற பகுதிகளில் ஒரு ஜோடி மாட்டுக்கு 100 கிலோ வைக்கோல் இனாமாக ஒரு மாதத்திற்குக் கொடுக்கின்ற [illegible]

V811/31/87-36-2 13651

திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறார்கள். அதைப்போல் இங்கே நீங்களும் கொடுத்தால் கன்று காலிகளை காப்பாற்ற வாய்ப்பு ஏற்படும். வறட்சியினால் பாதிப்பு ஏற்படுகிறபோது மனிதர்களைக் காப்பாற்றுவது போல் கால்நடைகளைக் காப்பாற்றுவதற்கும் உரிய முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு பயமாக இருக்கிறது. அடிக்கடி துணைத்தலைவர் அவர்கள் மணியை அடிப்பதற்காக கையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 10 பேர் பேச வேண்டியிருக்கிறதே என்று எனக்கும் பயமாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு)

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நல்ல திட்டத்தை கர்நாடக அரசு எடுத்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதை நீங்களும் கவனத்தில் கொண்டு, அந்த நல்ல திட்டத்தை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வேளாண்மைக்காகவும், குடிநீர் வழங்குவதற்காகவும் கிட்டத்தட்ட 300 கோடிக்கும் அதிகமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இன்றைக்கு கேட்டிருக்கின்ற சூழ்நிலையில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பை அளித்த எங்களுடைய ஆளும் கட்சி கொறடா அவர்களுக்கும் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி என்னுடைய வார்த்தையை நான் துவக்குகிறேன்.

இன்றைக்கு நம்முடைய முதுகெலும்பாக கருதப்படுவது விவசாயம். அந்த விவசாயம் இன்றைக்கு எப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர், புரட்சித்தலைவர் அவர்கள் சிறு விவசாயிகள் என்று பிரித்து அந்த விவசாயிகளுக்கு மின்சாரத்தை இனாமாகவும், மற்றவர்களைப் பொறுத்தவரையில் ஒரு குதிரை ஒட்டத்திற்கு 75 ரூபாய் என்ற அளவுக்கும் வழங்குகிற உத்தரவை இட்டிருந்தாலும் அதைச் செயல்படுத்துகிற அதிகாரிகள் அந்த ஏழை விவசாயிகளுக்குரிய அட்டையை வைத்து அவர்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல் விவசாயத்திற்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களான உழவுக்கலப்பை, மரக்கலப்பை ஆகியவை விவசாயக் கிடங்குகளிலும், அக்ரோ மையங்களிலும் குறைந்த [illegible] விலையில் கிடைக்க ஆவன செய்யவேண்டும். இன்றைக்கு அந்த





பொருட்கள் எல்லாம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அக்ரோ சென்டருக்கு அவை வந்தால் கூட வசதி படைத்தவர்கள் சிறு விவசாயிகள் என்ற பெயரைச் சொல்லி அந்தப் பொருட்களை பெற்றுக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். அதிலே அரசு கறாராக இருந்து கண்காணிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்கிறேன். அதுமட்டுமல்லாமல் விவசாயத்திற்குத் தேவையான தரமான விதைகளை விதைப்பண்ணை கொடுக்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும் என்பதை வருத்தத்தோடு நான் கூறுகிறேன். காரணம் இயந்திரங்களால் தயாரிக்கப்பட்ட விதைகளை வழங்குகிற காரணத்தால் 40 சதவீதம், 50 சதவீதம் அளவுக்குக்கூட அந்த விதைகள் நல்ல முறையில் செயலுக்கு வரவில்லை. ஆனால் தனியார் நிறுவனங்களான பாரி, ராலிஸ் போன்ற இப்படிப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெறப்படுகிற விதைகள் கிட்டத்தட்ட நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் அங்கு நன்கு பயன்படுகிறது. இதை எல்லாம் அங்கே பணியாற்றுகிற அதிகாரிகள், அவர்கள் எல்லாம் விவசாயிகளுடைய பிள்ளைகள் என்பதை உணர்ந்து, விவசாயத்திற்காக தமிழக முதல்வர் அவர்கள் செலவு செய்கிற அந்தப் பணங்கள் கறாராக அவர்களுக்குச் சென்று சேர உறுதுணையாக இருக்கவேண்டும்.

விவசாயத்திற்கு வங்கிகளில் கடன் வழங்கப்படுகிறது. முதல் போகத்திற்குப் பெற்ற கடனை பைசல் செய்தவுடன் அடுத்த பயிருக்கான உதவிகளைச் செய்யவேண்டும். அதாவது கடனை பைசல் செய்த 10 நாட்களுக்குள்ளாக கண்டிப்பாக உரத்தையும் மற்றவற்றையும் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் விவசாயிகளுக்கு நாம் கொடுக்கின்ற கடனை வங்கியின் மூலமாக தொகையாக கொடுக்க வேண்டும். காரணம் அப்போதுதான் அவர்கள் தங்களுக்குத் தேவையான தரமான விதைகளை வெளியிலே வாங்கமுடியும். அப்போதுதான் அரசு எந்த குறிக்கோளுக்காக அந்த விதைகளைக் கொடுக்கிறதோ அது முழுமையாக நிறைவேற ஏதுவாக முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான காஞ்சிபுரத்திலே நெல், மணிலா போன்ற உணவுப் பொருள்கள் ஏராளமாக வருகிறது. அங்கே ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு என்று அலுவலகம் இருக்கிறது. ஆனால் அந்த விற்பனைக் கூடம் ஒழுங்காக செயல்பட முடியாத நிலையில் இருக்கிறது. அங்கே பணியாற்றுகிற அலுவலர்கள் தனிப்பட்ட வியாபாரிகளிடத்தில் நெல்லை வாங்கி விற்பனை செய்கிற கமிஷன் வியாபாரிகளிடத்திலிருந்து விற்பனை கூடத்திற்கு நெல் வந்ததாகவும், அங்கே இருக்கிற ஒரு மூட்டைக்கு 2 அல்லது ஒரு ரூபாய் என்று பெற்றதாகவும் கணக்கில் எழுதி அரசுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் கொண்டு வரும் பொருள்களுக்கு அங்கே இடம் இல்லை. அவர்கள் கொண்டு வரும்போது விலை குறைவாக இருக்குமானால் [illegible]

தினங்களுக்கு வைத்திருந்து நல்ல விலை வரும் போது விற்க
வேண்டிய வசதி அவர்களுக்கு கிடைக்கவில்லை. எனக்குத்
தெரிந்த வரையில் இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடம்
தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனத்தில் மிகச் சிறப்பாக
நடைபெறுகிறது. ஆகவே அதற்கு பணத்தை ஒதுக்கியிருக்
கிறார்கள். இடத்தை வாங்கியிருக்கிறார்கள்.
கட்டிடத்தைக் கட்ட அரசு முன்வராமல் இருக்கிறது. ஆனால்
அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே செய்து தர ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தாலுக்காவில் ஏராளமான விவசாயிகள்
கரும்பு பயிரிடுகிறார்கள். அந்தக் கரும்பை விவசாயிகள்
திருத்தணி சர்க்கரை ஆலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.
கரும்பைக் கொண்டு செல்ல ஏற்படும் செலவு அரைக்கின்ற
விலையை விட கூடுதலாக இருப்பதால் நட்டம் அடைகிறார்கள்.
வெட்டுவதற்கு ஒரு வார காலம் வெட்டியதற்கு பின்னாலே 10
தினங்கள் கரும்பு அங்கே இருக்கின்ற காரணத்தால் காய்ந்து
போய் அதுவும் விவசாயிகளுக்கு நட்டத்தை ஏற்படுத்துகிறது.
ஆகவே தொழில் வளம் இல்லாத என்னுடைய காஞ்சிபுரத்தில்
ஒரு கரும்பு ஆலையை உருவாக்கித்தர வேண்டும். காரணம் என்
தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. நெசவாளர்களும் விவசாயி
களும் ஏராளமாக இருக்கும் தொகுதி. கரும்பாலை ஒன்று
துவக்கப்படுமானால் என்னுடைய பகுதியிலே கூட்டுறவுமுறையிலே
பயிற்சி பெற்ற ஏராளமான மாணவர்களுக்கு ஒரு வேலை வாய்ப்
பாகவும் அமையும்.

அதற்கடுத்து மிகப் பெரிய பிரச்னை இன்றைக்கு குடிதண்ணீர்
பிரச்சினை. இன்றைக்கு குடிதண்ணீர் பிரச்சினையைப் பற்றி
பேசாத சட்டமன்ற உறுப்பினர்களே இல்லை என்று கூறலாம்.
என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 10 கிராமங்களுக்கு
மேலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டியாகிவிட்டது.
ஆனால் 63 எம்.எம்.பி.வி.சி. பைப் இல்லாத காரணத்தால்
ஒட்டு மொத்தமாக அங்கே பைப் லைன் போட முடியவில்லை.
தண்ணீர் இருக்கிறது. மேல்நிலைத் தொட்டியிலே ஏற்றப்பட்டிருக்
கிறது. ஆனால் மக்களுக்கு வழங்கப்பட முடியவில்லை.
இதற்காகத்தான் இன்றைக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களும் சரி,
எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சரி குடிநீர் வடிகால் வாரியத்தில்
தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற
வேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் அதிகாரிகள் மீது
குற்றம் சாட்டவில்லை. அவர்களால் ஆகாது என்று சொல்ல
வில்லை. அவர்களுக்குச் சில சங்கடங்கள் இருக்கின்றன.
குறைந்த விலையில் யார் கொடுக்கிறார்களோ அவர்களிடமிருந்து
தான் வாங்க வேண்டும் என்ற சட்டம் இருக்கிற காரணத்தால்
இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படுகிறது. நாம் பல நூறு கோடி
ரூபாய்களை குடிதண்ணீருக்காக ஒதுக்கிவருகிறோம். அதனாலே
இப்படிப்பட்ட பைப்புகளை தொகை கொஞ்சம் கூடினால் கூட
பரவாயில்லை, அந்த பைப்புகளை எல்லாம் வாங்கி, இந்த வேலை
களை செம்மையாகச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.



நான் கடந்த ஒரு மாத காலமாக என்னுடைய தொகுதியிலே
இருக்கும் 200 கிராமங்களுக்குச் சென்றேன். அங்கெல்லாம் கை
பம்புகள் இருக்கின்றன என்றாலும் அவைகள் எல்லாம்
பழுதடைந்து இருக்கின்ற காரணத்தால் தண்ணீர் பஞ்சம். மொத்த
மாக கிட்டத்தட்ட 600 கிராமங்களுக்கு கை பம்புகளே போட
வில்லை என்று சொன்னால் வறட்சியின் காரணமாக மக்கள்
வெளியிலே செல்லுகின்ற நிலைமை இருக்கிறது. இங்கே பேசிய
நண்பர்கள் எல்லாம் வறட்சியின் கொடுமை பற்றி தெளிவாகச்
சொன்னார்கள். ஒன்றை நான் தெளிவாக எடுத்துச் சொல்லியாக
வேண்டும். புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயி என்ற படத்தில்
நடிக்கிற நேரத்தில்,

என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்

என்று பாடியவர்தான் இன்றைக்கு முதல்வராக இருக்கின்றார்.

(மாலை 5-50)

பல நூறு கோடி ரூபாய்களை குடிதண்ணீருக்காகவும், விவசாயத்
திற்காகவும் ஒதுக்குகிறோம். என்னுடைய மாவட்டத்தில்
அணைக்கட்டுகள் கிடையாது. ஏரிகள் இருக்கின்றன. ஆனால்
அந்த ஏரிகளில் தண்ணீர் பிடித்து வைக்கிற அளவிற்கு இடமில்லை.
ஏரிகளை ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள்.
பாலாறு என்னும் ஆறு என்னுடைய தொகுதியில் ஓடுகிறது.
அதில் நீங்கள் அணையைக் கட்டவில்லையென்றாலும் மூன்று அடி
அளவிற்கு தடுப்புச் சுவரை கட்டி தண்ணீர் நிற்கிற நிலைமையை
உருவாக்கினால், ஈரப்பசை உருவாகும். அதன்மூலம் மழைக்
காலங்களில் கிடைக்கிற தண்ணீரை தேக்கி வைக்க முடியும்.
அதன்மூலம் நிலத்தடி நீரும் போதுமான அளவிற்கு கிடைக்கும்.
வறட்சி போன்ற காலங்களில் அந்தத் தண்ணீரை பூமிக்கு மேலே
கொண்டு வந்து பயன்படுத்திக்கொள்ள முடியும். மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் படித்து வல்லமை பெற்ற
அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, தடுப்புச் சுவரைக் கட்டு
வதற்கும், தரையில் ஈரப்பசை ஏற்பட்டு நிலத்தடி நீர்
கிடைப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு உலகம் ஏற்பட்ட
காலத்திலிருந்து நிலம் அப்படியேதான் இருக்கிறது. ஆனால்
மக்கள் தொகை இன்றைக்கு மிகப் பெரிய அளவிற்கு பெருகி
இருக்கிறது. மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப நாம்
விவசாயத்தை விரிவு செய்ய வேண்டும். அந்த அளவிற்கு
உற்பத்தி நமக்கு கூடுதலாக வரவேண்டும். அந்த அளவிற்கு
செய்வதற்கு நிலத்தில் ஈரப்பசையை உருவாக்குகிற அளவிற்கு
மண்ணின் தன்மையை உரிய அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து
மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அனைத்து விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு தேவைப் படுகிற டீசல் எண்ணெயை விலை குறைப்பு செய்தோ அல்லது மானிய விலையில் கொடுப்பதற்கோ அரசு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். என்னுடைய காஞ்சிபுரம் தொகுதியில் ஓராண்டிற்கு முன்னாலே அப்போது அமைச்சராக இருந்த மாண்புமிகு ஆனூரார் அவர்களும், குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் திரு. உக்கம் சந்த் அவர்களும் குடிதண்ணீர் பிரச்சினையைப் போக்குவதற்கு ஒரு மாவட்டக் கூட்டத்தைக் கூட்டினார்கள். நான்கு கோடியே நாற்பது லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் நகரத்திற்கு தண்ணீர் கொடுக்க உலக வங்கியினுடைய உதவி யோடு ஒரு திட்டம் தீட்டப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அத்திட்டம் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வுத் தொகை மூன்று லட்சம் ரூபாய் கட்டப்பட்டுள்ளது. ஓராண்டிற்கு முன்னாலே திரு. உக்கம் சந்த் அவர்கள் 15 தினங்களில் திட்டத்தைத் துவக்குகிறேன் என்று கூறினார்கள். ஆனால் இந்தத் திட்டம் இது வரையிலும் துவக்கப்படவில்லை. இந்தத் திட்டம் துவக்கப்பட் டிருந்தால் இன்றைக்கு காஞ்சிபுரத்தில் குடிதண்ணீர் பிரச்சினை தீர்ந்திருக்கும். வாரியத்தின் நிர்வாகக் குழுவில் நான் ஒருவன் தான் மக்கள் பிரதிநிதி, மற்றவர்கள் எல்லாம் அரசாங்க அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். படித்தவர்கள், பொறியியல் பட்டம் பெற்றவர்கள், அவர்கள் காலதாமதம் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எங்களுக்கு பதில் தேவையில்லை. தண்ணீர் தான் தேவை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டு தோறும் குடிதண்ணீருக்காக நூற்று சொச்சம் கோடி அளவிற்கு ஒதுக்குகிறார்கள். அப்படி ஒதுக்குகிற தொகையை ஏன் செலவு செய்ய மறுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு புதிய திட்டங்களைத் அவைக்காவிட்டாலும், இருக்கிற திட்டங்களை நல்லமுறையில் பராமரித்தாலே குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நாம் தீர்க்க முடியும். ஆழ்துளை கிணறுகளில்கைப்பம்புகளைப் போடுகிறார்கள். 150 அடி பைப் என்று சொல்கிறார்கள். ஆனால் 80 அடி பைப்பைதான் போடுகிறார்கள். அப்படி குறைத்து போடுகிற காரணத்தால் வறட்சி ஏற்படுகிற நேரங்களில் தண்ணீர் கிடைப்ப இல்லை. இதையெல்லாம் கண்காணிப்பதற்கு சட்டமன்ற உறுப் பினர்கள் தலைமையில் ஒரு குழுவை வைத்து, அப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிற ஒப்பந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஐந்து நிமிடம் ஆனவுடன் மணியடித்து விடு கிறார்கள். ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன்.



தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு விவசாயக்கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி தஞ்சை மாவட்டத்திற்கு விவசாயக் கல்லூரி அமைக்கப்படு மானால், அந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு அது நன்மையை பயக்கும் என்று இந்த நேரத்திலே கூறி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிநீர் வழங்குதல் மற்றும் வேளாண்மை குறித்த மானியக்கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று அன்றைக்கு வள்ளலார் பாடினார்கள். ஆனால் இன்றைக்கு எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிர்கள் வாடியதோடு மட்டும் போகவில்லை, பாசன நீரின்றி கருகிப் போய்விட்டன. அந்தக் காட்சியைக் கண்டு, அங்கே பயிர் செய்கிற விவசாயிகள் எல்லாம் கண்ணீர் விட்டுக் கொண்டிருக் கிறபோது, அங்கே விவசாயிகள் கண்ணீர் மழை பெய்கிறபோது, இங்கே விவசாய மானியக் கோரிக்கையைப் பற்றி நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல் எங்களுடைய மாவட்டத்தில் உள்ளவர்கள் குளிக்க எங்களுக்கு நீங்கள் நீர் தரவேண்டாம், ஆனால் குடிப்பதற்கு ஒரு குவளை நீர் தாருங்கள் என்று கேட்டு, தாய்மார்களும், சகோதரிகளும், பெரியவர்களும், காலையிலிருந்து மாலை வரை கிணற்றடியிலும், கையிறைப்பான்கள் இருக்கிற இடங்களிலும் நின்று கொண்டு, எழுப்புகிற கூக்குரல் அங்கே கேட்டுக்கொண் டிருக்கிறபோது, இங்கே நாம் குடிநீர் வழங்குதல் பற்றி விவாதம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவேதான் தூக்கம் வருகிற இந்த நேரத்தில், தூக்கத்தை மறந்து துக்கத்தோடு துக்கம் கலந்த துயரத்தோடு நான் இங்கே நின்று கொண்டிருக்கிறேன். இதைச் சொல்கிறபோது, வறட்சிப் பணிகளை நம்முடைய அரசாங்கம் மிகச் சீராக, சிறப்பாக செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்லவில்லை. மிகச் சீரான பணிகள் சிறப்பாக செய்யப் பட்டிருக்கின்றன. அதில் கருத்து வேறுபாடு இல்லை. பாராட்டை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் இந்த நிவாரணப் பணிகளை எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்ற அந்த அடிப்படையைப் புரிந்து கொள்ளாமல், இங்கேயிருக்கிற அதிகாரிகள், இங்கேயிருக்கிற நிலைமைதான் அங்கேயும் இருக்கிறது என்று கருதிக்கொண்டு, சில பணிகளைச் செய்கிற காரணத்தால், எங்களுக்கு நிவாரணப் பணிகள் போது மான பணிகளாக அல்லது நாங்கள் நினைக்கிற பயனைத் தருகிற பணிகளாக இன்றைக்கு அவைகள் இல்லை. இந்த

வேளாண்மைத் துறையும், குடிநீர் வழங்கு துறையும், இன்றைக்கு
கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைவிரித்து ஆடிக்கொண்
டிருக்கிற அந்த வறட்சியோடு சம்பந்தப்பட்ட துறை என்ற
காரணத்தால் நான் அந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேச
விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றைக்கு பாசனத்திற்கு நீர்
இல்லை என்ற குறைபாடும், குடிப்பதற்கு நீர் இல்லை என்ற
குறைபாடும் இயற்கை பொய்த்ததால் மட்டுமே வந்ததில்லை.
எங்களுடைய மாவட்டத்தில் 1600 மில்லி மீட்டர் மழை பெய்த
காலம் போய் இன்றைக்கு 500 மில்லி மீட்டர் மழைதான்
பெய்கிற நிலைமை உருவாகியிருக்கிறது. ஆனாலும்கூட பெய்கிற
மழையை வைத்துக்கொண்டு, எங்களுடைய மாவட்டத்தில்
பாசனத்திற்கும் குடிநீருக்கும் பிரச்சினை வராத அளவிற்கு
சமாளிக்க முடியும். ஆனால் பெய்கிற நீரை தேக்கி வைப்பதற்கு
போதுமான குளங்கள் இல்லாத நிலைமை இன்றைக்கு இருக்கிறது.
எங்களுடைய மாவட்டத்தை மன்னர்கள் ஆண்டு வந்த காலத்தில்,
அந்த மாவட்டத்தினுடைய பூகோள அமைப்பை மனதிலே
கொண்டு, மலைக்கும் கடலுக்கும் இடைப்பட்ட தூரம் மிகக்
குறுகிய தூரம், மிகச் சரிவாக இருக்கிற காரணத்தால், மழை
பெய்தவுடனே, அந்த நீரைத் தேக்கிவைக்கவில்லை என்றால்,
கடலுக்கு விரைந்து செல்லக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்
தால், அங்கங்கே பெரிய பெரிய அணைகளைக் கட்ட முடியாது
போனாலும், ஊருக்கு ஊர் எங்கெங்கு தேவையோ, அங்கெல்லாம்
பெரிய பெரிய குளங்கள் வேண்டும் என்று, குளங்களைத்
தோண்டி வைத்தார்கள். ஆனால் அண்மைக் காலத்தில், தோண்டி
வைக்கப்பட்ட அந்தக் குளங்கள் எல்லாம் பூதக் கண்ணாடியை
வைத்து பார்க்கக்கூடிய அளவிற்கு அவைகள் மறைந்துபோய்
விட்டன. பல ஆண்டுக்காலமாக நீர்வற்றாத குளங்களாக இருந்த
அந்தக் குளங்கள் எல்லாம் இன்றைக்கு நீர் வற்றி வறண்டு
போயிருக்கின்றன. அந்தக் குளங்களை எல்லாம் தூர் எடுப்பதற்கு
இது ஒரு நல்ல வாய்ப்பான நேரம். அந்தக் குளங்களை எல்லாம்
தூர் எடுக்க வேண்டும் என்று ஆளுநர் உரையின் மீது பேசும்
போதுகூட நான் குறிப்பிட்டேன். நான் எங்களுடைய மாவட்டத்
திற்கு, எங்களுடைய தொகுதிக்குச் சென்று பார்க்கிறபோது,
எந்தக் குளங்களிலிருந்து எல்லாம் ஆக்கிரமிப்பை அகற்றவேண்டும்
என்று சொன்னோமோ அந்தக் குளங்களில் எல்லாம் மீண்டும்
மீண்டும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருப்பதை நான் கண்கூடாக
பார்த்துக்கொண்டு இருக்கிறேன். நாங்கள் இதை மாவட்ட
ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு கொண்டு வந்தாலும்
கூட—அவர்கள் சிறப்பாக பணியாற்றுகிறார், அவரைக் குறை
சொல்லவில்லை? அவர்களால் எதுவும் செய்ய முடியாத ஒரு
கையறு நிலையில் அவர்கள் இருந்து கொண்டு இருக்கிற
நிலைமை ஆய்ந்து, ஆராய்ந்து பார்த்து, அந்த நிலைமைகளைப்
போக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



எங்களுடைய மாவட்டத்தினுடைய பூகோள அமைப்பின்படி
சொல்ல வேண்டும் என்றால், குறைந்த பட்சம் 50 அடி
தோண்டினாலே, அதற்குப் பிறகு பாறைதான் வரக்கூடிய
நிலைமை இருக்கிறது ஆகவே அங்கே அடி ஊற்று வரக்கூடிய
வாய்ப்பில்லை. பக்கவாட்டில் இருந்துதான் நீர் ஊற்று வர
வேண்டும். அப்படி பக்கத்திலே இருந்து நீர் ஊற்று வரவேண்டு
மென்றால், குளங்கள் மற்றும் குட்டைகளில் நீர் தேங்கியிருந்
தால்தான் அந்தக் கிணறுகளுக்கு தண்ணீர் ஊறும். ஆகவே
இருக்கிற குளங்களையாவது நாம் முழுவதுமாகப் பயன்படுத்த
முன்வரவேண்டும். இன்றைக்கு பேச்சிப்பாறை, பெருஞ்சாணி
போன்ற அணைகள் எல்லாம் மூடப்பட்டபோது மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு தகவலைச் சொன்னார்கள்.
இப்போது இருக்கிற நீர் மட்டத்தை வைத்து அணைகளைத்
திறந்துவிட்டால், நீர் அணையிலே போதுமான அளவு இல்லாத
காரணத்தால், பிரஸ்ஸர் இல்லாத காரணத்தால், அந்த நீர்
வாய்க்கால்கள் வழியாகச் சென்று, அந்தக் குளங்களுக்குச் சென்று
அடைந்து பயன் பெறுவதற்கான வாய்ப்பு இல்லை. ஆகவேதான்
அணைகளை மூடுகிறோம்., அதன் பிறகு, நீர் மட்டம் உயர்ந்த
பிறகு, மீண்டும் அணைகளைத் திறந்து காவல்துறையினுடைய
பாதுகாப்போடு,-விவசாயத்திற்கு இந்தத் தண்ணீரைக் கொடுக்
காமல்,—குளங்களுக்குக் கொண்டு சென்று, அந்தக் குளங்களை
நிரப்பி, அதன் மூலமாக இந்தக் குடிநீர்ப் பிரச்சனையை
தீர்க்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்லி,
மாதம் ஒன்று ஆகிவிட்டது. ஏப்ரல் மாதம்—நேற்றோ, அல்லது
இன்றோ அந்த அணைகள் திறக்கப்பட்டிருக்குமானால் அல்லது
குறைந்த பட்சம் நாளைக்காவது திறக்கப்படுமானால் காவல்
துறையின் பாதுகாப்போடு, அவர்கள் தண்ணீரை வயல் வெளி
களுக்குக் கொண்டு செல்லாமல். தென்னை மரங்கள் போன்ற
இப்படிப்பட்ட பாசனங்களுக்குப் பயன்படுத்தாமல், அவைகளைக்
கொண்டு வந்து, குளங்களில் சேர்த்தால் குடிநீர்ப் பிரச்சினையை
என்னுடைய மாவட்டத்தில் தீர்க்க முடியும்.

(இரவு 6-00)

தமிழகத்திலே இருக்கிற நகராட்சிகளிலேயே பாதுகாக்கப்
பட்ட குடிநீர் திட்டம் இல்லாத ஒரே நகராட்சி என்னுடைய
பத்மநாபபுரம் நகராட்சிதான். அந்த நகராட்சி என்ன பாவம்
செய்தது என்று தெரியவில்லை. பத்மநாபபுரத்திலே மன்னர்கள்
வாழ்ந்தார்கள், அங்கே அரண்மனை இருக்கிறது என்ற
காரணத்தால் அங்கே எல்லா வசதியும் இருக்கிறது என்று
நினைக்கிறார்களா என்று தெரியவில்லை.

இந்த நகராட்சியிலே இரண்டு உரிமை இயல் நீதிமன்றங்கள்,
ஒரு சப்கோர்ட், ஒரு டி.ஈ.ஓ. ஆபீஸ், அரசு மருத்துவமனை,
தனியார் மருத்துவமனைகள், லெப்ரசி ஆஸ்பத்திரி ஒன்று, தாலுகா
அலுவலகம், காவல் நிலையம், நகராட்சி அலுவலகம், மேல்நிலைப்
பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் இன்னும்

பல முக்கியமான நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் இருக்கின்றன. ஒரு நகராட்சி அலுவலகமும் இருக்கிறது. இத்தனை அலுவலகங்கள் இருக்கிற இந்த நகராட்சியில் ஆயிரக்கணக்கான மக்கள் 'ப்ளோட்டிங் பாப்புலேஷன்' என்ற அடிப்படையில் தினமும் வந்து போகிறார்கள். இத்தகைய ஒரு நகராட்சிக்கு ஒரு குடிநீர் திட்டம் இல்லாமல் இருப்பது மிகவும் வேதனை தருகிறது. இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவோடு பரிசீலனை செய்யவேண்டும்.

ரூபாய் இரண்டு கோடி அளவுக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக அரசாங்கத்திற்கு ஒரு .ட்டம் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமானால் என்னுடைய நகராட்சி மட்டுமல்ல என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட, நிலத்தடி நீரே இல்லை எ. று சொல்லப்படுகிற வாழ்வச்சக்கோஷ்டம் பேரூராட்சி, விலவூர் பேரூராட்சி கோதநல்லூர் பேரூராட்சி, குமாரபுரம் பேரூராட்சி; மருதூர் குறிச்சி ஊராட்சி. ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் பிரச்சினை இருக்காது. எங்கு நிரந்தரமாக நீர் ஆதாரம் இருக்கிறது என்று கண்டறிந்து அதைப் பயன்படுத்தி நீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தினால் என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையை நிச்சயமாகத் தீர்க்க முடியும்.

என்னுடைய மாவட்டத்தில், என்னுடைய தொகுதிக்கு குடிநீர் தருவதற்கு வாய்ப்பாக நிரந்தர நீர் ஆதாரம் உள்ளதாக இருக்கிற ஒரே ஆறு குழித்துறை ஆறுதான். பல பேரூராட்சி களுக்கும் ஊராட்சிகளுக்கும் குடிநீர் தருகின்ற இந்த ரூபாய் இரண்டு கோடி திட்டத்தை அரசு நிறைவேற்றித் தருமானால் அது என் தொகுதிக்குப் பேருதவியாக இருக்கும். எனவே அந்தத் திட்டத்தை அரசாங்கம் அதிக முக்கியத்துவம் கொடுத்து, பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கி3றன்.

அந்தத் திட்டத்தை ஒரே கட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்ற ஆசை கூட எனக்கு இல்லை. 4, 5 பகுதிகளாகப் பிரித்துக்கூட இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம். இன்னும் ஒரு திட்டத்தை வலியுறுத்த விரும்புகிறேன். இது நிறைவேற்றப் படுமானால் பத்மநாபபுரம் நகரமக்கள் இந்த அரசை நெஞ்சாரப் பாராட்டுவார்கள். பத்மநாபபுரம் கோட்டை, அதன் உள்ளே இருக்கிற பகுதி அதைத்தொட்டு அடுத்து வெளியே இருக்கிற பகுதி இவைகளுக்கு நீர் வழங்க கோட்டையினுள் இருக்கும் பெருயாள் குளத்தின் மேற்குப் பக்கத்திலே ஒரு கிணற்றினை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி ஒரு குடிநீர் திட்டத்தை அரசு நிறைவேற்றுமானால், அதன் மூலம் இந்த நகராட்சியின் 5-ல் 1 பகுதிக்கு குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அது பயன்படும். இதற்கு அதிக பட்சமாக ரூபாய் 4 இலட்சம்தான் செலவாகும் என்று சொல்லப்படுகிறது.



தக்கலை நகரின் மையப்பகுதிக்கு, அதாவது, 15-வது வார்டும் அதைத்தொட்டு அடுத்து இருக்கிற பகுதிகளுக்கும் நீர் வழங்கும் வகையில் அந்தப் பகுதியிலே இருக்கிற ''செட்டிகுளம்'' என்ற, என்றும் வற்றாத குளத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்தக் குளத்தின் நடுவில் ஒரு பெரிய கிணற்றை வெட்டினால் அதன் மூலம் கிடைக்கின்ற நீரைக் கொண்டு இராமன்பரப்பு, செட்டியார்விளை, மேட்டுக்கடை, வாத்தியார் விளை போன்ற நகரத்தின் மையப் பகுதிகளுக்கு நீர் வழங்கினால் 5ல் 1 பங்கு மக்களுக்கு குடிநீர் கிடைக்கும். இதற்கு ஆகும் செலவு சுமார் 4 இலட்சம்தான் என்று சொல்லப் படுகிறது.

குமாரகோயில் பெரியகுளத்திலே எந்தக் காலத்திலும் வற்றாத நீரூற்று இருக்கிறது. அதிலே ஒரு கிணறு அமைத்து அதை ஆதாரமாக வைத்து ப துகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தைத்தந்தால் அதன்மூலம் குமாரகோயில், புலியூர் குறிச்சி, பிரம்மபுரம், ஆசான் கிணறு, தென்கரை ஆகிய பகுதி மக்களுக்கு குடிநீர் கிடைக்கும்.

மணவி, சாரோடு, வெட்டிக்கோணம், மேட்டுக்கடை பகுதி களுக்குக் குடிநீர் வழங்க சாரோடுகுளத்தில் ஒரு கிணறு போட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தைத்தந்தால் அதன்மூலம் நகரில் 5ல் 1 பகுதி மக்களுக்குப் பயன்படும் வகையில் குடிநீர் வழங்கப்படலாம்.

இம்மாதிரியான 4, 5 திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசு முன்னுரிமை தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்கரை தோப்பு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டால் ஆளூர் பேரூராட்சி, சுங்கான்கடை, வில்லுக்குறி, தென்கரை போன்ற நீர் இல்லாத பகுதிகளுக்கு அது பயன்படும். 3, 4 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தத் திட்டம் முடிக்கப்பட்டு ஆளூர் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஏதோ தகராறு ஏற்பட்டு இருப்பதாக புலன் விசாரணை செய்யப்பட்டு ஆளூர் பகுதிக்கு வெளியே உள்ள பகுதிக்கு இந்தத் திட்டம் செயல்படவில்லை. இந்தத் திட்டத்தை உடனடியாக முழுமையாக நிறைவேற்றித்தந்தால் அது வில்லுக்குறி பேரூராட்சி, ஆளூர் பேரூராட்சி, தென்கரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்குப் பெருமளவில் பயனளிக்கும். இந்தத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் நீர் இல்லாத சுங்கான் கடை, நீர் இல்லாத களியங்காடு, நீர் இல்லாத வில்லுக்குறி, நீர் இல்லாத தென்கரை போன்ற பகுதிகளுக்கு நிரந்தரமாக நீர் கிடைக்கும். இந்தப் பகுதியில் ஒரு குடம் ரூ.2—க்கு விற்கப்படு கிறது. இந்தத் திட்டம் செயல்பட்டிருக்குமானால், தற்போதைய நிலை வந்திருக்காது.

வற்றாத நீர் எப்போதும் கிடைக்கும் இடத்திலே இருந்து நீர் இல்லாத இடங்களுக்கு கொடுக்கிற ஒரு நிரந்தரமான திட்டத்தைத் தராமல் நிவாரணப் பணிகள் மூலம் இந்தப் பிரச்சினைகளை நீண்ட நாட்களுக்குத் தீர்க்கமுடியாது.

ஆகவே அந்த அடிப்படையில் திட்டங்களைத் தரவேண்டும். கை இறைப்பான்களைப் போடுவதால் மட்டும் பிரச்சினைகளை தீர்த்து விட முடியாது என்று சொல்லப்படுவது உண்மை தான். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கை இறைப்பான்கள் அதிகமாக அதிகமாக போடப்போட மீண்டும் ஒரு சகாராப் பாலைவனம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உருவாக்கப் பட்டு வருகிறது என்று பொருள்; ஏன் என்றால் கன்னியாகுமரி மாவட்டம் கடலால் சூழ்ந்த மாவட்டம், கடலோடு ஒட்டியிருக்கின்ற மாவட்டம் அந்தக் கடல் நீரினுடைய அழுத்தம் அந்த நிலப் பகுதியை அழுத்திக் கொண்டு இருக்கிறது. நிலத்தடி நீரை அதிகமாக் பம்பு செய்து எடுக்க எடுக்க அந்த வெற்றிடத்தை நிரப்ப கடல் நீர் உள்ளே சென்று அந்த நிலத்தடி நீர் எல்லாம் கடல் நீராக மாறுகின்ற அபாயம் அங்கே உருவாகிக் கொண்டு வருகிறது. ஆகவே இந்த கைஇறைப்பான்களை போட்டுப்போட்டு மட்டும் வறட்சியை போக்குகிறோம் என்று சொல்லுவதை இந்த ஆண்டோடு முடித்து விட வேண்டும். இதற்குப்பிறகு வறட்சி வரக்கூடாது என்று நான் ஆண்டவனை வேண்டுகிறேன; குடிநீர்த் தட்டுப்பாடு வரக்கூடாது என்று ஆண்டவனை வேண்டுகிறேன். ஆகவே இந்த ஆண்டுக்குப் பிறகு கை இறைப் பான்கள் மட்டும் போடப்படும் என்ற நிலைமை மாறி நிரந்தரமாக நீர் ஊற்று உள்ள இடங்களில் இருந்து குடிநீர் தரும் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டும். இல்லை என்றால் கன்னியாகுமரி மாவட்டத்தை சகாரா பாலைவனமாக, உப்புத் தண்ணீரை நிலத்தடி நீராகக் கொண்டிருக்கும் ஒரு மாவட்டமாக மாற்றி விட்ட பாவத்திற்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர் களுடைய அரசு ஆளாகி விடும். எனவே அந்த பாவத்தை அருள் கூர்ந்து இந்த அரசு செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள் கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

* திரு. எம். அண்ணதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீதும், குடிநீர் வடிகால் வாரிய மானியக் கோரிக்கையின் மீதும் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அள்ளிக் கொடுத்த வள்ளல் அதியமானைப் போல, மரத்திலே படர்ந்த முல்லைக் கொடி மீண்டும் வளர்வதற்கு முடியாமல் காற்றிலே தவித்துக்கொண்டு இருந்த நேரத்தில் அந்த முல்லைக் கொடிக்காக தான் சென்ற தேரையே ஈந்த இந்த நாட்டில் வாழ்ந்து புகழ் மிக்க ஒரு இடத்தை தந்து விட்டுச் சென்று இருக்கிற பாரியைப் போல பிள்ளைகளுக்கு எல்லாம் சோறு தருவதற்காக இந்த நாட்டில் உள்ள விவசாயிகள் உழைத்துக்



கொண்டு இருக்கிறார்களே என்ற அந்த நல்ல திட்டத்தை இங்கே உருவாக்கித் தந்த அந்த விவசாயப்பெருங்குடி மக்களுக்கு அவர்கள் படுகின்ற அல்லலை, துன்பத்தை அகற்றுகிற வகையில் அவர்கள் பட்டு இருந்த கடன்தொல்லையையும் அந்தக் கடனால் ஏற்பட்டு இருந்த வட்டித் தொல்லையையும் நீக்கித் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு—6.10)

எனக்கு முன்னால் பேசிய அனைவரும் வேளாண்மைத் துறையைப் பற்றியும், குடிநீர் வழங்கு துறையைப் பற்றியும் இங்கே அவரவர்களுடைய கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் ஒருவர் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தி லிருந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்து இன்றைய நம் ஆட்சி வரை வேளாண்மைத் துறையின் உற்பத்தியைப் பற்றி இங்கே புள்ளிவிவரங்களை எல்லாம் தந்தார்கள். என்னைப் பொறுத்த வரைக்கும் நான் ஒரு சிறிய கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நாட்டில் எங்கள் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்ற தற்குப் பிறகு எங்களுக்கு சோதனைகள் எவ்வளவோ ஏற்பட்டன. ஆனால் சோதனைகளை எல்லாம் சாதனைகளாக ஆக்கி இன்றைக்கு படி அரிசி 12 ரூபாய்க்கு விற்காமல் பாமர மக்கள் எங்கு சென்றாலும், உண்ண உணவு உண்டு என்று சொல்லு இன்ற வகையில் அரிசி தாராளமாக கிடைக்கின்ற வகையில் கட்டுப்பாடோடு இந்த ஆட்சி நடந்து வருகிறதே இதை விட ஒரு மிகப்பெரிய பெருமை இந்த இந்திய உப கண்டத்தில் வேறு எங்கும் இருக்க முடியாது என்பதை நான் மிகப் பணி வன்போடு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரைக்கும் கடந்த 10 ஆண்டுக் காலத்தில் கோவையில் இருக்கின்ற வேளாண்மை பல்கலைக் கழகத்தின் மூலம் கடந்த காலத்தில் நம் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லாக இருந்தாலும் சரி, அது நவ தானியமாக இருந்தாலும் சரி, அல்லது கரும்பாக இருந்தாலும் சரி, அல்லது கேழ்வரகாக இருந்தாலும் சரி, அல்லது தினையாக இருந்தாலும் சரி, அல்லது வரகாக இருந்தாலும் சரி அல்லது இன்னும் ஏனைய தானிய வகைகளாக இருந்தாலும் சரி அத்தனையையும் கடந்த காலத்தில் உருவாக்கியவர்கள் நம் விவசாயிகள் தான். அன்றைக்கு இருந்த நீண்டகாலப் பயிர் உற்பத்தித் திட்டத்தை இன்றைக்கு குறுகிய கால உற்பத்தித் திட்டமாக இந்த நாட்டிலே வேளாண் துறை உருவாக்கியிருக் கிறது என்றால் அவர்கள் ஆராய்ச்சி மூலமாகவே செய்திருக்கிற மிகப் பெரிய திட்டத்தின் மூலமாகவே தான் இன்றைக்கு அது குறுகிய கால வளமாக அதிகப்படியான உற்பத்தித் தருகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் காண்பித்து இருக்கிறார்கள். அந்த வகையில் வேளாண் துறை அறிஞர் பெருமக்களுக்கும்

அந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் நான் எனது நன்றியையும்
பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம்,
அவர்கள் இங்கே எத்தனையோ முறை வறட்சி ஏற்பட்டாலும்,
வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்டாலும், இந்த தமிழகத்தினு
டைய உற்பத்தியை எவ்வளவு ஜாக்கிரதையாக குறையவிடாமல்
ஓரளவு நிலைகட்டி வைத்திருக்கிறார்கள் என்றால், உள்ள
படியே தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையிலும், விஞ்ஞானத்
துறையிலும் முன்னேறி, இன்றைக்கு அது குறுகிய காலப் பயிர்
உற்பத்தியைப் பெருக்கியதன் விளைவு தான் குறுகிய இடங்
களிலே விளைச்சலை நாம் செய்தாலும் நிறைய நமக்கு
உற்பத்தியைப் பெற முடிந்ததற்கு அதுவேதான் காரணமாகும்.
அந்த வகையிலும் இன்றைய வேளாண் துறையை நான் பாராட்டு
வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். இன்னமும் இங்கே பல
கருத்துக்களைச் சொன்னார்கள். 10 நிமிடத்திற்கு மேல் பேசு
வதற்கு தலைவர் அவர்கள் அனுமதி அளிக்க மாட்டார்கள்.
ஆனாலும் வேளாண் துறையைப் பற்றிப் பேசவேண்டுமென்றால்
இன்னும் நிறைய சொல்லலாம். ஆனால் அதற்குள் செல்லாமல்
எனது தொகுதியிலே இருக்கின்ற பிரச்சினைகள் சம்பந்தமாக
சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகின்றேன்.

என்னுடைய தொகுதியிலே வேளாண் துறையைச் சார்ந்த
பெருமக்களையும், அதிகாரிகளையும் தான் பணிவோடு கேட்டுக்
கொள்வதெல்லாம் என்னுடைய தொகுதியிலே குண்டூர் ஊராட்சி
என்ற ஒரு ஊராட்சி இருக்கிறது. அந்த ஊராட்சியைச் சார்ந்த
திருவளர்ச்சிப்பட்டி என்ற கிராமத்தில் 200 ஏக்கர்களுக்கும்
மேற்பட்ட இடங்கள் பொன்மலை நகராட்சிக்கு உட்பட்டிருக்கிற
தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவு நீரால் ஒவ்வொரு
ஆண்டும் விளைகின்ற விளைச்சல் பாழாக்கப்பட்டு, அங்கே அந்த
விவசாயிகள் கண்ணீரும் கம்பலையுமாக காட்சியளிக்கின்ற
சூழ்நிலை இருக்கிறது. நான் இந்த மன்றத்திலே கழிவு நீரால்
ஏற்படுகின்ற தொல்லைகளைப் பற்றி ஏற்கனவே தெரிவித்திருக்
கிறேன். வேளாண் துறை மானியம் என்ற காரணத்தினால்
அதை நீக்குவதற்கு வேளாண்மைத் துறை அதிக அக்கறை காட்டி,
அதற்கு நிவர்த்தி செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில்
கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கழிவு நீர் அத்தோடு நின்று
விடாமல் உய்யக்கொண்டான் கால்வாயின் பிரதான வாய்க்
காலிலே திருவரம்பூர் தொகுதி மட்டுமல்ல, அது கிழக்கே இருக்
கின்ற திருவையார் தொகுதிக்குள் செல்கின்ற வாய்க்கால்.
அந்தக் கழிவு நீர் செல்கின்றபோது சுகாதாரக் கேடு மட்டு
மல்லாமல், விவசாயிகள் மிகப் பெரியபாதகத்திற்கு ஆளாக்கப்
படுகிறார்கள். அதைக் கண்காணித்து, அதற்கு ஒரு நல்ல தீர்வு
காணவேண்டுமென்று இந்த நேரத்திலேதான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.



இன்றைக்கு நாட்டிலே விவசாயம் ஒரு பக்கம் வறட்சியால்
பாதிக்கப்படுகிறது. ஒரு பக்கம் மழை நீர், வெள்ள நீர்
வந்து பாதிக்கின்ற சூழ்நிலை நாட்டிலே ஏற்பட்டுக் கொண்டிருக்
கிறது. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்
தினால் எனது திருவரம்பூர் தொகுதி மிகப் பெரிய பாதகத்
திற்கு ஆளாகியது. தமிழக முதல்வர், புரட்சித் தலைவர்
அவர்கள் அங்கே வந்தார்கள். அந்த நேரத்தில் புரட்சித் தலைவர்
அங்கு வந்திருந்த அதிகாரிகளிடத்தில் இந்த வெள்ளத்தையெல்
லாம் இங்கே சமாளிப்பதற்கு என்ன செய்யலாம் என்று அங்கே
உள்ள அதிகாரிகளிடத்திலே கேட்ட நேரத்தில் நான் சொன்னேன்.
என்னுடைய தொகுதியில் கும்பக்குடி என்ற ஊராட்சி இருக்கிறது.
அந்த ஊராட்சிக்குப் பக்கத்திலேஒரு பெரிய காட்டாறு வருகிறது.
அந்தக் காட்டாற்றிற்கு பண்டைய காலத்தில் ஒரு பெயர்
மருதன்காவேரி என்ற பெயர் இருக்கிறது. இந்த மருதன்காவேரி
காட்டாற்றிலே வருகிற தண்ணீரை அந்தத் தும்பக்குடிக்குத் தென்
புறத்திலே தேக்கி, அதைத் தடுத்து கீழே இருக்கிற மேட்டுப்
பகுதியாக வரும் சிற்றூர்களுக்கு பிரித்து விடுவீர்களேயானால்
அதுவும் பயன்படும். அதே நேரத்திலே திருவரம்பூர் தொகுதி
யிலே இருக்கின்ற குண்டூர் ஊராட்சி, திருவரம்பூர், நவல்பட்
டு ஊராட்சி. ஆளத்தூர் ஊராட்சி, திருவளர்ச்சிப்பட்டி ஊராட்சி,
ஆலத்தூர் ஊராட்சி, அரசங்குடி ஊராட்சி, வேங்கூர் ஊராட்சி,
நடராஜபுரம் ஊராட்சிப்பகுதிகளில் இருக்கின்ற விவசாய நிலங்கள்
பாழாக்கப்படாமல் காக்கப்படும், அது மக்களுக்கு அதிகப்படி
யான நன்மையையும் தரும் என்று நான் கேட்டுக்கொண்டு,
அதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் இப்போது அந்தப் பணியைத்
துவங்குவதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அதற்கும் அந்தப்
பகுதி மக்களின் சார்பிலேயும் என்னுடைய சார்பிலேயும்
நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே எல்லோரும்
எல்லா கருத்துக்களையும் சொன்னார்கள். நான் ஒரு கருத்தை
இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு புறம் வறட்சியினால்
விவசாயம் பின்தங்கியிருக்கிறது. மற்றொருபுறம் வெள்ளத்
தினால் விவசாயம் பாதிக்கப்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது.
இந்த நிலையை எல்லோரும் சொல்லிவிட்டோம். இன்றைக்கு
நாட்டிலே மிக முக்கியமாக உற்பத்தி பண்ணுகின்ற தானியங்கள்
நெல் மற்றும் நவதானியங்கள் அத்தனையையும் தேக்கி வைக்
கின்ற கிடங்குகளில் அவைகள் எல்லாம் எலிகளால் பாழாக்கப்
பட்டுக்கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எலிகள் ஒழிக்கப்
படாமல் இருக்கிறது. கடந்த காலத்தில் எலியை பிடிப்பதற்கு என்று
மக்கள் கூட்டம் ஒன்று இருந்தது. ஆனால் கொஞ்சகாலமாக
எலியைப் பிடிக்கின்ற பழக்கத்தை விட்டுவிட்டார்கள். அதனால்
இப்பொழுது எலி அதிகமாகப் பெருகி, இன்றைக்கு நாம்
இவ்வளவு கஷ்டத்திற்கிடையிலே உற்பத்தி செய்கின்ற இந்த
விளைச்சல் பொருள்களை நவதானியங்களை சீரழித்துக்
கொண்டிருக்கிறது. நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள
விழைவதெல்லாம் சர்சார்ஜ்ஜாக நமது விவசாயிகள் பஞ்சாயத்து

யூனியனுக்கு கட்டி வருகின்றார்களே, அதிலிருந்து இந்த எலியைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஒரு சிறப்பான நிதியைத் தருவது என்று அறிவித்து அதை வி. ஏ.ஓ—க்கள் மூலமாகவோ அல்லது வேளாண்துறை அதிகாரிகளுடைய உதவியின் மூலமாகவோ அளித்து இந்த எலிகளைப் பிடிப்பதற்கு ஊக்கம் அளிக்கவேண்டும். அந்தப் பணத்தை விவசாயிகளிடம் நீங்கள் பெற்றுக் கொள்வதினால் விவசாயிகளுக்கு நஷ்டம் வந்துவிடாது. எனவே இந்த எலியை ஒழிக்கும் திட்டத்தை தயவு செய்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் ஒரு எலி 30 நாட்களுக்குள் பல குட்டிகளை ஈன்றெடுக்கிறது. இதை விட்டு விடுவோமேயானால் இவைகள் நாட்டிலே உற்பத்தி ஆகின்ற அத்தனை பொருள்களையும், தானியங்களையும் வீணடித்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாக இந்தக் கோரிக்கையை நான் பிரதான கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. அதை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே எடுத்துச்சொல்லி பொன்மலை நகராட்சி, ஆலத்தூர் பேரூராட்சி இதுபோன்ற பேரூராட்சிகளுக்கெல்லாம் இன்றைக்கு அனுமதி வழங்கப்பட்டு பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். அதிலே அரியமங்கலம் பேரூராட்சியைச் சேர்த்துக்கொள்ளகேட்டுள்ளேன். காவேரி ஆற்றங்கரையிலிருந்து பாய்லர் தொழிற்சாலை, மற்றும் மண்டலப் பொறியியல் கல்லூரிக்கு தண்ணீர் எடுத்துச் செல்லப் படுகிறது. அந்த காவேரி ஆற்றங்கரையின் பக்கத்திலே இருக்கின்ற, தண்ணீர் எடுத்துச் செல்லுகின்ற ஊராட்சி வேங்கூர் ஊராட்சியாகும். அந்த வேங்கூர் ஊராட்சியிலேதான் தண்ணீர் எடுத்து கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டருக்கு அப்பால் சென்று கொண்டிருக்கிறது. அந்த வேங்கூர் ஊராட்சிக்கு இதுநாள் வரை குடிதண்ணீர் கொடுக்கப்படவில்லை. ஆகவே நான் குடிநீர் வடிகால் வாரியத்தைக் கேட்டுக்கொள்வது, பொன்மலை நகராட்சிக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் திட்டத்திலே அரியமங்கலத்தையும், காட்டூரையும் சேர்த்துக்கொண்டதைப் போல, வேங்கூர் ஊராட்சியை கடந்து மண்டல பொறியியல் கல்லூரிக்குச் செல்லுகின்ற தண்ணீரை வேங்கூர் ஊராட்சிக்கு கொடுப்பதற்கு நீங்கள் முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

(மாலை 6-20)

*திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக வேளாண்மைத் துறையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொ கிறேன். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லா தொழுதுண்டு பின் செல்பவர்' என்று ஒரு குறள் இரு வருகிறது. ஆனால், இப்போது அப்படி இல்லை. உழுதுவ



வாழ்வார் எல்லாம், தொழுதுண்டு பின் செல்லவேண்டிய நிலை
தமிழகத்திலே உருவாகிக் கொண்டிருக்கிறது என்பது எல்லோரும்
அறிந்த விஷயம். ஏனென்றால், நாம் தற்போது உழுதுண்டு
வாழ்வார் எல்லாம் தொழுதுண்டு செல்பவர் என்ற
குறளை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை உருவாகி விட்ட
காரணத்தினால் விவசாயிகளாகிய நாம், 20 ஆண்டுக் காலத்தில்
கீழ் நிலைக்கு வந்துவிட்டது எல்லோருமே அறிந்துகொள்ள
வேண்டிய உண்மையான விஷயம்.

அதற்குக் காரணம், மழை பொய்த்து விட்டது. அரசின்
கொள்கையும், விவசாயிகளை ஏன் என்று கவனிக்காத ஒரு
நிலையால்தான் இன்றைக்கு இந்த நிலைக்கு உள்ளாகி இருக்
கிறோம். நமது தி.மு.க. ஆட்சிக் காலத்தில்——பல தொழிற்
சங்கங்கள் இந்த நாட்டிலே இருக்கின்றன. தொழிலாளர்கள்
சங்கங்களை அமைத்துக்கொண்டு, அவர்கள் எந்தக் கட்சியாக
இருந்தாலும், ஒன்றுகூடி அவர்களுடைய கோரிக்கைகளை நிறை
வேற்றிக் கொள்கிறார்கள். ஆனால் விவசாயிகள் அந்த நிலை
யிலே உருவாகாமல், பல கட்சிகளில் இருந்துகொண்டு ஒரு
சங்கத்தை உருவாக்கமுடியாத நிலையில்தான், இன்றைக்கு எந்த
அரசு வந்தாலும் விவசாயிகளைக் கொஞ்சம் கூட நினைக்காமல்
விவசாயிகளின் நிலை கீழ் நோக்கியே போய்க்கொண்டிருக்கிறது.
தி.மு.க. ஆட்சிக் காலத்தில்—விவசாயிகள் சங்கம் என்று ஒன்று
ஆரம்பித்து இருந்தோம். ஆனால் 50,000 பேர்களைச் சிறையில்
அடைத்தார்கள். 7 பேர்களைச் சுட்டுக் கொன்றார்கள்.
அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள், 'நான்
இரும்புக்கரம் கொண்டு அடக்குவேன்' என்று கூறினார்கள்.
ஆனால் இன்றைய ஆட்சியில் இருக்கக்கூடிய புரட்சித் தலைவர்
அவர்கள், இப்போது நமது சங்கங்கள் வைத்து போராடிக்
கொண்டிருந்த நிலையில்கூட 'நான் உங்களை அன்புக்கரம்
கொண்டு அணைப்பேன்' என்று கூறினார்கள். இந்த இரண்டு
வார்த்தைகளிலேயே எந்த நிலையிலே புரட்சித் தலைவர்
விவசாயிகள் மீது பற்றுக் கொண்டவராக இருக்கிறார் என்பதை
இம்மாமன்றம் தெரிந்துகொள்ளவேண்டும்.

நாங்கள் இன்னும் கோரிக்கைகள் வைத்துப் போராடியும்,
மின்சாரத்திற்கு, நமது தமிழக அரசானது ஒரு ஹார்ஸ்-பவருக்கு
75 ரூபாயாக நிர்ணயித்து இருக்கிறது. ஆனால், இன்றைக்கு
எடுத்துக்கொண்டால் நூற்றுக்கு 25 கிணற்றிலே கூட தண்ணீர்
கிடையாது. ரூபாய் 75—ஐ விவசாயிகள் இன்றைக்கு கையில்
இல்லாமல் கடன் வாங்கிக் கட்டவேண்டிய நிலை தமிழகத்தில்
உருவாகியிருக்கிறது என்பது மாமன்றத்திலே உள்ள மந்திரி
களுக்கும் தெரியும்; நமது தலைவர்களுக்கும் தெரியும். புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் தெரியும்.

ஏனென்றால், இன்றைக்கு ஒரு கிணற்றில்கூட தண்ணீர்
கிடையாது. தண்ணீர் கிடையாததால், வேறு இடங்களுக்குச்
சென்றுதான் மாடு, கன்றுகளைக் காப்பாற்ற வேண்டிய நிலை
உருவாகிவிட்டது. அதல்லாமல், நமது மெம்பர்கள்

அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இருந்தும் அதற்கு ஒரு
போர்க்கால நடவடிக்கை எடுத்து, இந்தக் குறையை நீக்க தமிழக
அரசு இன்னும் முன் வரவில்லை என்பதுதான் என்னுடைய
குற்றச்சாட்டு.

அடுத்து, கரும்பு நாம் விளைய வைக்கும் விவசாயப்
பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. நமது
பாரதப் பிரதமர் ராஜீவ் அவர்கள் போன வருடத்திலே விவசாயி
களுக்கு நல்ல விலை கிடைக்கவேண்டும் என்ற ஒரு காரணத்
தினால்——ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உற்பத்தி ஆகக்
கூடிய சர்க்கரையில் 65 பர்சென்ட் அரசிற்கும், 35 பர்சென்ட்
லெவி சர்க்கரைக்கும் கொடுக்கவேண்டும் என்று முன்னால்
இருந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா அவர்கள் அறிவித்து
இருந்தார்கள்; ஆனால் தற்போது நமது பாரதப் பிரதமர் ராஜீவ்
அவர்கள் விவசாயிகள் முன்னேற்றம் அடைந்தால்தான்
இந்த நாடு முன்னேறும் என்ற நல்ல நோக்கத்தோடு அவர்கள்
அதை 50 பர்சென்ட், 50 பர்சென்ட் என்று ஒரு சட்டம் இயற்றி
யுள்ளார்கள். கோடிக்கணக்கான ரூபாய் முதலாளிகளுக்கு போய்ச்
சேருகின்றது என்பது எல்லா மெம்பர்களுக்கும் தெரியும். அது
மட்டும் அல்லாமல் ஒரு கிலோ சர்க்கரைக்கு 40 பைசா அதிகமாக
அறிவித்துள்ளார்கள். அந்த 40 பைசாவை விவசாயிகளுக்கு
கொடுத்தாலும்கூட, இன்றைக்கு 40 ரூபாய் தான் அதிகமாகக்
கிடைக்கும். இன்றைக்கு எல்லா மாநிலங்களிலும் 300 ரூபாய்
ஒரு டன்னுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்
தமிழகத்தில் மிகவும் குறைவாகக் கொடுத்துக் கொண்டிருக்
கிறார்கள். நான் அமைச்சர் அவர்களிடம் நேரில் சென்று பல
தடவை இதுபற்றி கேட்டிருக்கிறேன். ஆனால், அவர்கள் 200
ரூபாய்க்கு மேல் கொடுக்கமுடியாது என்று கூறிவிட்டார்கள்.
இந்த நிலையிலே மழையும் இல்லை, தண்ணீரும் இல்லை,
விலையும் இல்லை. இந்த மூன்றும் இல்லாமல் விவசாயிகள்
பெரிதும் அவதிப்படுகிறார்கள். நாங்களும் விவசாயிகள் என்று
பெருமை அடித்துக்கொண்டு—வெளிச்சத்துக்கு வந்தால் வெளிச்ச
மாக இருக்கவேண்டுமென்ற காரணத்தால் கடன்வாங்கி,
வெளிச்சம் போட்டுக்கொண்டு—இந்தச் சட்டமன்றத்திலே நின்று
கொண்டு இருக்கிறோம். உங்களுக்கு நான் கூறிக்கொள்ள
விரும்புவது, இன்றையதினம் விவசாயிகளுடைய நிலை
பரிதாபகரமாக இருக்கிறது என்பது உங்கள் எல்லோருக்கும்
நன்றாகத் தெரியும் என்பதை உங்கள் மத்தியிலே கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினை. என்னுடைய தொகுதியில்
மானுப்பட்டி கூட்டுக்குடிநீர் திட்டம், பூலாங்கிணர் கூட்டுக்குடிநீர்
திட்டம் என்று இரண்டு திட்டங்கள் உருவாகி இருக்கிறது. அது
இப்போது அல்ல, நமது குழந்தைவேலு அவர்கள் மந்திரியாக
இருந்தபோது. அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது.
கிட்டத்தட்ட 4, 5 ஆண்டுகளுக்குமேல் ஆகியும்கூட நிறைவேற்றப்
படவில்லை. ஊர்தோறும் தொட்டிகள் இருக்கின்றன. இப்போது
தான் பைப்புகள் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதுவரை



தண்ணீர் எடுத்துவிட ஒரு வழியும் செய்யாமல், நான் இரண்டு
மூன்று தடவை இதுபற்றி பேசியதற்குப் பின்னால் இதற்கு
நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். தமிழகத்தில் இன்றைக்கு
எந்தவொரு வேலையும் ஆமை வேகத்தில் நடந்துகொண்டிருக்
கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் தண்ணீர்
தண்ணீர் என்று அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையிலே
அதிகாரிகள் ரொம்பவும் மௌனம் சாதித்துக்கொண்டு இந்த
அரசுக்கு கெட்ட பெயரை உண்டாக்க வேண்டுமென்ற ஒரு
நோக்கத்தோடுதான் இன்றைக்கு வேலை செய்து கொண்டிருக்
கிறார்கள். நீங்கள் உடனடியாக அவர்களுக்கு உத்தரவிட்டு,
எந்த சட்டமன்றத் தொகுதியாக இருந்தாலும் சரி, குடிதண்ணீர்
சம்பந்தமான பிரச்சினைக்கு தீவிரமாக வேலையை முடுக்கி விட்டு
குடிதண்ணீரை அளிக்கவேண்டுமென்று உங்களை மிகவும் தாழ்மை
யோடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில், நான்
சேர்மனாக இருந்தபோது ஒரு நவீன மருந்தகம் ஒன்றை கட்டி
இருந்தேன். அது கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்னால்
கட்டப்பட்டது. 30 ஆண்டுகளுக்கு முன்னால் ஜனத்தொகை
மிகவும் குறைவாக இருந்தது. அப்போது அந்த நவீன மருந்த
கத்தைக் கட்டினேன். ஆனால் 30 ஆண்டுக் காலமாக அது நவீன
மருந்தகமாகத்தான் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. அதை
அரசு ஏற்று நடத்தவேண்டுமென்று நான் பலமுறை நமது மந்திரி
யிடம் கோரினேன். இன்னும் அதை அரசு எடுத்துக்கொள்ளாமல்
இருக்கிறது. அதற்கு பதிலாக கணியூரிலே பிரைமரி ஹெல்த்
சென்டர் ஒன்றை நான் சேர்மனாக இருந்தபோது
கட்டினார்கள். நமது மாண்புமிகு மதியழகன் மற்றும் மாண்புமிகு
கிருஷ்ணசாமி அவர்களுடைய ஊர் அது. அவர்கள் அந்த
ஊரிலேயே கட்டவேண்டுமென்று என்னோடு போராடி வாங்கி
அதைக் கட்டினார்கள், நமது மதிப்பிற்குரிய அமைச்சர்கள்
யாராவது அந்த பிரைமரி ஹெல்த் சென்டரைப் பார்த்தீர்களே
யானால், அந்த இடத்திலே அது கட்ட முடியுமா, அங்கே கட்டப்
பட்டு என்ன வேலை நடக்கிறது என்பதையெல்லாம் நீங்கள்
அறிந்து கொள்வீர்கள். முதலில் மூன்று கட்டிடங்களைக் கட்டி
னார்கள். அந்த மூன்று கட்டிடங்களில் இன்றைக்கு ஜன்னல்களும்
இல்லை, கதவுகளும் இல்லை; எதுவும் இல்லாமல் இருக்கின்றன.
அடுத்தபடியாக, அதே ஊரிலே மாண்புமிகு கிருஷ்ணசாமி
அவர்கள் மந்திரியாக இருந்தபோது ஒரு கட்டிடம் கட்டினார்கள்.
பிரைமரி ஹெல்த் சென்டர் என்பது அந்தப் பகுதி முழுவதும்
சென்று மக்களுக்கு வேலை செய்யக்கூடிய ஒரு பெரிய ஆஸ்பத்திரி.
அதை ஒரு சிறிய கட்டிடத்தில் வைத்துக்கொண்டு . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் இருக்கிறார்;
அவரிடம் எழுதி கொடுத்துவிடலாம். இது ஆஸ்பத்திரியைப்
பற்றியது அல்ல. தொகுதியைப்பற்றி பேசுங்கள்; வேளாண்
மையைப்பற்றி பேசுங்கள்; சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: என்னுடைய தொகுதியில் அமராவதி பாசன வாய்க்கால் ஒன்று புதிதாக காங்கிரஸ் ஆட்சியில் கட்டப்பட்டுள்ளது. அதற்கு 30 மைல் தூரத்திற்கு கான்கிரீட் போடவேண்டும். 30 ஆண்டுக் காலம் சென்றும்கூட இன்னும் 5 மைல் தூரத்திற்கு கான்கிரீட் போடப்படாமல் இருக்கிறது. 1966-ல் பி.டபுள்யூ.டி. மினிஸ்டராக இருந்த இராமையா அவர்கள் எடுத்த அந்தத் திட்டம், இன்றைக்கு 1987 ஆம் வருடமாகியும்கூட இன்னும் 5 மைல் தூரத்திற்கு கான்கிரீட் போடாமல் இருக்கிறது. அந்த கான்கிரீட் போட்டால் அதில் விட்டுப்போன இடங்களையெல்லாம் அப்போதே சேர்த்துக்கொள்வதாக வாக்குறுதி அளித்து இருந்தார்கள். ஆனால் கான்கிரீட் போடாத நிலையிலேயே இன்றைக்கும் இருக்கிறது.

(இரவு 6–30)

இன்னும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் ஆயக்கட்டில் சேராமல் இருக்கின்றன. அதைப்போலவே, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் கீழ் மேலும் 2½ லட்சம் ஏக்கர் பாயும் என்று சொல்லி கால்வாய் ஒன்றை வெட்டி, கான்டூர் கால்வாய்—கெனால் வழியாக திருமூர்த்தி டேமுக்குக் கொண்டு வந்து பாசன வசதி செய்து தருகிறோம் என்று செய்தார்கள். மேலும் 2 லட்சம் ஏக்கருக்கு மேல் அதிகப்படியான பாசனம் கிடைக்குமே என்று எண்ணினோம். ஆனால் இப்போது 2 அல்லது 3 வருஷத்திற்குக் கூட ஒரு முறை அந்த வாய்க்கால் மூலமாக தண்ணீர் வராத நிலை உருவாகியிருக்கிறது. காரணம் மழையில்லை. முதலில் சாப்பாடு இருந்தால் அல்லவா இலையைப் போடவேண்டும் என்று இல்லாமல் இவர்கள் வாய்க்காலை நீட்டிவிட்டார்கள். மக்களிடம் போய் ஓட்டு கேட்டால் அவர்கள் எங்கள் ஊருக்கு வாய்க்கால் வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது உங்களுக்கு வாய்க்கால் தானே வேண்டும், வெட்டித் தருகிறோம்'' என்று கேட்ட பகுதிகளிலெல்லாம் வாய்க்காலை வெட்டிவிட்டார்கள். அவைகள் எல்லாம் இன்றைக்குத் தண்ணீர் இல்லாமல் காட்சி அளிக்கின்றன. 2, 3 வருஷங்களுக்கு ஒருமுறை தான் தண்ணீர் பாய்கிறது. அந்த இடங்களில் குடிதண்ணீருக்குக்கூட மக்கள் கஷ்டப்படுகிற நிலைமை உள்ளது. எங்கேயிருந்து தண்ணீர் வரும் என்று பார்த்துக் கொண்டல்லவா வாய்க்காலை வெட்ட வேண்டும். அதைவிட்டுவிட்டு மின்சாரக் கம்பியை இழுப்பதுபோல் இதையும் செய்துவிட்டார்கள். 5,000 செட்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இதெல்லாம் கணக்கில் வருகிறதே தவிர 10 வருஷமாக ஒரு நபர் அப்ளிகேஷன் கொடுத்து இன்னும் அவருக்கு மின் இணைப்பு வராமல் இருக்கிறது. சட்டியில் இருந்தால் அல்லவா அகப்பையில் வரும் என்பதற்கு இணங்க எதையும் முன்னால் செய்துவிட்டு அப்புறம் நீட்டிக் கொண்டு போனால்தானே நாட்டின் முன்னேற்றம் நன்றாக இருக்கும் என்று உங்கள் மத்தியில் கூறிக் கொள்கிறேன்



அதைவிட்டுவிட்டு வாய்க்காலை வெட்டிவிட்டு இப்போது 2, 3 வருஷமாக தண்ணீரே வரவில்லை. அதோடு மேற்கே நோக்கிச் செல்லும்—மூணாறு திட்டத்தைக் கொண்டு வரவேண்டும், கேரள அரசோடு பேச வேண்டும் என்று நான் இந்த மன்றத்தில் பல தடவை சொல்லியும்கூட தமிழ்நாடு அரசு ஏனோ மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது. இதே நிலை நீடித்துக் கொண்டே போனால் தமிழகம் ஒரு காலத்தில் பாலைவனமாகத்தான் மாறும் என்று கூறிக் கொண்டு மன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட கோரிக்கை எண்கள் 20, 49 மற்றும் 50 ஆகியவற்றிற்கான ரூ. 258 கோடிக்கான மான்யக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

தற்போது தமிழகத்தில் 16 மாவட்டங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டிருந்த போதிலும், பருவ மழை பாதகமாக அமைந்திருந்த போதிலும், மாநிலத்தில் அரிசி உற்பத்தி மட்டும் கணிசமான முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அதாவது சுமார் 57 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு தமிழகத்தில் அரிசி உற்பத்தி செய்திருக்கும் இந்த அரசையும் வேளாண்மைத் துறையையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி கஷ்டப்பட்டு விவசாயம் செய்த ஏழை விவசாயிகளுக்கு இன்னும் அதிகமான ஊக்கத் தொகை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு அரசு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இனி ஒரு சில மாதங்களில் நம்முடைய தமிழகத்தில் மழை பெய்யவில்லை என்றால் விதைப்பதற்காக உள்ள விதைகள்கூட இருக்காது. எனவே அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு விதைகளையும் உரத்தையும் மானிய விலையிலும், மற்றும் கடனாகவும் அளிக்க வேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் விவசாயம் செய்வதற்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகிற கால்நடைகளைக்கூட பொருளாதாரக் கஷ்டம் காரணமாகப் பராமரிக்க முடியாமல் விவசாயிகள் பல இடங்களில் விற்று விட்டிருக்கிறார்கள். அப்படியே கஷ்டப்பட்டு மீண்டும் அவைகளை வாங்கினாலும் அதற்கான தீவனம் கிடையாது என்ற நிலைதான் இருக்கிறது. எனவே கால்நடைகளுக்குண்டான தீவனத்தை மானிய விலையிலும் கடனாகவும்

இப்போது கொடுத்து பின்பு விவசாயிகளுக்கு விலைச்சல் ஏற்பட்டபிறகு அவர்களிடமிருந்து அதை வசூல் செய்ய வேண்டுமென்றும் நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் தற்சமயம், வேளாண்மைத் துறையின் மூலம் எண்ணெய் வித்துக்கள் என்கிற வகையில் கடலை, எள் போன்ற பொருள்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மையிலேயே விவசாயம் செய்கிற ஏழை விவசாயிகளுக்கு அது போய்ச் சேருவதில்லை. குறுக்கு வழியில் கடைகளுக்குத் தான் அவை போய்ச் சேருகின்றன. எனவே அதையும் விசாரணை செய்து, பரிசீலித்து தவறு நடக்கிற இடங்களில் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழையெளிய விவசாய மக்கள் சுமார் நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் கடன் வாங்கி கிணற்றை வெட்டுகிறார்கள். அந்த கிணற்றுக்கு மின் இணைப்பு கொடுக்க சுமார் நான்கு ஆண்டுகள் ஆகின்றன, ஆகவே கிணறு வெட்டிய உடனே மின இணைப்பு கொடுக்க வேண்டுமாய் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்,

அதுமட்டுமல்லாமல் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடியில் ஒரு வேளாண்மை ஆழ்குழாய் செயற் பொறியாளர் அலுவலகம் செயல்பட்டு வந்தது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு அதை எடுத்து விட்டார்கள். அந்த வேளாண்மை ஆழ்குழாய் செயற் பொறியாளர் அலுவலகத்தை உடனடியாக திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எங்களுடைய மாவட்டம் மிகவும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், கமுதி, கடலாடி, இராமநாதபுரம் போன்ற பகுதிகள் நீண்ட நாட்களாக புறக்கணிக்கப்பட்டு வந்த பகுதிகளாகும். புரட்சித் தலைவர் ஆட்சியில் ஒரு சில திட்டங்கள் அங்கே நிறைவேற்றப்பட்டு உள்ளன மேலும் எங்களுடைய பகுதியில் குடிதண்ணீர் கிடைக்காததால் அந்தப் பகுதியை மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி பெற்ற பகுதியாக மாற்றித்தர வேண்டுமாய் மாண்புமிகு தின்னிறைவு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், தற்சமயம் குடிநீரில் உப்பு மற்றும் உவர்ப்பு தன்மையுள்ள பகுதிகளில் வழங்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீரின் தன்மைநிலையையும், அளவினையும் மேம்படுத்தும் பொருட்டு, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப குழுமம் பின்தங்கிய மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தை தேர்வு செய்திருக்கிறது. அதற்காக இந்த அரசையும், மத்திய அரசையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்திற்காக தற்சமயம் இரண்டு கோடி ரூபாய் மத்திய அரசின் மூலம் இங்கு வந்திருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் இன்னும் எந்தவிதமான ஆரம்பக் கட்டப் பணிகளும் தொடங்கப்படவில்லை. அதை உடனே ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



உலக வங்கி உதவித் திட்டத்தின் மூலம் கமுதி, அபிராமம் பேரூராட்சிகளுக்கு குடிதண்ணீர் சப்ளை செய்ய கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அனுமதி கிடைத்தும் இன்னும் எந்தவிதமான வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை. பைப்புகள்தான் வாங்கப்பட்டிருக்கின்றன. அதைச் செய்து தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இராஜகம்பீரம் திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் நிறைவேற்றப்படவில்லை. பெரும் குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நீர் ஆதாரங்கள் எங்கே இருக்கின்றன என்பதை ஆய்ந்து பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை, அந்த ஆய்வுப் பணியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கொழுந்துறைத் திட்டம் இன்னும் ஆய்வில் உள்ளதாக அறிகிறேன். இந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் எல்லா கிராமங்களுக்கும் ஆழ்துளைகுழாய்கள் உள்ளன. அவைகள் எல்லாம் நல்ல முறையில் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. குடிநீர் வடிகால்வாரியத்திடம் இதற்குக் காரணம் கேட்டால் ஒன்றியத்தின் பொறுப்பிலே இருக்கிறது என்றும், ஒன்றியத்தைக் கேட்டால் குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறுப்பிலே இருக்கிறது என்றும் குறை சொல்லுகிறார்கள். ஆகவே அங்கேயுள்ள சிறு சிறு குழாய்களைக் கூட மராமத்து செய்ய முடியாத நிலையில் இவைகள் எல்லாம் நல்ல முறையில் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நல்ல முறையில் பராமரித்தால் நிச்சயமாக எங்களுடைய பகுதியில் ஓரளவிற்கு குடிநீர்ப்பற்றாக்குறையை போக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இந்தக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக கட்டப்படுகிற மேல்நிலைத் தொட்டிகள் எல்லாம் அரைகுறையாக கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு சில தொட்டிகளைக் கூட சரிவர இயங்க வைக்க முடியவில்லை. காரணம் முதலில் நிலத்தடி நீரை ஆய்வு செய்து தொட்டிகளை பிறகு கட்ட வேண்டும். ஆனால் முதலில் தொட்டிகளைக் கட்டுகிறார்கள்.

பிறகு பைப் லைன் போடுகிறார்கள். பிறகு குடிநீர் ஆதாரத்தைப் பார்க்கிறபோது தண்ணீர் இல்லாமல் போகிறது. அப்படி நிறைய மேல்நிலைத் தொட்டிகள் எங்களுடைய பகுதியில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கமுதி ஒன்றியத்தில் கீழமுடிமன்னார் கோட்டை ஊராட்சியை சேர்ந்த சிங்கம்பட்டி கிராமத்தில் போர் போட்டு மின் இணைப்பு கொடுத்தும், அங்கேயுள்ள மேல்நிலைத் தொட்டி செயல்படாமல் இருக்கிறது. இது குறித்து நான் தொடர்ந்து குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்களை அணுகியபோது பைப்பில் மண் மூடி விட்டது, அதை 'கம்ப்ரெஸ்ஸர்' வைத்து எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இதை கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே தண்ணீர் நிறைய இருக்கிறது. ஆகவே அந்தக் குழாயை துப்புரவு செய்தால் தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே அந்தக் குழாயை ரிப்பேர் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தற்சமயம் இராமநாதபுரம் ஒன்றியத்தில் குடி தண்ணீர் பிரச்சினை கடுமையாக உள்ளது. இராமநாதபுரம் நகராட்சியில் லாரிகள் மூலம்தான் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். லாரிகளின் மூலம் தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பதால் ஒரு சில பகுதிகளுக்கு தண்ணீர் இல்லாமல் போகிறது. அந்த நிலையைப் போக்க அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6-40)

மேலும் கையிறைப்பான், விசையிறைப்பான்களை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மராமத்து செய்து வருகிறது, இவற்றை கவனிக்க போதிய ஆட்கள் இல்லாததால் சிறப்பான முறையில் மராமத்து செய்யப்படவில்லை. இதற்கு முன்பு இருந்ததைப் போல குடிநீர் வடிகால் வாரியத்திடம் போதிய ஆட்கள் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கின்ற இரும்புமேல்நிலைத் தொட்டிகள் எல்லாம் போட்டதிலிருந்து இன்று வரை செயல்படவில்லை. குறிப்பாக என்னுடைய கிராமமான நீராவிகர்சல் குளத்தில் உள்ள இரும்பினால் செய்யப் பட்ட மேல்நிலைத் தொட்டி கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டு, ஒரு நாள்கூட நீர் நிரப்பப்படவில்லை என்று கூறி அவைகளை பராமரிப்பு செய்தாலே என்னுடைய தொகுதிக்கு போதுமான குடிநீர் கிடைக்குமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

* திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இயற்கையினுடைய கொடும் கோர தாண்டவமாடினாலும், கொடுமதி படைத்தவர்களால் ஏற்படும் இடையூறுகளானாலும், இவற்றை எல்லாம் சமாளித்து





இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனைகளையும், நல்ல அறிவுரைகளையும் கொண்டு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களாலே கொண்டு வரப்பட்டுள்ள வேளாண்மை, குடிநீர் வழங்கல் மற்றும் வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களை இணைத்து, ஒரு சில உணர்வுகளை சமர்ப்பித்து விடை பெறலாமென்று கருது கிறேன்.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மைத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது, பொருளாதாரத்தினுடைய உயர்வு தாழ்வுகள் நாட்டினுடைய வளர்ச்சியின் பிரதிபலிப்பாக அமையும். அதே நேரத்தில் இன்றைக்கு பருவ நிலை பாதகமாக இருந்தாலும், தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி கணிசமாக முன்னேறி யிருக்கிறது என்று பார்க்கும்போது விவசாயிகளின் சீரிய முயற்சி யையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசின் அணுகு முறையையும், வேளாண்மைத் துறை அமைச்சரவர்களின் நிர்வாக ஆற்றலையும் இதிலே பார்ப்பது நம்முடைய கடமை என்று நான் கருதுகிறேன், இன்றைக்கு ஏறத்தாழ 80 சதவிகிதம் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு 80 சதவிகிதம் விவசாயம் நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் விவசாயத்தை ஒரு கட்டாயக் கல்வியாக அளிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். 1 ஆம் வகுப்பிலே படிக்கும் மாணவன் மூன்றாம் வகுப்பிலே படிக்கும் நேரத்தில் கணிதம் எவ்வளவு முக்கியமோ, பல்வேறு பாடங்கள் எவ்வளவு முக்கியமோ அதைப்போல மூன்றாம் வகுப்பிலிருந்து விவசாயக் கல்வியை கட்டாயப் பாடமாக ஆக்கும் அளவுக்கு சூழ்நிலையை வகுத்திட வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கத்தின் சார்பாக விவசாயக் கல்லூரி நிறுவனங்கள் இல்லை. அந்தக் குறையைப் போக்கும் வகையில் குமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். மேலும் குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இருபோக விவசாயமும் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக் கிறது. நெற்பயிர் மட்டுமல்லாமல், தென்னை மரங்கள், ரப்பர் மரங்கள் போன்றவைகள் எல்லாம் சரிந்துவிட்டன. இதனால் குமரி மாவட்ட விவசாயம் மிகவும் தாழ்ந்த நிலையில், பாதிக்க பட்ட நிலையில் இருக்கிறது. இதைக் கண்காணித்து நீர் வரி, நில வரி, அனைத்து விவசாயக் கடன்கள் ஆகியவற்றை ரத்து செய்வதோடு, கூடுதல் மானியத்தோடு வட்டியில்லா விவசாயக் கடன்களை குமரி மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்க வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இன்றைக்கு நகர்ப்புறங்களை ஒட்டி இருக்கக்கூடிய வயல்களில் கட்டிடங்கள் எழுப்புகின்ற சூழ்நிலையும், தொழிற் சாலைகளை உருவாக்கும் சூழ்நிலையும் காணப்பட்டு வருகிறது. நகர்ப்புறங்களை ஒட்டியிருக்கும் விவசாய நிலங்களில் வீடு கட்டு வதற்கும், தொழிற்சாலைகள் தொடங்குவதற்கும் தடை விதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு காலத்தில் நாட்டை ஆண்டவர்கள் நெல்லைதான் எங்களுக்கு எல்லை என்று சொன்னது உண்டு. மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த தாயுள்ளம் கொண்ட தலைவன், தமிழகத்தின் நாயகன், 4½ கோடி ரூபாய் செலவில் குழித்துறையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கி, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதை வேகப்படுத்துவதோடு, ஏற்கெனவே கொளச்சல் பகுதிக்கு திட்டமிடப்பட்ட பணிகளும் விரைவுபடுத்தப்பட வேண்டும். உடனடியாக அதை நிறைவேற்ற உத்திரவு வழங்க வேண்டு மென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, மாம்பழத்தாறு அணைத் திட்டத்தை உருவாக்கி, அன்றைக்கு நம்முடைய அமைச்சர் பெருமக்கள் வந்து பார்த்துச் சென்றார்கள். அந்த அணை கட்டுவது மிகுந்த பலனைத் தராது என்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. எனவே மாம்பழத்தாறு அணைத் திட்டத்தை குடிநீர்த் திட்டமாக நிறைவேற்றித் தர வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள் கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு மேகங்கள் கறுத்திருக்கின்றன. என்றைக்கும் மழை வரலாம் என்று சூழ்நிலை இருக்கின்றது. எனவே இந்தச் சந்தர்ப் பத்தில் இந்த இயற்கை சூழ்நிலையில் செயற்கை மழைத் திட்டத்தை குமரி மாவட்டத்தில் உருவாக்கித் தருவதற்கு ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் சிறப்பான பணியினை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் குடிநீர் பொறுத்த வரையில் மாவட்டவாரியாக மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டுமென்று மற்றசட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களோடு என்னுடைய கருத்தையும் இணைத்துக் கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், 1972 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் ஒருவரை, அவர்கள் அரசு அலுவலர் அல்லாத இயக்குநராக நியமித்து இருக்கின்றார்கள். இன்றைக்கு விஞ்ஞானத்திலே பல்வேறு சூழ்நிலைக்கு வளர்ந்திருக்கிறோம். எனவே ஓய்வு பெற்றவருக்குப் பதிலாக இளைஞர்களுக்கு வாய்ப்பைக் கொடுப்பதோடு அந்த அரசாணையின் அடிப்படையிலே நம்முடைய மாவட்ட வாரியாக



பிரதிநிதிகளை, இயக்குநர்களாக நியமிக்கின்ற அந்தப் பணியினை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிகேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் முட்டம், கடியபட்டணம், பெருவிளை, வாணியக்குடி, கடாரங் குளம், மொட்டவிளை, கணபதிபுரம், சூரப்பள்ளம், தெருவிளை, சூரங்குளம், எறும்புக்காடு, ஆலங்கோடு, சைமன் காலனி போன்ற குடிநீர் திட்டங்களில் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்படாமலும் சிலவற்றில் கிணறே தோண்டப்படாமலும், சிலவற்றில் சிலவற்றில் பைப் லைன் போடப்படாமலும், சிலவற்றில் பணியே தொடங்கப்படாமலும், தொடங்கியவைகள் சீராக செய்யப்படா மலும் அரைகுறையாக ஓராண்டுக் காலமாக இருக்கின்றன. சென்ற ஆண்டு குடிநீர் வழங்க வேண்டிய திட்டங்கள், சில காரணங்களுக்காக, சில தடைகள் மூலமாக இன்றைக்கு இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் உள்ளன. அந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டும். மேலும் இன்றைக்கு பெத்தேல்புரம், செம்மவிளை, சேனவிளை, மண்டைக்காடு, மாவிளை, முகுந்தன் கிணறு, கனியங்குளம், நடுவூர்கரை, தெக்கந்தெருவிளை போன்ற குடிநீர் திட்டங்களை நடப்பு ஆண்டிலே நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடுமையான வறட்சி காணப் படுகிறது. அந்த வறட்சியைச் சமாளிக்கின்ற வகையில் போர்க் கால பணியாக இந்த அரசு செய்து வருகிறது. இதயபூர்வமான பாராட்டுக்களை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு பல்வேறுபட்ட பகுதிகளுக்கு குடிநீரை லாரிகளிலே கொண்டுவந்து கொடுக்கின்றார்கள். அந்த சூழ்நிலை உருவாக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் சில பகுதிகளிலேதான் கொடுக் கின்றார்கள். குமரி மாவட்டத்தில் அனைத்து வறட்சிப் பகுதி களுக்கும்லாரிகளில் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியின் காரணமாக ஆழ்துளை குழாய்கள், திறந்தவெளி கிணறுகள் போன்ற அத்தியாவசியமான பணிகள் வேகமாக நடை பெற்று வருகின்ற நேரத்தில், இன்றைக்கு அலுவலர்கள் பல இடங்களில் அவரவர்களுக்குத் தேவையான இடங்களிலே போட்டுக்கொள்கிறார்களே தவிர மக்கள் குறைகளைத் தீர்க்கின்ற வகையில் முழுவதுமாகச் செய்யவில்லை. சட்டமன்ற உறுப்பினர் களையும் அந்தப் பகுதி மக்களையும் கலந்தாலோசித்து ஆழ்துளை குழாய்களையும் திறந்தவெளி கிணறுகளையும் அமைத்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியைப் பொறுத்தவரையில், தூய்மையான உள்ளத்தோடும், தொலை தூரப் பார்வையோடும் இந்த ஆட்சி நடந்து வருகிறது, ஆனால் 1970–72 வரை விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் விஷயத்தில் பொன்னி எண்டர்பிரைசஸ் என்று சொல்லப்படுகின்ற நிறுவனத்தின் பெயரில் மிகப்பெரிய ஊழல்களை

மோசடிகளை கருணாநிதி நடத்தினார்கள் என்பது மட்டுமல்ல விவசாயத்திற்குப் பயன்படுத்தும் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்திட விவசாயப் பெருமக்கள் போராட்டம் நடத்திய போது அவர்களுக்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் நடத்திய துப்பாக்கிச் சூடு சம்பவங்களையும், கொக்கு குருவிகளைப்போல விவசாயிகளை சுட்டுக்கொன்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய கொடுமையான சம்பவங்களை நாடு இன்னமும் மறந்துவிடவில்லை என்று சொல்லி தொலை தூரப் பார்வையோடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நல்ல ஆட்சி நடந்திவருகின்றார்கள் என்பதைச் சொல்லி இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுகளைச் சொல்லி அமர்கிறேன். என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி.

*திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் குடிநீர் பிரச்சினை இந்த சென்னை நகரத்திலே பெரும் பிரச்சினையாக இருப்பது பலருக்குத் தெரியும். இன்றைக்கு சென்னை நகரத்திலே 20 லட்சம் பேர்கள் இருந்து கொண்டிருக்கிற நேரத்திலே, தண்ணீர் பிரச்சினை ஏராளமாக இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியிலே 5-வது வட்டத்திலே புச்சம்மாள் தெருவிலிருந்து இருசப்பா தெரு வரை தண்ணீரே வருவதில்லை. பூண்டி தங்கம்மாள் தெருவிலே தண்ணீர் கிடைப்பதில்லை. அது மட்டுமல்ல. நாகூரான் தோட்டம், அண்ணா நகர், தேசியநகர், செரியன் நகர், அசோக் நகர் இந்தப் பகுதிகளிலே எல்லாம் தண்ணீர் வராதது மட்டுமல்ல, கழிவு நீர் போவதற்கும் இடம் இல்லாமல் இருந்துகொண்டு இருக்கின்றது. அதிகமான தண்ணீர் தொட்டிகளை வைத்து வறட்சியைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6-50)

அடுத்து, 21—வது வட்டத்திலே ஆதி ஆந்திரர்கள் வாழ்கின்ற பகுதி, அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதி, அங்கே இருக்கின்ற தியாகப்பா செட்டி தெருவிலே எப்போதும் தண்ணீர் தேங்கியிருக்கிறது. எப்போதும் அங்கே தண்ணீர் தேங்கியிருக்கிறதே தவிர எப்போதும் தண்ணீர் வற்றியதேயில்லை. அங்கே ஓ.எச்.டி. ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அந்த மேல்நிலைத் தொட்டியிலே தண்ணீரே விடவில்லை. ஆகவே அதிலே தண்ணீர் விட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அதே 21-வது வட்டத்திலே மேல்நிலைத் தொட்டி ஒன்று கட்ட வேண்டுமென்று சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரிய தலைவர் அவர்களிடத்தில் கோரிக்கை விடுத்தோம். அதன் தலைவர் திரு. ஜேப்பியார் அவர்களும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்



கொண்டிருக்கிறார்கள். மேலும் 2 வது வட்டத்திலே இருக்கின்ற நேத்தாஜி நகர், வினோபாஜி நகர், பட்டேல் நகர், சஞ்சய் காந்தி நகர், இந்திரா காந்தி நகர், சாஸ்திரி நகர், இராஜசேகரன் நகர் ஆகிய பகுதிகளிலே குடிநீர் இல்லாமல் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல் கழிவு நீர் போவதற்கான வடிகால் வசதியில்லாமல் கழிவு நீர் அங்கே தேங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 7-வது வட்டத்திலே உள்ள ரத்தினசபாபதி தெருவிலே மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி எப்போதும் மழை நீரால் அசுத்த நீர் தேங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல 20-வது வட்டத்திலுள்ள போஜராஜ நகரில் குடிநீர் இல்லாமல் பெண்கள் தெருவிலே குடங்களை எடுத்துக்கொண்டு கூட்டம் கூட்டமாக அலைகிறார்கள். காலையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் பார்க்கின்றபோது 200 பேர், 300 பேர் சாலையிலே தண்ணீருக்காக போய்க்கொண்டிருக்கிறார்கள். போஜராஜ நகர் தெருவிலே குடிநீர் தொட்டி வைக்க முடியவில்லை. அந்தத் தெருவின் உள்ளே லாரிகள் போக முடியவில்லை. அங்கேயுள்ள மக்கள் இதன் காரணமாக பெரும் துன்பத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதுபோல 17—வது வட்டத்திலேயுள்ள சுப்பராயன் செட்டி தெருவிலே கழிவு நீர் போக வழியில்லாமல் இருக்கிறது. இதன் காரணமாக அங்கேயுள்ள வீடுகளிலே மலங்கள் மிதக்கின்ற காட்சிகளைப் பார்க்கிறோம். ஏன் இந்தக் கொடுமை? எதற்காக இப்படி நடக்கிறது என்று கேட்டால் அங்கேயிருப்பவர்கள் சிறிய பைப்புகளை மாற்றி பெரிய பைப்புகளை போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எப்போது போடுவார்கள்? எந்தக் காலத்தில் போடுவார்கள்? இந்தக் காலத்தில் அது நடைபெறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

அடுத்து, 19-வது வட்டத்திலே தண்ணீர் இல்லாமல் மக்கள் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டு, கோரத்திற்கும் கொடுமைக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அண்ணா பூங்காவிலே ஒரு பம்பிங் ஸ்டேசன் இருக்கிறது. அங்கே நம்பர் 1 என்கிற ஓர் ஏரியா இருக்கிறது. அதற்கு தண்ணீர் வழங்குவதற்காக என்று 11 லாரிகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த 11 லாரிகளில் 2 ரிப்பேர். ஒரு லாரியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தண்ணீர் வருகிறது. அந்த வட்டாரத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கின்றவர்களுக்கு மணலியிலிருந்துதான் தண்ணீர் வருகிறது. மீதி இருக்கின்ற 8 லாரிகளின் மூலமாக அங்கேயிருக்கின்ற மக்களுக்கு தண்ணீர் முறையாக வழங்குவதேயில்லை. இரண்டு நாளைக்கு ஒரு தடவை தண்ணீர் வருகிறது, அது எப்படி சரியாக இருக்கும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல் புதிதாக லாரி வாங்க வேண்டுமென்று ஆய்வு ஒன்று இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். ஆனால் இந்தக் காலத்திலே போர்க்கால அடிப்படையிலே காரியங்களைச் செய்தாக வேண்டும். சென்னை நகரிலே தண்ணீர் இல்லாமல் மக்கள் கொடுமையாக பாதிக்கப்

பட்டிருக்கிறார்கள். கடுமையான வறட்சி வந்துகொண்டேயிருக்கிறது. தண்ணீர் பஞ்சம் என்றைக்குமே தீரவில்லை. இங்கே இருக்கிற நிலைமைகளைப் பார்க்கிறபோது ஒன்றைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை நகரிலே வடிகால் சரியாக இல்லை. சாக்கடை நீர் சரியாகப் போவதில்லை, குடிநீரும் சரியாக கிடைக்கவில்லை. மாறி மாறி வருகின்ற கால கட்டத்தைப் பார்க்கின்றபோது மிக்க வேதனையான இன்னொரு சம்பவமும் நடைபெற்றிருக்கிறது.

இந்த ஜனவரி மாதம் 1 ஆம் தேதியிலிருந்து 1 ரூபாயாக இருந்த வரியை 10 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அங்கே கடை வைத்திருப்பவர்கள், சாதாரண பெட்டிக் கடை வைத்திருப்பவர்கள் கூட 60 ரூபாய் கட்ட வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த வரியையும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் வரவில்லை. இந்நிலையில் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற செய்தி அதிர்ச்சியாக இருக்கிறது.

அடுத்து, குடிநீருடன் வடிகால் வாரியத்தின் கழிவு நீரும் கலக்கிறது. இதனால் மஞ்சள்காமாலை நோய் வருகிறது. வெயில் காலம் வந்த உடனே மஞ்சள்காமாலை நோயும் அதிகமாக வந்து விடுகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட பைப்புகள் துருப்பிடித்து சாக்கடை நீர் அதனுடன் கலந்து விடுகிறது. துர்நாற்றம் வீசுகின்ற அந்தத் தண்ணீரை குடிக்கின்ற நேரத்திலே மஞ்சள்காமாலை நோய் வருகிறது. ஆகவே, அந்த பைப்புகளை மாற்றியாக வேண்டும்.

இதற்கு மேலாக எத்தனையோ விவகாரங்கள் இருக்கின்றன. இந்த அரசில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படங்களிலே நடிக்கின்றபோது அரசிடத்திலே, ராஜாங்கத்திலே நடைபெறுகின்ற குற்றங்களைக் கண்டுபிடிக்க மாறுவேடம் போடுவதை சினிமாவிலே பார்த்திருக்கிறோம். நான் இந்த சபையிலே சீனியர் அமைச்சர்களாக இருப்பவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். தயவு செய்து சென்னை நகரைச் சுற்றி வாருங்கள். மாறு வேடத்திலே வாருங்கள். அமைச்சர் வருகிறார் என்று சொன்ன உடனே அதிகாரிகள் தண்ணீரை விடுகிறார்கள், பைப்பை திறந்து விடுகிறார்கள், பிரஷர் அதிகம் கொடுக்கிறார்கள். தண்ணீர் பஞ்சம் இல்லையென்று சொல்கிறார்கள். இங்கே இருக்கின்ற சீனியர் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து மாறுவேடம் போட்டு சென்னை நகரை சுற்றி வாருங்கள். அப்படியானால்தான் சென்னை நகரிலே இருக்கின்ற உண்மையான நிலவரம் தெரிய வரும். சென்னையை சிங்கார சென்னை என்று சொல்லியிருக்கிறீர்கள். இது நாறிப்போய்விட்டது. இதை சீர்திருத்த முடியுமா என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலே மிகச் சிக்கலாக இருக்கிறது. ஆகவே, தண்ணீரும் சரியாக இல்லை; சாக்கடையும் சரியாக போகவில்லை





ஒரு காலத்திலே சொன்னார்கள், காங்கிரஸ் ஆட்சியைப்பார்த்துச் சொன்னார்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பாலாறு ஓடும், தேனாறு ஓடும் என்று. ஆனால் இன்றைக்கிருக்கின்ற நிலையில் பாலாறும் ஓடவில்லை, தேனாறும் ஓடவில்லை, சாக்கடை நீர்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. நான் யாருடைய மனத்தையும் புண்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. உள்ளத்தில் இருக்கின்ற வேகத்தை, மக்களிடத்திலே இருக்கின்ற இதயத்தின் குமுறலை இதன் வாயிலாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். லாரிகள் இன்னும் அதிகமாக வேண்டும். போர்க்கால அடிப்படையிலே இந்தப் பிரச்சினைகளை அணுக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, 1967 ஆம் ஆண்டுக்குப் பின்னாலே திராவிட பாரம்பரியம் வந்த பிறகு இருபதாண்டுக் காலமாக சென்னை நகர குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. அப்படிச் சிந்திக்கவில்லை என்று சொல்வது மட்டுமல்ல, முதன்முதல் வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், காங்கிரஸ் ஆட்சிக்குப் பின்னாலே. அந்த வீராணம் திட்டம் 25 கோடி ரூபாய்க்கு மேலே பணத்தைப் பாழ்படுத்தி விட்டு கயிற்றிலே தொங்கிவிட்டது. கயிற்றில் தொங்கிய வீராணம் திட்டத்திற்குப் பிறகு பிறகு வந்த ஆட்சியாளர்கள் கட்டளைக் கால்வாய்த் திட்டத்தை உருவாக்கினார்கள். கட்டளைக் கால்வாய்த் திட்டம் பாதியிலேயே நின்றுவிட்டது. அதற்குப் பின்னாலேதான் கிருஷ்ணா நதி திட்டம் வந்தது. அன்னை பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் முயற்சியாலே, அவர்களின் உடன்பாட்டோடு அந்தத் திட்டத்தை உருவாக்கினார்கள். 250 கோடி ரூபாயிலே இந்தத் திட்டத்தை உருவாக்கி, 1983 ஆம் ஆண்டிலே செய்யப்பட்டு, மூன்றாண்டுக் காலத்திற்குள்ளாக முடித்துவிடுவோம் என்று சொல்லி, இப்பொழுது நேற்றைக்கு முன்தினம் நம்முடைய நிதியமைச்சரவர்கள் சொன்னார்கள், 49 கோடி ரூபாய் ஆந்திராவிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. மெத்த மகிழ்ச்சி. ஆனால் அவர்கள் சொல்லும்பொழுது கூறினார்கள், 250 கோடி ரூபாயிலே உருவாக்கப்பட்ட திட்டம் 600 கோடி ரூபாயாக ஆக்கப்பட்டுவிட்டது. 600 கோடி ரூபாய்க்கு ஆக்கப்பட்ட பிறகு அது முடியுமா என்று சொன்னால், பக்கத்திலே இருக்கின்ற ஆந்திரா அரசு, அதற்குப் பக்கத்தில் மகாராஷ்டிரா அரசு, அதற்குப் பின்னாலே இருக்கின்ற கர்நாடக அரசு எல்லாம் சேர்ந்து பெருந்தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கிறது. இந்தத் தொல்லைகள் போக்கப்படுவதாலே திட்டம் நிறைவேற்றப்படுமா என்று சொன்னால், ஆந்திர அரசிலே இருக்கின்ற சீனிவாச ரெட்டியார் என்ற அமைச்சரவர்கள் நாளுக்கு ஒரு காரணத்தைச் சொல்லி, நாளுக்கு ஒருவிதமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சரவர்களும், பக்கத்திலே இருக்கின்ற ஆந்திர முதலமைச்சர் திரு. என்.டி.ஆரும் பேசுவதாகக் கூடினார்கள். ஆனால் பேசவில்லை. நம்முடைய முதலமைச்சருக்கு உடல்நலம் சரியில்லை என்று நிதியமைச்சரவர்கள்

அறிக்கைவிட்டார்கள். அதற்குப் பின்னாலேயாவது பேசினார்களா
என்றால், அண்ணனும் தம்பியும் ஆட்சி, இராமனும் இராமனும்
ஆள்கிறார்கள், இந்த இரண்டு இராமனும் கூடுகின்ற நேரத்தில்
சென்னை நகருக்கு குடிதண்ணீர் வந்துவிடும் என்று சென்னை
யிலே இருக்கின்ற மக்கள் மிகத் தாராளமாக எண்ணினார்கள்.
தாராளமாக நல்லதொரு கனவு உலகத்தைச் சிந்தித்தார்கள்.
ஆனால் அந்தக் கனவு கானல் நீராகப் போயிற்றே தவிர
வேறொன்றும் செய்ய முடியவில்லை. இந்தத் திட்டம் இப்படியே
போகுமானால் எத்தனை ஆண்டுகளானாலும் இது நடைபெறுமா
என்று எனக்குத் தெரியவில்லை. இந்தத் திட்டம் ஆயிரம் கோடி
ரூபாய்க்குப் போய் நிற்கும். இதற்கு முன்னாலே ஒரு திட்டத்தை,
காவிரித் திட்டத்தைப் பற்றி இன்றைக்கும் கர்நாடக அரசுடன்
உடன்பாடு பேசிக்கொண்டு, தீர்வு கண்டு கொண்டிருக்கிறோமே,
அதுமாதிரி இந்தத் திட்டத்தையும் தயவுசெய்து கொண்டுவர
வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். 250 கோடி ரூபாயிலே
தொடங்கப்பட்ட திட்டம் 1000 கோடி ரூபாயிலே நிற்குமானால்
இதைப்பற்றி மத்திய அரசினுடைய நிலைமை என்ன? பக்கத்திலே
இருக்கின்ற மாநில அரசுகளினுடைய நிலை என்ன? ஆந்திர
அரசினுடைய நிலை என்ன? நாம் என்ன செய்திருக்கிறோம்
என்பதைப்பற்றித் தயவுகூர்ந்து அமைச்சரவர்கள் இங்கே ஒரு
வெள்ளை அறிக்கையை வைத்து, அதன்மீது விவாதம் நடத்த
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே கிராம
நீர் வழங்கும் திட்டத்திற்கு 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு,
10,900 குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி அளிக்க திட்ட
மிடப்பட்டிருக்கிறது என்ற கருத்து வரவு செலவிலே குறிப்பிடப்
பட்டிருக்கிறது. 2,834 குடியிருப்பு பகுதிகளுக்கு பாதுகாக்கப்
பட்ட தண்ணீர் வழங்கப்பட்டு, நடப்பாண்டிலேயும், அடுத்த
ஆண்டுகளிலேயும் ஆண்டுதோறும் 2,225 குழாய் பைப்புகள் மூலம்
பகுதி குடிநீர் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.
ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 3-லே, 1986-87
ஆம் ஆண்டுக்கு, அதாவது, கடந்த ஆண்டுக்கு 5,000 குடியிருப்
புகளுக்குக் குடிநீர் வசதி செய்துதர தீர்மானிக்கப்பட்டது என்று
சொல்லப்பட்டிருக்கிறது. 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதி
வரை 3,479 குடியிருப்புகளுக்கு மட்டும் குடிநீர் வசதி செய்து
தரப்பட்டுள்ளது என்றால், 5,000 என்று சொல்லி, 3,479 என்று
சொன்னால் மீதியிருக்கின்ற காலத்திலே ஏன் செய்யமுடியவில்லை?
அதற்கு என்ன பின்னணி? யார் தடுத்து நிறுத்தினார்கள்?
இதிலே மத்திய அரசிடம் வாங்கவேண்டிய அதிகாரம் இல்லை.
மாநில அரசின் அதிகாரத்திற்குட்பட்ட காரணத்தால், இந்தக்
குடியிருப்புகளுக்கு ஏன் இவர்கள் நிறுத்திவிட்டார்கள்? இந்த
நிலைமை உருவானால் நாட்டிலேயும், சென்னையிலேயும் குடிநீர்ப்
பஞ்சம் அதிகமாகிவிடும். எனவே, இந்த நிலையில் சென்னைக்கு
என்று ஒரு பெரிய மாஸ்டர் பிளான் போடுங்கள். சென்னையிலே
எல்லாம் நன்றாக இருக்க வேண்டுமென்று எல்லோரும் விரும்பு



கிறோம். சென்னை நகரத்திலே கோட்டை இருக்கிறது.
செயலகம் இருக்கிறது. இது தலைமைப் பீடம். தமிழகத்தின்
தலைநகரமாக இருக்கின்ற சென்னை சீரழிந்து விட்டது, தண்ணீர்
இல்லை என்று சொன்னால் இது அவலக் கேடாக இருக்கிறது.

(இரவு 7-00)

இன்னொன்றையும் சொன்னார்கள். அது ஒரு செய்திதான்.
அது உண்மையா என்று தெரியாது.

** ** **

என்று சொல்வது உண்மையா என்பது தெரியாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** **
** **
என்பதிலிருந்து
என்ற பகுதிவரை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டு
மென்று உத்தரவிடுகிறேன்.

திரு எஸ். வேணுகோபால் : துணைத் தலைவரவர்களே, நான்
குறிப்பிட விரும்புவது குடிநீர்ப் பிரச்சினை என்பது மிக முக்கிய
மான பிரச்சினை. ஆகையால் ஆங்காங்கே இருக்கின்ற சட்ட
மன்ற உறுப்பினர்களையும் அந்தந்தப் பகுதியில் செயல்படுகின்ற
குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளையும் அழைத்துப் பேசுங்கள்.
மக்கள் பிரதிநிதிகளோடு கலந்து பேசி முடிவு செய்யுங்கள்.
அதிகாரிகளுக்கு மக்களுடைய பிரச்சினை என்ன என்பது சரியாகத்
தெரியாது. மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் அதிகாரி
களிடம் கேட்டால், என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டால்
லாரிகள் இன்னும் வாங்கப்படவில்லை; இரும்புத் தொட்டிகள்
இன்னும் செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். மக்கள்
பிரதிநிதிகளைக் கூட்டி, மக்களுடைய எண்ணங்களைத் தெரிந்து
கொள்ள விவாதித்தால்தான் குடிநீர் பிரச்சினைத் தீர்க்கப்பட
ஏதுவாக இருக்கும். அதற்கு இந்த அரசாங்கம் முன்வர
வேண்டும். அந்தவகையில் செயல்பட்டு, மக்களுடைய குடிநீர்ப்
பிரச்சினையைத் தீர்த்தால் இந்த நாட்டு மக்கள் இந்த அரசாங்
கத்தைப் போற்றுவார்கள். தண்ணீர் பஞ்சம் என்று சொல்லி
விட்டால் நாட்டு மக்கள் கண்ணீர் நின்றுவிடாது. நாடு வாழ,
நாட்டு மக்கள் சுமுகமான வாழ்க்கை மேற்கொள்ள அரசு, நல்ல
முறையில் திட்டங்களைத் தீட்டிச் செயல்பட வேண்டுமென்று
கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் சொள்கிறேன்.
வணக்கம்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

*திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற வேளாண்மை, குடிநீர் வழங்கல், வேளாண்மை குறித்த மூலதனச் செலவு மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வேளாண்மைத் திட்டங்களான பயிர்ப் பாதுகாப்பு, உழவர் பயிற்சி நிலையங்கள், வேளாண் பள்ளிகள், களர் உவர் நிலங்களைச் சீர்படுத்துதல், உப்பு படிந்த நிலங்களைச் சீர்படுத்துதல், சொட்டு நீர் பாசனம் முதலான திட்டங்களைப் பசுமைப் புரட்சி காண செயல்படுத்துகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை வாழ்த்தி, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் அவர்கள் சொன்னார்கள். இராமாயணத்திலே வருகின்ற இராமரைப் போல இந்த இராமரை நம்பியவர்களுக்கு அந்த நம்பிக்கை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அன்றைக்கு இராமாயணத்தில் வந்த இராமரை நம்பியவர்களுக்கு எந்த அளவுக்கு நன்மை ஏற்பட்டதோ அந்த அளவுக்கு இன்றைக்கு நவீன இராமனாக விளங்குகின்ற புரட்சித் தலைவர் அவர்களை நம்பியவர்களுக்கும் நன்மை கிட்டும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தண்ணீர் பஞ்சம் என்று சொல்லிவிட்டால் மக்களுடைய கண்ணீர் நின்றுவிடாது என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். தண்ணீருக்காக கண்ணீர் வடித்த திண்டுக்கல் பகுதி மக்களின் கண்ணீரைத் துடைக்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏறத்தாழ 9 கோடி ரூபாய் செலவில் பேரணைத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை வெகு விரைவில் நிறைவேற்ற வேகமாக செயல்பட்டு வருகிறார்கள். இருந்தாலும் ஆங்காங்கே ஒரு சில இடங்களில் குழாய்கள் உடைந்து வருவதாகச் சொல்கிறார்கள். அன்புடன் அதை நல்ல முறையில் அமைத்து, வருகின்ற ஜுன் மாதத்திற்குள் நிறைவேற்றி முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வரும் ஜுன் மாதத்திற்குள் பணிகள் முடிந்துவிடும் என்று குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஜுன் மாதத்திற்குள் அந்தத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு தண்ணீர் கிடைக்க தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



தண்ணீர் பஞ்சம் என்று சொல்லிவிட்டால் மக்கள் கண்ணீர் நின்றுவிடாது என்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை நம்பினால் எதிரிகளுக்கும் இரக்கம் காட்டும் எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் உங்களுக்கும் கருணை காட்டுவார்கள்.

அடுத்து, திண்டுக்கல் பகுதி மக்களின் தண்ணீர் பிரச்சினையைப் போக்க நத்தம் பகுதியில் ஏறத்தாழ 16 கிணறுகளை வெட்டி, அந்த கிணறுகளின் மூலமாக தண்ணீருக்கு ஏற்பாடு செய்யும் திட்டம் ஒன்றைச் சொல்லியிருந்தார்கள். அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மூன்று கிணறுகள்தான் தோண்டப்பட்டிருக்கின்றன. மீதி இருக்கக்கூடிய நிதியை வைத்து திண்டுக்கல் முழுவதும் அடிகுழாய் போட்டு, அதன் மூலம் தண்ணீர் கஷ்டத்தைப் போக்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. திண்டுக்கல்லைச் சுற்றி இருக்கின்ற தாடிக்கொம்பு, கோவிலூர், அகரம், பாலகிருஷ்ணபுரம், குரும்பபட்டி, பள்ளப்பட்டு, சீலப்பாடி, பெரிய கோட்டை, செட்டிப்பட்டி, நாயக்கன்பட்டி, தாமரைப்பாடி, அடியானூத்து போன்ற பகுதிகளில் தண்ணீர் கஷ்டம் மிக அதிகமாக இருக்கிறது. வறட்சியால் வாடிக்கொண்டிருக்கிற மக்களுக்கு விரைவில் குடிநீர் வழங்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல்லைப் பொறுத்தவரையில் பசுமையான சிறுமலைப் பகுதியில் சிறுமலைப் பழம் புகழ் பெற்றது. தேனினும் இனியது எங்கள் சிறுமலைப் பழம் என்னும் புகழ்பெற்றது. அந்தப் பகுதி மக்களுக்கு அது மிகவும் பயனுடையதாக இருந்தது. இன்று அந்தப் பழங்களைத் தருகின்ற வாழைகள் எல்லாம் 'முடிசொத்து' என்னும் நோயினால் அடியோடு அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பத்து ஆண்டுகள் கழித்து திரும்பவும் அந்த வாழைகளைப் பயிர் செய்ய முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

கொல்லிமலைப் பகுதியிலிருக்கிற விவசாயிகளுக்கு வாழைக் கன்றுகள் கொடுத்து, புதிய திட்டத்தின்கீழ் அவர்கள் அதனைப் பெற்று, வாழைப்பயிர் செய்து வருகிறார்கள். இந்த நிலையில் நாம் கொடுக்கிற அந்த வாழைக்கன்றுகளுக்கு எந்தவிதமான பணமும் வசூல் செய்யாமல், மானியமாகவோ அல்லது கடனாகவோ கொடுத்து மலை விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா மாவட்டத்தில் அதிகமான அளவுக்குக் கரும்பு விளைகிறது. அந்தக் கரும்புகளை எல்லாம் அண்ணா மாவட்டத்திலல்லாமல் மதுரை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பாண்டியராஜபுரம் என்ற இடத்தில் உள்ள கரும்பாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டி இருக்கிறது. ஆனால் அங்கே இருக்கக்கூடிய தனியார் விவசாயிகள் அந்த பாண்டியராஜபுரம் மில்லுக்குக் கொடுத்திருந்தும் அதாவது 1972-லிருந்து அங்கே கொடுத்திருந்தும், அவர்கள் பணம் கட்டவில்லை என்று சொல்லி ஸ்டேட் வங்கி, கனரா வங்கி போன்றவற்றிலிருந்து வழக்கு போட்டிருக்கிறார்கள். கடனைப் பெற்றவர்கள் இன்றைக்கு கடனைப் பெற முடியாத சூழ்நிலை இருந்தாலும்கூட கடனைக் கொடுத்தவர்கள் மீதும் இன்றைக்குக் கனரா வங்கி, ஸ்டேட் வங்கி போன்றவற்றிலிருந்து வழக்கு தொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே யார் யார் பணம் கட்டியிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் கட்ட வேண்டியதில்லை என்று சொல்லி அரசு உடனடியாகத் தலையிட்டு வேண்டிய நிவாரணங்களை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தோட்டக்கலை உதவி இயக்குநர், மலைமேம்பாட்டுத் திட்டம் அவர்களுடைய அலுவலகம் திண்டுக்கல்லில் இருந்தது. ஆனால் இப்போது முடிக்கொத்து நோயால் பாதிக்கப்பட்டு வாழைகள் எல்லாம் அழிந்த பிறகு அங்கே மிளகு, ஆரஞ்சு, கொக்கோ போன்ற பலவிதமான விதைகளையும், செடிகளையும் இந்த மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக அங்கே இருக்கக்கூடிய ஏழை மலை விவசாயிகள் பெற்று வந்தார்கள். ஆனால் திடீரென்று இந்த அலுவலகம் இப்போது உத்தமபாளையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அண்ணா மாவட்டத்திலிருந்து அதாவது திண்டுக்கல்லிலிருந்து, பழனியிலிருந்து, வேடசந்தூரிலிருந்து உத்தமபாளையம் செல்வது மிகவும் கஷ்டமான காரியம். அந்தக் கஷ்டத்தை அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் அனுபவித்துக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே உடனடியாக அதைத் திரும்பவும் திண்டுக்கல்லுக்குக் கொண்டு வந்து அந்த விவசாய மக்களுக்கு, ஏழை மக்களுக்கு நல்ல முறையில் பயன்படுகிற அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நில உடமைத் திட்டம் என்று சொல்லி, அதாவது யு.டி.ஆர். ஸ்கீம் என்று சொல்லி ஒரு அருமையான திட்டம் இருக்கிறது. ஆனால் அது எந்த அளவுக்குப் பயன்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அதிலே இருந்தவர்கள் சரியான முறையில் நிலங்களை அளக்காத காரணத்தால் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குள்ளே வழக்குகள் ஏற்பட்டு, சண்டைகள் ஏற்பட்டு பல வழக்குகள் தாசில்தார் அலுவலகம் மற்றும் அங்கே இருக்கக்கூடிய கோர்ட்களில் நிலுவையில் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி, வழக்குகளை எல்லாம் தீர்க்கின்ற வகையில் ஒரு சிறப்பான திட்டத்தை ஏற்படுத்தி அங்கே விவசாயிகள் மத்தியில் இருக்கக்கூடிய குழப்பத்தை அகற்ற ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிறது. குறிப்பாக திண்டுக்கல்லில் இருக்கிறது. அதேபோன்று அங்கே இருக்கக்கூடிய எலுமிச்சை, மாதுளை, ஆரஞ்சு, அன்னாசி, மா, பலா போன்ற பழங்கள் அதிகமாக கிடைக்கக்கூடிய திண்டுக்கல் பகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை ஏற்படுத்தி, அந்தப் பழங்கள் கெட்டுப் போகாத அளவுக்கு குளிர்சாதன அறைகளை ஏற்படுத்தி அதன் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம் என்ற அந்தக் கழகத்தைப் பற்றி இங்கே சிறப்புற 4[illegible]-ஆம் பக்கத்தில் சொல்லியிருக்கிறோம். மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கின்ற தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஒப்புதல் கொடுத்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். திண்டுக்கல் பகுதி மற்றும் அதனைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளில் எல்லாம் மல்லிகைப்பூ அதிகமாக இருக்கிறது. மதுரை மல்லி என்பது பெயர்போனது. ஆனால் இன்றைக்கு மதுரையிலே இருந்து பிரிந்து திண்டுக்கல், அண்ணா மாவட்டமாக புதிதாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது; வாசனையாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மல்லிகைப்பூவிலிருந்து வாசனைத் தைலம் எடுக்கக்கூடிய—அரசால் போடப்பட்டிருக்கின்ற திட்டத்தின் அடிப்படையில்—தொழிற்சாலையை திண்டுக்கல்லில் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அண்ணா மாவட்டமான திண்டுக்கல்லில் விவசாயக் கல்லூரி நிறுவி அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கெல்லாம் பயன்படக்கூடிய அளவில் ஏற்பாடு செய்யவேண்டும். சிறுமலை அடிவாரத்தில் அதிகமான இடங்களில் சீதோஷ்ண நிலை மிக, மிக சிறப்பாக இருக்கிறது. அங்கே பழப்பண்ணை நிறுவி அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும் பயன்படக்கூடிய அளவில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நிலங்களைச் சீர்படுத்தக்கூடிய ஒரு திட்டத்தைப் பற்றி அண்மையில் சொல்லியிருக்கிறார்கள். 1986–87-ல் ஏறத்தாழ 200 ஏக்கர் நிலம் சீர்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 1987–88 ஆம் ஆண்டு 800 ஏக்கர் நிலம் சீர்படுத்தப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திண்டுக்கல் பகுதியில் தோல் கழிவு நீரால் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

(இரவு 7-10)

ஆகவே அந்த திட்டத்தின்கீழ் திண்டுக்கல்லுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை நீங்கள் எந்த வகைக்கு மாற்றி அமைப்பதற்கு சிறந்த திட்டம் ஏற்படுத்த வேண்டுமோ அதை நீங்கள் அன்புடன் கவனிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொண்டு, எனக்கு வாய்ப்பு கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இங்கே விவசாய மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு முன்பாக 1967 ஆம் ஆண்டு நடந்தது நினைவிற்கு வந்தது. அன்றைய தினம் நிரந்தரமான ஆட்சியாக இருந்ததை மாற்றியதே அரிசி பிரச்னைதான், நல்ல ஆட்சியாக இருந்ததை மக்கள் வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணமே அரிசி சரியாக கிடைக்கவில்லை என்பதுதான். இன்றைக்கு அதை மாற்றி, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அவர்களின் கீழ் இயங்கி வரும் அதிகாரிகளும் சிறப்பாக பணியாற்றியதன் விளைவாக அரிசி பிரச்னையே கிராமங்களில் இல்லாத அளவுக்கு இருப்பதை பார்த்து நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன், பாராட்டுகிறேன். (கரவொலி) (குறுக்கீடு) ஐ யாம் நாட் யீல்டிங். என்னைப் பேச விடுங்கள் அன்றைக்கும் நான் இங்கே இருந்த காரணத்தால், நினைவுக்கு வந்ததைச் சொன்னேன்.

இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே நமக்கு இருக்கிற சூழ்நிலை எல்லாம் மழை சரியாகப் பெய்யவில்லை என்பதுதான். மழை சரியாகப் பெய்யாததன் காரணத்தாலே விவசாயிகள் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. இந்த மழை கூட காலத்திற்கு தகுந்தாற்போல் பெய்கிறது. கோட்டையிலே மழை பெய்தால் எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் மழை இல்லை. திண்டுக்கல்லிலே மழை பெய்தால், திண்டுக்கல்லைச் சுற்றியுள்ள கிராமங்களில் மழை இல்லை. இப்படி அது பெய்வதே வேடிக்கையாக இருக்கிறது. இப்படி மழை கூட சரியாக ஒரு இடத்தில் கூட பெய்யாத காரணத்தால் விவசாயம் பெரும்பகுதி பாதித்து இருக்கிறது. விவசாயம் பெரும் பகுதி பாதித்திருக்கிறது என்றாலும் சில பகுதிகளில் 57 ஆயிரம் மெட்ரிக் டன் விளைந்திருக்கிறது. சில இடங்களிலே விளைச்சல் 40 சதவீதம் என்று வைத்திருக்கிறார்கள். அது தவறான கணக்கு ஆகும். விளையாத காரணத்தாலே பஞ்சம் ஏற்பட்டுள்ளது. விளைந்தாலும் கூட சில ஏரியாக்களில் சரியாகவில்லை. உதாரணம் தாமரைக் குளம் என்றகண்மாய் அங்கே 890 ஏக்கர், தாடாகுளம் 820 ஏக்கர் பாசனம் ஒன்று இருக்கிறது. அந்த நிலங்களுக்கு தண்ணீர் விட்டிருக்கிறார்கள். விவசாயம் செய்திருக்கிறார்கள். அதனுடைய கடைமடைப் பகுதியில் உள்ளவர்களுக்கு தண்ணீர் இல்லை. அந்தப் பயிர்கள் பச்சையாக போய்விட்டது. அதாவது கதிர் பரியாமல் அப்படியே புடையில்





நின்றுவிட்டது. இதனால் சில இடங்களில் நினைத்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. உற்பத்தி குறைவாக இருந்தால் நமக்குத் தேவையானதை வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறோம். அந்த நிலையை மாற்ற வேண்டும் என்றால், விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்கச் செய்யவேண்டும்.

என் வயதிற்கு இதுவரையில் என் தோட்டத்தில் தண்ணீர் இல்லை என்று நாங்கள் கண்டதே இல்லை. ஆனால் இப்போது கிணற்றை வெட்டினால் கூட தண்ணீர் மேலே வர மாட்டேன் என்கிறது. அடியிலேயே போய்க்கொண்டிருக்கிறது. வெட்ட வெட்ட கீழே போகிறது தண்ணீர். இதற்குக் காரணம் நிலத்தடி நீர் இல்லை என்று சொல்லுகிறார்கள். நிலத்தடி நீர் இல்லை என்றால், அதற்காக நான் மாண்புமிகு அமைச்சரை கேட்டுக் கொள்வதெல்லாம், 30, 40 ஏக்கர் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும். முன்பெல்லாம் 2 ஏக்கருக்குக் கூட ஒரு கிணற்றை வெட்டி விவசாயம் செய்வார்கள். அப்படி கிணறுகள் பக்கத்து பக்கத்தில் இருப்பதால் நான் தண்ணீர் பற்றாக்குறையே அதிகமாகியிருக்கிறது. ஆகையினால் 30, 40 ஏக்கர் ஒன்றாக எடுத்து, அதிலே எங்கே தண்ணீர் இருக்கிறது என்று பார்த்து, எப்படி அணை கட்டுகிறோமோ அந்த அளவுக்கு பெரிதாக ஒரு ராட்சதக் கிணறு போட்டு பெரிய மோட்டார் போட்டு, எல்லோருக்கும் தண்ணீர் விநியோகம் செய்கிற அளவுக்கு செய்தால்தான், உற்பத்தி ஓரளவு சரியாக வரும். விவசாயிகளுக்கும் உதவி செய்கிற சூழ்நிலை உருவாகும் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன். அதேபோல கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்று எத்தனை ஏக்கர் இருக்கிறதோ, அதற்கு ஏற்றாற்போல் மோட்டார் போட்டுக் கொடுக்கலாம். அப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் பயிர்களுக்கு வியாதி வருகிறது. எப்படி மனிதனுக்கு இன்றைய நாகரிகத்திற்கு ஏற்றாற்போல் பலவிதமான வியாதிகள் வருகிறதோ அது போல பயிர்களுக்கும் வியாதி வந்து அந்த விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. திராட்சையை எடுத்துக் கொண்டால் திராட்சை கொடி அப்படியே இருக்கிறது. மேலேபழம் இருக்கிறது. செடியின் அடிபாகம் காய்ந்து கொண்டே வருகிறது. இதை நான் இயக்குநர் அவர்களிடம் சொன்னவுடன் உடனடியாக நான் திரும்பிச் செல்வதற்குள்ளாக அதிகாரிகளை அனுப்பி, ஆட்களை அனுப்பி பார்க்கச் செய்து, இந்த நோயை எப்படி போக்குவது என்று விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லி, அந்த நோயைத் தடுப்பதற்கு நடவடிக்கையெடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் நான் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்தமாதிரி பல இடங்களில் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நல்ல மழை பெய்து தண்ணீர் இருக்கும் போது ஒரு ஏக்கரில் 10 ஆயிரம் கிலோ விளைந்தது என்றால் ஒரு கிலோ 4½ ரூபாய் விற்றுக் கொண்டிருந்த விவசாயிகள் இன்றைக்கு மருந்து அடிப்பதற்கே ஒரு ஏக்கருக்கு 3,500 ரூபாய் செலவு

செய்ய வேண்டியுள்ளது. அப்படி செலவு செய்தும் ஆயிரம் கிலோ கூட விளையவில்லை என்றால் அந்த விவசாயி எப்படி வாழ முடியும்? ஆகவே இதையெல்லாம் போக்குவதற்கு நாம் சொட்டு நீர்ப்பாசனத்தை சற்று தீவிரமாக அமல் நடத்தினால் சாலச்சிறந்ததாக இருக்குமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநிலம் முழுவதும் 20 லட்சம் ரூபாய் மானியம் கொடுத்து 400 விவசாயிகளை நாம் மேம்பாடு அடையச் செய்யலாம் சொட்டு நீர்ப் பாசனத்திலே என்று இருக்கிறது. ஆகவே நான் பரிவோடு கேட்டுக்கொள்வது இன்னும் சற்று அதிகமாக பணம் செலவு செய்தாலும் கூட ஜில்லாவாரியாக எடுத்து, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் 400 அல்லது 500 குடும்பங் களுக்கு இந்தச் சொட்டு நீர்ப்பாசனம் மானியம் கொடுத்து, சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்று பார்க்காமல் உதவவேண்டும். ஒரு விவசாயிக்கு கிட்டத்தட்ட 7,500 ரூபாய் வரைக்கும் நாம் அதிகபட்சம் மானியம் வழங்குகிறோம். அப்படிப்பட்ட நிலைமயில் இந்தச் சொட்டு நீர்ப்பாசனத்தை சற்று தீவிரப் படுத்துகிற நிலைமையை உருவாக்குவோமானால் உண்மையில் தண்ணீர் தட்டுப்பாட்டையும் போக்க முடியும், ஓரளவிற்கு விவசாயமும் பாதிக்காமல் இருக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து தேசிய பயிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவியெல்லாம் கிடைக்கிறது. அதை அதிகமாக அமல் நடத்தவேண்டும். நல்ல தரமான விதைகள் கிடைக்க வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்து கரும்பு விவசாயம். கரும்பு விவசாயம் என்பது ஒரு ஆண்டு முழுவதும் செய்ய வேண்டும். அதற்கு ஒரு ஏக்கருக்கு கிட்டத்தட்ட மூவாயிரம் ரூபாய் வரையில் செலவு செய்ய வேண்டும். மூவாயிரம் ரூபாய் செலவு செய்தாலும் கூட போது மான அளவிற்கு விலை கிடைப்பதில்லை. ஒரு டன் கரும்பு வெட்ட வேண்டுமென்றால் 12 ரூபாய் என்று 10 ஆண்டுகளுக்கு முன்னால் கூலி கொடுத்தோம். இன்றைக்கு ஒரு டன் கரும்பு வெட்ட வேண்டுமென்றால் 30 ரூபாய்க்கு குறைந்து யாரும் வர மறுக்கிறார்கள். ட்ராக்டரில் ஏற்றும்போது அதற்கும் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. உரமும் அதிக விலை கொடுத்துத் தான் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே 3000 ரூபாய்க்கு மேல் செலவு செய்தாலும் போதுமான அளவிற்கு விலை கிடைப்ப தில்லை. ரெக்கவரி 8.5 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால் அதற்கு ஓரளவிற்கு பாகுபாடு இல்லாமல் தமிழகத்தில் கூட்டுறவுத் துறையில் இருக்கிற மில்களிலும், அரசுத் துறையில் இருக்கிற மில்களிலும் ஒரேவிதமான விலை நிர்ணயம் செய்து, கிட்டத் தட்ட ஒரு டன்னிற்கு 250 ரூபாய் கிடைக்கிற சூழ்நிலையை உருவாக்கினால், அந்த கரும்பு விவசாயிகள் வாழ்க்கையில் முன்னுக்கு வர வழியிருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.



அடுத்து ஒரு டன் கரும்பு அரைத்தால் அதற்கு ஐந்து ரூபாய் செஸ் வரி போடுகிறோம். இந்த ஐந்து ரூபாய் வசூலிப்பது என்பது கரும்பு எடுத்துவருகிற சாலைகளைச் செப்பனிடுவதற்காக என்று இருக்கிறது. கரும்புத் துறை இயக்குநர் அவர்களும் இங்கே இருப்பார்கள் என்றே கருதுகிறேன். கரும்புச் சாலைகளுக்கு ஒதுக்குகிற பணத்தை இன்னும் கொஞ்சம் அதிகமாக செலவு செய்து கரும்பு கொண்டு வர வழியில்லாமல் இருக்கிற இடங்களை யெல்லாம் பார்த்து சாலை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழனி தொகுதியிலே சட்டப்பாறையிலிருந்து புதுக்கோட்டைக்கு (வழி) கம்மாளசமுத்திரம் வழியாக ஒரு ரோடு போட வேண்டும். அது கரும்பு எடுத்துவருகிற ஏரியாவாக இருக்கிறது. இந்தமாதிரி ரோடுகளையெல்லாம் பார்த்து செஸ் நிதியிலிருந்து போட்டுக் கொடுத்தால் கரும்பை வசதியாக எடுத்துவருவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தென்னை விவசாயம். நல்ல வளர்ந்த மரங்களில் கூட இப்போது ஏதோ ஒருவிதமான நோய் வந்து விடுகிறது. வளர்ந்த மரத்தினுள்ளே துவாரம் வருகிறது. அப்படி துவாரம் வந்த சில மாதங்களில் அந்த மரம் பட்டுவிடுகிறது. இது தவிர தண்ணீர் இல்லாமல் மரம் பட்டு விடுகிறது. இந்தமாதிரி எங்கே யெல்லாம் இருக்கிறதோ, அங்கேயெல்லாம் சொட்டு நீர்ப் பாசனத்தை தீவிரமாக அமல்படுத்தினால் அது சாலச்சிறந்ததாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பழ உற்பத்தி என்று எடுத்துக்கொண்டால், பழனி தொகுதியிலே ஆயக்குடியிலே கொய்யாப்பழம் விளைகிறது. ஒவ்வொரு பழமும் தேங்காய் அளவிற்கு பெரியதாக வருகிறது. நானே அந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தேன். அது மாதுளம் மரத்தைப் போல இருக்கிறது. ஒவ்வொரு மரத்திலும் 100 பழத் திற்குக் குறையாமல் இருக்கிறது. அங்கேயிருந்து பழங்கள் ஒரு நாளைக்கு 5,000-லிருந்து 10,000 கூடைகள் வரையில் ஆறு மாதத்திற்கு வெளியே வருகின்றன. அந்த விவசாயிகளுக்கு சரியான விலை கிடைப்பதில்லை. சரியான விலை கிடைக்காத காரணத்தால் 30 சென்ட், 50 சென்ட் என்று வைத்திருக்கிற அந்த சாதாரண விவசாயிகள் மிகவும் சிரமமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களின் அந்தப் பழங்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அந்த பழ உற்பத்தியாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் அங்கே 'ஃப்ரூட் புராசசிங் யூனிட்களை' ஆரம்பித்தால் அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 7–20)

அதுமாத்திரமல்லாமல், பெண்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்க வேண்டும். காய்கறி விலை இன்றைக்கு எங்கேயோ ஓடிக் கொண்டிருக்கிறது. இந்தக் காய்கறி விலையை சரி பண்ணு வதற்கு, பெண்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்கள் வீட்டு வேலை செய்து முடிந்தபிறகு, கொஞ்சம் இடம் இருந்தாலும் சரி, அவைகளைப் பயன்படுத்தி, பண்ட பாத்திரம் கழுவி தண்ணீரை ஊற்றுகிறோமே, அந்தத் தண்ணீரை ஊற்றி கூட, அந்த இடங்களில் காய்கறிகளை உற்பத்தி செய்வதற்கு அவர்களை ஊக்குவிக்கவேண்டும். பப்பாளி மரம், தென்னை மரம், வாழை மரம், முருங்கை மரம் போன்ற மரங்களை வைப்பதற்கான ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொடுத்தால் நல்லது. மிகச் சிறப்பான முறையிலே எந்தக் குடும்பத்தில் உள்ள பெண்கள் இந்தத் தோட்டங்களை வைக்கிறார்களோ, அவர்களுக்கு பரிசு கொடுக்கிற திட்டத்தையும் நாம் உருவாக்கிக் கொடுத்தால், அது இன்னும் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்லாமல், இப்போது நம்முடைய பொறியியல் துறை மூலமாக கருவிகளை வாடகைக்குக் கொடுக்கிறார்கள். எங்களை மாதிரி இருப்பவர்கள் கேட்டால், உடனே கொடுக் கிறார்கள். ஏன் என்றால் நாங்கள் எல்லாம் வி. ஐ. பி. என்ற காரணத்தாலே எங்களுக்கு ஓரளவிற்குக் கிடைக்கிறது. ஆனால் சாதாரண விவசாயிகள் கேட்கும்போது போதிய கருவிகள் இல்லாத காரணத்தால், அவைகள் கிடைக்கவில்லை. ஆகவே அதிகமான கருவிகளைக் கொடுப்பதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதாவது இந்த பவர் டிரில்லர், மருந்து தெளிப்பான்கள், போன்ற கருவிகள் எல்லாம் சரியாகக் கிடைக்கவில்லை. எனவே இந்தக் கருவிகள் எல்லாம் போதிய அளவில் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 15-3-1987-ஆம் தேதி நான் தினமணி பத்திரி கையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். மத்திய அரசு 26 வாசனைப் பொருட்களை ஏற்றுமதி செய்ய, ஏற்றுமதி பொறுப்பு வாரியம் என்ற ஒரு வாரியத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதாவது தண்ணீர் அதிகமாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை, கொஞ்சம் தண்ணீர் இருந்தால் கூட, அதிலே மிளகாய், மஞ்சள், மல்லி, சீரகம், பெருஞ்சீரகம், வெந்தயம், சோம்பு, சதகுப்பை, ஆவரை, வெள்ளைப்பூண்டு, கரிவேப்பிலை, புதினா, கடுகு, மாதுளை ஆகியவைகளை வைத்து, உற்பத்தியைப் பெருக்கி, மத்திய அரசு மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த மாதிரியான தண்ணீர் இல்லாமல் பற்றாக்குறையாக இருக்கிற பகுதிகளில்,



இப்படிப்பட்ட விவசாயத்தை நாம் செய்வதற்கு ஊக்குவித்தால் நல்ல பலனை நிச்சயமாக அளிக்கும். கொஞ்சம் நிலம் வைத்திருப்பவர்களுக்குக் கூட இதைப்பற்றி அவர்களுக்கு தெரிவித்து, அவர்களை ஊக்குவித்தால், அவர்கள் பலனை அடைய முடியும் என்பதை நாம் எடுத்துச் சொல்லவேண்டும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழில் துறையையும், விவசாயத் துறையையும் ஒன்றாக வைத்திருக்கிற காரணத்தால், அவர்களுக்கு நான் இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து போன அசெம்பிளியின்போது, அமைச்சராக இருந்த மாண்புமிகு காளிமுத்து அவர்கள், இந்த ஜாஸ்மினை வைத்து, அதாவது பூவிலிருந்து நல்ல வாசனை திரவியத்தைத் தயாரிப்ப தற்கு நாங்கள் ஆய்வு செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் அதைச் சிறப்பான முறையில் செய்து, அங்கே 500 ஏக்கர் பரப்பளவிலே உற்பத்தி செய்கிறார்கள். அதாவது கோ ஒன்று, பிச்சிப்பூ என்று சொல்லக்கூடிய ரகத்தை 500 ஏக்கரிலே உற்பத்தி செய்கிறார்கள். அந்த 500 ஏக்கரிலே உற்பத்தி செய்யக்கூடிய அந்த பூவிற்கு அரசாங்கமே ஒரு கிலோவிற்கு 10 ரூபாய் கொடுத்து எடுத்துக் கொள்கிறார்களாம். அப்படி எடுத்த, அந்த பூவிலிருந்து இந்தத் ஜாஸ்மின் என்ற தைலத்தைத் தயார் செய்து, ஃபாரினுக்கு அனுப்புகிறார்களாம். இதுநல்ல லாபம்தரக்கூடிய ஒன்று. இதிலே 7 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாய் வரைக்கும் நெட் இன்கம் கிடைக்கும் என்று சொன்னார்கள். எனவே இந்த மாதிரியான ஒரு நிலைமையை மாநிலம் முழுவதற்கும் ஏற்பாடு செய்து, தண்ணீர் குறைவாக உள்ள இடங்களிலே இப்படிப்பட்ட பயிர்களை உற்பத்தி செய்வதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு தண்ணீர்ப் பிரச்சனை. உண்மையிலேயே நான் ஒரு பெண்ணாக இருக்கிற காரணத்தாலே சொல்கிறேன். நாம் இப்போது கூட 8 ஆயிரம் கைப்பம்புகளை சாங்சன் செய்திருக்கிறோம். அப்படி சாங்சன் செய்து ஒவ்வொரு இடத்திலேயும் போடுகிறோம். ஆனால் இந்த போர் போடும் போது பல ஊர்களிலே, அதாவது என்னுடைய தொகுதியிலே உள்ள நல்லூர், மிடாம்பாடி, கான்டிகவுண்டன் புதூர் போன்ற இந்த மாதிரி இடங்களிலே எல்லாம், 2, 3 போர்கள் போட்டும் கூட தண்ணீர் கிடைக்கவில்லை. தண்ணீர் இல்லை. அவர்கள் தண்ணீர் இல்லாமல் அழுகிறார்கள். அப்படித் தண்ணீர் இல்லாமல் அழுகிற அந்த அரிசன மக்கள், சில இடங்களில் குடத்தை வைத்துக்கொண்டு, மிகவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் குழாய்கள் போடுவது என்பது உடனடி நிவாரணம். ஆகையினாலே இதை உடனடியான நிவாரணம் என்ற வகையில் அதிகமான குழாய்களைப் போடு வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இந்த காம்பிர ஹென்சிவ் ஸ்கீம் கொண்டு வருவதற்கு நமக்கு எங்கெல்லாம் வசதி வாய்ப்புகள் இருக்கிறதோ, எங்கெல்லாம் தண்ணீர் இருக்கிறதோ, அந்தப் பகுதிகளுக்கு நான் ஏற்கனவே 1985-லே இதைப்பற்றி விரிவாகப் பேசியிருக்கிறேன்—இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமுல்படுத்தவேண்டும். இதற்காக 10 லட்சம், 15 லட்சம் என்று நாம் செலவு செய்தால் கூட நல்லது. உதாரணமாகச் சொல்லவேண்டும் என்றால், என்னுடைய தொகுதியில் உள்ள, புஸ்பத்தூர், வயலூர், நல்லூர், சாமிநாத புரம், ஜி.வி.ஜி. நகர், காண்டிகவுண்டன் புதூர், மிடாப்பாடி, போன்று இருக்கிற இந்த 8 ஊர்களுக்கும் சேர்த்து, அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவோமேயானால், 10 லட்சம் ரூபாய் இதற்காகச் செலவு ஆகும். எனவே இப்படிப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்தால் பல ஊர்கள் இதனால் பயன் அடையும். இப்போது நாம் விடாமல் போர் போட்டுக் கொண்டு தான் இருக்கிறோம். அப்படி போர் போட்டுக் கொண்டிருந்தாலும் கூட, கீழே தண்ணீர் இல்லாமல் போய்க்கொண்டிருக்கிற காரணத்தாலே, இவைகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைக் கொண்டு வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து வழிவகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதை அமுல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் தொகுதி கூட இதனால் மிகவும் பாதித்து இருக்கிறது. அவர்கள் தொகுதியும், தண்ணீர் இல்லாமல் மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. வேடசந்தூரிலிருந்து தண்ணீருக்காக மக்கள் வருகிறார்கள்.

அண்ணா மாவட்டம் என்று அண்ணாவினுடைய பெயரை நீங்கள் வைத்து இருக்கிறீர்கள். அந்தப் பெயரை வைத்து இருக்கிற காரணத்தால் அங்கே எந்தப் பிரச்சினையும் இல்லாமல் செய்யவேண்டும். குடிநீர் பிரச்சினை இல்லாமல், பஸ் பிரச்சினை இல்லாமல், ரோடு பிரச்சினை இல்லாமல், பாலம் கட்டவேண்டும் என்று சொல்லுகின்ற பிரச்சினை இல்லாமல், இப்படி எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அந்த மாவட்டம் முழுமையும் தன்னிறைவு பெற்றுவிட்டது என்ற சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதிலே பலயிடங்களில் கண்மாய்களில் நிறைய ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. கண்மாய்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர் களுக்கே அவைகளை பட்டாவும் போட்டுக் கொடுத்து விட்டார்கள். இப்போது கண்மாய்களில் தண்ணீர் தேங்கிவிடுகிற நேரத்தில் அதைப் பிடுங்கிவிட்டு விடுகிறார்கள். விவசாயம் பாதிக்கிறது என்ற காரணத்தால். ஆகவே 1958 ஆம் ஆண்டு எந்த எந்த கண்மாய்கள் மாநிலம் முழுவதும் புறம்போக்காக



இருந்ததோ அவைகள் அனைத்தையும் மீண்டும் புறம்போக்காக ஆக்க வேண்டும் என்றும் மீண்டும் புறம்போக்காக ஆக்கி அதில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றி அதிலே மக்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்து அந்த கண்மாய்களை அகலப் படுத்தியும், ஆழப்படுத்தியும் செய்தால் அதிலே தண்ணீர் தேங்கக்கூடிய நிலைமை ஏற்படும். அதனால் நமக்கு நிறைய பெர்குலேஷன் வாட்டர் கிடைத்து கண்மாய்களில் தண்ணீர் இருக்கும். அதனால் கிணறுகளிலும் ஊற்று தண்ணீர் கிடைக்கும் சூழ்நிலை ஏற்படும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அமைச் சரவையும் இதற்கு எல்லாம் அதிகமான பணம் செலவு செய்வதற்கு முன்னுரிமை கொடுத்து செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு நான் இங்கே பல கண்மாய்களின் பெயர்களை கையில் வைத்து இருக்கிறேன். ஏற்கனவேயும் கொடுத்து இருக்கிறேன், அவைகளை இப்போது வாசிக்க நேரம் இல்லை. ஆகவே இந்த வேலைகளை எல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இதுவரை பேச அனுமதித்த என்னுடைய தம்பி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருஞானம் அவர்கள் தொடங்கி திருமதி பொன்னம்மாள் அவர்கள் வரை 24 உறுப்பினர்கள் இந்த வேளாண்மை, குடி நீர் வடிகால் வாரிய விவாதத்திலே கலந்து கொண்டு இருக் கிறார்கள். இதனுடைய முக்கியத்துவம் கருதி இதனுடைய விவாதம் மாலை நேரத்திலும் நடந்து இருக்கிறது. ஏறக்குறைய 4 மணி நேரத்திற்கும் அதிகமாக விவாதம் தொடர்ந்து நடந்து இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இந்த இலாகாவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் காட்டுகின்ற அக்கறையை எடுத்துக் காட்டுவதாக அமைந்து இருப்பதற்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். மழை இல்லை என்பதைநாம் எல்லாம் அறிவோம். இருந்தாலும் தமிழகத்திலே மழை ஆயிரம் மில்லி மீட்டர் வரை இருந்து வருவது வாடிக்கை. இப்போது இந்த ஆண்டு 800 மில்லி மீட்டர் வரையில்தான் மழை நமக்கு கிடைத்து இருக்கிறது. ஆகவே அந்த அளவுக்கு ஒரு பாதிப்பு நிலைமை இருக்கிறதே தவிர, பயப்படக்கூடிய அளவில் இல்லை என்பதை நான் எடுத்த எடுப்பிலேயே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 2

இந்த ஆண்டு எல்லோரும் நல்லபடியாக பாராட்டியிருக்கிறீர்கள். விவசாயிகளும் நன்கு பயிர் செய்து இருக்கிறார்கள். 57 லட்சம் டன் அரிசியை உற்பத்தி ஆக்கியிருக்கிறார்கள். சிறு தானியங்கள் 20 லட்சம் டன் உற்பத்தி ஆக்கியிருக்கிறார்கள். எக்டேருக்கு 2680 கிலோ நெல் உற்பத்தி ஆகியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நம்முடைய அரசு கொறடா மாண்புமிகு திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் பேசுகிறபோது தண்ணீர் இல்லாத நேரத்திலும் நீர் நிர்வாகம் நல்லபடியாக தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்று இருக்கிறது என்றும் தஞ்சை மாவட்டத்தில் அதிகபடியான நெல் விளைந்து இருக்கிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மழை பொய்த்துப் போகிற நேரத்தில் Neccssity is the mother of invention என்று சொல்லுவது போல் அவரவர்கள் எச்சரிக்கையாக ஜாக்கிரதையாக இருந்து பயிரை பாதுகாத்து நல்ல விளைச்சலை கொண்டு வந்து இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதோடு பயிர் வகைகள் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் விவசாயத் துறையில் ஒரு அபிவிருத்தியை நாம் கண்டு கொண்டே வருகிறோம். அதில் பல ஆண்டு காலமாக அந்த அபிவிருத்தி நடந்து கொண்டு வருவதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(இரவு 7.30)

1984—85-ல் பயிரிட்ட நிலப்பரப்பின் அளவு 25 லட்சத்து 20 ஏக்கராக இருந்தது. அப்போது 54 லட்சத்து 42 ஆயிரம் டன் விளைச்சல் இருந்தது. அப்போது 2120 கிலோ தான் ஒரு எக்டேரில் கிடைத்துக்கொண்டு வந்தது. ஆனால் இன்றைக்கு 1985-86-ல் 22 லட்சத்து 33 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது. 56 லட்சம் டன் நெல் கிடைத்து இருக்கிறது. எக்டேருக்கு 2507 கிலோ தான் அப்போது கிடைத்து இருக்கிறது. இப்போது 20 லட்சம் ஏக்கர்தான் பயிரிடப்பட்டு இருக்கிறது. 57 லட்சம் டன் நெல் நமக்கு கிடைத்து இருக்கிறது. எக்டேருக்கு 2750 கிலோ நெல் மகசூல் கிடைத்து இருக்கிறது. ஒரு ஆனால் இதில் இருக்கின்ற ஒரு சின்ன பிரச்சினை நிலப்பரப்பு குறைந்ததால் விவசாய கூலிகளுக்கு கிடைக்கிற வேலைவாய்ப்பு குறைந்து இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே இந்த வேலைவாய்ப்பை நாம் அதிகப்படுத்துகின்ற வகையில் மற்ற எல்லாக் காரியங்களையும் கவனித்து செய்துவருகிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 2] [திரு. க. இராசாராம்]

கரும்பு உற்பத்தியிலே ஏக்கருக்கு இந்தியாவிலே நம்முடைய
மாநிலம்தான் அதிக விளைச்சலைத் தருகிற மாநிலமாக இருக்
கிறது. இந்த ஆண்டு 24 இலட்சம் டன் வெல்ல உற்பத்தி
எதிர்பார்க்கப்படுகிறது. பருவ நிலை இயல்பாக இருக்கிறது.

அதைப்போலவே பயிர்களிலே நாம் அதிகமான விளைச்சலை
உருவாக்கவேண்டுமென்று திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறோம்.
அடுத்த ஆண்டு பருவ நிலை சரியாக இருக்குமேயானால்,
அதிகமாக உற்பத்தியை பெருக்குவதற்கு திட்டங்கள் இப்போது
திட்டப்பட்டிருக்கின்றன. விவசாய இலாகா அதற்கு நல்லபடி
யான நடவடிக்கைகள் எடுத்துவருகிறார்கள் என்பதை நான்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசியைப் பொறுத்தவரையில் அடுத்த ஆண்டு 66 இலட்சம்
டன் உற்பத்தி செய்யவேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்
டிருக்கிறது. சிறு தானியங்கள் 26.25 இலட்சம் டன் உற்பத்தி
செய்யவேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.
பயிர்கள் இந்த ஆண்டைவிட அதிகமாக பயிரிட வேண்டுமென்று
தெரிவித்துக்கொண்டிருக்கிறோம், ஏனென்றால் சத்துணவிற்கே
கூட நாம் வெளி மாநிலங்களிலிருந்து, வெளி நாடுகளிலிருந்து
கூட சில நேரங்களில் பயிர் வகைகளை வாங்க வேண்டிய சூழ்
நிலை இருக்கிறது. ஆகவே பயிர் விளைச்சலில் அதிக கவனம்
செலுத்தவேண்டுமென்று ஏற்கனவே விவசாய இலாக்காவினரிடம்
எடுத்துச்சொல்லி அவர்களும் அதற்கு இசைவு தந்து அடுத்த
ஆண்டு 4.7 இலட்சம் டன் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்
கிறது.

பருத்தி 5.60 இலட்சம் பொதி உற்பத்தி செய்வதற்கு திட்டம்
போடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 24 இலட்சம் டன்னாக
இருந்த கரும்பு அடுத்த ஆண்டிற்கு 26 இலட்சம் டன்னாக விளை
விக்கவேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.
நம்முடைய திருமலைச்சாமிக் கவுண்டர் பேசுகின்றபோது
கரும்புக்கு நல்ல விலை தரவேண்டுமென்றும், மற்ற மாநிலங்
களில் எல்லாம் அதிக விலை தருகிறார்கள் என்றும்
இங்கே மிகவும் குறைவாகத்தான் தருகிறார்கள் என்ற குற்றச்
சாட்டையும் சொன்னார்கள். அதற்குக் காரணம், அங்கேயெல்
லாம் 11 லிருந்து 12, 13 சதவீத அளவிற்கு கரும்புச் சத்துக்
கிடைத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் 9
லிருந்து 10 சதவீதம் வரையில் தான் சத்து கிடைக்கிறது.
ஆகவே அந்த அளவிற்கு விலை நிர்ணயிக்கப்படுகிறதே தவிர,
வேறல்ல.

நம்முடைய வேளாண்மைப் பல்கலைக்கழகம் புதிய புதிய
கரும்பு விதைகளை உற்பத்தி செய்து, அந்த விதைக் கரும்புகளை
விவசாயிகளுக்குத் தருகிறார்கள். அவர்களைப் பார்த்து
விவசாயிகள் பலன் அடைய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

விதை நெல் தரப்படுவதில்லை என்று பல பேர் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். விதைகளைப் பொறுத்தவரையில் இப்போது புதிய உத்தியை விவசாய இலாக்கா கையாள ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்ன செய்கிறோம் என்று சொன்னால், விதைகள் தருவதில், மானியங்கள், மற்றவைகள் எல்லாவற்றையும் தருகிறோம். அவை சரியாகப் போவதில்லை என்ற குற்றச்சாட்டு என் காதில் விழுந்தது. உடனடியாக அதிகாரிகளை அழைத்துப் பேசி, அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வராமல் இருப்பதற்கான தன்மைகளில் சில ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விதைகள் தரப்படுகின்ற நேரத்தில் அந்த ஊர்களில் இருக்கின்ற பஞ்சாயத்துத் தலைவர், அல்லது ஊராட்சி ஒன்றியத் தலைவர் அவர்களை வைத்துக்கொண்டு. சிறு விவசாயிகளுக்கு அவைகளைத் தரவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

அதைப் போலவே எந்தெந்த ஊர்களுக்கு விதை நெல் போகிறது, விதைக் கடலைப் போகிறது, விதைப் பயிர் போகிறது, பருத்தி விதைப் போகிறது, கரும்பு போகிறது என்பதையெல்லாம் ஆங்காங்கே அன்றாடம், கோவை வானொலி நிலையம், திருச்சி வானொலி நிலையம், சென்னை, திருநெல்வேலி வானொலி நிலையங்களிலே காலை நேரங்களிலே விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையில் எடுத்துச் சொல்லி வருவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே தவறுகள் குறைந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தவறுகள் ஏதாவது தனிப்பட்ட அதிகாரிகள் செய்கிறார்கள் என்று கண்டுபிடிப்பார்களேயானால், அது எந்த சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அவர் வந்து சொல்வார்களேயானால், அந்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் மாநில அரசானாலும் சரி, மத்திய அரசானாலும் சரி, ஏழை சிறு விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. ஆகவே அதிலே நாங்கள் எந்த தாட்சண்யமும் காட்டுவதற்குத் தயாராக இல்லை. அந்த வகையிலே இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்வது இதைக் கண்காணிக்க வேண்டுமென்று உங்கள் அனைவரையும் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றபடி தற்போது 381 தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் செயல் விளக்க மையங்களை அமைப்பதற்கு அடுத்த ஆண்டு திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை விளக்கிட 99 செயல் விளக்கங்கள் அமைக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 32,000 முன் பருவ முகாம்கள் கிராமங்களிலே நடத்துவதற்கு ஏற்பாடு நடை பெற்றிருக்கிறது. சம்பாவிலே உற்பத்தித் திறனை அதிகரிக்க 5





அணுகுமுறைகள் கொண்ட ஒரு சிறப்புத் திட்டம் செயல்பட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மும்மணித் திட்டம் தொடர்ந்து 198 இடங்களில் செயல்படுத்தப்படும். நுண்ணூட்டச் சத்தான சிங் சல்பேட் இடுதலை ஊக்குவிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றிருக்கின்றன. நிலவள பராமரிப்பில் மண் பரிசோதனைக்கு முக்கியத்துவம் கொடுத்து 9 96 லட்சம் மண் மாதிரிகள் ஆய்வுக்கு பரிந்துரைக்கப்படும். நீர் பராமரிப்பு முறைகளை உழவர்களுக்கு விளக்கிட சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் ரூ. 30 கோடி மான்ய அளவில் ஒரு திட்டம் செயலாக்கப்பட உள்ளது. ஏனென்றால் திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசுகின்ற போது சொட்டு நீர்ப்பாசனத்தால் ஏற்படுகின்ற தன்மைகளைப் பற்றி விவரித்தார்கள். இஸ்ரேல் நாடு சொட்டு நீர்ப்பாசனத்தில் நல்ல பயனை பெற்று வருகின்ற நாடு. ஆகவே இஸ்ரேல் நாட்டிலே மழை 20 மில்லி மீட்டர் தான் இருக்கிறது. அவர்களே இன்றைக்கு நல்லபடி பாசனம் செய்து கொண்டு இருக்கிறார்கள். குடிநீரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய நாடு, திரு. பாலச்சந்திரன் அவர்கள் சொன்னதைப் போல பாலைவனமாக ஆகிவிடாது என்பதைதான் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ரொம்ப ஜாக்கிரதையாக ஆழ் குழாய் கிணறுகளை போடுகின்றபோது எவ்வளவு தூரம் நிலத்தடி நீரை எடுக்க முடியும் என்பதைப் பார்த்துத்தான் போட்டுக் கொண்டு வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மானாவாரி சாகுபடியை மேம்படுத்த 450 ஆயிரம் ஏக்கர் பெரு விளக்கப் பண்ணைகள் அமைத்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்படும். மானாவாரி நிலங்களை அதிகபட்சம் உபயோகிக்க மரம் வளர்ப்பு முறைகளில் உழவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். 43 அரசு விதைப் பண்ணைகளில் 3625 டன்கள் ஆதார வித்துக்கள் உற்பத்தி செய்யப்படும். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் பேசுகின்றபோது இந்த வித்துக்களை எல்லாம் நேரடியாக எண்ணை ஆட்டுகின்ற, செக்கு ஆட்டுகின்றவர் களுக்கு கொடுத்து சில அதிகாரிகள் பணத்தை பெற்று விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட முறையிலே யாராவது நடந்து கொள்வார் களானால், அதைக் கண்டுபிடித்து சொல்வார்களானால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 18,520 டன் சான்றிதழ் பெற்ற நெல் விதைகள் 1248 டன் சிறு தானிய விதைகள் 2750 டன் பயறு விதைகள், 300 டன் பருத்தி விதைகள் கொள் முதல் செய்து விநியோகிக்கப்படும். 7.35 லட்சம் டன் தழை மணி மற்றும் சாம்பல் சத்துக்கள் கொண்ட இரசாயன உரங்கள் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நீலப்பச்சை பாசியாலே இன்றைக்கு பயிருக்கு நல்ல பாதுகாப்பு ஏற்பட்டதை விவசாயப் பெருமக்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே 1.10 இலட்சம் எக்டேரிலும், அசோலா 10,000

எக்டேரிலும் இட தேவையான உயிரின உரங்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக் கிறது. காவேரி டெல்டா பகுதியில் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ. 35 மதிப்புள்ள உரம் இடுவதைப் பற்றி பலபேர் குறிப்பாக திரு. உத்திராபதி அவர்கள் எல்லாம் பணமாக கொடுத்து விடுங்கள், பணமாக கொடுத்து விடுங்கள் என்று சொன்னார்கள். கணக்கு போட்டுப் பார்த்தால் ஒரு எக்டேருக்கு ஏறக்குறைய 350 ரூபாய் வரையில் உரங்களை வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே எல்லா விவசாயிகளும் உரங்களை வாங்கித் தான் ஆகவேண்டும் ஆகவே உரக்கூப்பனை கொடுப்பதன் மூலமாக நியாய விலைக்கு உரம் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. உரங்களை நாம் தராமல் பணமாகக் கொடுத்தால், அதன் பிறகு கள்ள மார்க்கெட்டிலே உரம் வாங்க வேண்டியிருக்கிறது என்ற குற்றச் சாட்டு ஒரு பக்கத்தில் வந்து சேரும். ஆகவேதான் 35 ரூபாய்க்கு தந்து கொண்டிருக்கிறோம். அதை 50 ரூபாய்க்கு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். எவ்வளவு தூரம் பணம் கொடுத்தால் நல்லது என்பதை எல்லாம் கணக்கு போட்டுப் பார்த்து, அரசாங்கம் பல முறை ஆராய்ச்சி செய்துதான் அந்த 35 ரூபாய்க்கு தந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். விவசாயிகளுக்கு அது கட்டுப்படியாகின்ற தன்மையிலேதான் தரப்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நெல் பயிரிலே புகையானைக் கட்டுப்படுத்த 30,000 எக்டேரில் 50 சத மானியத்தில் பரந்த அளவிலே மருந்து தெளிப்பதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

(இரவு 7-40)

அதே போன்று, நெற்பயிரில் சூலைநோயைத் தடுப்பதற்கு 40,000 எக்டேரில் 50 சத மானியத்தில் மருந்து தெளிக்கப் படும். 20,000 எக்டேரில் பச்சைத் தத்துப் பூச்சி ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இலை சுருட்டுப் புழுவைக் கட்டுப் படுத்த 25,000 எக்டேரில் மருந்து தெளிக்கப்படும். ஒரு இலட்சத்து 68 ஆயிரம் எக்டேரில் எலி ஒழிப்புத் திட்டம்செயல் படுத்தப்படும்.

எலி ஒழிப்புத் திட்டத்தைப் பற்றிக் கூட இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, இந்த எலி ஒழிப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இங்கே திரு. அண்ணாதாசன் அவர்கள் எலிகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். பயிர்களை நாசம் செய்யும் எலிகளை ஒழிப்பதற்காக இப்போது மானியமாக மூன்று இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட இருக்கிறது. மேலும், இந்தத் துறையின் மூலமாக எலி ஒழிப்புத் தீவிர இயக்கங்களை நடத்தி, வயல்களிலே உள்ள இலட்சக்கணக்கான எலிகள் அழிக்கப்பட்டிருக்கின்றன என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



விவசாயிகளுக்குத் தரமான உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் கிடைத்திட தரக்கட்டுப்பாடு திட்டங்கள் தீவிரப் படுத்தப்படும்.

களர் உவர் நிலச்சீர்த்திருத்தத் திட்டத்தின் கீழ், ஆயிரம் எக்டேர் நிலம் சீர்திருத்தப்படும்.

டென்மார்க் நாடு மூன்று கோடி ரூபாய் உதவி செய்ய முன் வந்திருக்கிறது. எதற்காக என்று கேட்டால், பெண் விவசாயி களுக்கு விவசாய நுட்பங்களில் தனிப் பயிற்சி அளிப்பதற்கு அவர்கள் அமைத்தர முன் வந்திருக்கிறார்கள். அதற்கான மையங்களை உருவாக்கி, பெண்களுக்கு அடுத்த ஆண்டு நல்ல நுட்பங்களை பயிற்றுவிப்பதற்கு இந்த அரசு முன் வந்திருக் கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

19 அரசு விதைப் பண்ணைகளில் ரூபாய் 37½ இலட்சம் செலவில் உள்ளமைப்புகளை செம்மைப்படுத்தப் புதிய திட்டம் செயல்படுத்தப் படவுள்ளது. அதேபோல் ரூ. 11 இலட்சம் செலவில் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் உள்ளமைப்புகள் செம்மைப்படுத்தப்படும்.

வேளாண்மையில் பிளாஸ்டிக்கின் உபயோகத்தினை விளக்கிட ரூ. 9 இலட்சம் செலவில் அரசு விதைப் பண்ணையில் செயல் விளக்கம் அமைக்கப்படும். பிளாஸ்டிக்கிலே பைகளை எல்லாம் செய்து, அதன் மூலமாக நல்ல அளவிற்கு பயிர் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

எண்ணெய் வித்துக்களைப் பற்றி இங்கு நிறைய பேர் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு, 18 இலட்சம் நெட்டை ரக தென்னங்கன்றுகளும், 7 இலட்சம் வீரிய ஒட்டு ரக தென்னங் கன்றுகளும் விவசாயிகளுக்கு வழங்க திட்டம் இடப்பட்டிருக் கிறது. 1987-88 ஆம் ஆண்டில், எண்ணெய் வித்து உற்பத்தியையும் 15.37 இலட்சம் எக்டேர் பரப்பளவிற்கு அதிகரித்து 17.8 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பல்கலைக் கழகம் 14 புதிய திட்டங்களை வேளாண்மையிலும், 4 திட்டங்களை கால்நடை அறிவியலிலும், மீன் அறிவியலில் ஒரு திட்டமும் நடைமுறைப்படுத்தவுள்ளது. அதோடு பால் வளத் துறையிலே ஒரு பயிற்சி–நான்காண்டுக் கால பயிற்சிப் படிப்பு ஏற்படுத்துவதற்கும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக ஏற்பாடு நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுடைய நலனுக்காக இப்போது வேளாண்மைத் தொழில் கழகம் என்று ஒரு கழகம் இருக்கிறது. அதன் மூலமாக 585 டிராக்டர்கள் — நம்முடைய பல உறுப்பினர்கள் சிறு விவசாயிகளுக்கு டிராக்டர்கள் தரப்படுவதில்லை; வி.ஐ.பி.க் களுக்குத் தான் தருகிறார்கள் என்ற குறைபாட்டை, திருமதி பொன்னம்மாள் அவர்கள் கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது எல்லோருக்கும் கிடைக்கத்தகுந்த வகையில் 585 டிராக்டர்கள் வாங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதைப் போலவே, 1,000 பவர் டிரில்லர்களை வாங்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதிகாரிகள் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். பவர் டிரில்லர்களை நிறைய வாங்கி, விவசாயத் துறையில் புதிய புரட்சியை உருவாக்கவேண்டும் என்று இந்த ஆட்சி திட்டமிட்டு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1987–88-ல் இலட்சத்து மூவாயிரம் மெட்ரிக் டன் உரங்களை விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. 1987–88-ல் 36 மெட்ரிக் டன் அளவு மீன்பிடி வலைகள் உற்பத்தி செய்து விற்பனை ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1986–87-ல் 2,410 மெட்ரிக் டன் சனோலா விற்பனையானது. 1987–88-ல் 2,750 மெட்ரிக் டன் சனோலா விற்பனை ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்குத் தேவையான 'எனெர்ஜி ஃபுட்' தயாரிப்புத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது. மாதம் ஒன்றுக்கு 750 மெட்ரிக் டன் சத்துணவு தயாரிக்கும் திறன் கொண்ட இரண்டு ஆலைகளை, ஒன்று மதுரையிலும், மற்றொன்று சென்னையிலும் நிறுவிட திட்டமிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்தின் மூலமாக 1988–89 ஆம் ஆண்டு, எதிர்காலத் திட்டப் பணிகள் பல போடப்பட்டிருக்கின்றன. வட்டார வேளாண் பொறியியல் மையங்களுக்கு கருவிகள் வழங்கல்; ஒரு வேளாண்மை பொறியியல் சேவைக் கூட்டுறவு மையத்திற்கு ரூபாய் 20,000 மதிப்புள்ள வேளாண் கருவிகளை வழங்கும் வகையில் ரூ. 6 இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்களுக்கு 1987–88 ஆம் ஆண்டில் சிறு வேளாண் கருவிகளாகிய பற்ற வைக்கும் மற்றும் துளையிடும் கருவிகள் வழங்கப்பட திட்டம் இடப்பட்டிருக்கின்றது.

மத்திய அரசு சார்புத் திட்டம்: விவசாயிகள் வேளாண்மை சேவை மையங்களை நிறுவும்படி மத்திய அரசு ஒரு திட்டத்தை இந்த மாநில அரசிற்கு அளித்திருக்கிறது. அந்த மத்திய அரசினுடைய திட்டத்தின் சார்பாக, 1989–90 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளுக்கு மத்திய அரசு அந்தத் திட்டங்களை, சேவை மையங்களை உருவாக்கவேண்டும் என்று அன்புக் கட்டளை இட்டிருக்கிறது. அதன்படி 38.40 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் மத்திய அரசின் பங்கு 11.21 லட்சமும், மாநில அரசு 8.76



லட்சமும், இணையத்தின் பங்கு 18 43 லட்சமுமாக ஒதுக்கி, மொத்த ஒதுக்கீடான 12.77 லட்சத்தில் மத்திய மற்றும் மாநில அரசு ஒவ்வொன்றிற்கும் 3.2 இலட்சமும், இணையத்தின் பங்கு 6.37 லட்சமும் ஆகும். இதேபோல, 1989–90 ஆம் ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும். அதன் மூலமாக பல மையங்கள் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்க இந்த அரசு திட்டம் தீட்டி இருக்கிறது. பம்புசெட்டுகள் சரி செய்வதற்காக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. 1986–87 ஆம் ஆண்டில் 400 பம்பு செட்டுகளை சரிசெய்ய ஒரு முன்னோடித் திட்டத்தின்கீழ் 4.2 லட்சங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தை செய்து முடிப்பதற்காக 6 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை வட்டம் — வட ஆற்காடு மாவட்டத்தில்; திருத்தணி வட்டம் — செங்கல்பட்டு மாவட்டத்தில்; சேடப்பட்டி வட்டம் — மதுரை மாவட்டத்தில்; திருப்புவனம் வட்டம் — பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில்; ஆத்தூர் வட்டம் — அண்ணா மாவட்டத்தில்; புல்லம்பாடி வட்டம் — திருச்சி மாவட்டத்தில் என்று திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மைப் பொறியியலில் 6,700 ஹெக்டேர் நிலங்களை சமப்படுத்த அடுத்த ஆண்டு திட்டமிடப்பட்டிருக்கிறது. 21 ஆயிரம் ஹெக்டேர் நிலங்களில் இயந்திர சாகுபடிப் பணிகள் மேற்கொள்ளவும், 5 ஆயிரம் குழாய் கிணறுகள் அமைக்கவும்; 3 ஆயிரம் வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைக்கவும், 59,220 ஹெக்டேர் பரப்பில் மண் வளப் பாதுகாப்பு மேற்கொள்ளவும், 74,000 ஹெக்டேரில் நீர் நிர்வாகப் பணிகள் மேற்கொள்ளவும், 3,000 ஹெக்டேர் பரப்பில் சுழற்சிப் பணிகள் மேற்கொள்ளவும், 200 கதிரடிக்கும் களங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டிருக் கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள், கதிரடிக்கும் களங்களை ஆங்காங்கே உருவாக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். தஞ்சையிலே பல களங்கள் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக் கின்றன. மேலும் களங்கள் பல பகுதிகளிலே உருவாக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

450 லட்சம் ரூபாய் செலவில் 400 கசிவுநீர்க் குட்டைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே கண்மாய்களிலும், ஏரிகளிலும் பலபேர் குடியிருப்புகளை உருவாக்கி அதிலே ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருக்கிற நிலைமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டுமென்று எல்லா கட்சிக்காரர்களும் பொதுவாக குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்தாலொழிய எதிர்காலத்திலே தண்ணீரை சேமித்து வைப்பதற்கு நமக்கு கண்மாய்கள்

கிடைக்காமல் போகக்கூடிய துர்ப்பாக்கிய நிலைமை வந்துவிடக் கூடும். ஏனென்றால் கண்மாய்க்கு தண்ணீர் வருகிற வரப்பிலே யெல்லாம் கால்வாய்களிலேயெல்லாம் குடியிருப்புகளை வேண்டுமென்றே கட்டி விடுகிறார்கள். ஆகவே தண்ணீர்வரத்து குறைந்து போய் விடுகிறது. கண்மாய்களை ஆழப்படுத்தினாலும் பயனற்ற தன்மை அடைந்து விடுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள் என்பதை நான் நம்புகிறேன். ஆகவே அந்த வகையில், அந்த ஆக்கிரமிப்புகளை எடுப்பதற்கு இந்த ஆட்சி வழிவகை செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மானாவாரி விவசாயத்தை மேம்படுத்த 8 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு மேற்கொள்ள 200 லட்சம் செலவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. விவசாயத்தை நவீனமாக்கும் வகையில் ரூ. 2,500 லட்சம் செலவில் 100 புல்டோசர்கள், 250 டிராக்டர்கள், 300 பவர் டிரில்லர்கள் வாங்க இந்தத் துறையிலே உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

உலக வங்கியின் நிதி நிறைய நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதிலே, கதிரடிக்கும் களங்கள் 394 கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 1987–88-ல் மேலும் 206 கதிரடிக்கும் களங்கள் ரூபாய் 60 லட்சம் செலவில் கட்டப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மலைப்பகுதி மேம்பாட்டின்கீழ் நிலச்சரிவால் பாதிக்கப்படும் பகுதிகளை ஆய்வு செய்ய 9.11 லட்சம் செலவில் ஒருங்கிணைந்த ஒரு புதிய திட்டமும், நீர்வடிப் பகுதிகளை ஆய்வு செய்ய 3.20 லட்சம் செலவில் ஒரு புதிய திட்டமும் துவங்கப்படும்.

தோட்டக் கலை, பணப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள், வாதுமை இனப் பயிர்கள், மலர் பயிர்கள் மற்றும் காப்பி, தேயிலை போன்ற பயிர்கள் அபிவிருத்தி பெற தோட்டக்கலைத் துறையால் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். 1979-ல் சுமார் 325 லட்சத்தில் துவங்கப்பட்ட இப்பணிகள் தற்போது 600 லட்சத்திற்கு உயர்ந்து இருக்கிறது. இந்தத் துறையின் மூலம் உயர் விளைச்சலைத் தரும் தரமான விதைச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இந்தக் குறிக்கோளை அடைய மாநிலம் முழுவதிலும் 54 பண்ணைகள், நிறுவப்பட்டு ஆண்டொன்றுக்கு சுமார் 35 லட்சம் செடிகளும்க் 6 டன் காய்கறி விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். பொன்னம்மாள் அவர்கள் பேசும்போது ஒன்றைக் பெண்களுக்கு எல்லாம் வீட்டிலே காயகறித் தோட்டம் பயிரிடுவதற்கு கற்றுக்கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள்.





(இரவு 7-50)

நேற்று மாலை இதே நேரத்தில்தான் அண்ணாநகரில் 1,000 வீடுகளில் காய்கறி பயிரிடும் திட்டத்தை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாக துவக்கி வைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அவர்கள் அதை ஒரு பயிற்சியாகவே அளித்து வருகிறார்கள். அதை மாநிலத்தில் இருக்கிற ஒவ்வொரு மாவட்டத்திலும் நீங்கள் விரிவுபடுத்த வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அரசுத் துறையில் அதற்கு அக்கறை செலுத்துகிறோம். அதற்குத் தேவையான விதைகளை இந்த இலாகாவே தந்து வருகிறது. அதுவும் மானிய விலையில் தந்து வருகிறது. தரமான விதைகள் தரப்படுகின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காய்கறி உற்பத்தியைப் பொறுத்தவரை முன்பெல்லாம் ஊட்டியில் முட்டைகோசு போன்ற இங்கிலீஷ் காய்கறிகள்தான் வரும். இப்போது எல்லா ஊர்களிலுமே எல்லாக் காய்கறிகளும் வருகின்றன. எனவே நாம் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நமது தாய்மார்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து காய்கறி உற்பத்தியை ஊக்குவிக்க 86.10 மெட்ரிக் டன் உயர்தர விதைகள் பல்வேறு திட்டங்களின்மூலம் உழவர்களுக்கும் மற்றும் நகரங்களில் வீட்டு காய்கறி தோட்டங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டது. இதைத் தவிர, நீலகிரி மாவட்டத்தில் மண் அரிப்பைத் தடுக்கவும், தேயிலை சாகுபடியை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும் 75 லட்சம் தேயிலைப் பதியன்கள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டன. மைய அரசு உதவியுடன் சேலம், திருச்சி, தருமபுரி, வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் மலைவாழ் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் 3,200 பழங்குடியினர் சுமார் 67 லட்சம் ரூபாய் செலவில் பல்வேறு இடுபொருட்கள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு நவீன விவசாய முறைகளைக் கடைப்பிடிக்க ஊக்குவிக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு அது தற்போது வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களின் மூலம் அப்பகுதிகளில் தோட்டக்கலை பயிர்களை அபிவிருத்தி செய்ய சுமார் ரூ. 200 லட்சம் ஆண்டொன்றுக்குச் செலவிடப்படுகிறது. தமிழ்நாட்டில் சுமார் 99,000 ஹெக்டேரில் சாகுபடியாகும் முந்திரி பயிரின் விளைச்சலைக் கணிசமான அளவு உயர்த்த, மைய அரசின் உதவியுடன் 500 செயல்விளக்கத்

திடல்கள் அமைத்து விவசாயிகளுக்குப் புதிய தொழில் நுட்பக் கருத்துக்களைப் பின்பற்ற உதவப்பட்டது. இரண்டாயிரம் ஹெக் டேரில் முந்திரி மரங்களுக்கு இலவசமாகப் பயிர் பாதுகாப்புச் செய்யப்பட்டு சிறு மற்றும் குறு விவசாயிகளின் முந்திரி மகசூலை அதிகரிக்க உதவப்பட்டது.

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் நிதி உதவியுடன் தமிழ் நாட்டின் முக்கிய நகர்ப்புறங்களின் அருகாமையில் உள்ள பகுதிகளில் காய்கறி உற்பத்தியை அதிகரிக்க ரூ. 1.53 லட்சத் திலும், பயறு வகைக் காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்க ரூ. 2.5 லட்சம் செலவில் மொத்தம் 4,750 மினி கிட்டுகள் வழங்கப்பட்டது. 20 அம்சத்திட்டத்தின்கீழ் 3,200 பழங்குடி யினர் குடும்பங்கள் பல்வேறு தோட்டக்கலை திட்டங்கள் செய லாக்கும் மூலம் பயன்பெற்றனர். சுமார் 13 லட்சம் பல்வேறு வகையான மரச்செடிகள் மரம் நடும் திட்டத்தின்மூலம் விநி யோகம் செய்யப்பட்டது.

மேற்சொன்ன அனைத்துத் திட்டங்களும் 1987–88 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் ரூ. 22 லட்சம் செலவில் தருமபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், தருமபுரியின் தோட்டக்கலை இயக்குநரகம் கட்டவும் காளான் விதைகள் உற்பத்தி செய்யவும் தோட்டக்கலைப் பண்ணைகளின் அபிவிருத்திக்காகவும் பணிகள் மேற்கொள்ளப் படும்.

இப்போது காளானில் நல்ல சத்து இருப்பதை எல்லோரும் உணருவீர்கள். அந்த வகையில் காளான்களை வீட்டிலேயேகூட வைத்து வளர்ப்பதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கி அதையும் மக்கள் மத்தியில் பரப்ப ஏற்பாடு ஒன்றையும் இலாக்கா தற் போது செய்து வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

தேயிலை மட்டுமல்லாமல் காப்பி பயிருக்கும் பாதுகாப்பு தருகிற வகையில் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேலம் ஏற்காட்டிலும், கோவை, நீலகிரி கொல்லிமலை, மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்களில் காப்பி பயிராகிறது. காப்பி பயிரிடுபவர்களுக்குத் தேவையான உயர் விளைச்சல் தரும் புதிய ரக காப்பி நாற்றுகள் அம்மாவட்டங்களிலேயே உற்பத்தி செய்யப் பட்டு விநியோகம் செய்யப்படுகிறது

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலையில் உள்ள காப்பி சாகுபடியாளர்களுக்கு, ஏற்காட்டில் உள்ள அரசுத் தோட்டக் கலைப் பண்ணையில் ஆண்டுதோறும் சுமார் 2 லட்சம் காப்பி நாற்றுக்கள் அங்குள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. புதிய காப்பி ரகங்களான காவிரி மற்றும் சேண்டரமான் உற்பத்தி செய்யப்பட்டு சாகுபடியாளர்களுக்குத் தரப்படுகிறது.



சின்னக் கல்ராயன் மலையில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு மாதிரிக் காப்பிப் பண்ணை 40 ஹெக்டேர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டு இப்பகுதியில் காப்பி இலாபகர மாகப் பயிரிட இயலுமா என்பதை அறிய அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதைப் போலவே தர்மபுரி மாவட்டத்தில் சித்தேரி மலையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் காப்பி சாகுபடி செய்ய ஒரு காப்பி பண்ணை அமைக்கப் பட்டு வருகிறது.

அண்ணா மாவட்டத்தில் கொடைக்கானல் மலையில் தாண்டிக்குடி கிராமத்தில் ஒரு மத்திய நாற்றங்கால் தொடங்கப் பட்டு ஆண்டுதோறும் சுமார் 2.50 லட்சம் காப்பி மற்றும் பழ செடிகள் உற்பத்தி செய்து அப்பகுதி விவசாயிகளுக்கு விநியோகி கப்படுகிறது.

அறுவடைக் காலத்தில் விலைச் சரிவு ஏற்படும்போது விவசாயிகள் தம் விளைபொருட்களை இருப்பு வைத்து வங்கிகள் மூலமாகக் கடன் பெறுவதற்கு வசதியாக 89 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கிராமியக் கிடங்குகள் சுமார் ரூ. 3.56 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

மேலும் 15 இடங்களில் அடுத்த ஆண்டு புதிதாக கட்டப் பட உள்ளன.

வேளாண்மை விற்பனைத் துறையின் பணிகளைக் கவனிக்க தஞ்சாவூர், தர்மபுரி, காமராஜர், கன்னியாகுமரி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் வேளாண்மை பணியில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு பயிற்சி அளிக்க வசதியாக தமிழகத்திற்கு டானிடா ரூபாய் 3 கோடியே 21 இலட்சத்து 45 ஆயிரம் பண உதவி செய்ய முன்வந்துள்ளது. அந்த திட்டம் அந்த மாவட்டங்களில் விரிவாக்கம் செய்யப்படவிருக்கிறது.

மாவட்டத் தலைநகரங்களில் சுமார் 14 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் ஐந்து வேளாண்மை உதவி இயக்குநர் அலுவல கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அடுத்து விதைச் சான்று மையம். உற்பத்தி செய்யப்படும் விதைகளுக்கு விஞ்ஞான அடிப்படையில் விதை நலம் பரிசோதனை செய்வதற்காக ரூபாய் 5 இலட்சம் செலவில் புதியதாக ஒரு கண்ணாடி ஆய்வகம் (glass laboratory ) கோவையில் கட்டப் பட்டுள்ளது.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 2

தர்மபுரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி அல்லது இருமத்தூரில் ஒரு தக்காளி பதப்படுத்தும் தொழிற்சாலையை நிறுவ அரசு பரிசீலித்து வருகிறது. என்னுடைய தொகுதியான பனைமரத்துப் பட்டியில், தருமபுரியில் விளையும் தக்காளி ஒரு கிலோ ஒரு ரூபாய்க்கு விற்கிற துர்பாக்கியமான நிலைமை இந்த ஆண்டு ஏற்பட்டுவிட்டது. ஆகவே தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் கழகத்தின் மூலமாக தக்காளியைப் பதப்படுத்துவதற்காக ஒரு தொழிற்சாலையை நிறுவ அரசு பரிசீலித்து வருகிறது. துறையிலே ஏற்படுத்த வேண்டும் என்றும், கேட்டுக்கொண்டிருக் கிறேன். அதைப் போலவே இந்த இலாக்காவும் ஒரு தொழிற் சாலையை ஏற்படுத்த வேண்டுமென்றும் அதை பென்னாடத் திற்குப் பக்கத்திலே அமைக்கவேண்டும் என்று கேட்டார்கள். அது இருமத்தூருக்கு பக்கத்திலே இருக்கிறது. அங்கே ஒரு தொழிற்கூடம் அமைக்க அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் புதிய தாக நான்கு ஆண்டு கால பால்வள அறிவியல் படிப்பை (Dairy Science) துவங்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சுமார் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் தென்காசி தாலுக்காவில் மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை, பிரான்ஸ், எகிப்து ஆகிய நாடுகளின் தொழில் நுட்ப உதவியுடன் ஆரம்பிக்கவிருக் கிறோம். அது ஆக்ரோ-இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் மூலமாக தொடங்க அரசு முடிவெடுத்துள்ளது. இந்த திட்டம் வெற்றி கரமாக நடைபெறுமானால் அம்மையார் அவர்கள் குறிப்பிட்ட அண்ணா மாவட்டம் போன்ற பல மாவட்டங்களில் விரிவாக்கம் செய்வதற்கு திட்டம் இடலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

சென்னையில் 1987—88-இல் குடிநீர் வசதியைப் பெருக்க ரூபாய் 23.50 கோடியும், கழிவு நீரை அகற்ற 11.50 கோடி ரூபாயும் செலவிட அரசு கருதியிருப்பதால் இதன் மூலம் சுமார் 40 இலட்சம் மக்கள் பயன் அடைய இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணு கோபால் அவர்கள் பேசும்போது சென்னை நகரத்திலே உள்ள நிலைமைகளைச் சுட்டிக்காட்டினார்கள். ஆகவே சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் நாம் ஒரு போர்க்கால நடவடிக் கையை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு குடிதண்ணீர் எல்லோருக்கும் கொடுக்க வேண்டியதொரு காலக் கட்டத்திலே நாம் இருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் ஏதாவது ஒரு பரிகாரத்தைக் கண்டாலொழிய வேறு வழி கிடையாது. குடிதண்ணீர் பிரச்சினையைப் பொறுத்த வரையில்



1987 ஏப்ரல் 2] [திரு. க. இராசாராம்]

வசதியானவர்கள் சொந்தத்திலே கிணறு வைத்திருக்கிறார்கள். மேல்நிலைத் தொட்டிகளை பங்களாவிலே கட்டி வைத்திருக் கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு குடிதண்ணீர் பிரச்சினை இல்லை. நடுத்தர குடிமக்களும் தங்கள் வீடுகளில் மேல்நிலைத் தொட்டிகளை வைத்திருக்கிறார்கள். பலமாடி கட்டிடங்களில் உள்ள வசதியுள்ளவர்களும் நல்லபடியாக இருக்கிறார்கள். யாருக்கு தொல்லை இருக்கிறது என்றால், தண்ணீரை வாங்கி வீட்டிலே வைக்கமுடியாதவர்களுக்குத் தான் தொல்லை அதிகமாக இருக்கிறது. ஏழைகள்தான் பெரும்பாலும் பாதிக்கப்படு கிறார்கள். அவர்கள் லாரி எப்போது வரும் என்று இரவு பகலாக காத்திருக்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். குடிசையில் உள்ளவர்களுக்கு தண்ணீரை வைக்க ஒரு பாத்திரம், சமையல் செய்ய பாத்திரம் என்று பல பாத்திரங்கள் கிடையாது. அவர்கள் தான் தொல்லைக்கு ஆளாகிறார்கள். அதற்காக இப்போது ஒரு திட்டத்தை நாங்கள் வெளியிடவிருக்கிறோம். எப்போது லாரி வரும் என்பதை ஒரு நான்கைந்து மைக் பொருத்தப்பட்ட வேன்கள் மூலமாக எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த நேரத்தில் தண்ணீர் வரும் என்பதை மைக் வைத்து விளம்பரப்படுத்தவிருக் கிறோம். ஆகவே தாய்மார்கள் கால்கடுக்க வெயிலில் நாள் முழுக்க நிற்க வேண்டியதில்லை. லாரி எப்போது வரும் என்று தண்ணீருக்காக அவர்கள் அலைய வேண்டியதில்லை. இந்தச் சூழ்நிலையைப் போக்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். மைக் வேன்கள் வாங்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்.

அதோடு சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் 56 மில்லியன் காலன் குடிநீர் வழங்கப்படுகிறது. இந்த 56 மில்லியன் காலன் என்ற குடிநீரின் அளவினை 41 மில்லியன் காலன் என்று குறைத்து பருவநிலையில் முன்னேற்றம் காணும் வரையில் தொடர்ந்து அதே அளவில் குடிநீர் வழங்க அரசு முடிவு எடுத் துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். பூண்டியும், சோழவரமும் வறண்டு போயிருக்கின்றன. அங்கே நிலத்தடி நீரை எடுக்கப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். சென்னையிலே 798 இடங்களில் குடிநீர் தொட்டிகள் வைக்கப் பட்டு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனை மேலும் அதிகரித்து சென்னையில் தண்ணீர் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் லாரிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்து குடி நீர் வழங்கவும், ஏழை மக்கள் தண்ணீருக்காக பானை ஏந்தி மணிக் கணக்கில் கால் கடுக்க நிற்கும் நிலையை மாற்றவும், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் லாரிகள் மூலம் தண்ணீர் வழங்கவும் திட்டமிட்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 8.00)

ஆகவே மைக் பொருத்திய வேன்கள் வரும். லாரிகளிலும் நான் எழுதி வைக்கச் சொன்னேன். அதைப்போல டாங்குகளில்கூட லாரி இந்த நேரத்தில் வந்து தண்ணீர் நிரப்பும் என்று எழுதி வைக்கச் சொல்லி இருக்கிறேன். ஆகவே தாய்மார்கள் கவலைப் படாமல் இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கருது கிறேன், அவர்கள் எல்லாம் குடத்தை எடுத்துக் கொண்டு வந்தார்கள் என்பதைப் பத்திரிகை வாயிலாக அறிந்தேன். இனி மேல் குடத்தை எடுத்துக்கொண்டு டாங்குகளிடம்தான் போக வேண்டும், கோட்டைக்கு வரவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னைப் பெருநகரைப் பொறுத்தவரையில் ஒன்றையும் பரிசீலித்துப் பார்த்தோம். தற்போது சென்னையிலே இன்னும் 3628 குழாய் கிணறுகள் இருக்கின்றன. மேலும் 1,500 குழாய் கிணறுகள் அமைக்கப்படும். தவிர இந்தியா மார்க்-2 பம்புகள் 1,121 பொருத்தப்பட்டிருக்கின்றன. மேலும் 120 பம்புகள் பொருத்தப்படும். நீர்த்தேக்கங்களைப் பொறுத்தவரையில் பூண்டியில் தண்ணீர் இல்லை. சோழவரத்தில் 72 மில்லியன் கன அடி தண்ணீர் இருக்கிறது. செங்குன்றத்தில் 396 மில்லியன் கன அடி தண்ணீர் இருக்கிறது. நிலைமை திருப்திகரமாக இல்லையென்றாலும் 41 மில்லியன் காலன் தண்ணீர் தினமும் பருவ மழைக் காலம் துவங்கும் வரையில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மேலும் ஒன்றைப் பற்றி நாங்கள் நினைத்தோம் ஏழைகள் ஒரு குடம் தண்ணீர்கூட எடுப்பது கிடையாது. இருக்கிற பாத்திரத்தை எடுத்துக்கொண்டு வந்து, தண்ணீருக்காக அல்லல்படுகிற நிலைமை இருப்பதை எண்ணி, அதைப் பற்றி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் சொன்னேன். சென்னை மாநகரத்தில் எவ்வளவு குடிசைப் பகுதிகள் இருக் கின்றன என்பது பற்றிய புள்ளி விவரங்களை கேட்டார்கள். அந்தப் புள்ளி விவரங்களை எடுத்துச் சொன்ன அவர்கள் வுடன், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற நல்ல நம்பிக்கையை அவர்கள் தெரிவித்தார்கள். குடிசை மாற்று வாரியத்தால் நல்லபடி 4 மாடிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப் பட்டிருப்பவை 122. அங்கே உள்ள குடும்பங்கள் 46,000. குடிசையிலே இருப்பவர்கள் வரலாற்றை முதல்வரவர்கள் கேட்டார்கள். அரசு கோவில் நிலங்களிலே கட்டப்பட்டுள்ள குடிசைகள் மொத்தம் 525; குடும்பங்களுடைய எண்ணிக்கை 68,000. தனியார் நிலங்களில் உள்ள குடிசைப் பகுதிகள் 555. அங்கே இருக்கிற குடும்பங்களின் எண்ணிக்கை 1,11,000. ஆக



1,79,000 குடும்பங்கள் இன்றைக்கு சாதாரணமான குடிசை களில், வாழ முடியாத பகுதிகளில் இருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் முதன்முதலாக ராஜ்ய சபைக்குப் போன போது, 'நீ யாருடைய பிரதிநிதி' என்று கேட்டார்கள். அதற்கு அண்ணா அவர்கள், 'நான் நடைபாதைவாசிகளின் பிரதிநிதி' என்று பதில் சொன்னார்கள். அதை இந்த அரசு என்றைக்கும் மறந்தது கிடையாது. குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் என்றைக்கும் மறந்தது கிடையாது. ஆகவே இன்றைக்கு அவர்கள் ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். 1,79,000 குடும்பங்களுக்கும் தண்ணீர் வைத்துக்கொள்ள பிளாஸ்டிக் பக்கெட் ஒன்றை வாங்கி இலவசமாகக் கொடுக்கும் படி ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். (பலத்த மேசை தட்டல்) ஆக சென்னை மாநகரத்தில் உள்ள ஏழை மக்கள் தண்ணீரைப் பிடித்து வைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கிறது. அவர் களுக்கு அந்த உதவி செய்யப்படும் என்பதை நான் மகிழ்ச்சி யோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிநீர் வசதியைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே 1987-88—ல் 4,280 கிராமங்கள், 92 நகரப் பஞ்சாயத்துக்கள், 18 நகராட்சிகள், கோயம்புத்தூர் புற நகரப் பகுதி சேர்த்து சுமார் 93.5 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதனால் இந்த ஆண்டு நகர்ப்புறங்களில் 47 இலட்சம் மக்களும் கிராமப் புறங்களில் 29 இலட்சம் மக்களும் பயனடைவர். 1987-88-ல் 2 பெரிய கழிவு நீர் அகற்றும் திட்டங் களும் 16 நகரங்களில் சுகாதாரத் துப்புரவுத் திட்டங்களும் 6 கோடி ரூபாய் செலவில் 17 இலட்சம் மக்கள் பயனடையும் வகை யில் அமைய இருக்கின்றன. தற்போதுள்ள 27,236 ஆழ் குழாய்க் கிணறுகள் தவிர புதிதாக 7,168 ஆழ் குழாய் கிணறுகள் சுமார் 18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கின்றன. ஆக, அந்த வகையில் குடிநீர் தட்டுப்பாடு இல்லாத அளவுக்கும், விவசாயத்திற்கு தட்டுப்பாடு இல்லாத வகையிலும் பல்வேறு திட்டங்களை இந்த ஆட்சி தீட்டிக்கொண்டு வருகிறது. நடை முறைப்படுத்திக்கொண்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக் களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அம்மையார் அவர்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சமீபத்தில் தர்மபுரி மாவட்டத்திற்கும், சேலம் மாவட்டத் திற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வருகை தந்த போது மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 39 கோடி ரூபாய் செலவில் அறிவிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். அதைப் போலவே பூலாம்பாடியிலிருந்து ராசிபுரம் மல்லூர் வரை ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுக் குடிநீர் திட்டம் எதிர்காலத்தில் விவசாயத்திற்கும் பயன்

உள்ளதாக இருக்கும் என்பதைபற்றி இந்த அரசுக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கின்றது. ஏனென்று கேட்டால், கூட்டுக் குடிநீர் திட்டத்திலேதான், எங்கே தண்ணீர் இருக்கிறதோ அங்கேயிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு நிலத்தடி நீர் கூட கிடைக்காத பல கிராமங்களுக்கு தண்ணீர் கொடுக்க வசதி ஏற்பட முடியும். அதை இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கின்றது. அந்த வகையிலே பல்வேறு காரியங்களைச் செய்வதற்கு நம்முடைய அரசு திட்டமிட்டிருக்கிறது.

சிலபேர்கள் சொன்னார்கள். 80 அடிக்கு குழாய் போடு கின்றார்கள். அதற்குப் பிறகு தண்ணீர் வருவது இல்லை. அந்த ஒப்பந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுங்கள் என்று நண்பர் திரு. பாலாஜி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதை நான் நன்றாக உணர்கிறேன். அப்படிப்பட்ட நிலைமைகள் மேற் கொண்டு இந்த வறட்சிக் காலத்திலே ஏற்படுமானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். அது எந்த ஒப்பந்தக்காரராக இருந்தாலும் அவர்கள் நடவடிக்கைக்குட்படுத்தப்படுவார்கள என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த அரசு யாருக்கும் தயவு தாட்சண்யம் காட்டத் தயாராக இல்லை என்பதை நான் ஏற்கெனவே அவர்களுக்கெல்லாம் சொல்லியிருக் கிறேன். இந்த மாமன்றத்தின் மூலமாகவும் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் இந்த ஆட்சி காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றது. ஏழைகளைப்பற்றி இந்த ஆட்சி என்றைக்கும் மனதிலே வைத்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு பல்வேறு உதாரணங்களை நான் சுட்டிக்காட்ட முடியும். ஆகவே அந்த வகையில் நான் போட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையிலே கேட்டிருக்கின்ற தொகையினை அருள் கூர்ந்து நிறைவேற்றித் தரவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறும்படியும் உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுவரையில் 24 உறுப்பினர்கள் பேசி மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒன்றே கால் மணி நேரம் பதில் சொல்லி பேசியிருக்கின்றார்கள். இனி மேலும் சந்தேகம் வரவே கூடாது. (குறுக்கீடு) முன் வரிசையிலே இருப்பவர் மட்டும் கேளுங்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ல உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த வறட்சியை முன்னிட்டு நடைபெறுகின்ற குடிநீர் திட்ட நிவாரண வேலைகளைக் கண்காணிப்பதற்கு என்று குழுக்கள் அமைக்கப்படுமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதேபோல, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மதுராந்தகம் பகுதிக்கு வந்தபோது ஸ்ரீ பெரும்புதூர் தொகுதிக்கு என்று குடி நீர் திட்டத்தினை, நிறைவேற்றுவதற்கு என்று ஒரு கோடியே 82 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். அந்த பணி தொடங்கப்பட்டுள்ளதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. நான் எடுத்துச் சொல்லிக்கொண்டே போக முடியும். என்ன வென்றால் உள்ளாட்சி பற்றி உறுப்பினர் திரு. ரத்தினம் அவர்கள் கேட்டார்கள். பொள்ளாச்சி உள்ளாட்சிக் குடிநீர் வழங்கும் திட்டம் பற்றி கேட்டார்கள். அதற்கு 9 56 லட்சத்திற்கு அங்கீகரிக்கப்பட்டு அதற்கான வேலைகள் முடிவுற்று குடிநீர் வழங்கக்கூடிய நிலைமையிலே இருக்கின்றது. இன்னும் சுமார் ரூ. 2 லட்சம் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நகராட்சி செலுத்த வேண்டியதாக இருக்கின்றது. ஏராளமான திட்டங்கள் இருக் கின்றன.

திரு. வீரய்யன் அவர்கள்கூட அரசு விதைப்பண்ணை பற்றி கேட்டார்கள். இரண்டு பண்ணைகளை மூடி விட்டோம் என்ற குற்றச்சாட்டை உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மூட வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிள்ளிக்குளத் திலே இந்த அரசு விதைப்பண்ணை வேளாண்மை கல்லூரி நிறுவுவதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. அடுத்த முள்ளுவாடி விதைப்பண்ணை உணவுப்பொருள்கள் பயிரிடுவதற்கு ஏற்றதாக இல்லாததனால் ரூ. 186 லட்சம் செலவில் தோட்டக்கலைத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த திட்டத்தை மாற்றம் செய்கின்ற கருத்து அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மையார் அவர்கள் சில திட்டங்களைப் பற்றி கேட்டார்கள். திட்டம் என்று அறிவிக்கப்பட்டால் கட்டாயம் அந்த வேலைகள் நடக்கும். குடிநீர் வடிகால் வாரியத்திலே ஒரு விஜிலென்ஸ் செல் என்று இருக்கின்றது அவர்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு வருகின்றார்கள், (குறுக்கீடு).

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரை அளிக்கின்றபோது, கடந்த ஆண்டு வேளாண்மை மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத் திலே ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கப்படும் என்கின்ற அறிவிப்பை கடந்த ஆண்டு தந்திருக்கின்றார்கள. இந்த முறை இந்த விவாதத்தில் கலந்து கொண்ட பலரும் அந்த விவசாயக் கல்லூரி இந்த ஆண்டு எங்கே தொடங்கப்பட இருக்கின்றது என்று கடைசியிலேயாவது பதிலுரையிலே அதைப் பற்றி சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. விவசாயக் கல்லூரி பற்றி சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. சென்ற ஆண்டு முடிவாகிவிட்டது, அந்த கல்லூரி எங்கே வரும் என்று தெரிய வேண்டும். அதற்கு என்று ஒரு குழு போட்டிருக்கின்றார்கள்

அந்த குழு அந்த இடத்தை தெரிந்தெடுத்து அறிவிக்கும். அறிவித்தவுடனே வேலைகள் தொடங்கும் அநேகமாக அடுத்த கல்வி ஆண்டிற்குள்ளே அந்த கல்லூரிகளை அமைக்கவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தஞ்சைக்கு ஒரு கல்லூரி உண்டு. எந்த இடத்திலே என்று மட்டும் என்னைக் கேட்காதீர்கள். என்னுடைய மாவட்டம் அல்ல. நான் என்னுடைய மாவட்டத்திற்குக் கேட்கவில்லை. ஆக பொதுவாக எந்த இடத்திலே எல்லா பொருள்களும் வருமோ அந்த இடத்திலேதான் அமைக்கவேண்டும்.

(இரவு 8.10)

திரு. எ. தெய்வநாயகம்: மரியாதைக்குரிய மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குடிநீர் பற்றி, அதனுடைய வறட்சி தன்மைகளைப் பற்றி எல்லாம் எடுத்துக் கூறினார்கள். எங்களுடைய மதுரை மாநகராட்சியில் குடிநீர் பிரச்சினை காரணமாக கடந்த 10 நாட்களாக தண்ணீருக்காக பெண்கள் காலி குடத்துடன் அலை மோதிக் கொண்டிருக்கிறார்கள். ஆணையாளரும் அங்கே இல்லை. அதிகாரிகள் சரியாக செயல்படாததால் பெண்களுக்கு தண்ணீர் கிடைப்பதிலே தவறு நடைபெறுகிறது. அதை சரி செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் தெய்வநாயகமும், பொன் முத்துராமலிங்கமும், இரண்டு பேரும் மதுரையைச் சார்ந்தவர்கள். இரண்டு பேரும் மாறி மாறி கேட்டுக்கொண்டே இருக்கிறீர்கள். இது மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் ஏற்கெனவே கேட்டது தான். (குறுக்கீடு) (திரு. பொன் முத்துராமலிங்கம் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி சொல்லதீர்கள். சோதிக்காதீர்கள். உறுப்பினர் தெய்வநாயகத்துக்கு காலையிலே ஸ்பீக்கர் கொடுத்த அஷ்யூரன்ஸ். (குறுக்கீடு) உறுப்பினர் தெய்வநாயகத்துக்கு உரிய பதில் சொல்லும்போது உங்களுக்கும் உரிய பதிலை அமைச்சர் சேர்த்தே சொல்வார். (குறுக்கீடு) ப்ராமிஸ் ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) கொஞ்சம் பொறுமையாக கேளுங்கள். உறுப்பினர் தெய்வநாயகத்துக்கு காலையில் speaker கொடுத்த assurance (குறுக்கீடு) கோபமாக பேசினால் அனுமதிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அனுமதிக்கவும் மாட்டேன். (குறுக்கீடு) கோபமாக பேசினால் அனுமதி வழங்குவேன் என்று நினைக்க வேண்டாம். அமைச்சர் பேரவையில் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது உங்களுக்கு என்று special treatment கொடுக்க முடியாது. (குறுக்கீடு) உரக்க குரல் கொடுப்பதாலேயே நீங்கள் சொல்வது நியாயம் ஆகாது. உரக்க 'சவுண்ட்' போடுவதாலேயே உங்களுக்கு நான் அனுமதி கொடுக்க முடியாது.





மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கத்துக்கும் சேர்த்து நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். மதுரை மாநகரைப் பொறுத்தவரையில் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. லாரிகளின் மூலம் தண்ணீர் வழங்குவதில் இருக்கிற குறைபாட்டை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள் ஏற்கெனவே அங்கே ஆணையாளராக இருந்தவர் தான் இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கிறார். அவருக்கு நிலவரமும் நன்றாகத் தெரியும். அங்கே இருக்கிற குடிநீர் வடிகால் வாரியமும் அங்குள்ள நிலைமையை பார்த்துக்கொண்டு தான் இருக்கிறது. எப்படியும் அங்குள்ள குடிநீர் தட்டுப்பாடு கொஞ்சம் நாட்களில் தீர்ந்து விடும். அதற்கான ஏற்பாடுகளை குடிநீர் வடிகால் வாரியம் செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அரசு குடிநீருக்காக ஆழ் குழாய் கிணறுகளை அமைப்பதை தெரிந்தும் சிலர் அதன் அருகில் ஆழ் குழாய் கிணறுகளை அமைப்பதையும், கிணறுகள் வெட்டுவதையும் தடுக்க அரசு தனியாக சட்டம் கொண்டு வருமா? இதனால் அரசு மூலம் அமைக்கப்படுகின்ற ஆழ் குழாய் கிணறுகள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் பொய்த்து போய்விடுகிற நிலைமையும், பெரிய திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றினாலும் கூட கிராம மக்களுக்கு தண்ணீர் இல்லாமல் இருக்கிற நிலைமையும் ஏற்படுகிறதாதலால் இதுகுறித்து தனியாக கவனம் செலுத்தி இதனை தடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஆழ் குழாய் கிணறுகளை அமைத்தால் அநேகமாக விவசாயிகள்தான் அமைப்பார்கள். விவசாயிகள் அவ்வளவு செலவு செய்து அதனை அமைப்பார்களா என்பது சந்தேகம். விவசாய மானியத்தின்மீது பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் தண்ணீரை எடுத்து விவசாயிகளுக்கு தருகிற வேலையை எல்லாம்கூட அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். அதிலேகூட இந்த அரசு கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. அரசே ஆழ் குழாய் கிணறுகளைப் போட்டு சிறு விவசாயிகளுக்கு நீரை பங்கிட்டுக் கொடுத்து அதற்கான தொகையை அவர்களிடமிருந்து பெறுகின்ற திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் தாய்மார்கள் எல்லாம் கடுமையான போராட்டத்திலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சியிலே ஆணையாளர் இல்லை. இதுகுறித்து இப்போது ஆணையாளர் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

விரைவிலே நியமிக்கப்பட இருக்கிறாரா? கடுமையான குடிநீர்
பஞ்சம் ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில் குடிநீர் பஞ்சத்தைப்
போக்குவதற்குரிய தலைமை அதிகாரியே அங்கே இல்லாத சூழ்
நிலை இருப்பதால் பல்வேறு சங்கடங்கள் வந்து கொண்டே இருக்
கிற காரணத்தால் எப்போது ஆணையாளர் நியமிக்கப்பட இருக்
கிறார் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு அங்கே,
முறையாக குடிநீர் தந்து பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காக
என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றும்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தெய்வநாயகம் ஊற்றினால்
அது தண்ணீர். பொன் முத்துராமலிங்கம் ஊற்றினால் அது
தீர்த்தமா? அதுமாதிரி இருக்கிறது இது. மதுரை மாநகரிலே
தண்ணீர் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுத்துக்கொண்டி
ருக்கிறோம். நான் சொல்வது எல்லா உறுப்பினர்களுக்கும்
சேர்த்துதான். உங்கள் இரண்டு பேருக்கும் மட்டுமல்ல.
மக்களுக்காக. இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்
கிறது. அந்தவகையில் அது வெற்றிகரமாக நடைபெறும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பதில் அளிக்கும் போது ஏற்கெனவே நான் கேட்டிருந்த
கோட்டூர் பாதாள சாக்கடைத் திட்டம் குறித்தும், ஈக்காடு
தாங்கல் பாதாள சாக்கடைத் திட்டம் குறித்தும், மடுவங்கரை
குடிநீர் பிரச்சினை குறித்தும் பதில் சொல்லவில்லை இப்பணிகள்
நடப்பு நிதியாண்டிலாவது துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. சைதை துரைசாமி அவர்களுடன் 3 மணி நேரம் இந்த
சைதாப்பேட்டை பகுதி பூராவும் சுற்றிப் பார்த்தேன். முதலில்
குடிக்கத் தண்ணீர் வேண்டும். பாதாள சாக்கடைத் திட்டம்
அடுத்தாற் போல வந்தால் போதும். தண்ணீர் இல்லாமல்
பாதாளச் சாக்கடை கட்டி எதிலே தண்ணீர் ஓடுவது?

திரு. பொ. உத்திராபதி ; மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள்
கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த நெல்லுக்கு உரக்
கூப்பன் 35 ரூபாய்க்கு-உரமாகக் கொடுக்கிறார்கள். ஆனால்
அனுபவத்தில் அவர்கள் செல்லுகின்ற பொழுது கூட்டுறவு
சொசைட்டியில் லோன் வாங்குகின்ற பொழுது பாதி பணமும்
பாதி உரமும் கொடுக்கிறார்கள். அந்த உரமும் விவசாயிகள்
இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய்க்கு வாங்குகின்ற பொழுது
இப்பொழுது முடை தாங்க முடியாமல் 30 ரூபாய் தள்ளுபடி
செய்து இந்த உரக் கூப்பன்களைப் பெயர் எழுதிக் கொடுத்து
விடுகிறார்கள் வியாபாரிகளிடத்தில். இந்த நஷ்டம் விவசாயி



களுக்கு வருகிறது. ஆகவே, அமைச்சரவர்களைக் கேட்டுக்
கொள்வது, முதலமைச்சரோடு கலந்து கொண்டு, திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியிலே கூட நீங்கள் ஒன்றாக இருக்கின்ற
பொழுது வண்டிச் சத்தம் 15 ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள்.
அதைப் போல இந்த விவசாயிகள் மீது கருணை கூர்ந்து
முதலமைச்சரையும் கலந்து கொண்டு அடுத்த ஆண்டிலேயாவது
இந்தப் பணமாக வண்டிச் சத்தமாகப் போட்டுக் கொடுக்க
அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பணம் வாங்கினால் அது விவசாயி
களுக்குப் பயன்படுமா இல்லையா என்பது எனக்குத் தெரியாது
உத்திராபதி அவர்கள் தான் அதை வலியுறுத்துகிறார்கள்,
குறைபாடுகள் ஆங்காங்கே இருந்து விண்ணப்பங்களாக ஒன்றும்
வரவில்லை வியாபாரிகள் வாங்கி எப்படி அதிக இலாபம்
பெறுகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால்
நியாயமான விலைக்கு நாங்கள் உரங்களைத் தருகிறோம்.
அதில் தவறு ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.
கூப்பனுக்குப் பதிலாக பணம் கொடுப்பது என்றால் சில தவறு
கள் வரும். அந்த நிலைமைக்கு நாம் ஆளாவதா இல்லையா
என்று ஆலோசித்துத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
நான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற கருத்தை
வேண்டுமானால் கவனத்திலே கொள்கிறேனே தவிர அது நடை
முறைச் சாத்தியமா என்பதிலே சிரமம் இருக்கிறது என்பதை
மட்டும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, நான் ஒரு விளக்கம் கேட்க
வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சொல்லியாகி
விட்டது. பல பேர் கேட்டு விட்டார்கள், நீங்கள் உட்காருங்
கள் விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 20—வேளாண்மை

திருவாளர்கள் பீ. கே. எம். முத்துராமலிங்கம், மெ. ஆண்டி
அம்பலம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்
களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன்
திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்
பெற்றன.

திருவாளர்கள் பொ. உத்திராபதி, கோ. வீரய்யன் ஆகிய
வர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி
யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி

''மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,37,58,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல்

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், கே. எம். தங்கமணி பி. கே. எம். முத்துராமலிங்கம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன வாகக் கருதப் பெற்றன.

திரு. பொ. உத்திராபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு. கே. வீரய்யன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

''மானியக் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,17,78,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண், 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.



(பேரவைத் துணைத் தலைவர்)

திரு. மு. இராமநாதங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு. கோ. வீரய்யன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,95,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்ற, நாளை (3-4-1987) காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-19 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

### 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

60. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 27-1-1987 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

61. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தாரால் விற்பனை செய்யப்பட்ட அரசு கல்நார் சிமெண்ட் அழுத்தக் குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளுக்கு விதிக்கக் கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 4-12-1986 ஆம் நாளிட்ட 1240-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

62. இமாச்சல பிரதேச தோட்ட விளைபொருள் விற்பனை மற்றும் தனிடும் நிறுவனத்தின் விற்பனை மையங்களில் செறிவு குறைக்கப்பட்டு பானமாக விற்கப்படும் ஆப்பிள் சாறிற்கு வரி யிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 18—2-1986 ஆம் நாளிட்ட 1296 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

94. கோரிக்கை எண், 20- வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ் ஆங்கிலம்)

95. வேளாண்மைத்துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1987-88 (தமிழ், ஆங்கிலம்)

96. கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987–88 (தமிழ், ஆங்கிலம்)

97. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி யாளர்கள் இணையம் பற்றிய ஆய்வுரை, 1986–87 (தமிழ், ஆங்கிலம்)

98. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் பற்றிய ஆய்வுரை, 1986–87 (தமிழ், ஆங்கிலம்)

99. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை, 1986-87 (தமிழ், ஆங்கிலம்)

100. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் வணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை, 1986-87. (தமிழ், ஆங்கிலம்)

101. 'சென்னை குடிநீர்' என்கிற புத்தகம்—1987 (தமிழ்)

102. சட்டவிதிகள் ஆய்வுக்குழுவின் நான்காவது அறிக்கை எட்டாவது சட்டமன்றப் பேரவை). (ஆங்கிலம்)

103. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77 ஆம் ஆண்டிற்கான அறிக்கை மீது (வருவாய் வரவினங்கள்) பொதுக் கணக்குக் குழு (1981-82) அளித்த பன்னிரெண்டாவது அறிக்கைகளில் (ஏழாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை.





104. 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகளின் மீதும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகளின் மீதும் பொதுக் கணக்குக் குழு (1980-82) அளித்த பதினைந்தாவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் அளித்துள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின ஐம்பத்திரண்டாவது அறிக்கை.

105. இந்தியத் தணிக்கை துறைத் தலைவரின் 1976-77 ஆம் ஆண்டிற்கான அறிக்கை மீது (வருவாய்-வரவினங்கள்) பொதுக் கணக்குக் குழு அளித்த பதினான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்திமூன்றாவது அறிக்கை.

106. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும், (எண்கள் 1 முதல் 50 வரை)

## இணைப்பு I.

(188ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 17-க்கான விடையைக் காண்க.)

[illegible] கட்டிடத்தில் இயங்கும் நெடுஞ்சாலைத் துறை அலுவலகங்கள்.

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) | | அலுவலகங்கள். (2) | கிடங்குகள். (3) | வாடகைத் தொகை. (4) |
|---|---|---|---|---|
| | | | | ரூ. |
| 1 | செங்கற்பட்டு | 23 | 16 | 1,79,750 |
| 2 | வட ஆற்காடு | 38 | 28 | 2,63,211 |
| 3 | தென் ஆற்காடு | 40 | 20 | 2,75,912 |
| 4 | திருச்சிராப்பள்ளி | 15 | 6 | [illegible],460 |
| 5 | புதுக்கோட்டை | 10 | 8 | 90,920 |
| 6 | தஞ்சாவூர் | 20 | 17 | 1,12,940 |
| 7 | மதுரை | 13 | 5 | 1,13,250 |
| 8 | அண்ணா மாவட்டம் (திண்டுக்கல்) | 8 | 3 | 50,300 |
| 9 | கோவை | 11 | 9 | 1,01,944 |
| 10 | பெரியார் மாவட்டம் | 15 | 4 | 97,644 |
| 11 | சேலம் | 19 | 7 | 1,46,184 |
| 12 | தருமபுரி | 19 | 7 | 1,13,255 |
| 13 | நீலகிரி | 1 | .. | 9,600 |
| 14 | திருநெல்வேலி | 30 | 16 | 2,15,813 |
| 15 | இராமநாதபுரம் | 21 | 6 | 95,990 |
| 16 | காமராஜர் மாவட்டம் (விருதுநகர்) | 7 | 3 | 40,900 |
| 17 | பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் (சிவகங்கை) | .. | .. | 3,000 |
| 18 | கன்னியாகுமரி | 8 | 2 | 44,760 |
| 19 | சென்னை | .. | 1 | 2,700 |
| | | 310 | 158 | 21,24,533 |

1985–86 ஆம் ஆண்டிற்கு கொடுக்கப்பட்ட வாடகை ரூ. 21,24,533.





## இணைப்பு II.

(229 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**வேளாண்மைத் துறையின் 1987–88 ஆண்டின் [illegible] விளக்கம்.**

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மை தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது. வேளாண்மையில் தோன்றும் ஏற்றத் தாழ்வுகள் சமுதாயத்தை வெகுவாக பாதிக்கிறது. அதன் காரணமாகவே வேளாண் உற்பத்தியை அதிகரிக்க தேவையான எல்லா முயற்சிகளும் இவ்வரசு எடுத்து வருகின்றது. வேளாண்மை விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி பணிகளை சீரமைத்தல், தரமான விதைகளை உற்பத்தி செய்து விநியோகித்தல், தரமான உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் இதர இடு பொருள்கள் காலத்தே கிடைத்திடச் செய்தல், இடம் மற்றும் காலத்திற்கேற்ப தொழில் நுட்பங்களை அளித்தல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை அதிக அளவில் பரப்புதல் மற்றும் மானாவாரி சாகுபடிக்கு உகந்த தொழில் நுட்பங்களை அளித்தல் போன்றவை இத்துறையின் முக்கியமான பணிகளாகும்.

**[illegible]–87 ஆண்டில் நிலவிய பருவ நிலை:**

1986 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற மழை அளவு இயல்பான அளவை விட குறைந்திருந்தது. இயல்பான மழை அளவான 942.8 மி.மீட்டருக்கு கிடைக்கப் பெற்ற மழை அளவு 802.1 மி. மீட்டர் ஆகும். பருவ மழை பொய்த்ததால் சில மாவட்டங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. தென்மேற்கு பருவ மழை காலத்தே தொடங்கவில்லை. ஆகவே ஆற்றுப்பாசன நிலைகள் தாமதமாக பாசன திற்குத் திறந்துவிடப்பட்டன. இதன் காரணமாக கார் மற்றும் குறுவை நெல் சாகுபடியில் 4.16 லட்சம் எக்டர் இயல்பான பரப்பில் 2.31 லட்சம் குறைவாக சாகுபடி செய்யப்பட்டது.

வடகிழக்குப் பருவ மழை சரியான காலத்தில் தொடங்கிய போதிலும் தேவையான அளவு பெய்யவில்லை. அதன் காரணமாக ஏரி மற்றும் கிணறுகள் நீர் நிலைமை தேவையான அளவு முன்னேற்றம் அடையவில்லை. ஆகையால் சம்பா/தாளடி பருவங்களின் இயல்பான நெற்பரப்பான 20.00 லட்சம் எக்டருக்குப் பதிலாக 16.71 லட்சம் எக்டரில்தான் பயிரிடப் பட்டது.

வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததின் காரணமாக பருத்தி பயிர் 2.80 லட்சம் எக்டர் இயல்பான பரப்பிலிருந்து 2.12 லட்சம் எக்டராக குறைந்தது.

பருவ நிலை பாதகமாக அமைந்திருந்த போதிலும் மாநிலத்தில் அரிசி உற்பத்தித் திறன் கணிசமாக முன்னேறம் அடைந்து எப்போதும் இல்லாத அளவிற்கு எக்டருக்கு சுமார் 2,750 கிலோ என்ற அளவை அடைந்தது. உழவர்களின் சீரிய

முயற்சியாலும் வேளாண் துறை செயல்படுத்திய எக்டருக்கு 5 டன் நெல் உற்பத்தி, மும்மணித் திட்டம், சம்பா உற்பத்தித் திட்டம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு போன்ற சிறப்புத்திட்டங்களின் மூலமாகவும் இந்த உயர்ந்த அரிசி உற்பத்தித் திறனை அடைய முடிந்தது. 1986-87 ஆம் ஆண்டில் முக்கிய பயிர்களின் உற்பத்தி கீழ்க்கண்டவாறு எதிர்பார்க்கப்படுகிறது:—

| | லட்சம் டன்கள். |
|---|---|
| அரிசி .. .. .. | 57.00 |
| சிறு தானியங்கள் .. .. | 20.00 |
| பயறு வகைகள் .. .. | 4.50 |
| பருத்தி .. .. .. | 5.00 (லட்சம் பொதிகள்) |
| கரும்பு (வெல்லம்) .. .. | 24.00 |

1987-88 ஆம் ஆண்டில் உற்பத்தி திட்டம்:

1987-88 ஆம் ஆண்டில் பருவநிலை இயல்பாகவும் கூடுதல் உற்பத்தி திறன் தொடர்ந்து இருக்கும் என்ற நம்பிக்கையுடன் உற்சாகமான உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவை:

| | உற்பத்தி லட்சம் டன்கள். |
|---|---|
| அரிசி .. .. .. | 66.00 |
| சிறு தானியங்கள்.. .. | 26.25 |
| பயறு வகைகள் .. .. | 4.75 |
| பருத்தி .. .. .. | 5.60 (லட்சம் பொதிகள்) |
| கரும்பு (வெல்லம்) .. | 26.00 |

முன் சொன்ன குறிக்கோள்களை அடைய வேளாண்மைத் துறை கீழ்க்காணும் வளர்ச்சிப் பணிகளில் அதிக கவனம் செலுத்தி செயல்பட உள்ளது:

முக்கிய பயிர்களின் பரப்பு அடைதல்:

நெல்:

1987-88 ஆம் ஆண்டில் 26.50 லட்சம் எக்டரில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 24.00 லட்சம் எக்டரில் உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிடப்படும். சம்பா பருவத்தில் அரிசி உற்பத்தி திறனை அதிகரிக்க ஒரு சிறப்பு திட்டமும், சிரிய நீர் பராமரிப்புக்காக தயாரிக்கப்பட்ட எக்டருக்கு 5 டன் மற்றும் மும்மணித் திட்டம் போன்ற திட்டங்கள் தீவிரமாக செயல்படுத்தப்படும்.



சிறு தானியங்கள்:

1987-88 ஆம் ஆண்டில் 18.00 லட்சம் எக்டரில் சிறு தானியங்கள் சாகுபடி செய்து 26.25 லட்சம் டன்கள் உற்பத்தி அடைய திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 10 லட்சம் எக்டரில் உயர் விளைச்சல் இரகங்கள் பயிரிடப்படும்.

பயறு வகைகள்:

1987-88 ஆம் ஆண்டில் 12.00 லட்சம் எக்டரில் பயறு வகைகளை பயிரிட்டு 4.75 லட்சம் டன்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நஞ்சைத் தரிசில் பயறு வகைகள் உற்பத்தியைப் பெருக்க தேவையான தொழில் நுட்பங்களைப் பரப்புவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்.

பருத்தி:

1987-88 ஆம் ஆண்டில் 2.80 லட்சம் எக்டரில் பருத்தி பயிரிடப்பட்டு 5.60 லட்சம் பஞ்சு பொதிகள் உற்பத்தி செய்யப் படும்.

கரும்பு:

26.00 லட்சம் டன் வெல்ல உற்பத்தியை அடைய 2.50 லட்சம் எக்டரில் கரும்பு பயிரிடப்படும்.

1987-88 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.

(அ) எக்டருக்கு 5 டன் நெல் உற்பத்தி: தற்பொழுது சுமார் 60 சதம் நெல் பரப்பில் எக்டருக்கு 5 டன் உற்பத்தி கிடைக்கிறது. அதனை 1987-88 ஆம் ஆண்டில் 70 சதத்திற்கு உயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதனை அடைய கீழ்க்கண்ட அணுகு முறைகள் கையாளப்படும்:—

1. 381 தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் செயல்முறை மையங்கள் அமைத்தல்.

2. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளின் இலாபத்தினை விளக்கிட தேவைக்குகந்த பயிர் பாதுகாப்பு முறைகளைச் செயல் விளக்கம் செய்து காண்பித்தல்.

3. கிராமங்கள்தோறும் முன் பருவ முகாம்கள் நடத்துவதின் மூலம் தகுந்த உற்பத்தி தொழில் நுட்பங்கள் விரிவான அளவில் பரவிடச் செய்தல்.

(ஆ) சம்பா உற்பத்தித் திறனை அதிகரிக்கச் சிறப்புத் திட்டம்.

1. கிராம உழவர்களின் ஊக்கமுள்ள பங்கேற்புடன் உற்பத்தியின் இடர்பாடுகளைக் கண்டறிந்து உயர்விளைச்சல் பெற தகுந்த திட்ட வழிமுறைகள் உருவாக்குதல்.

2. ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலர்களின் பகுதியிலும் பாசன பகுதிகளில் 1 எக்டர் செயல் விளக்கங்களும், மானாவாரி பகுதிகளில் 2 எக்டர் செயல்விளக்கங்களுமாக மொத்தம் 32,000 செயல் விளக்கங்கள் அமைக்கப்படும்.

3. 32,000 இடங்களில் முன் பருவ முகாம்கள் நடத்துதல்.

4. திறமையான நீர் பராமரிப்பு வழிமுறைகளைக் கடைப் பிடித்தல்.

5. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு திட்டத்தைச் செயல் படுத்துதல்.

(இ) மும்மணித் திட்டம்:

ஊரக வளர்ச்சிக்குத் தேவையான உயர் உற்பத்தியும் அதிக இலாபமும் அடைய வழிகோலும் மும்மணித் திட்டம் தொடர்ந்து 198 இடங்களில் செயல்படுத்தப்படும்.

(ஈ) நுண்ணூட்டச் சத்து:

நெற்பயிருக்கு துத்தநாக சல்பேட் இடுதல், உற்பத்தியை அதிகரிக்க ஊக்குவிக்கின்றது. நெல் நுட்பத்தைப் பரந்த அளவில் எல்லா மாவட்டங்களிலும் பரப்பிட இத்தொழில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) உயிரியல் உரங்கள்:

இயற்கை உரங்களான நீலப்பச்சைப் பாசி, அசடோ பெக்டர், அசோஸ்பிரில்லம் மற்றும் அசோலா சிமை அகத்தி போன்ற உரங்களை அதிக அளவில் பரப்புவதற்குத் தீவிர முயற்சி எடுக்கப்படும். 12.5 லட்சம் பொட்டலங்கள் நுண்ணுயிர் உரங்கள் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

(ஊ) நிலவள பராமரிப்பு:

மண் ஆராய்ச்சிக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளின் துணையுடன் அதிக விளைச்சல் பெறுவதற்குத் தேவையான எரு மற்றும் இரசாயன உர சரி விகிதங்கள் உழவர்களிடையே பரப்பப் படும்.



(எ) நீர் பராமரிப்பு:

நீர் பராமரிப்பு முறைகளில் புதிய உத்திகளைப் பரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். "சொட்டு நீர்ப்பாசனம்" மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் முறைகள் பரந்த அளவில் கையாளுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) மானாவாரி சாகுபடி:

மானாவாரி தொழில் நுட்பங்களைப் பரப்புவதில் 450 ஆயிரம் எக்கர் பெரு விளக்கப் பண்ணைகள் அமைத்து, அதன் மூலம் பயறு வகைகள் மற்றும் சிறு தானிய பயிர்களுக்குகந்த நிலசீர்திருத்தம், ஏர் வண்டல் இடுதல், ஊட்டமேற்றிய தொழு உரமிடுதல், விதை மற்றும் உரமிடும் கருவியை பயன்படுத்தி வரிசையில் பயிரிடுதல், வறட்சி தாங்கும் உயர் விளைச்சல் இரகங்களை பயிரிடுதல் போன்ற வழிமுறைகளில் முக்கிய கவனம் செலுத்தப்படும். அவை மட்டுமன்றி நுண்ணுயிர் உரங்களால் விதை நேர்த்தி செய்தல், அடி உரமிடுதல் மற்றும் தேவைக் குகந்த பயிர் பாதுகாப்பு முறைகள் போன்றவை பெரிசு செய்யப்படும்.

(ஐ) மரம் வளர்த்தல்:

மானாவாரி நிலங்களை அதிகபட்சம் உபயோகிக்க மரம் வளர்க்கும் முறைகளில் உழவர்கள் ஊக்குவிக்கப்படுவர். மானாவாரி நிலங்களில் தானியப் பயிர்களில் கலப்புப் பயிராக மரங்களை பயிரிடும் முறைகள் பரவிட நடவடிக்கை எடுக்கப் படும்.

விதை பெருக்கத் திட்டங்கள்:

அரசு விதைப் பண்ணைகள்: தற்போது மாநிலத்தில் 43 அரசு விதைப் பண்ணைகள் உள்ளன. அவைகளின் முக்கிய குறிக்கோள்:

1. தரமான மற்றும் சான்றிதழ் பெற்ற நெல், சிறு தானியங்கள், ஒட்டு ரக சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறி மற்றும் பருத்தி விதைகள் உற்பத்தி செய்தல்.

2. பண்ணையைச் சுற்றியுள்ள உழவர்களுக்கு உற்பத்தியை பெருக்க தேவைப்படும் திருந்திய பயிர் சாகுபடி முறைகளை விளக்கிடும் மாதிரி பண்ணையாக செயல்படுதல்.

கோவை வேளாண்மைப் பல்கலை கழகத்திலிருந்து மூல விதையைப் பெற்று, அதனை அரசு விதைப் பண்ணைகளில் ஆதார விதையாக பெருக்கப்படுகிறது. இந்த ஆதார விதை உழவர்களின் நிலங்களில் அமைக்கப்படும் விதைப் பண்ணைகள்

மூலம் சான்றிதழ் பெற்ற விதைகளாக பெருக்கப்படுகிறது. விதை உற்பத்தி இலக்கு ஜனவரி மாதம் முடிய சாதனை மற்றும் 1987–88-ம் ஆண்டின் இலக்கு ஆகியவை கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

<u>விதை உற்பத்தி (டன்கள்)</u>

<u>1986—87.</u>

| வரிசை எண். | பயிர். | இலக்கு. | ஜனவரி 1987 முடிய சாதனை. | 1986–87 எதிர் பார்க்கப் படும் சாதனை. | 1987–88-ல் இலக்கு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | நெல் | 3,325 | 1,790 | 3,325 | 3,325 |
| 2. | சிறு தானியங்கள் | 100 | 63 | 100 | 100 |
| 3. | ஒட்டுரக சிறு தானியங்கள். | 25 | 2 | 25 | 25 |
| 4. | பயறு வகைகள் | 125 | 69 | 125 | 125 |
| 5. | எண்ணெய் வித்துக்கள். | 50 | 16 | 20 | 20 |
| 6. | காய்கறி வகைகள் | 20 | 9 | 20 | 20 |
| 7. | பருத்தி | 10 | 2 | 10 | 10 |

நெல் மற்றும் சிறு தானியங்கள் விதை பெருக்கத் திட்டம்:

நெல் விதை வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க தேவை யான ஒரு இன்றியமையா இடுபொருள். அரசின் தற்போதைய கொள்கையானது நெல் பரப்பில் 12 சதத்திற்கும், இதர இரக மற்றும் ஒட்டு தானியங்கள் பரப்பில் 9 சதத்திற்கும் தரமான சான்றிதழ் விதைகள் அளித்தலாகும்.

1986–87 ஜனவரி முடிய 13,805 டன்கள் நெல், 262 டன்கள் கேழ்வரகு, 437 டன்கள் இரகச் சோளம், 59 டன்கள் ஒட்டு ரகச் சோளம், 493 டன்கள் கம்பு மற்றும் 209 டன்கள் மக்காச் சோள விதைகள் விநியோகிக்கப்பட்டன.

1987–88-ம் ஆண்டில் விதை விநியோக இலக்கு கீழ்க் கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது:

| பயிர். | அளவு (டன்கள்). |
|---|---|
| நெல் | 1,8520 |
| கேழ்வரகு | 254 |



| | |
|---|---|
| | 207 |
| இரகச் சோளம் | 196 |
| ஒட்டு ரகச் சோளம் | 468 |
| கம்பு (இரகம்) | 117 |
| மக்காச் சோளம் | |

<u>விதை சுத்திகரிப்பு நிலையங்கள்:</u>

நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், காய்கறி வகைகள் போன்ற பயிர்களின் விதைகளை சுத்திகரிக்க இத்துறையின் கீழ் 15 பெரிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்படுகின்றன. இதன் மூலம் வருடத்திற்கு 15,000 டன்கள் விதை சுத்திகரிக்க முடியும். அரசு விதைப் பண்ணைகளிலும், விவசாயிகளின் நிலங் களிலும் இத்துறையின் தொழில் நுட்ப கண்காணிப்பில் உற்பத்தி யாகும் விதைகள் இவை மூலம் சுத்திகரிக்கப்படுகின்றன.

<u>பயறு வகைகள் மேம்பாட்டுத் திட்டம்:</u>

தமிழகத்தின் பயறு வகைகள் தேவையான 12 லட்சம் டன்களில் தற்போது 4.5 லட்சம் டன்கள் தான் மாநிலத்திலேயே விளைகிறது. எஞ்சியுள்ள தேவைக்கு வெளி மாநிலங்களி லிருந்து பெறப்படுகிறது. தற்போதைய விளைச்சலான எக்டருக்கு 450 கிலோ என்ற அளவினை 1987–88 ஆம் ஆண்டில் எக்டருக்கு 500 கிலோ என்ற அளவிற்கு உயர்த்த திட்டமிடப் பட்டுள்ளது.

பயறு வகைகள் பரப்பில் 10 சதம் பரப்பிற்கு தரமான பொறுக்கு விதைகள் உற்பத்தி செய்து அளிப்பது இத்துறையின் கொள்கை. அதன்படி ஜனவரி 1987 முடிய 1,996 டன்கள் கொள்முதல் செய்யப்பட்டு 1,794 டன்கள் விநியோகம் செய்யப் பட்டன. 1987–88 ஆம் ஆண்டில் 2,750 டன் விதை கொள் முதல் செய்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. விதை உற்பத்தியில் உழவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 200 மானியம் அளிக்கப்பட்டு வருகிறது.

பயறு வகைகள் உற்பத்தியைப் பெருக்க வேண்டி விதை நேர்த்தி செய்ய 5.5 லட்சம் நுண்ணுயிர் கலவை பொட்டலங்கள் வேளாண் கிடங்குகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. 1987–88 ஆம் ஆண்டில் 7.00 லட்சம் பொட்டலங்கள் வழங்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

நஞ்சை தரிசில் பயிராகும் பயறு வகைகளுக்கு அடி உரம் இடப்படாததால் இலை மூலம் டி.ஏ.பி. தெளித்தல் நல்ல பலன் அளிக்கிறது. இத்திட்டம் 20,000 எக்டர் பரப்பில் செயல் படுத்தப்படும்.

மேலும் 25 சத மான்ய விலையில் பயிர் பாதுகாப்பு மருந்து கள் 20,000 எக்டருக்கு வழங்கப்படுகிறது. இத் திட்டம் 1986-87 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. 1987-88 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

துவரைப் பயிர் மானாவாரி எண்ணெய் வித்துக்கள் பயிருடன் கலப்புப் பயிராக 1.6 லட்சம் எக்டர்களில் பயிராகிறது. காய்ப் புழுவின் தாக்குதலால் பயறு வகைகள் விளைச்சல் குறைவாக உள்ளது. இப்பயிரை பூச்சி தாக்குதலிலிருந்து காப்பாற்றவும் அதன் விளைச்சலை அதிகரிக்கவும் 30,000 எக்டர் பரப்பில் 50 சத மான்ய உதவியுடன் பரந்த அளவில் பி.எச்.சி. 10 சதம் தூள் தூவும் திட்டம் ரூ. 10.50 லட்சம் செலவில் 1987-88 ஆம் ஆண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## பயறு வகைகளில் இரக மாற்றம்:

தற்போது துவரை சாகுபடியில் அதிக அளவில் பயிராகும் இரகம் எஸ். ஏ. 1. இந்த இரகம் 6 மாத வயதுடையதால் பருவ நிலை இடர்பாடுகளால் வெகுவாக பாதிக்கப்படுகிறது. ஆகையால் அதற்குப் பதிலாக தகுந்த குறைந்த வயதுடைய அதிக மகசூல் அளிக்க வல்ல இரகத்தினை அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. ஐ. சி. பி. எல் 87 என்ற இரகம் அணுசரணை ஆராய்ச்சிகளின் மூலம் 20 சதம் உயர் விளைச்சல் கொடுக்கவல்லது என கண்டறியப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் இந்த இரகத்தை அதிக அளவில் அறிமுகப்படுத்த திட்ட மிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சுமார் 4.00 லட்சம் எக்டரில் நஞ்சைத் தரிசில் பயறு வகைகள் பயிராகிறது. நஞ்சை தரிசில் பயறு வகைகளைப் பயிரிட அதிக வாய்ப்பு உள்ளதால் இம்முறை பழக்கத்தில் இல் லாத இடங்களில் வரும் ஆண்டில் சுமார் 1.00 லட்சம் எக்டரில் விரிவு படுத்தப்படும். அது மட்டுமன்றி, நஞ்சைத் தரிசில் தற் போது பயிராகும் வழக்கமான இரகங்களுக்குப் பதில் அதிக விளைச்சல் தரும் பொறுக்கு விதைகளான ஏடிடி. 3 உளுந்து மற்றும் கே. 851 பாசிப் பயறு போன்ற இரகங்கள் அறிமுகப் படுத்தப்படும்.

## தேசிய பயறு வகைகள் மேம்பாட்டுத் திட்டம்:

மைய மாநில அரசு சம பங்கேற்கும் எல்லா பயறு வகைகள் திட்டங்களும் ஒருங்கிணைந்து மினிகிட் விநியோகம், பெரு விளக் கப் பண்ணை அமைத்தல், அணுசரணை ஆராய்ச்சிகளை அமைத் தல், பயிற்சி, நுண்ணுயிர் கலவை தயாரிக்கும் கூடத்தை வலுப் படுத்துதல், பருப்பு உடைக்கும் ஆலை அமைத்தல் போன்ற பணிகள் 30.19 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படு கிறது.



இத் திட்டம் சேலம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, கோவை தஞ்சை மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 1987-88 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மற்றுமொரு மைய அரசு உதவியுடன் செயல்படும் திட்ட மான "சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மினிகிட் விநியோகம்" திட்டத்தின் மூலம் பயறு வகைகள் மினிகிட்டுகள் ரூ. 5 மற்றும் தானியங்கள் மினிகிட்டுகள் ரூ. 1-க்கு மிகக் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 82 லட்சம் மதிப்புள்ள பயறு வகைகள் மற்றும் தானியங்களின் மினிகிட்டுகள் வழங்கப்படும். ஜனவரி முடிய 1,20,367 பயறு வகைகள் மற்றும் 23,195 தானியங்கள் மினிகிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. 1987-88 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடரப்படும்.

## புகையிலை:

இவ்வாண்டில் இலக்கான 12,000 எக்டேரில் ஜனவரி 1987 முடிய 6,899 எக்டரில் புகையிலை பயிர் செய்யப்பட்டுள்ளது. 1987-88-ல் 12,000 எக்டரில் பயிரிடப்படும். மேலும் திட்ட மிடப்பட்ட விதை விநியோகமான 350 கிலோவில் 293 கிலோ விதை விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

## பருத்தி:

பருத்தி சாகுபடி பரப்பில் 10 சதம் மானாவாரி பயிருக்கும் 15 சதம் இறவை பயிருக்கும் தேவையான சான்றிதழ் விதை களை வழங்குவது இத்துறையில் கொள்கையாகும். அதன்படி ஜனவரி 1987 முடிய 1,517 குவிண்டால் பருத்தி விதை விநியோகம் செய்யப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டில் 3,000 குவிண்டால்கள் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படும். வைகை அணைப் பண்ணையில் 3 குவிண்டால் கரு விதையும், 116 குவிண்டால்கள் ஆதார விதையும் 1987-88 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும். அவை விதைப் பண்ணைகள் மூலம் பெருக்கப்பட்டு விநியோகிக்கப்படும்.

## கரும்பு:

ஆண்டொன்றிற்கு சுமார் 35,000 எக்டரில் கரும்பு நட தரமான, வீரிய நோயற்ற விதைக்கரணைகள் 3 அடுக்கு நாற்றங் கால் திட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது. அதன்படி 35 எக்டர் முதல் நிலை, 350 எக்டர் இரண்டாம் நிலை மற்றும் 3,500 எக்டரில் வணிக நிலை நாற்றங்கால்கள் அமைக்கப்படுகின்றன. விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு முதல் நிலை நாற்றங்காலுக்கும் இரண்டாம் நிலை நாற்றங் காலுக்கும் எக்டருக்கு ரூ. 1,500 வீதம் ஊக்கத் தொகை அளிக்கப் படுகிறது. மேலும் 575 செயல் விளக்கப் பாத்திகள் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் அமைக்கப்படுகின்றன. ஜனவரி 1987 முடிய 24 எக்டர் முதல்நிலை, 307 எக்டர் இரண்டாம் நிலை மற்றும்

2,338 எக்டர் வணிக நிலை நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டன. 443 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. இத் திட்டம் 1987-88 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

அது மட்டுமின்றி கரும்பு பயிரில் தோன்றும் இளங்குருத்துப் புழு மற்றும் இடைக்கணு புழுவை ஒழிக்க 21 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் மூலம் ஆண்டொன்றுக்கு 10,500 எக்டர் பரப்பிற்கு ஒட்டுண்ணி வளர்த்து விடப்படுகின்றன. ஜனவரி 1987 வரை 7,229 எக்டரில் ஒட்டுண்ணி விடப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டில் இதே அளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

எருவும் உரங்களும்:

1986-87 ஆம் ஆண்டில் ஜனவரி முடிய 3.30 லட்சம் டன்கள் தழைச்சத்தும், 1.30 லட்சம் டன்கள் மணிச்சத்தும், 1.29 லட்சம் டன்கள் சாம்பல் சத்தும் ஆக மொத்தம் 5.89 லட்சம் டன்கள் இரசாயன உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1987–88 ஆம் ஆண்டில் மொத்தம் 7.35 லட்சம் டன்கள் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து கொண்ட இரசாயன உரங்கள் விநியோகிக்கப்படும்.

உரக்கட்டுப்பாடு சட்டத்தை அமுல்படுத்தியதில் 321 உரிமங்கள் தற்காலிக நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. 3 உரிமங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. 451 விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் 76 விற்பனையாளர்கள் மீது சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தழைச் சத்தின் உபயோகத்தையும் சரியான அளவையும் கண்டறிய விவசாயிகளின் நிலங்களில் அனுசரணை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நீலப் பச்சைப்பாசி மற்றும் அசோலா இயற்கை உரங்களின் உபயோகத்தை பரவிடச் செய்ய தேவையான ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்கத்தளைகள் அமைக்கப்படுகின்றன. இயற்கை உரங்களான நீலப் பச்சைப்பாசி, அசோலா, அசோஸ்பிரில்லம், ரைசோபியம் போன்றவைகளை இரசாயன உரங்களுடன் அதிக அளவில் உபயோகிக்க விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். அதன்படி 1.2 லட்சம் எக்டரில் நீலப்பச்சைப்பாசியையும், 10,000 எக்டரில் அசோலாவையும் பரவிடச் செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. மேலும் 2.5 லட்சம் அசோஸ்பிரில்லம் பொட்டலங்கள் வழங்கப்படும். இவ்வாண்டு இலக்கான 2.50 லட்சம் பொட்டலங்களில் ஜனவரி 1987 முடிய 2.25 லட்சம் அசோஸ்பிரில்லம் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.



உற்பத்தி ஊக்கமளிப்பு:

காவிரி நதிப் படுகை விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க ரூ. 35 மதிப்புள்ள உரம் மற்றும் இதர இடுபொருட்கள் தமிழ்நாடு நுகர்வோர் பொருள் வாணிபக் கழகத்திற்கு விற்கப்படும். ஒவ்வொரு குவிண்டால் நெல்லுக்கும் வழங்கப்படுகிறது. இதற்கென இவ்வாண்டு ஜனவரி 1987 முடிய 19.62 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 5 கோடி ரூபாய் மார்ச் 1987 முடிவிற்குள் அளிக்கப்படும்.

பயிர் பாதுகாப்பு:

1986-87 ஆம் ஆண்டு 57.23 லட்சம் எக்டரில் பூச்சி தடுப்பு நடவடிக்கையும் 17.98 லட்சம் எக்டரில் நோய் தடுப்பு நடவடிக் கையும் உணவு மற்றும் உணவு அல்லாத பயிர்களில் பரப்பில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டு ஜனவரி 1987 வரை 43.86 லட்சம் எக்டரில் பூச்சி தடுப்பு நடவடிக்கையும் 16.21 லட்சம் எக்டரில் நோய் தடுப்பு நடவடிக் கையும் மேற்கொள்ளப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டு 57.61 லட்சம் பூச்சி தடுப்பும் 18.69 லட்சம் எக்டரில் நோய் தடுப்பு நடவடிக்கையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு மற்றும் பூச்சி நோய் கணக் கெடுப்பு போன்ற திட்டங்களைச் செம்மையாக செயல்படுத்திய தால் பூச்சி நோய் தாக்குதல் கட்டுப்பாட்டில் இருந்தது. பருவ நிலை சாதகமில்லாத நிலையிலும் உயர் விளைச்சல் பெற இது ஒரு முக்கிய காரணமாகும். மேலும் விவசாயிகளுக்குப் பயிர் பாதுகாப்பு செலவில் சேமிப்பும் ஏற்பட்டுள்ளது.

நெற் பயிரில் புகையான் தாக்குவதை கட்டுப்படுத்த பரந்த அளவில் மருந்தடிக்கும் திட்டம் ஜனவரி 1987 வரை 12,969 எக்டரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டும் 30,000 எக்டரில் தொடர்ந்து செயல்படுத்தப் படும். இத்திட்டத்தில் பூச்சி மருந்துகள் 50 சத மானியத்தில் வழங்கப்படும்.

நெல்லில் குலை நோய் ஒழிப்புத் திட்டம் ஜனவரி 1987 வரை 18,817 எக்டரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பூஞ்சான மருந்துகள் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டும் 40,000 எக்டரில் செயல் படுத்தப்படும்.

பச்சை தத்துப்பூச்சி ஒழிப்புத் திட்டம் ஜனவரி 1987 வரை 10,071 எக்டரில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டும் 20,000 எக்டரில் செயல்படுத்தப்படும். இத் திட்டத்தில் நாற்றங்கால் மற்றும் இருமுறை நடவு வயலில் மருந்து தெளிக்க பூச்சி மருந்துகள் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப் படுகிறது.

1986-87 ஆம் ஆண்டு 16,000 எக்டரில் நெல்லில் தோன்றும் இலை சுருட்டுப்புழுவை ஒழிக்க திட்டமிட்டு பரந்த அளவில் மருந்து அடிக்கும் பணி ஜனவரி 1987 வரை 15,500 எக்டரில் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 25,000 எக்டரில் 1987-88 ஆம் ஆண்டும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பூச்சி மருந்துகள் 50 சத மானியத்தில் வழங்கப்படும்.

எலி ஒழிப்புத் திட்டம் 1986-87 ஆம் ஆண்டு 1.68 லட்சம் எக்டரில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு ஜனவரி 1987 வரை 1.23 லட்சம் எக்டரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்திட்டம் 1987-88 ஆம் ஆண்டும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் எலி மருந்துகள் 50 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு தொழில் நுட்ப முறைகள் விவசாயிகளுக்குச் செயல் முறையாக செய்து காட்ட செயல் விளக்க திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. 99 இடங்களில் பாசனப் பகுதிகளில் ஒவ்வொரு திடலும் 20 எக்டரில் பரப்பிலும், மேலும் 99 இடங்களில் மழை பிடிப்பு பகுதியில் ஒவ்வொரு திடலும் 40 எக்டரில் பரப்பிலும் நிறுவப்பட்டுள்ளது. இத் திட்டம் 1987-88 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

பூச்சிநோய் கண்காணிப்புத் திட்டம் மிகப் பெரிய அளவில் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், பூச்சி நோய்களின் தாக்குதல் முன்கூட்டியே விவசாயி களுக்கு தெரிவிக்கப்படுவதுடன், தக்க சமயத்தில் பயிர் பாது காப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் மிகவும் உதவிகரமாக உள்ளது. ஒவ்வொரு வாரமும், 7,116 வயல்களில் இக் கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு அத்தாக்குதல் விவரம் மாவட்ட அளவில் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க பணி யாளர்கள் கூட்டத்தில் வாரந்தோறும் ஆய்வு செய்யப்படுகிறது. இக்கூட்டத்தில் விவசாயிகள் எடுக்கப்பட வேண்டிய நடவடிக் கைகள் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் வானொலி தொலைகாட்சி மூலமும் விரிவாக்கப் பணியாளர்கள் மூலமும் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டும் செயல்படுத்தப்படும்.

1986-87 ஆம் ஆண்டு களைக்கொல்லி மூலம் களை ஒழிக்க நிரூபண வயல்கள் 5,000 எக்டரில் அமைக்க திட்டமிடப்பட்டு ஜனவரி 1987 வரை 4,840 எக்டரில் நிரூபண திடல்கள் அமைக் கப்பட்டுள்ளன. இத் திட்டத்தில் களைகொல்லிகள் 50 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு விவசாயி களிடையே நல்ல வரவேற்பு உள்ளதால் 1987-88 ஆம் ஆண்டில் 10,000 எக்டருக்கு விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.





**உழவர் பயிற்சி நிலையங்கள்:**

தமிழ்நாட்டில் 12 உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவைகளில் ஜனவரி 1987 முடிய சாதனை, 1986-87 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சாதனை மற்றும் 1987-88 ஆம் ஆண்டில் இலக்கு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வரிசை எண். பயிற்சியின் பெயர். | 1986-87. | | 1987-88 இலக்கு. |
|---|---|---|---|
| | ஜனவரி முடிய சாதனை. | ஆண்டு முடிவில் எதிர்பார்க்கப்படும் சாதனை. | |
| (1) | (2) | (3) | (4) |
| 1 ஆண் மற்றும் பெண்களுக்கான நிலையப் பயிற்சி | 217 | 240 | 240 |
| 2 உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கான நிலையப் பயிற்சி. | 60 | 60 | 60 |
| 3 கிராமப்புற களப்பயிற்சியுடன் கூடிய செயல் விளக்கங்கள். | 996 | 1,200 | 1,200 |
| 4 பெண் விவசாயிகளுக்கான செயல் விளக்கப் பயிற்சி. | 115 | 120 | 120 |

**வேளாண் பள்ளிகள்:**

இத்திட்டம் ஊரக இளைஞர்களை வேளாண் தொழில் நுட்பங் களில் திறமை உள்ளவர்களாக ஆக்க வகுக்கப்பட்டுள்ள திட்ட மாகும். மாநிலத்தில் மொத்தம் 13 வேளாண் பள்ளிகள் உள்ளன. அவைகளில் 12 வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டிலும் ஒன்று தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் இயக்குநர் கட்டுப்பாட்டிலும் உள்ளன. இப்பள்ளியில் அளிக்கப்படும் படிப் பின் காலம் ஒரு வருடம். சுமார் 18 முதல் 30 வயதுடைய எட்டாவது வகுப்பு தேர்வு பெற்ற, வேளாண்மையை குடும்பத் தொழிலாக கொண்டுள்ள இளைஞர்களை தேர்வு செய்து ஒவ்வொரு பள்ளியின் மூலமும் 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் உதவித் தொகையாக மாதம் ரூ. 100 அளிக்கப்படுகிறது. வெற்றியுடன் முடிப்பவர்களுக்குச் சான்றிதழ் அளிக்கப்படுகிறது.

| பொருள். | அளவு | 1986–87. இலக்கு | 1986–87. சாதனை மாணவர்கள். | 1987–88. இலக்கு. |
|---|---|---|---|---|
| வேளாண் பள்ளிகள் 13 உதவியில் உள்ளதை சேர்த்து. | | 325 | 325 | 325 |

<u>ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாட்டுத் திட்டம், சிவகாசி:</u>

காமராசர் மாவட்டத்தில் உள்ள சிவகாசியில் மானாவாரி சாகுபடி முறைகளை செயல் விளக்கம் செய்து காட்ட இத்திட்டம் வழி வகுக்கிறது. செயல் விளக்கங்கள், வேலைப்பளு குறைக்கும் கருவிகள் விநியோகம், 50 சத மான்ய விலையில் பழ மரக்கன்றுகள் விநியோகம், விவசாயிகளுக்கு பயிற்சி, நீர் தடுக்கும் சிறிய அணைகள் கட்டுதல், நீர் பிடிப்பு குட்டைகள் கட்டுதல், வண்டல் பிடிப்பு குட்டைகள் கட்டுதல், போன்ற வேளாண் பொறியியல் பணிகள் ஆகியவை இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாண்டு ஜனவரி 1987 முடிய 1,200 எக்டர் செயல் விளக்கங்களும், 25,000 மரக்கன்றுகளும், 1,000 பழக்கன்றுகளும் 1,200 எக்டர் டிராக்டர் உழவும், 478 வேளாண் கருவிகள் விநியோகம் மற்றும் 4 விவசாய பயிற்சிகளும் செய்து முடிக்கப் பட்டன. இத்திட்டம் 1987–88 ல் தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

<u>மினிகிட்டுகள்:</u>

இத்திட்டத்தின்கீழ் நெல் மற்றும் சிறுதானிய மினிகிட்டுகள் ரூ. 1 அடையாள விலையில் வழங்கப்படுகின்றன. ஆண்டு இலக்கான 1 லட்சம் நெல் மற்றும் 30,800 சிறுதானிய மினிகிட்டுகளில் ஜனவரி 1987 வரை நெல் 92,846 மினிகிட்டுகளும் சிறுதானியத்தில் 28,090 மினிகிட்டுகளும் வழங்கப்பட்டன. இத்திட்டம் மைய அரசால் 1987–88-ம் ஆண்டிலும் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

<u>மண் ஆய்வு:</u>

மண்ணின் களர், உவர் மற்றும் அமிலத்தன்மையை கண்டறியவும், தங்கியுள்ள தழை, மணி, சாம்பல் மற்றும் நுண்ணூட்டசத்தின் அளவை கண்டறிந்து தக்கவாறு பயிர் வாரியாக உர அளவு பொரிசு செய்யவும் மாவட்டங்கள் தோறும் மண் ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. மண் ஆய்வின் பரிந்துரைப்படி களர், உவர் மற்றும் அமிலத்தன்மையைச் சீர்படுத்த தேவைப் படும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பாசன நீரின் தரத்தையும் தன்மையையும் அறிய ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.



தேவைப்படும் நிலங்களுக்கு சிறப்பு முன்னெச்சரிக்கைகளும் பரிந்துரை செய்யப்படுகின்றன. மண் ஆய்வுக் கூடங்கள் மண்ணின் உர அளவை அறியும் ஆராய்ச்சிகளை விவசாயிகளின் நிலங்களிலேயே நடத்துகின்றன.

மாநிலத்தில் மொத்தம் 15 மண் ஆய்வுக் கூடங்களும் 17, நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களும் உள்ளன. ஆண்டு இலக்கான 9.96 லட்சம் மண் மாதிரிகளில் 7.52 லட்சம் மண் மாதிரிகள் ஜனவரி 1987 முடிய ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 1987–88-ம் ஆண்டில் இந்த மண் ஆய்வுக் கூடங்களும் நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களும் 9.96 லட்சம் மண் மாதிரிகளை ஆய்வு செய்வதோடு மட்டும் அல்லாமல் மாவட்டங்களிலுள்ள மண் வகைகளின் உர வளத்தினைப் பற்றி சிறப்பு ஆராய்ச்சி திட்டத்தை மேற் கொள்ளும்.

<u>மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு :</u>

தமிழகத்தின் இயற்கை வளங்களில் ஒன்றான மண் வகைகளின் அளவுகள் பற்றி அறிய இந்த மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு வரிசைப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. மாநிலத்தில் 161 வட்டங்களிலும், ஆரம்ப வட்ட மண் அளவை முடிக்கப்பட்டு மண் வரை படங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. 1987–88-ம் ஆண்டில் இந்த மண் அளவையும் வரை படங்களும் நாக்பூரில் உள்ள தேசிய மண் அளவை மற்றும் நில உபயோகத் திட்டத்தின் அமைப்புடன் கலந்து ஆலோசிக்கப்படும். இதற்கென செயற்கை கோளிலிருந்து கிடைக்கப்படும் வான்வெளி புகைப்படங்களும் உபயோகப்படுத்தப்பட்டு மாவட்டம் மற்றும் மாநில மண் வரை படங்கள் 1 : 2,50,000 என்ற அளவில் துரிதமாக தயாரிக்கப்படும். இவைகளிலிருந்து மண் ஆராய்ச்சி கூடங்கள் வேளாண்மை விரிவாக்கப் பிரிவு, பொதுப்பணித்துறை நிலத்தடி நீர் அளவை, வேளாண்மை பொறியியல் துறை ஆகியவற்றிற்கு பயன்படும் வகையில் முடிவுகள் எடுக்கப்படும். இப்பணியினை மேற்கொள்ள வேலூர், கோவை, தஞ்சை மற்றும் பாளையங் கோட்டை ஆகிய இடங்களில் 4 மண் அளவை அலகுகள் இயங்கி வருகின்றன.

<u>களர், உவர் நிலங்களைச் சீர்படுத்துதல்:</u>

களர், உவர் நிலங்களைச் சீர்படுத்தும் வழிகளை செயல் விளக்கம் செய்து காண்பிக்க காஞ்சிபுரத்தில் ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மண் சீரமைப்புக்குத் தேவைப்படும் ஜிப்சம் போன்ற மருந்துகள் 50 சதம் மானிய விலையில் அளிக்கப்படுகிறது. 1986–87-ம் ஆண்டில் 200 ஏக்கர் நிலம் சீர்படுத்தப்பட்டுள்ளது. 1987-88-ம் ஆண்டில் 800 எக்டர் நிலம் சீர்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 2

**நுண்ணுயிர் கலவை தயாரிக்கும் திட்டம்:**

பலவன்கயான பயறுவகைகள் மற்றும் பசுந்தாள் உரப்பயிர் களுக்கு விதை நேர்த்தி செய்ய நுண்ணுயிர் கலவை தேவைப்படு கிறது. சென்ற சில வருடங்களில் அசோஸ்பிரில்லம், அசட்டோ பாக்டர், மற்றும் பாஸ்போ பாக்டீரியா போன்றவை, நெல், சிறு தானியங்கள், எண்ணெய்வித்துக்கள், காய்கறிகள் போன்றவை களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நுண்ணுயிர் உரங் களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அவைகளின் உற்பத்தியும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. தற்போது கடலூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ள 2 ஆய்வகங்கள் 8.5 லட்சம் பொட்டலங்கள் நுண்ணுயிர் கலவை தயாரிக்கின்றன. 1987–88-ம் ஆண்டில் 12.5 லட்சம் நுண்ணுயிர் பொட்டலங்கள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**நுண்ணூட்டக் கலவை தயாரிக்கும் திட்டம்:**

நுண்ணூட்டக் கலவையின் தேவை சீராக அதிகரித்து வருகிறது. தரமான நுண்ணூட்டக் கலவையினை தயாரித்து அளிக்க இத்திட்டம் குடுமியான் மலையில் இயங்கி வருகிறது. இத்திட்டம் லாப நட்டமில்லாத அடிப்படையில் நடத்தப்படுகிறது. இவ்வாண்டின் இலக்கான 1,000 டன்கள் நுண்ணூட்டக் கலவையின் உற்பத்தியில் ஜனவரி 1987 முடிய 615 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1987-88-ம் ஆண்டிலும் தொடரப்படும்

**தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கூடங்கள்:**

பூச்சி மருந்து சட்டம் மற்றும் உரக்கட்டுப்பாடு சட்டம் ஆகியவைகளை செயல்படுத்த 9 பூச்சிக்கொல்லி ஆய்வுக்கூடங்களும் 6 உர ஆய்வுக் கூடங்களும் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. அவை ஜனவரி 1987 முடிய 8,901 உர மாதிரிகளையும் 13,748 பூச்சிக் கொல்லி மாதிரிகளையும் ஆய்வு செய்துள்ளன.

**மத்தியக் கட்டுப்பாடு ஆய்வகம்:**

மண் உரம் நுண்ணுயிர் கலவை மற்றும் பூச்சி மருந்து ஆய்வுக் கூடங்களை ஒழுங்குபடுத்தி கட்டுப்பாட்டில் வைக்கும் நோக்கு டனும் மேற்படி ஆய்வுக் கூடங்களில் செய்த சோதனைகளின் தரத்தையும் பரிசோதித்து ஒழுங்குப்படுத்தும் நோக்கத்துடனும் குடுமியான்மலையில் மத்தியக் கட்டுப்பாடு ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. மேலும் இந்த மத்தியக் கட்டுப்பாடு ஆய்வகம் பல்வேறு களப் பணியாளர்களுக்கு மண் சம்பந்தப்பட்ட விஞ்ஞானம், வேளாண்மை, இரசாயனம் ஆகியவை சம்பந்தப்பட்ட பயிற்சியும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் துறையில் இரசாயனப் பிரிவில் பணியாற்றும் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு ஆரம்ப பயிற்சி மற்றும் மறு பயிற்சி ஆகியவைகள் இங்கு அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட இத்திட்டத்தின் இதே பணி 1987–88-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



1987 ஏப்ரல் 2]

**உப்பு படிந்த நிலங்களைச் சீர்படுத்துதல்:**

தென்னாற்காடு, புதுக்கோட்டை, மதுரை மற்றும் இராம நாதபுரம் மாவட்டங்களில் தலா 250 எக்டர் வீதம் 1000 எக்டர் உப்பு படிந்த நிலங்களை சீர்திருத்தம் செய்ய இத்திட்டம் செயல் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தேவையான அளவு ஜிப்சம் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் ஜனவரி 1987 வரை 835 எக்டர் உப்பு படிந்த நிலங்கள் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணி 1987-88-ம் ஆண்டும் 1,000 எக்டேர் பரப்பில் மேற்கொள்ளப் பட உள்ளது.

**சொட்டு நீர் பாசனம்:**

இம்மாநிலத்தில் நீர்ப்பாசன முறையை மேம்படுத்தவும் மற்றும் சொட்டு நீர்ப் பாசன முறையை பிரபலப்படுத்தும் நோக்கத்துடனும் ஏக்கருக்கு ரூ. 1,500 மானியம் வழங்கப்பட்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஜனவரி 1987 முடிய இத்திட்டத்தின்கீழ் 300 ஏக்கர் நிலம் சொட்டு நீர் பாசன முறையில் கொண்டு வரப்பட்டுள்ளது. 1987–88-ஆம் ஆண்டில் இன்னும் அதிகப்படியான பரப்பில் இந்தப் பணி செயல்படுத்தப் பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் குறு நில விவசாயி களிடையே சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறையைப் பரப்பும் நோக்கத்துடன் ரூ. 30 கோடி அளவில் ஒரு பெரிய திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படவிருக்கிறது.

**வேளாண் கருவிகள் வழங்குதல்:**

இருபது அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கும் புஞ்சை நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 50 சத மானிய விலையில் உழைப்பை மிச்சப்படுத்தும் வகையில் உள்ள கருவிகள் வழங்கப் படுகின்றன. 1987 ஜனவரி முடிய 569 விதை மற்றும் உரமிடும் கருவிகள் மற்றும் 9,457 இதர கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1987-88 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2,000 விதை மற்றும் உரமிடும் கருவிகளும் 10,000 ஏனைய வேளாண் கருவி களும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்:**

தற்போது பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் உதகை உட்பட 19 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இத் திட்டம் 30-6–1987 உடன் முடிவடைகிறது. இந்தத் திருத்தி அமைக்கப்பட்ட விரிவாக்கப் பணித் திட்டம் 1987-88 ஆம்

[1987 ஏப்ரல் 2

ஆண்டும் தொடர்ந்து செயல்படும். இந்தத் விரிவாக்கப்பணித் திட்டத்தை பலப்படுத்தும் வகையில், சில உப திட்டங்கள் தற்போது அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகின்றன.

**வேளாண்மையில் தமிழகப் பெண்கள் :**

பண்ணை பெண் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க டென் மார்க் நாட்டு நிதி உதவியுடன் ரூ. 3.21 கோடி மதிப்புள்ள இத் திட்டம், ஏழாண்டு காலத்தில் செயல்படுத்தப்படுகிறது. பண்ணைப் பெண் விவசாயிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக காஞ்சிபுரம், திண்டிவனம், ஆடுதுறை, குடுமியான்மலை, பரமக் குடி மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள ஆறு உழவர் பயிற்சி நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தில் மேற்கண்ட ஆறு மாவட்டங்களில் பண்ணை பெண் விவசாயிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காகவே பெண் வேளாண்மை அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். 1987-88-ம் ஆண்டில் ரூ. 1.05 கோடி செலவில் பணியாளர் குடியிருப்பு, அலுவலகக் கட்டிடம் மற்றும் பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி ஆகியவை கட்டப்பட உள்ளன. 1988 ஜனவரி மாத வாக்கில் பண்ணைப் பெண் விவசாயிகளுக்கு நிலையப் பயிற்சி மற்றும் முகாம் ஆகியவை தொடங்கப்பட உள்ளன.

**1987-88 ஆம் ஆண்டில் தொடங்கவிருக்கும் புதிய திட்டங்கள்:**

1987-88 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

**1. மாநில விதைப் பண்ணைகளில் உள்ளமைப்புகளைச் செம்மைப் படுத்துதல் :**

வேளாண்மைத் துறையில் இப்போது 43 மாநில விதைப் பண்ணைகள் உள்ளன. 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 37.50 இலட்சம் செலவில் 19 அரசு விதைப் பண்ணைகளின் உள்ளமைப்புகளைச் செம்மைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**2. விதை சுத்திகரிப்பு நிலையங்களின் உள்ளமைப்புகளைச் செம்மைப்படுத்துதல் :**

வேளாண்மைத் துறையில் தற்போது 15 பெரிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் நெல், சிறுதானியம், பயறு, காய்கறிவகைகள் போன்ற பயிர்களின் ஆதார மற்றும் சான்றிதழ் விதைகளை சுத்திகரிக்கும் பொருட்டு இயங்கி வருகின்றன.



1987 ஏப்ரல் 2]

1987-88 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட பணிகளை எடுத்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. விதை சுத்திகரிப்பு நிலையம், சாக்கோட்டையில் ஒரு கிடங்கு கட்டுதல். | 8.00 |
| 2. சாக்கோட்டையில் ஒரு விதை உலர்த்தும் களம் கட்டுதல். | 1.00 |
| 3. கொளத்தூர் மற்றும் திண்டிவனம் விதைச் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு முன் சுத்திகரிப்பு கருவி வாங்குதல். | 2.00 |
| | 11.00 |

**3. மாநில விதைப் பண்ணைகளில் பிளாஸ்டிக் உபயோகம் :**

1987-88 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு, பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் முறை பற்றி சொட்டு நீர்ப் பாசனம், மற்றும் நிலத்தடியில் பிவிசி குழாய் மூலம் நீர்ப்பாசனம் செய்தல் ஆகியவைகளைக் கீழ்க்கண்ட மாநில விதைப் பண்ணைகளில் செயல் விளக்கங்கள் மூலம் செய்து காட்ட திட்டமிடப் பட்டுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| மாநில விதைப்பண்ணை, மேட்டூர் அணை மற்றும் அண்ணா பண்ணை ஆகியவைகளில் சொட்டு நீர்ப்பாசனம் செய்தல். | 1.00 |
| மாநில விதைப் பண்ணை, சாக்கோட்டை, இருவேல்பட்டு. கஞ்சிக்குடிகாடு, வாளாவச்சலூர் ஆகியவைகளில் ''பிவிசி'' பைப் மூலம் நீர்ப் பாசனம் செய்தல். | 8.00 |
| | 9,00 |

**4. வைகை அணை விவசாயப் பண்ணையில் உள்ளமைப்புகளைச் செம்மைப்படுத்துதல் :**

வைகை அணைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி விதையின் தரத்தை மேம்படுத்தும் திட்டத்தில் அங்கு பணியாற்றும் பணியாளர்களுக்குக் குடியிருப்புக் கட்ட ரூ. 6.00 இலட்சம் செலவிடப்பட உள்ளது.

[1987 ஏப்ரல் 2

## எண்ணெய் வித்துத் துறை.

சமையல் எண்ணெய்களின் தேவையினை ஈடுசெய்ய சாகுபடி பரப்பினை அதிகரித்தல் மற்றும் பயிறு உற்பத்தித் திறனை பெருக்குதல் ஆகிய வழிகளில், எண்ணெய் வித்துக்களின் மொத்த உற்பத்தியை உயர்த்தும் நோக்கத்துடன் எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தற்போதைய எண்ணெய் வித்துக்களின் சாகுபடிப் பரப்பான 14.07 இலட்சம் எக்டரை 15.85 எக்ட ராகவும் தற்போதைய 14.85 இலட்சம் டன் உற்பத்தியை 18.98 இலட்சம் டன்களாகவும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உயர்வு, ஐந்தாண்டு இறுதிக்குள் (1990) அடையப்படும். 1985-86 ஆம் ஆண்டு பருவமழை சாதகமாக இருந்ததாலும், விவசாயிகள் திருந்திய சாகுபடி முறைகளைப் பெருவாரியாகப் பின்பற்றியதாலும் நிலக்கடலை உற்பத்தி 14.56 இலட்சம் டன்னை எட்டியதுடன் மொத்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 15.35 இலட்சம் டன்களை எட்டி இதுவரை காணாத சாதனை அடைந்துள்ளோம்.

1986-87 ஆம் ஆண்டு எண்ணெய் வித்துக்கள் சாகுபடிப் பரப்பினை 15.12 இலட்சம் எக்டருக்கு கொண்டுவரவும், உற்பத்தியை 17.00 இலட்சம் டன்னுக்கு அதிகப்படுத்திடவும், தென்னை சாகுபடியினை 1.62 இலட்சம் எக்டரிலிருந்து 1.70 இலட்சம் எக்டருக்கு அதிகப்படுத்துவதோடு, உற்பத்தியினை 172 கோடி நெற்றுகளுக்கு அதிகரித்திடவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

1986-87 காரிப் பருவத்தில் தென்மேற்குப் பருவமழை தாமதத்தினாலும் மழை பற்றாக்குறையினாலும் பருவமழை பெய்ததாலும், நிலக்கடலை விதைப்பு செப்டம்பர் மாதம் வரை நீடித்தது. இதனால் வட ஆற்காடு, திருச்சி, பெரியார், மதுரை, அண்ணா மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் சாகுபடிப் பரப்பு பெருமளவு பாதிக்கப்பட்டு மாநிலத்தில் மொத்தமாக 1.88 லட்சம் எக்டர் அளவுக்கு எண்ணெய் வித்துக்கள் பரப்பில் இழப்பு ஏற்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழையும் 30 முதல் 50 சதம் வரை குறைந்துள்ளது. வடகிழக்குப் பருவ மழை தவறியதால் எண்ணெய் வித்துக்கள் சாகுபடிப் பரப்பில் ராபி பருவத்தில் மேலும் 0.70 லட்சம் எக்டர் குறையலாம். எனவே, 1986-87 ஆம் ஆண்டில் மொத்த எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பு 13.35 எக்டர் அளவிற்கு இருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

1986-87 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டமும் எதிர்பார்க்கப்படும் சாதனையும் 1987-88 ஆம் ஆண்டு திட்டமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



1987 ஏப்ரல் 2]

பரப்பு : லட்சம் எக்டரில்.

உற்பத்தி : லட்சம் டன்னில்.

| | பரப்பு. | | 1986-87 உற்பத்தி. | | 1987-88 இலக்கு. | |
|---|---|---|---|---|---|---|
| | இலக்கு. | எதிர் நோக்கும் சாதனை. | இலக்கு. | எதிர் நோக்கும் சாதனை. | பரப்பு. | உற்பத்தி. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| நிலக்கடலை .. | 11.99 | 10.95 | 15.18 | 13.94 | 12.16 | 15.49 |
| எள் .. .. | 1.60 | 1.45 | 0.79 | 0.63 | 1.60 | 0.75 |
| சூரியகாந்தி .. | 1.32 | 0.71 | 0.92 | 0.34 | 1.38 | 0.81 |
| ஆமணக்கு .. | 0.21 | 0.24 | 0.11 | 0.09 | 0.23 | 0.13 |
| மொத்தம் .. | 15.12 | 13.35 | 17.00 | 15.00 | 15.37 | 17.18 |
| தென்னை .. | 1.70 | 1.70 | 172 கோடி நெற்றுகள் | 172 | 1.78 | 186 கோடி நெற்றுகள். |

### விதை உற்பத்தியும் விதை விநியோகமும் :

தரமான விதைகளை உற்பத்தி செய்து, நிலக்கடலையில் 5 சதவிகிதம், எள்ளில் 15, சதவிகிதம் சூரிய காந்தியில் 50 சதவிகிதம், ஆமணக்கில் 30 சதவிகிதம் சாகுபடிப் பரப்புக்கு விதைகள் விநியோகம் செய்வதை முக்கிய செயல் திட்டமாக எண்ணெய் வித்துத்துறை கொண்டுள்ளது. இந்த அடிப்படையில் 13,163 டன் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதே கொள்கை 1987—88 ஆம் ஆண்டுக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அதோடு கூட 1987—88 ஆம் ஆண்டில் தேவையான அளவு சான்று வித்துக்கள் கிடைப்பதற்கு உறுதியான வழிவகை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்தித் திட்டத்தில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரித்திட உரிய இடு பொருள்களான இரசாயன உரம், உயிரின உரம், நுண்ணூட்டச் சத்துக்கள், உழவுக்கருவிகள், பயிர் பாதுகாப்புக் கருவிகள்

[1987 ஏப்ரல் 2

ஆகியவற்றைப் பயன்படுத்த விவசாயிகளுக்கு நிதி உதவி செய்
யப்படுகிறது. அதேபோல், சான்று பெற்ற விதை உற்பத்திக்கும்
முற்போக்கான பயிர் நிர்வாக முறைகளை விளக்க, பரந்த
அளவில் விளக்கப்பண்ணைகள் அமைக்கவும் நிதி உதவி வழங்
கப்படுகிறது. மற்றும் சான்று விதைகள் உற்பத்தி ஒருங்
இணைந்த செயல்விளக்கப் பண்ணைகளில் திருந்திய சாகுபடி
முறைகளைப் பின்பற்றிடவும் உதவிகள் அளிக்கப்படுகின்றன.
இவைகளுக்காக ரூ. 288 லட்சம் மானியத் தொகை வழங்கப்
படுகிறது. இத்திட்டம் மானாவாரி சாகுபடியில் தேர்ந்
தெடுத்த சாகுபடி முறைகளைப் பின்பற்றிடவும், பிற கிராமங்
களில் தரமான விதைகள் உற்பத்தியை அதிகரித்திடவும் முக்கி
யத்துவம் கொடுத்துள்ளன.

மாநிலத்தில் மிகப் பெருமளவு சாகுபடியாகும் நிலக்கட
லையை அடுத்து அதிகப் பரப்பளவில் எள் மற்றும் சூரியகாந்தி
ஆகிய இரண்டு எண்ணெய் வித்துப் பயிர்களும் சிறந்த
கவனத்தைப் பெறுகின்றன. சிறந்த ரக விதைகள் விநியோக
மும், உயரிய சாகுபடி நுட்பங்களைக் கடைப்பிடித்தலும்
உற்பத்தி அதிகரிப்பை துரிதப்படுத்துவதற்கான நெறிகள்
என்பதால் இவைகள் வலியுறுத்தப்படுகின்றன. 1986—87 ஆம்
ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் மிகப் பெரிய அளவில் நெல்
தரிசு நிலங்களில் எள் சாகுபடி ஊக்குவிக்கப்பட்டது.
அதுபோல் பிற மாவட்டங்களில் ஆற்றுப்படுகைகளில் நிலக்
கடலை சாகுபடிக்குத் தேவையான பாசன வசதி பற்றாக்குறை
ஏற்படும் பகுதிகளிலும் எள் சாகுபடி பிரபலப்படுத்தப்படுகிறது.
மேற்சொன்ன எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்திப் பெருக்
கத் திட்டங்கள் 1987—88 ஆம் ஆண்டுகளில் மேலும் தீவிரப்
படுத்தப்படும். எண்ணெய் வித்து உற்பத்தியில் புதிய நம்
பிக்கை கொடுத்திருக்கும் ஒரு பயிர் எண்ணெய் வித்து மற்றும்
புரதப் பயிரான சோயாமொச்சை. பல்வேறு மாவட்டங்களில்
செயல்விளக்கப் பண்ணைகளில் பயிரிடப்பட்ட சோயாமொச்
சைப் பயிர் நல்ல பயன் தந்துள்ளது. இந்த சோயா மொச்சை
தஞ்சாவூர் மாவட்டத்தின் நெல் தரிசு நிலங்களுக்கும், சேலம்,
பெரியார், கோயம்புத்தூர் முதலிய இதர மாவட்டங்களில்
கரும்பு மற்றும் மஞ்சள் பயிர்களில் ஊடுபயிராக சாகுபடி செய்வ
தற்கும் மிக உகந்ததாக இருக்கும். இப்பயிரைப் பிரபலப்
படுத்த முக்கியத் தேவை விளைபொருளை விற்பனை
செய்வதற்குரிய விற்பனை வசதிகளை பெருக்குதலும் பயன்
படுத்தும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதும் ஆகும்.
நவீன சாகுபடி உத்திகள் மற்றும் உயரிய சாகுபடி ரகங்
களைச் சிறு மற்றும் குறு விவசாயிகள் கடைப்பிடித்து உற்
பத்தியினை அதிகப்படுத்தும் வகையில் சிறு மற்றும் குறு
விவசாயிகளுக்கான சிறப்புத் திட்டத்தின்கீழ் 1986—87 ஆம்
ஆண்டில் 76,000 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ. 100
லட்சம் பெறுமான சிறுதளைகள் வழங்கிடத் திட்டமிடப்
பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 2]

1986—87 ஆம் ஆண்டில் சிறப்புப் பகுதித் திட்டத்தில் ஆதி
திராவிட மற்றும் பழங்குடியினருக்கு ரூ. 18.12 லட்சத்திற்கு
எண்ணெய் வித்துக்கள் மற்றும் தென்னம்பிள்ளைகள் மான்ய
விலையில் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்தித் திட்டங்கள் :

1986-87 ஆம் ஆண்டு தென்னை சாகுபடி பரப்பினை 1.70
லட்சம் எக்டருக்கு அதிகரித்து உற்பத்தியினை 1.2 கோடி
தேங்காய்கள் அளவுக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.
இதே காலத்தில் 20 லட்சம் நெட்டை ரக தென்னங்கன்றுகளும்
5 லட்சம் வீரிய ஒட்டுக் கன்றுகளும் வழங்கத் திட்டமிடப்
பட்டுள்ளது.

1987-88 ஆம் ஆண்டில் தென்னை சாகுபடிப் பரப்பினை
1.78 லட்சம் எக்டருக்கு உயர்த்தி, 186 கோடி தேங்காய்கள்
உற்பத்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயி
களுக்கு 18 லட்சம் நெட்டை, 7 லட்சம் வீரிய ஒட்டுக் கன்றுகள்
வழங்குவதும் தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும்.
தென்னை சாகுபடியில் மேம்பட்ட சாகுபடி முறைகள்,
உரங்கள் தகுந்த பயிர் பாதுகாப்பு முறைகள் ஆகியவற்றைக்
கடைப்பிடிப்பதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும்
திட்டமிடப்பட்டுள்ளது. கருந்தலைப்புழு மற்றும் காண்டா
மிருக வண்டுகளினால் தென்னைக்கு ஏற்படும் சேதத்தைத்
தடுக்கவும், ஒட்டுண்ணி மற்றும் பூஞ்சாளங்களின் உற்பத்தி
யினை மாநிலத்தில் உற்ற 17 ஒட்டுண்ணி நிலையங்களில் அதிகப்
படுத்தவும், இனத்தின் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும்
முறைகளை அதி தீவிரப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.
வேர் வாடல் நோய் தாக்கிய தென்னை மரங்களை அழிக்கும்
திட்டம் வேர்வாடல் நோய் அதிகமாக உள்ள மாவட்டங்களில்
தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பகுதி 2 திட்டங்கள்.

எண்ணெய் வித்துத்துறை மாநிலஎண்ணெய் வித்து உற்பத்திப்
பண்ணைகளில் தரமான விதை உற்பத்தியைப் பெருக்குவதற்குத்
தேவையான பாசன வசதியை முன்னேற்ற திட்டங்கள் தீட்டி
உள்ளது. அதே போல் விவசாயிகளுக்குத் தரமான விதை
களைப் பாதுகாப்புடன் சேமித்து வைத்து உரிய நேரத்தில்
விநியோகிக்கத் தேவையான கிடங்குகளை மாவட்டங்களில்
கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 26.67 லட்சம்
1986—87 ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தில் ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 2

## தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி யாளர்கள் இணையம்.

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்
கள் இணையம் ஜனவரித் திங்கள் முதல் நாள், 1981 ஆண்டில்
தேசிய பால்வள வாரியத்தின் எண்ணெய் வித்துக்கள் மற்றும்
தாவர எண்ணெய் அபிவிருத்தித் திட்டங்களை தமிழ்
நாட்டில் அமல்படுத்தும் இணைப்பு நிறுவனமாக பதிவு செய்யப்
பட்டது.

### குறிக்கோள் :

இணையத்தின் குறிக்கோள் எண்ணெய் வித்து உற்பத்தியாளர்
களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கான செயல்முறைத்
திட்டங்களை திறமையான முறையில் உற்பத்தியை பெருக்குதல்,
கொள்முதல், பதப்படுத்துதல், விற்பனை ஆகியவைகளை
ஒருங்கிணைந்து செயல்படுத்துதலும் ஆகும்.

### பங்கு மூலதனம் :

இவ்விணையத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடி
யாகும். இதில் இணையத்தின் திட்டப் பகுதியில் உள்ள எண்ணெய்
வித்து கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களும், தேசிய பால்
வள வாரியமும் உறுப்பினர்களாக இருக்க வகை செய்யப்பட்
டுள்ளது. இவற்றில் தேசிய பால்வள வாரியம் ரூ. 2.55 கோடி
யினை பங்கு மூலதனமாக முதலீடு செய்ய உள்ளது. இதுவரை
ரூ. 91.17 லட்சங்கள் பங்கு மூலதனமாக முதலீடு செய்யப்
பட்டுள்ளது.

### நிதி :

இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 15.60 கோடி
களில் ரூ. 8.40 கோடி (53.70 சதவீதம்) கடனாகவும்,
ரூ. 7.20 கோடி மானியமாகவும் (46.21 சதவீதம்) இணையத்
திற்கு தேசிய பால்வள வாரியம் வழங்குகிறது.
இதுவரை ரூ. 3.67 கோடியினை இணையம் தனது வளர்ச்சிப்
பணிகளுக்கு பயன்படுத்தியுள்ளது.

### திட்டப் பகுதி:

இத்திட்டம் ஆரம்பத்தில் வட ஆற்காடு, தென் ஆற்காடு
செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள 20 வட்டங்களில் அமல்
படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் 335 ஆனந்து மாதிரி
கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து 82,000 மணிலா உற்பத்தி
யாளர்களை உறுப்பினர்களாக்கி 92,00 எக்டர் நிலக்கடலை
சாகுபடிப் பரப்பை தன்னகத்தே கொண்டு வருவதே இதன் அடிப்
படை செயல்பாடாகும்.



1987 ஏப்ரல் 2]

### சாதனை : 1986-87 (1-7-86 முதல் 31-12-86 வரை)

இத்திட்டத்தில் இதுவரை 235 எண்ணெய் வித்து உற்பத்தி
யாளர் கூட்டுறவுச் சங்கங்களை இணையம் அமைத்துள்ளது. இச்
சங்கங்களில் 26,337 உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக்
கொண்டு வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களிலுள்ள
13 வட்டங்களில் 49.306 எக்டர் நிலக்கடலைப் பரப்பைக்
கொண்டு வந்துள்ளது. மேலும் இணையம் நெய்வேலியில் (102
எக்டர்) விதைகள் உற்பத்திக்காகவும் உற்பத்தியாளர்கள், நிர்வாக
உறுப்பினர்கள் மற்றும் சங்கச் செயலாளர் இணையத்தின்
அலுவலர்களின் பயிற்சிக்கென்றும் ஒரு உழவியல் பயிற்சி
மையத்தினை தொடங்கி உள்ளது. இதுவரை 256 டன்கள்
பொறுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டு 2,830 டன் நிலக்
கடலை கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் சங்கங்களின் மூலம்
உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

### பதப்படுத்துதல் :

அத்துடன் திருவண்ணாமலை, விருத்தாசலத்தில் உள்ள இரண்டு
எண்ணெய் பிழியும் ஆலைகளை தற்பொழுதுள்ள அரவைத்திற
னான நாள் ஒன்றுக்கு 166 டன்களிலிருந்து 350 டன்களாக விரிவு
படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ஏற்றவாறு மற்ற
பகுதிகளான கடலை உடைப்புக் கரு திறன் 250 டன்னாகவும்,
எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நாள் ஒன்றுக்கு 10 டன் எண்ணெயி
லிருந்து 35 டன்னாகவும், கிடங்கு வசதி தற்பொழுதுள்ள 1,500
டன்களிலிருந்து 16,500 டன்னாகவும் தேசிய பால்வள வாரியத்
தின் உதவியுடன் விரிவுபடுத்த திட்டமுள்ளது. இது வரை
இந்த இரண்டு ஆலைகளிலும் 3,727 டன்கள் நிலக்கடலை, பருப்பு
அரைவை செய்து 1,410 டன் பிழியப்பட்ட எண்ணெயாகவும்
181 டன்கள் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயும் 2,229 டன்
பிண்ணாக்கும் 31-12-86 முடிய பதப்படுத்தப்பட்டுள்ளது.

### விற்பனை :

இத்துடன் சென்னையில் உள்ள கிண்டியில் எண்ணெய் நிரப்பு
வதற்காக ஒரு கொள்கலன் நிரப்பு நிலையத்தினை (நாள் ஒன்றுக்கு
15 டன்கள்) திட்டத்தின் ஒரு அங்கமாக ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிரப்பு நிலையம் 15 கிலோ (டின்கள்), 5 கிலோ (அடைப்
பான்களில்), 1 கிலோ (பாலிதின் பைகள், புட்டிகள்) 0.5 கிலோ
(புட்டிகள், பாலிதின் பைகள்) நுகர்வோருக்கென்று நிரப்பி
விற்பனைக்கு அளிக்க வழி செய்துள்ளது. இணையத்தின்
இரண்டு எண்ணெய்களான 'பியூர்நெட்' (பிழியப்பட்ட நிலக்
கடலை எண்ணெய்), 'வின்னர்' (சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்)
அங்காடிகளில் விற்பனைக்குக் கொண்டு வந்து இதுவரை 970
டன்கள் 'பியூர்நெட்' எண்ணெயையும், 226 டன்கள் 'வின்னர்'
எண்ணெயினையும், 2,272 டன்கள் பிண்ணாக்கினையும் விற்பனை
செய்துள்ளது. அத்துடன் 4,598 டன்கள் இறக்குமதி செய்யப்

பட்டு தேசிய பால்வள வாரியத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட ரேப் விதை எண்ணெயினையும், 345 டன்கள் சோயா மொச்சை எண்ணெயினையும் 31-12-86 முடிய விற்பனை செய்துள்ளது

**சிறப்பு சாதனை :**

இணையம் 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 83.38 லட்சங்களை நிகர லாபமாக ஈட்டியுள்ளது. இவற்றில் ஒரு பகுதியான 5.14 லட்சங்களை உற்பத்தி அதிகரிப்புக்கென்று 10,380 உறுப் பினர்க்கு கொள்முதல் முன்பணமாக கொள்முதலில் பங்கு கொண்டதற்காக அளிக்கப்பட்டது.

**1987-88 ஆம் ஆண்டுக்கான செயல்பாடுகள்:**

மேலும் வரும் ஆண்டு இணையம் செங்கல்பட்டு மாவட்டத்தி லுள்ள பள்ளிப்பட்டு, திருத்தணி, திருவள்ளூர் வட்டங்களில் விரிவுபடுத்தி தற்பொழுதுள்ள வட ஆற்காடு மாவட்டத்தில் நடைபெறும் சங்க அமைப்புப் பணியை முடிக்க வகை செய் துள்ளது. 1987-88 ஆம் ஆண்டு மேலும் வளர்ச்சி விரிவாக்கப் பணிகளை தீவிரப்படுத்த நிலக்கடலை மகசூலைப் பெருக்கி உற்பத்தியைப் பெருக்க வகைசெய்துள்ளது. அத்துடன் 1987-88ல் இணையம் 25,000 டன்கள் நிலக்கடலை உறுப்பினர்களிட மிருந்து கொள்முதல் செய்ய வகை செய்துள்ளது.

**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை.**

**செடிகள் உற்பத்தி :**

தோட்டக்கலை பயிர்களின் தரமான நடவுச் செடிகளை உற்பத்தி செய்யும் பணியில், 54 தோட்டக்கலைப் பண்ணை களும், பெரும் பழப் பண்ணைகளும், மாபெரும் பழப் பண்ணை களும் பூங்காக்கள் மூலம் ஈடுபட்டுள்ளன. இப் பண்ணை களிலிருந்து 1986-87 ஆம் ஆண்டில் ஒட்டுச் செடிகள்; பதியன்கள், வேர் பிடித்த குச்சிகள் மற்றும் நாற்றுக்கள் 35 இலட்சம் எண்கள் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்கட்கு விநியோ கிக்கப்பட்டன. உற்பத்தித் திறனை 1987-88 ஆம் ஆண்டில் 40 இலட்சமாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**காய்கறி அபிவிருத்தி :**

அதிகரித்து வரும் சான்றிதழ் பெற்ற காய்கறி விதைகள் தே வையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், விதைப் பண்ணை ஒப்பந்தம் அடிப்படையில் தனியார் தோட்டங்களில் காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், இப்பணி தர தோட்டக்கலைப் பண்ணைகளில் ஊடுபயிராக சாகுபடி சய்தும், சேலம் மாவட்டம் சின்னகல்ராயன் மலை மற்றும் லகிரி மாவட்டம் குன்னூரிலும் உள்ள காய்கறி உற்பத்தி மையங்களின் வாயிலாக 6.00 மெட்ரிக் டன் விதை உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. காய்கறி அபிவிருத்தித் திட்டம் மற்றும் நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம் வாயிலாக, 86.0 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.



இப்பணி 1987-88 ஆம் ஆண்டில் 90 மெட்ரிக் டன் அளவிற்கு உயர்த்தப்படும். காய்கறி நாற்றுக்கள் 12.10 இலட்சமும் 6 மெட்ரிக் டன் நுண்ணூட்டச் சத்துக்களும், 72 மெட்ரிக் டன் இரசாயன உரங்களும், 16.50 மெட்ரிக் டன் தூள் வடிவ பயிர் பாதுகாப்பு மருந்துகளும், 660 லிட்டர் திரவ வடிவ பயிர் பாதுகாப்பு மருந்துகளும் தொடர்ந்து 1987-88 ஆம் ஆண்டிலும் விநியோகிக்கப்படும். காய்கறி உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், அவ்வப்பொழுது புதிய காய்கறிகள் மக்களுக்குக் கிடைக்க உகந்த முறையில் ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்புள்ள ஒன்பது வகை வீரிய ஒட்டு இன காய்கறி விதைகள், முன்னோடி உழவர்கட்கு 25 விழுக்காடு விலையில் 1986-87 ஆம் ஆண்டில் 3,450 வேளாண் குடும்பத்தினருக்கு விநியோகிக்கப்பட்டது. இப்பணி 1987-88 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

தீவிர தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 10,550 எக்டர் சாகுபடி பரப்பிற்கு கொண்டுவர முக்கிய பழவகை இரகச் செடிகளான மா 1.25 இலட்சம், சப்போட்டா 0.25 இலட்சம், கொய்யா 1.75 இலட்சம், எலுமிச்சை 1.50 இலட்சம், பலா 1.50 இலட்சம், அன்னாசிக் கன்றுகள் .50 இலட்சம், மற்றும் 2.50 இலட்சம் இதர தோட்டக்கலைச் செடிகள் நடப்பு ஆண்டில் விநியோகிக்கப் பட்டன. இது 1987-88 ஆம் ஆண்டில் 11,000 எக்டராக அதிகரிக்கப்படும். அன்னிய நாட்டு வருவாயை ஈட்டவல்ல மலைப் பயிர்களை 500 எக்டர் பரப்பில் புதியதாக நடவுக்குத் தகுந்த இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கவும், நான்கு இலட்சம் காப்பி நாற்றுக்கள், ஒரு இலட்சம் ஏலக்காய் நாற்றுக்கள், 3.30 இலட்சம் வேர் பிடித்த மிளகுக் குச்சிகள் விநியோகிக்கும் பணி களும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெற்றி லையில் காணும் ''வாடல்நோய்'' என்ற நோயினை கட்டுப் படுத்த 125 எக்டர் பரப்பிற்கு பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகித்தும் 25 நிருபணத் தளைகள் சாகுபடியாளர்களின் நிலங்களில் நிறுவப்படும் பணியும் நடப்பு ஆண்டில் மேற் கொள்ளப்பட்டன.

**சிறப்புப் பகுதிகள், பின்தங்கிய பகுதித் திட்டங்கள் :**

தமிழகத்தில் சாகுபடிக்கு உகந்த காலி நிலங்களை பசுமை யாக்கவும், அதன் சுற்றுப்புற சூழ்நிலையை மேம்படுத்தவும், மண் அரிப்பைத் தடுக்கவும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் போன்ற சிறப்பு திட்டங்களை மதுரை, அண்ணா, காமராஜர், திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் செயல்படுத்துவதுடன், நீலகிரி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தோட்டக்கலைப் பயிர்கள் நடும் பணி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நடை பெறுகிறது. பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத் தவும், அவர்களின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டமானது வட ஆற்காடு, தருமபுரி, சேலம், திருச்சி மற்றும் தென் ஆற்காடு ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள 16 குன்றுப்பகுதிகளில்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 3,200 பழங்குடியினர் குடும்பங்கள் பயன் அடையும் பொருட்டு, இடுபொருட் களை மானிய விலையில் விநியோகித்தும், தனிநபர் பழத் தோட்டங்கள் நிறுவியும், பயிற்சி மற்றும் சுற்றுலா ஆகியவைகள் அளித்தும் நிருபணத் தளைகள் ஆங்காங்கே நிறுவப்பட்டும் வருகின்றன.

நீலகிரி மாவட்டத்திலும், அண்ணா மாவட்டம், கொடை கானல் மலைப்பகுதியிலும், பயிற்சி வழித் தொடர்புத் திட்ட மானது இத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், 1986–87 ஆம் ஆண்டில் 24,000 எக்டேர் சாகுபடி பரப்பில் 34,000 விவசாயக் குடும்பங்கள் பயன் அடைந்தனர்.

## மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள் :

அண்டை தென் மாநிலங்களோடு ஒப்பிட்டு நோக்குங்கால், தமிழ்நாட்டில் 99,000 எக்டரில் சாகுபடியில் உள்ள முந்திரியின் உற்பத்தித் திறனானது குறைவே. எனவே, விஞ்ஞான ரீதியில் அனைத்து சாகுபடி முறைகளையும் காலத்தே மேற்கொண்டு, உற்பத்தித் திறனை அதிகரித்திட ஏதுவாக மைய அரசு திட்டத் தின்கீழ் 500 செயல் விளக்கத் திடல்கள் அமைத்தும், பட்டை மொட்டுக்கட்டும் நாற்றங்கால், 3.20 எக்டர் பரப்பில் நிறுவி பராமரிக்கப்படுகிறது; பயிர் பாதுகாப்பு 2,000 எக்டரில் மேற் கொள்ளப்பட்டது.

## 20–அம்சத் திட்டம்:

இருபது–அம்சத் திட்டத்தின்கீழ் 3.200 பழங்குடியினர் குடும்பங்கள் தோட்டக்கலை திட்டங்கள் மூலம் பயனடைந்தனர். பல்வகைப்பட்ட தோட்டக்கலை நடவுச் செடிகள் 1.30 மில்லியன் எங்கள் மரம் நடும் திட்டம் மூலம் விநியோகிக்கப்பட்டன.

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் நிதி உதவியுடன், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் ரூ.1.50 இலட்சம் செலவினமாக காய்கறி மினிகிட் பாக்கெட்டுகள் 1988 ஆம் ஆண்டு அடிப்படைத்தில் விநியோகிக்கப்பட்டன. ரூபாய் ஏழு இலட்சம் மதிப்புள்ள பயறு வகை மினிகிட் பாக்கெட்டு களும் உழவர்கட்கு இத்துறை மூலம் விநியோகிக்கப்பட்டது.

## தோட்டக்கலைக் கண்காட்சி :

புது தில்லியில், நவம்பர் 1986–ல் நடைபெற்ற தேசிய தோட்டக்கலைக் கண்காட்சியில் முதன்முறையாக இத்துறை பங்குகொண்டு, தமிழகத்தின் தோட்டக்கலைப் பொக்கிஷங்களை எடுத்துணர்த்தியது.

தமிழகத்தின் முக்கிய நகரங்களான சென்னை, கோவை, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இரண்டு நாள் தோட்டக்கலை கண்காட்சி நடத்தப்பட்டது. மேலும், ஆண்டு மலர் மற்றும் பழக் கண்காட்சி 1986 ஆம் ஆண்டு மே மாதத்தில் உதகமண்டலம் மற்றும் குன்னூரில் சிறப்பாக நடந்தேறியது.

பகுதி இரண்டு திட்டங்கள் :

கீழ்க்கண்ட திட்டங்கள் 1987–88 ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டங்களாக, அதாவது:—

(1) தருமபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டம் ரூ. 12.00 இலட்சம் செலவிலும், (2) தருமபுரி அலுவலக இயக்குனரக கட்டிடம் ரூ. 5.50 இலட்சம் செலவிலும், (3) ரூ. 4.00 இலட்சம் செலவில் இரண்டு அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு கூடுதல் வசதி அளிக்கவும், (4) ரூ. 0.50 இலட்சம் நிதியில் ஒரு காளான் விதை உற்பத்தி நிலையம் நிறுவுவதற்காகவும் ஆக—மொத்தம் ரூ.22.00 இலட்சம் செலவில் மேற்கண்ட திட்டங்களை 1987–88 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## வேளாண்மைப் பொறியியல் துறை.

வேளாண்மைக்கு இன்றியமையாத மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பிற்கு உதவி செய்தல், காற்றரிப்பு மற்றும் ஓடையரிப்பை கட்டுப்படுத்துதல், ஆயக்கட்டு பகுதிகளில் பாசனப்பகுதி மேம்பாட்டு பணிகள் மூலம் நீர் மேலாண்மைக்கு வழி வகுத்தல், நிலச்சமன் செய்யவும், உழவுப் பணிகளைச் செய்யவும் மற்றும் குழாய்க் கிணறுகள், கிணறுகளை ஆழப்படுத்தல் ஆகியவற்றிற்கு இயந்திரங்களை வாடகைக்கு அளித்தல் ஆகிய பணிகளை இலக்காகக் கொண்டு வேளாண்மைப் பொறியியல் துறை பணியாற்றுகிறது. இவைகளைத் தவிர்த்து, ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள் ஆகியவைகளும் இத்துறையினரால் செய்யப்படுகின்றன.

நில அபிவிருத்தி ;

நில அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், தரிசு நிலங்களை சீர்படுத்தி, கூடுதல் நிலங்களை விவசாயத்திற்கு அளித்தல், வேளாண்மைப் பணிகளை செவ்வனே செய்யவும், நீர்ப்பாசனத்தை செம்மைப்படுத்த நிலச்சமன் மற்றும் நிலச்சரிவு சரிசெய்தல், குறிப்பிட்ட நேரத்தில் டிராக்டர் மற்றும் உழவுக்கருவிகளை அளித்தல் போன்ற பணிகள் செய்யப்படுகின்றன.

1986–87 ஆம் ஆண்டில், 6,700 எக்டர் (1,68,000 மணிகள்) பரப்பில் நிலச்சமன் செய்யவும் 21,000 எக்டர் (75,000 மணி நேரத்தில்) பரப்பில் இயந்திரங்கள் மூலம் உழவியல் பணிகள் செய்யவும் திட்டமிடப்பட்டது. 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையில், 8,085 எக்டரில் நிலச்சமனும் (2,02,152 மணிகளில்) 33,519 எக்டரில் (1,17,345 மணிகளில்) இயந்திரங்கள் மூலம் உழவியலும் செய்யப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் 6,700 எக்டரில் (1,68,000 மணி நேரத்தில்) நிலச்சமன் செய்யவும், 21,000 எக்டரில் (75,000 மணி நேரத்தில்) உழவியல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறு பாசனம் :

இத்திட்டத்தின் கீழ், நிலத்தடி நீரை வெளிக்கொணர்ந்து மானாவாரி நிலங்களுக்கு பாசனவசதி செய்தலும் பாசன வசதியுள்ள நிலங்களுக்கு நீர் வசதியை நிலைப்படுத்துதலும் செய்யப்படுகின்றன. நீர் ஊற்று உள்ள இடங்களை விஞ்ஞான ரீதியில் தேர்ந்தெடுத்தல், குறிப்பிட்ட கட்டுமானங்கள் நிறுவுதல் மற்றும் விவசாயிகளுக்கு சிறந்த நீர் இறைப்பு இயந்திரங்களை தேர்ந்தெடுக்க ஆலோசனை வழங்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. விவசாயிகளுக்கு, நிலநீர் ஆய்வுக்கருவிகள், இயந்திர துளைக்கருவிகள், கைத்துளைக் கருவிகள், பாறை வெடிக் கருவிகள், காற்றழுத்தக் கருவிகள் ஆகியவைகள் வாடகைக்கு வழங்குவதுடன், இப்பணிகளை இத்துறையே செய்துதருகிறது. 1986–87 ஆம் ஆண்டில். 5,000 குழாய்க்கிணறுகளும், 3,000 வடிமுனைக் குழாய்க்கிணறுகளும், 2,500 கிணறுகளில் நீர் நிலைப்படுத்த பக்கத்துளையிடுதலும், 3,000 கிணறுகளை ஆழ்படுத்தவும், திட்டமிடப்பட்டது. 1987 பிப்ரவரி மாதம் வரை 5,130 குழாய்க் கிணறுகளும், 2,961 வடிமுனை குழாய்க்கிணறுகளும் அமைக்கப் பட்டன. 2,814 கிணறுகளில், குழாய்க் கிணறுகளும், 2,474 கிணறுகளை ஆழ்படுத்தலும் செய்யப்பட்டுள்ளது.

1987–88 ஆம் ஆண்டில், 5,000 குழாய்க் கிணறுகளும், 3,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படவும், 2,500 கிணறுகளில் குழாய்க் கிணறுகளும், 3,000 கிணறுகளை ஆழப் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நவீன பாசன முறை அறிமுகம்.

தற்போது குறைந்த அளவே உள்ள நீர்வளத்தை மிகவும் சிக்கனமாக பயன்படுத்துவது மிகமிக முக்கியமாகும். கிணற்று நீர் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு போவதால், தற்போது புழக்கத்திலிருந்துவரும் பாசன முறைகளைவிட சிறந்ததான சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் வேளாண் மக்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்காக 1986–87-ல் மானியமாக ரூ. 20.00 லட்சம் ஒதுக்கப்பட்டு, 400 விவசாயிகள் பலன் அடைவார்கள்.

மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு :

விஞ்ஞான ரீதியிலான நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக மண் மற்றும் நீர்வளங்களை பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவைகள் இம்மாநிலம் முழுவதும் செயலாக்கப்பட்டு வருகிறது. மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு, திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்களில் காற்றரிப்புத்தடுப்பு, தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம், திருச்சி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள மலைவாழ் மக்கள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு, குந்தா மற்றும் கீழ் பவானி நீர்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் ஆகியவை இத் துறையினரால் செயல்படுத்தப்படுகின்றன.



கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டம், இத்துறையில், பெரிய திட்டமாக செயல்பட்டு வருகின்றது. இனி வருங்காலத்திலும் இருந்து வரும். மண்வளப் பாதுகாப்பின் தேவையை விவசாயப் பெருமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் ஆட்சியாளர்களிடையே ஊக்குவிக்கும் பொருட்டு முதன்முறை யாக, 1986 ஆம் ஆண்டில் ''மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு வாரம்'' கொண்டாடப்பட்டது. ''மண் ஈரத்தைப் பாதுகாத்து அதிக மரங்களை வளர்ப்போம்'' என்ற செய்தி மேலே கூறிய மக்களிடையே ஒரு எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத் தியது. இத்துறையினரால் நீர்பிடிப்புப் பகுதிகளிலும், அதனைச் சார்ந்த இதர பகுதிகளிலும் மரங்கள் அதிக அளவில் நடப்பட்டன. இந்த எழுச்சியைத் தொடர்ந்து பேணிக்காக்க இனிவரும் ஆண்டு களிலும், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படும்.

1986-87 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் மலைச்சரிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழே நிலச்சரிவுகளுக்கு இலக்காகும் பகுதிகளைக் கண்டறியும் பொருட்டு, ஒரு புதிய திட்டமானது ரூ. 9.11 லட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டது.

நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டிற்காக, ஒருங்கிணைந்த திட்டங் கள் வடிக்க, ரூ. 3.20 லட்சம் செலவில், ஒரு நில அளவைக் குழு நிறுவப்பட்டுள்ளது.

1986-87 ஆம் ஆண்டுத் திட்டம், 1987 ஆம் ஆண்டு சனவரி வரையிலான திட்ட முன்னேற்றம் மற்றும் 1987-88 திட்டம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1986-87 ஆம் ஆண்டிற்கான திட்டம். | பிப்ரவரி 1987 முடிய திட்ட முன்னேற்றம். | 1987-88 ஆம் ஆண்டிற்கான திட்டம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (பரப்பு எக்டரில்) |
| மண்வளப் பாதுகாப்பு மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் | 50,000 | 62,727 | 50,000 |
| காற்றரிப்பு தடுப்புத் திட்டம், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் போடி பகுதிகளில். | 2,100 | 2,139 | 2,100 |
| ஓடை சீரமைப்பு .. .. | 1,000 | 944 | 1,000 |
| மண்வளம் பாதுகாப்பு மலை வாழ் மக்கள் பகுதிகளில். | 250 | 330 | 350 |

| | | | |
|---|---|---|---|
| குந்தா மற்றும் கீழ் பவானி நதிப்பள்ளத்தாக்கு திட்டம் நீர் பிடிப்புப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு | 3,200 | 3,619 | 3,500 |
| வைகை நதி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு. | 600 | 567 | 600 |
| அமராவதி நதி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு | 600 | 676 | 600 |
| சித்தாறு நதி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு. | 300 | 191 | 300 |
| அர்ஜுனா நதி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு. | 300 | 156 | 300 |
| மண்வளப் பாதுகாப்பு. கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில். | 470 | 161 | 470 |

பாசனப் பகுதி மேம்பாடு.

வேளாண்மைப் பொறியியற் துறையினால், காவிரி, பெரியார்-வைகை, கீழ்பவானி, சாத்தனூர் மற்றும் பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனப் பகுதிகளில், பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்பட்டு வரப்படுகிறது. இந்தப் பாசன பகுதிகளில் நிறைவேற்றப்படும் பண்ணைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள், கிடைக்கும் நீரை, உரிய நேரத்தில் சரிசமமாக பங்கீடு செய்ய உத்திரவாதம் அளிக்கிறது. சுழற்சி முறைப் பாசனத் திட்டம் அறிமுகப்படுத்துதல் காவிரி, பெரியார்—வைகை மற்றும் கீழ் பவானி பாசனப் பகுதிகளில் பரிசோதிக்கப்பட்டது.

அடிக்கடி ஏற்படும் பருவமழை பொய்ப்பு மற்றும் அதனால் ஏற்படும் நீர்ப்பற்றாக்குறை அதிக அளவு பரப்பளவுகளில் பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளை விரிவு படுத்த வேண்டிய தேவையை உண்டாக்கியுள்ளது. காவிரி மற்றும் கீழ் பவானி பாசனப் பகுதிகளில் இத்திட்டப் பணிகள் விரிவுபடுத்தப்பட உள்ளன. இப்பகுதிகளின் தேவைகளையும், இத்திட்டப் பணிகளின் பயன்களையும் திட்டவட்டமாகக் கண்டறிய ஏற்பு பரிசோதனைகள் எடுத்துக் கொள்ளப்படும்

1986 87 ஆம் ஆண்டிற்கான திட்டம், பிப்ரவரி 1987 முடிய ஏற்பட்டுள்ள முன்னேற்றம், மற்றும் 1987-88 ஆம் ஆண்டிற்கா திட்டம் ஆகியவை பின்வருமாறு:—



| | (1) | 1986-87ம் ஆண்டிற்கான திட்டம். (2) | பிப்ரவரி 1987 முடிய திட்ட முன்னேற்றம். (3) | 1987-88-ம் ஆண்டிற்கான திட்டம். (4) |
|---|---|---|---|---|
| | | (பரப்பு எக்டரில்.) | | |
| 1 | காவிரி பாசனப் பகுதி | 21,600 | 20,839 | 36,000 |
| 2 | பெரியார்-வைகை பாசனப் பகுதி. | 15,000 | 19,261 | 15,000 |
| 3 | கீழ் பவானி பாசனப் பகுதி | 5,000 | 4,302 | 5,000 |
| 4 | சாத்தனூர் பாசனப்பகுதி. | 3,000 | 2,392 | 3,000 |
| 5 | பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட பாசனப்பகுதி | 10,000 | 4,108 | 10,000 |
| 6 | காவிரி, பெரியார், வைகை மற்றும் கீழ் பவானி பாசனப் பகுதிகளில் சுழற்சி முறை நீர்ப்பாசனம் அறிமுகப்படுத்துதல். | 3,000 | 3,679 | 3,000 |
| 7 | பெரியார், வைகை பாசனப்பகுதிகளில், கதிரடிக்கும் தளங்கள் கட்டுதல். | 200 எண்கள் | 177 எண்கள் | 200 எண்கள் |

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்.

கிராமப் புறங்களில், வேலையின்மையைப் போக்க வேளாண்மைப் பொறியியற் துறை, கசிவு நீர்க்குட்டைகளை பெரும் எண்ணிக்கையில் அமைத்துக் கொண்டு வருகிறது. இக்கசிவு நீர்க் குட்டைகள் பல்நோக்கு கொண்டதாகும். இக்குட்டைகள், நிலத்தடி நீரை அதிகப்படுத்தவும், வண்டல்மண் தடுப்பு குட்டையாகவும், திடீர் வெள்ளத் தடுப்பாகவும், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டமாகவும் உதவுகின்றன. 1986—87-ம் ஆண்டில் ரூபாய் 314.25 இலட்சம் செலவில் 383 கசிவு நீர்க் குட்டைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையில் 279 கசிவு நீர்க் குட்டைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்றவைகள், பல்வேறு நிலையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரையில், இத்திட்டத்தினால் 12.77 இலட்ச மணி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1987–88 ஆம் ஆண்டில் ரூபாய் 450 இலட்சம் செலவில் 400 கசிவு நீர்க் குட்டைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

## புதிய திட்டங்கள்.

### 1. விவசாய இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையங்கள்.

இத்திட்டத்தின் நோக்கம் உழுவை இயந்திரங்கள் (டிராக்டர்) மற்றும் இதர உழுவை உபகரணங்களையும், பம்பு செட்டுகளையும் இயக்கவும், அவற்றை பராமரிக்கவும், பண்ணை இளைஞர்களுக்கு பயிற்சிப் அளிக்கும் ஒரு புதிய திட்டம் 1987–88-ல் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இதன் தொடக்கமாக 1987–88 திருச்சியில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக இரு பயிற்சி மையங்கள் ஆண்டிற்கு 320 இளைஞர்களுக்கு பயிற்சிப் அளிக்கும் வகையில் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஒவ்வொரு பயிற்சித் திட்டமும் 30 நாட்களைக்கொண்டதாகும். மேலும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் நாளொன்றுக்கு உதவித் தொகையாக ரூபாய் 10 வழங்கப்படும்.

### 2. மூன்று கிணற்றில் துளையிடும் இயந்திரங்கள் வாங்குதல்.

தற்போது கிணற்றில் துளையிடுவதற்கு, 28 இயந்திரங்கள் உள்ளன. இம்மாநிலத்தில் பல பகுதிகளில், நில நீர்மட்டம் குறைந்து கொண்டே வருவதால், இத்தகைய இயந்திரங்களுக்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளது. ரூபாய் 14.37 இலட்சம் செலவில் கிணற்றில் துளையிடும் இயந்திரங்கள் மூன்றினை வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3. மானாவாரி வேளாண்மைக்காக தேசிய நீர்வடிவுப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மொத்த உணவு உற்பத்தியை அதிகப்படுத்த அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. உணவு உற்பத்தியை அதிகப்படுத்த, மிகவும் முக்கியமான இரண்டு இயற்கை வளங்களான, நிலத்தையும், நீரையும் பாதுகாத்து சரியாக மேலாண்மை செய்யப்படவேண்டும். மானாவாரி வேளாண்மைக்கான தேசிய நீர்வடிவுப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூபாய் 200 இலட்சம் செலவில், 8,000 எக்டரில் விஞ்ஞான அடிப்படையில் நீர்வடிவுப் பகுதி மேம்பாடு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் தருமபுரி, கோயம்புத்தூர், அண்ணா மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

### 4. உலக வங்கி உதவியுடன் வேளாண்மை இயந்திரங்கள் வாங்குதல்,

உலக வங்கி உதவியுடன் வேளாண்மைப் பணிகளை நவீனப்படுத்தும் பணி செயல்படுத்தப்பட உள்ளது. ரூபாய் 2,100 இலட்சம் செலவில் வேளாண்மை இயந்திரங்களை புல்டோசர்கள் (100 எண்கள்) டிராக்டர்கள் (250 எண்கள்), பவர்டில்லர்கள்



(300 எண்கள்) ஆகியன வாங்கப்பட உள்ளன. இத்திட்டத்தினால் இத்துறையினரால் செயல்படுத்தப்படும் நில மேம்பாடு, மற்றும் இயந்திர உழவு ஆகிய பணிகள் அதிகமாக்கப்பட்டு, உணவு உற்பத்தியை பெருக்க வழிவகுக்கும்.

## விதை சான்றளிப்பு.

நல் விதையே விளைச்சலுக்கு ஆதாரம். மேம்படுத்தப்பட்ட வகைகளைச் சார்ந்த நல்ல தரமான விதைகளை விவசாயிகளுக்கு தொடர்ந்து கிடைக்கச் செய்வது அவசியமாகும். சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியின் தரத்தை உறுதி செய்ய மத்திய விதைச் சட்டம், 1966 மற்றும் விதை விதிகள் 1968-ன் அடிப்படையில் விதைச் சான்றளிப்புத்துறை செயலாற்றி வருகின்றது.

1986–87 ஆம் ஆண்டில் (ஜனவரி 1987 முடிய) விதைச் சான்றளிப்பின்கீழ் 13,873 எக்டர் பயிர்கள் பதிவு செய்யப்பட்டு, 12,695 மெட்ரிக் டன் விதைகளுக்கு சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் 24,600 எக்டர் பரப்பில் பலவகைப் பயிர்கள் விதைச் சான்றளிப்பிற்காக பதிவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, எண்ணெய்வித்துத் துறை, கூட்டுறவு மற்றும் தனியார் விதை உற்பத்தி நிறுவனங்கள் அவைகளின் உற்பத்தித் திட்டங்களின்படி உற்பத்தி செய்யும் விதைகள் இத்துறையினால் சான்றளிப்பு செய்யப்படும்.

## பயிற்சித் திட்டம்.

விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள், சான்றளிப்பு முறைகள் மற்றும் விதை சேமிப்பு ஆகியவற்றில் பழக்கப்படுத்த வேளாண்மை, தோட்டக்கலை, எண்ணெய்வித்து ஆகிய துறைகளின் களப்பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது. 1986–87-ல் (87 ஜனவரி வரை) 6,362 நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்றுள்ளார்கள். 1987–88-ல் 6,580 நபர்களுக்கு பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## விதை ஆய்வு

தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதைக் கண்காணிக்க 1981 ஆம் ஆண்டு முதல் விதை ஆய்வுப் பிரிவு ஒன்று விதைச் சான்று இயக்ககத்தில் செயல்பட்டு, போலி விதைகள் மற்றும் தரக்குறைவான விதைகள் விநியோகிப்பவர்கள் மீது விதைச் சட்டத்தின்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1986–87 ஆம் ஆண்டில் (ஜனவரி 1987 முடிய) சில்லரை விதை விற்பனை நிலையங்களில் 4,117 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு, விதை பகுப்பாய்வு செய்யப்பட்டது இது தவிர, துறை விதை ஆய்வாளர்களால் 5,096 விதை விற்பனை நிலையங்கள்

ஆய்வு செய்யப்பட்டுள்ளன. விதைச் சட்டத்தை மீறியவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1987–88 ஆம் ஆண்டில் 6,200 விதை மாதிரிகள் விதை விற்பனையாளர்களிடமிருந்து எடுக்கவும், 7,200 விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## விதைப் பரிசோதனை.

விதைச் சான்றளிப்புத் துறையின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட மூன்று விதைப் பரிசோதனை நிலையங்கள் முறையே, கோயம்புத்தூர், மதுரை மற்றும் குடுமியான்மலை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. விதைப் பரிசோதனை நிலையங்களில் சான்றளிப்பு, விதை ஆய்வு மற்றும் விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. 1986–87 ஆம் ஆண்டில் (ஜனவரி 1987 முடிய) 17,423 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

1987–88 ஆம் ஆண்டில் 30,000 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

வீரிய ஒட்டு விதை பரிசோதனையை துரிதப்படுத்த அனுசரணையாக விளங்கும் பொருட்டு கோவையில் ரூ. 5 இலட்சம் செலவில் கண்ணாடி ஆய்வுக்கூடம் கட்டி முடிக்கப்பெற்று பல்வேறு உயர்ரக விதை இனத் தூய்மை ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## வேளாண்மை விற்பனைத் துறை.

வேளாண்மை விற்பனைத் துறை கீழ்க்கண்ட திட்டப் பணிகளை செயல்படுத்துகிறது:—

1. விற்பனை குழுக்கள் மூலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைத்தலும் நிர்வகித்தலும்.

2. வேளாண்மை விளைபொருட்களையும் கால்நடை பராமரிப்புத் துறையைச்சார்ந்த உற்பத்திப் பொருட்களையும் அக்மார்க் தரம் பிரித்தல்.

3. பருத்தி தரம் பிரித்தல்.

4. வேளாண்மை விளைபொருட்களை வணிக முறையில் தரம் பிரித்தல்.

5. வேளாண்மை விற்பனையில் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

6. பருத்தி சான்றுரையும் சட்ட அமுலும்.



## 1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

வேளாண் பெருமக்களின் விளை பொருட்களுக்கு நல்ல விலை பெற்றுத் தரும் நோக்கத்துடன் தமிழகத்தில் 14 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 269 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

1986-87 (டிசம்பர் 86 வரை) ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு வந்த வேளாண்மை விளை பொருள் வரத்தும் விற்பனைக் குழுக்களின் வருமானமும் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| வரத்துக்கள் (வேளாண்மை விளை பொருட்கள்). | 4,16,430 மெட்ரிக் டன். |
| வருமானம் | ரூ. 365.53 இலட்சம். |

பெரிய நகரங்களில் காய்கனிக்காக தனியாக விற்பனைக் கூடங்களை மத்திய மான்யம் பெற்று, அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய விற்பனைக் கூடங்களில் குளிர்பதன சேமிப்புக் கூடங்களும், கிட்டங்கி வசதிகளும் தண்ணீர் மற்றும் மின்சார வசதிகளுடன் சுகாதார வசதிகளும் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் குறுநில விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை லாபமற்ற விலையில் விற்கும் சூழ்நிலையை தடுக்கும் பொருட்டு மத்திய மாநில அரசுகளின் உதவியுடன் 73 ஊரகக் கிட்டங்கிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 16 கிட்டங்கிகள் கட்டி முடியும் தருவாயில் உள்ளது. மேலும் 15 ஊரகக் கிட்டங்கிகள் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இந்த ஊரகக் கிட்டங்கிகளில் சிறு நில விவசாயிகள் அறுவடையான தங்கள் விளை பொருட்களை பாதுகாப்பாக வைக்கவும் உடன் உதவி பெறவும் வழி செய்யப்படும். பின்னர் நல்ல விலை கிடைக்கும் பொழுது விளை பொருட்களை விற்றும் பயன் பெறலாம் ஊரகக் கிட்டங்கிகளைப் பராமரிக்க பணியாளர்களுக்கு உரிய பயிற்சி மாநில வேளாண் விளை பொருள் விற்பனை வாரியத்தில் அளிக்கப்படுகிறது.

## 2. அக்மார்க் தரம் பிரிப்பு

இத்திட்டத்தின் கீழ் 36 தரம் பிரிப்பு, ஆய்வுக் கூடங்கள் இயங்கி வருகின்றன. இவை சமையல் எண்ணெய்கள், நெய், தேன், மசாலா பொருட்கள் ஆகியவற்றை தரம் பிரித்து அவற்றின் தூய்மையையும் தரத்தையும் நிர்ணயிக்கின்றன. இவற்றைத் தவிர அரிசி, பருப்பு, பழங்கள், முட்டை, மஞ்சள், வெல்லம், பாக்கு முதலியவை அக்மார்க் முறையில் தரம் பிரிக்கப்படுகின்றன. 1986-87 (டிசம்பர் 86 முடிய) 4,40,151 குவிண்டால் உணவுப் பொருட்கள் இவ்வாறு தரம் பிரிக்கப்பட்டு பொது மக்களின் விநியோகத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

அக்மார்க் ஆய்வுக் கூடங்களுக்காக இதுவரை 11 இடங்களில் சொந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. பல்லடத்தில் கட்டிடம் கட்டும் பணி நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

திருச்சியில் இவ்வியக்ககக் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தமிழகமுதன்மை ஆய்வகம் பல்வேறு அக்மார்க் தரம் பிரிப்பு, ஆய்வகங்களிலிருந்து பெறப்படும் மாதிரிகள் ஆய்வு செய்து தரம் உறுதி செய்யப்படுகின்றது. மாநிலத்தில் உள்ள பல்வேறு மாநில அக்மார்க் ஆய்வகங்களில் பணி புரியும் ஆய்வக உதவியாளர்களுக்கு தொழில் நுட்பத் திறனை அதிகரிக்க மறு பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 3. பருத்தி தரம் பிரிப்பு:

தற்போது 11 பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் விற்பனைக் கூடத்திற்கு விற்பனைக்கு வரும் பருத்தியை தரம் பிரிப்பு செய்வதால் விவசாயிகள் தங்களது பருத்தியின் தரத்திற்கு ஏற்ப நல்ல விலை பெற முடிகிறது. 1986-87 ஆம் ஆண்டில் (டிசம்பர் 86 வரை) இத்தரம் பிரிப்பு மையங்கள் 1.15 லட்சம் குவிண்டால் பருத்தியை தரம் பிரித்திருக்கின்றன.

## 4. வணிகமுறை தரம் பிரிப்பு :

102 வணிகமுறை தரம் பிரிப்பு நிலையங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகளின் விளைபொருட்கள் இங்கே தரம் பிரிக்கப்படுவதால், விவசாயிகள் தமது விளை பொருட்களில் தரத்திற்கேற்ப நல்ல விலை பெற முடிகிறது. 1986-87ஆம் ஆண்டில் (டிசம்பர் 86 வரை) 28,16,141 குவிண்டால் விளைபொருட்கள் தரம் பிரிக்கப்பட்டுள்ளன.

## 5. பயிற்சி.

விற்பனைத் துறை இயக்ககத்தில் செயல்படும் பயிற்சி மையம் இத்துறையின் உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் விற்பனைக் குழுக்களில் மேற்பார்வையாளர்கட்கு 'அக்மார்க்' மற்றும் வணிகமுறை தரம் பிரிப்பு நுட்பங்கள் பற்றிய பயிற்சியை 3 மாதங்களில் அளிக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் 60 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 650 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 6. பருத்து சான்றுரையும் சட்ட அமலும்:

பருத்தி விதைகளின் தூய தன்மையைக் காப்பாற்றுவதும் பருத்தி அரவை மற்றும் பஞ்சு அழுத்தம் தொழில் கூடங்களில் பருத்தி மற்றும் பஞ்சு கலப்படம் செய்வதைத் தடுக்கவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதனால் தமிழகத்திற்கு தேவையான பருத்தியின் அளவையும் பிற மாநிலங்களி





லிருந்து தருவிக்கப்படும் பருத்தி, பஞ்சு அளவினையும் அறிய முடிகிறது. இதற்காக இவ்வியக்ககம் மூலம், சில சட்டங்களையும் விதிகளையும் இம்மாநிலத்தில் செயல்படுத்துகிறது.

1986-87ம் (டிசம்பர் 1986 முடிய) 46,523 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. 512 மூக்கர் பருத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 3.51 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

## கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்.

தமிழ் நாட்டில் வளர்ச்சி அடைந்து வரும் பெரிய தொழில்களில் சர்க்கரை ஆலைத் தொழிலும் ஒன்றாகும். தமிழ் நாட்டில் 24 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

கரும்பு விளையும் பகுதியிலிருந்து சர்க்கரை ஆலைகளுக்கு கரும்புக் கட்டுக்களை விரைவில் கொண்டு சேர்த்தால் கரும்பின் சர்க்கரைக் கட்டுமானம் குறையாமல் இருக்கும். இதற்காக சர்க்கரை ஆலை அமைந்துள்ள பகுதிகளில் சாலைகள் அமைக்கப்படுகின்றன.

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் மற்றும் பராமரிக்கப்படும் சாலைகளுக்கு ஆகும் செலவு சர்க்கரை ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்படும். கரும்பு மேல் வரி நிதியில் ஒரு பகுதியிலிருந்து ஏற்கப்படுகிறது. கரும்பு ஆலைகளிடமிருந்து அவைகள் அரைக்கும் கரும்பிற்கு டன்ஒன்றுக்கு ரூ. 5 வீதம் வசூல் செய்யப்படுகிறது.

1981-82-ஆம் ஆண்டிலிருந்து டிசம்பர் 1986 வரை இத்திட்டத்திற்கு ஆன செலவுகள் வருமாறு :—

| வருடம். | செலவிடப்பட்ட தொகை. (ரூ இலட்சங்களில்) | |
|---|---|---|
| | 230.24 | |
| 1981-82 | 250.67 | |
| 1982-83 | 253.35 | |
| 1983-84 | 225.46 | |
| 1984-85 | 200.40 | |
| 1985-86 | | |
| 1986-87 (31-12-1986 முடிய) புதிய சாலைகள் அமைத்தல் | 105.40 | 156.80 |
| சாலைகள் பராமரித்தல் | 51.40 | |

## நகர்ப்புற கலவை எருத்திட்டம்.

நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் 98 நகராட்சிகள் மற்றும் 8 நகரியங்கள் நகர்ப்புற கலவை உரம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. 1986-87ஆம் ஆண்டிற்காக 414,950 மெட்ரிக் டன் உரம் தயாரிக்கும் இலக்கு நிர்ணயிக்கப்

பட்டு 1986-87ம் ஆண்டு டிசம்பர் வரை 180,804 மெட்ரிக் டன் உரம் தயாரிக்கப்பட்டது. நல்ல தரமானதும் அமோக அளவும் நகர்ப்புற கலவை உரம் தயாரித்தும் விற்பனை செய்யும் திட்டம் சிறந்த முறையில் செயல்பட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் ஒன்று தற்போது நடைமுறையில் உள்ளது.

## கழிவு நீர்ப்பயன் திட்டம்.

23 நகராட்சிகள் தற்போது கழிவு நீர்ப்பண்ணைகளை 406 ஏக்கர் பரப்பளவில் நிர்வகித்து வருகின்றன. 1987-88-ம் ஆண்டில் மேலும் 100 ஏக்கர் நிலத்தில் புல் மற்றும் பயனுள்ள பயிர் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்:

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் மத்திய அரசு தொடங்கிய சிறப்புத் திட்டமாகும். பல அபிவிருத்திப் பணிகள் மூலம் நீண்ட காலமாக வறட்சி தாக்குதலுக்குட்பட்ட பகுதிகளை மேம் படுத்துவதும் வறட்சித் தாக்குதலினால் இப்பகுதிகளில் ஏற்படும் கடுமையை ஓரளவு குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் நம் மாநிலத்தில் 43 வட்டாரங்களில் பின்வருமாறு செயல்படுத்தப்படுகிறது:

| | மாவட்டங்கள் பெயர். | வறட்சிக்குட்பட்ட பகுதிகள் அமல்படுத்தும் வட்டாரங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | தர்மபுரி | 12 |
| 2. | இராமநாதபுரம் | 7 |
| 3. | பசும்பொன் முத்துராமலிங்கம் | [illegible] |
| 4. | காமராஜர் | [illegible] |
| 5. | புதுக்கோட்டை | [illegible] |
| 6. | வ.உ. சிதம்பரனார் | 8 |
| 7. | திருநெல்வேலி கட்டபொம்மன் | 1 |
| | மொத்தம் | 43 |

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் ஏற்படுத்தும் 43 வட்டாரங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 15 இலட்சம் விதம் 1986-87-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 645 இலட்சமாகும். இத்திட்டச் செலவினை மத்திய அரசும் மாநில அரசும் 50:50 விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. 1987-88-ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ரூ. 645 இலட்சமாகும்.





## தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம்.

வேளாண்மையை நவீனமயமாக்கவும், வேளாண்மை உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்தவும் தொழிற்சாலைகளைத் தானே நிறுவி நடத்துவதில் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் ஈடுபட்டுள்ளது. விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உரங்கள், பூச்சி மருந்துகள், உதிரி பாகங்கள், டயர்கள், ட்யூப்கள் முதலானவற்றை விற்கும் முகவர்களாக இக்கழகம் செயல்படுகிறது. இவ்வாண்டு (1986-87) பல்வேறு நிறுவனங்கள் தயாரித்த 71,000 மெ. டன் உரங்களையும் ரூ.238 இலட்சம் பெறுமான உதிரி பாகங்களையும் 9.6 இலட்சம் பெறுமான கருவிகளையும், ரூ.122.23 இலட்சம் மதிப்புள்ள 143 டிராக்டர் களையும், ரூ. 1,03.68 இலட்சம் மதிப்புள்ள 321 பவர் டில்லர்களையும் இக்கழகம் விற்க உள்ளது. இக்கழகத்தின் பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் பிரிவு டிசம்பர் 1986 வரை 725 மெ. டன் தூள் மருந்துகளையும், 49,348 லிட்டர் திரவ மருந்துகளையும், தயாரித்ததுடன் இனி எஞ்சியுள்ள காலத்தில் 80 மெ. டன் தூள் மருந்துகளையும் 22,200 லிட்டர் திரவ மருந்துகளையும் தயாரிக்க உள்ளது. மீன் பிடி வலை தயாரிக்கும் ஆலை அதன் குறியீடான 25 மெ. டன்னுக்கு எதிராக 15.80 மெ. டன் மீன் பிடி வலைகளை தயாரித்துள்ளது. கழகத்தின் மற்றொரு நடவடிக்கையான கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத் தீவனம் தயாரிக்கத் தேவையான சத்துணவு தயாரிப்பதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பாக, இக்கழகம் சூரியகாந்தி விதைகளிலிருந்து தயாரிக்கும் எண்ணெய்க்கு இன்றியமையாத் தேவை ஏற்பட்டுள்ளது. இக்கழகம், ஜனவரி 1987-லிருந்து மார்ச் 1987 முடிய உள்ள 3 மாத காலத்தில் 20,000 மெ. டன் சூரியகாந்தி விதைகளை பதப்படுத்தும். நாமக்கல் மற்றும் பொணக்குளத்தில் அமைந்துள்ள எண்ணெய் கரைத்து பிழிந்து எடுக்கும் ஆலைகள் மூலம் இக்கழகம் 1986 டிசம்பர் வரை 5,400 மெ. டன் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்தது.

1987-88 ஆம் ஆண்டில் 1,20,000 மெ. டன் உரங்களையு 170 டிராக்டர்களையும், 415 பவர் டில்லர்களையும் விற்கவும் 1,000 மெ. டன் தூள் பூச்சி மருந்துகளையும், 1,00,000 லிட்டர் திரவ பூச்சி மருந்துகளையும், 38 மெ. டன் மீன் பிடி வலை களையும், 200 மெ. டன் இலைப் புரத மாவையும் தயாரிக்கவும், 7,500 மெ. டன் சூரியகாந்தி விதைகளையும், 14,000 மெ. டன் அரிசித் தவிட்டையும் பதப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சத்துணவு தயாரிக்கும் பிரிவு ஒன்றையும் நிறுவுவது இக்கழகம் குறுகிய காலத்தில் மேற் கொள்ள இருக்கும் புதிய திட்டமாகும்.

[1987 ஏப்ரல் 2

## தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம், 220 வட்டார வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவைக் கூட்டுறவு மையங்களையும் மற்றும் 12 மாவட்டக் கூட்டுறவு வேளாண்மைச் சேவை சங்கங்களையும் இணைப்பாகக் கொண்ட தலைமைச் சங்கமாக 1972–ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

மாவட்ட மற்றும் வட்டார அளவில் வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவைக் கூட்டுறவு மையங்களை நிறுவி அதன் மூலம் கிராமப்புற விவசாயிகளுக்குச் செறிவான சேவைகளைச் செய்வதே இவ்விணையத்தின் முக்கியக் குறிக் கோளாகும். மாவட்டக் கூட்டுறவு வேளாண்மைச் சேவைச் சங்கங்கள் மற்றும் வட்டார வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு மையங்கள், கிராமப்புற விவசாயிகளுக்கு, விவசாய இயந்திரங்கள் மற்றும் துணைக் கருவிகள் ஆகிய வற்றை வாடகைக்கு விடும்பணி, விவசாய இயந்திரங்களைச் செப்பனிடும் பணி, விதைகள், உரம், பூச்சிக் கொல்லிகள், விவசாயத் துணைக்கருவிகள், பயிர்ப்பாதுகாப்புத் தளவாடங்கள் போன்ற விவசாய இடுபொருட்களை வழங்குதல் போன்ற இன்ன பிற சேவைகளைச் செய்து வருகின்றன.

மேற்கூறிய வாலாய திட்டத்தைத் தவிர விவசாயக் கடன் தாரர்களுக்கு, டீசல் இயந்திர பம்ப்செட் மற்றும் மின் இயந்திர பம்ப்செட் ஆகியவற்றை விநியோகம் செய்யும் ஒரு முனைப் படுத்தும் திட்டம் மற்றும் விவசாயிகளுக்கு தானிய சேமிப்புக் குதிர்களைத் தயாரித்து 25 சதவீத மானியத்தில் வழங்கும் திட்டமாகிய தானிய சேமிப்பு இயக்கத் திட்டம் ஆகிய அரசுத் திட்டங்களை இவ்விணையம் செயல்படுத்தி வருகின்றது.

மத்திய அரசு சார்புத் திட்டத்தின் கீழ், விவசாயிகள் வேளாண்மைச் சேவை மையங்கள் நிறுவுவதற்காக, இணையம் அதன் இணைப்புச் சங்கங்களின் மூலம், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடி விவசாயிகள் ஆகியோருக்கு மானிய விலையில் செம்மைப்படுத்தப்பட்ட வேளாண்மைக் கருவிகள் மற்றும் கைக் கருவிகளைத் தயாரித்து வழங்கி வருகின்றது. 1986-87 ஆம் ஆண்டில் டிசம்பர் 1986 முடிந்த காலத்திற்கு முடித்த செயல்கள் விவரம் பின்வருமாறு:—

| | செயல். | நிதி பற்றியது (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 இயந்திரக் கலப்பை வாடகைப்பணி. | 1,11,026 மணி | 55,780 |



1987 ஏப்ரல் 2]

| | | |
|---|---|---|
| 2 சாலை உருளை வாடகைப்பணி .. | 409 நாட்கள். | 1.785 |
| பூச்சிக் கொல்லிகள், விதைகள் மற்றும் இன்னபிற விற்பனை .. | .. | 1,30.44 |
| 4 பயிர்ப் பாதுகாப்புத் தளவாடங்கள் ந்ரனை | 2,699 எண்ணிக்கையில். | 20.83 |
| ட்டு மொத்த வியாபார விற்பனை அளவு: | | |
| (அ) இணையம் .. .. | .. | 1,05.510 |
| (ஆ) இணைப்புச் சங்கங்கள் .. | .. | 10,27.810 |
| (இ) மொத்தம் .. | .. | 11,33.320 |

6 சல் இயந்திரங்கள் மற்றும் மின் மோட்டார் பம்ப் செட்டுக்கள்—

| | டீசல் இயந்திரம். | மின் மோட்டார் பம்ப் செட். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) ஒருமைப் படுத்தும் திட்டம் | 339 | 109 |
| (ஆ) அரசுத் துறைகளுக்கு வழங்கப்பட்டது .. | 41 | 1 |

விவசாய இயந்திரங்கள் மற்றும் செம்மைப்படுத்தப்பட்ட வேளாண் கருவிகள் ஆகியவற்றை வாடகைக்கு விடுதல், செம்மைப்படுத்தப்பட்ட வேளாண்மைக் கருவிகள் மற்றும் கைக் கருவிகள் ஆகியன பற்றி செயல் முறை விளக்கம் அளித்தல் மற்றும் பிரபலப்படுத்துதல் ஆகிய காரணங்களுக்காக மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வேளாண்மைப் பணி மையங்கள் மூலம் இத்திட்டம் 1984–85 மற்றும் 1985–86 ஆகிய ஆண்டுகளில் செயல்படுத்த இணையத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்டு தெரிவு செய்யப்பட்டு இணையத்தின் 36 இணைப்புச் சங்கங்களால் செயல்படுத்தப்பட்டது. 1984–85 ஆம் ஆண்டில் 2,868 செயல்முறை விளக்க முகாம்கள் நடத்தப் பட்டு, 4,549 செம்மைப்படுத்தப்பட்ட வேளாண் கருவிகளும், 11,237 கைக்கருவிகளும், 25 சதவிகித மானியத்தில் சிறு விவசாயிகளுக்கும், 33-1/3 சதவிகித மானியத்தில் குறு விவசாயி களுக்கும், 50 சதவிகித மானியத்தில் ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடி விவசாயிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டது. இதன் மூலம் விநியோகம் செய்யப்பட்ட மானியத் தொகை ரூ. 13,01,780 ஆகும். 1985–86 ஆம் ஆண்டில் 2,880 செயல்முறை விளக்க முகாம்கள் நடத்தப்பட்டு, 9,788 செம்மைப்படுத்தப்பட்ட வேளாண்மைக் கருவிகளும், 15,303 கைக்கருவிகளும், மேற்கூறிய அனுமதிக்கத்தக்க மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இது தவிர, பயிர் மேம்பாடு, பாதுகாப்பு, உற்பத்தியை பெருக்க புதிய உத்திகள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டன.

1986–87-ல் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்.

வேளாண்மை:

1. தமிழ்நாட்டில் மறைக்கப்பட்ட குத்தகைதாரர்களின் மதிப்பீடு.

2. சிறிய பண்ணைத் திட்டங்களின் மூலம் வருமானம் மற்றும் வேலை வாய்ப்பு அதிகரித்தல் மற்றும் இடர்பாடுகள் பற்றிய ஆய்வு.

3. பையூர் கொள்ளு உற்பத்தி மற்றும் உபயோகம் பற்றிய ஆய்வு.

4. ஊரக எதிர்காலம் பற்றிய திட்ட ஆய்வு.

5. உயிரியல் மூலம் நெற் பயிர் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம்.

6. பிளாஸ்டிகேஸ்டர் ஒட்டுண்ணி மூலம் நெல்லின் ஆனைக் கொம்பினை நிர்வகித்தல்.

7. வேளாண்மையில் பிளாஸ்டிகல்சர் செயல்படுத்தும் மேம்பாடு பற்றிய ஆய்வு.

8. கம்பு பற்றிய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மேம்பாடுத் திட்டம்.

9. கடல் நீர் புகுந்து தங்குவதால் மண் மற்றும் பயிரில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய ஆய்வு.

10. கோயம்புத்தூரில் நெல் விளைச்சலை அதிகப்படுத்துதல் பற்றிய ஆய்வு.

11. ஆழியார் நகரில் ஆயில்பாம் பற்றிய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி.

12. கொடைக்கானலில் நாற்றங்கால் ஏற்படுத்துதல்.

13. கோவையில் சாண எரிவாயு சாதனத்தின் உதிரி பாகங்களைச் சீரமைத்தல் மற்றும் வாயு அதிகப்படுத்தும் நுட்பங்களை கண்டுபிடித்தல்.

14. விவசாய வானிலை பற்றிய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம், கோவில்பட்டி.

15. மதுரையில் நெல் தரிசு நிலத்தில் விளையும் பயறு வகைகளில் ரைசோபியத்தின் விளைவுகள் மற்றும் திறன் பற்றிய ஆய்வு.



16. தஞ்சை காவிரி டெல்டா பகுதிகளில் பண்ணை விளக்கத் திட்டம்.

கால்நடை மருத்துவம்:

1. செடி மற்றும் கால்நடைகளின் தாது நிலைக்கும் நீலகிரி சாண்டிநல்லா மலைவாழ் கால்நடைகளின் சிறுநீரில் குருதி உள்ளமைக்கும் உள்ள தொடர்பு பற்றிய ஆய்வு.

2. கால்நடைகளின் கழிவு மற்றும் குடலிலிருந்து விளையாட்டுக்குகான நாண் மற்றும் மாட்டுத்தீவனம் தயாரிப்பது பற்றிய ஆய்வு.

3. கார்கிகேம்பெல், டெசி ரக வாத்து, தெசி இனம் இவைகளின் இனக் கலப்பினத்தில் முட்டையிடும் திறன் பற்றிய ஆய்வு, சென்னை.

மீன் வளம்:

1. சத்துள்ள கிரேமுல்லட் மீன் தூத்துக்குடி கடல் சுற்றுப் புறத்தில் வளர்ப்பது பற்றிய திட்டம்.

விரிவாக்கக் கல்வி பணிகள்:

விரிவாக்க கல்வி நெறியகம் பல்வேறு விரிவாக்கக் கல்வி மையங்களின் மூலம் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி நிலையங்களில் கண்டு அறியப்படும் உத்திகளை வேளாண் அறிவியல் நிலையங்கள், தேசிய விளக்கத் திடல்கள், பயிர் நோய் தடுப்பு நிலையம் தகவல் தொடர்பு நிலையங்கள் மூலமாக பரப்பும் பணியினை செய்கிறது.

மூல விதைகள் விநியோக திட்டம்:

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் பல்வேறு மையங்களின் மூலம் சுமார் 111.35 டன் மூல விதை உற்பத்தி செய்யப் பட்டு அரசு வேளாண் துறை, எண்ணெய் வித்துக்கள் துறை, தோட்டக்கலை துறை ஆகிய துறைகளுக்கு விநியோகிக்கப் பட்டது.

தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம், வடபாதிமங்கலம்:

தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டம் 1961-ஐ செயல் படுத்தியதின் விளைவாக உபரியாகக் கிடைத்த நிலங்களை நிர்வாகம் செய்யும் பொருட்டு, வடபாதிமங்கலத்தில் 22–2–1974-ல் தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் நிறுவப் பட்டது.

இக்கழகத்திற்கு சொந்தமான 4,051.74 ஏக்கர் பரப்புக் கொண்ட நிலங்கள் வெண்ணாற்றின் கடைமடைப் பகுதியில் அமைந்து உள்ளன. இக்கழகம் கரும்பு, நெல், பயறு வகைகள், தென்னை முதலான பயிர்களை சாகுபடி செய்து வருகிறது. இக்கழகம் தொடர்ந்து பல்வேறு காரணங்களினால் நஷ்டம் அடைந்ததிலிருந்து, இக்கழகத்திற்கு சொந்தமான, தொடர்ந்து நஷ்டமடையும நிறுவனங்களை மூடிவிடுவதற்கும், மேலும் கழகத்திற்கு சொந்தமான நிலங்களை பல்வேறு உபயோககரமான முறைகளில் பயன்படுத்துவதற்குமான உரிய திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.





## இணைப்பு III

(239ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**முன்னுரை:**

தமிழக அரசு, மாநிலத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் தினசரி வாழ்க்கையின் அடிப்படைத் தேவையான பாதுகாக்கப் பட்ட குடிநீரினை போதுமான அளவு வழங்குவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. ஏற்கனவே பல கிராம குடிநீர்த் திட்டங்களும், நகர குடிநீர்த் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு பயனிலுள்ளன. மேலும் பல திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. ஐந்தாண்டு திட்டங்களில், மாநில அரசும், மத்திய அரசும் இந்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் வசதியினை பெற்றிட வேண்டும் என பல்வேறு முனைப்பான வழிகளில் முயன்று கொண்டு இருக்கின்றன. மேலும், தமிழ்நாடு ஆண்டு முழுவதும் வற்றாமல் இருக்கும ஜீவ நதியை பெற்று இருக்கவில்லை. தமிழக மக்கள் பருவமழையை விவசாயத்திற்காக மட்டுமல்லாமல் குடிநீருக்காகவும் நம்பி உள்ளனர்.

சென்னை பெருநகர் தவிர, தமிழ்நாடு முழுவதும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் பணிகளுக்கான திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற்படுத்தி வருகிறது. சென்னை நகருக்கான இப்பணிகளை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் நிறைவேற்றி வருகிறது.

**ஊரக குடிநீர்த் திட்டம்:**

1976-77 ஆம் ஆண்டு ஊரகப் பகுதிகளில் குடிநீர் தகுதியை கண்டு பிடிப்பதற்காக ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வின்படி 1971 ஆம் ஆண்டின் மக்கட் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டின் மொத்தமுள்ள 15,735 கிராமங்களில் 47,075 ஊரக குடியிருப்புகள் இருப்பதாக அறியப்பட்டது. அவைகளில் 7,266 கிராமங்களில் உள்ள 18,167 குடியிருப்புகள் பிரச்சினைக்குரிய குடியிருப்புகளாக கீழ்க்கண்ட அட்டவணையின்படி தேர்வு செய்யப்பட்டது. அக்குடியிருப்புகள் கீழ்க்கண்ட ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:—

| வகை எண் | விளக்கம் | குடியிருப்புகளின் எண்ணிக்கை, |
|---|---|---|
| 1. | நீர் ஆதாரங்கள் இல்லாத குடியிருப்புகள் .. | 3,567 |
| 2. | குடிக்கத் தகுதியற்ற நீர் ஆதாரங்கள் உடைய குடியிருப்புகள் | 2,051 |

| வகை எண் | விளக்கம் | குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 3. | குடிக்கத் தகுதியுள்ள நீர் ஆதாரங்கள் இருப்பினும் அனைத்து பருவத்திலும் குடிநீர் வசதி பெறாத குடியிருப்புகள். | 6,487 |
| 4. | குடிப்பதற்கு ஏற்ற மற்றும் அனைத்து பருவங்களிலும் நீர் கிடைக்கும் குடியிருப்புகளாக இருப்பினும், நீர் நிலைகள் தனியாருக்குச் சொந்தமான அல்லது பாதுகாக்கப்படாத நீர் ஆதாரங்கள் கொண்டவை. | 4,955 |
| 5. | குடியிருப்பிற்குள்ளே நல்ல நீர் நிலைகள் இல்லாமல் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் மாற்று நீர் நிலைகள் பெற்ற குடியிருப்புகள் .. | 1,107 |
| | மொத்தம் .. | 18,167 |
| 6. | நல்ல நீர்நிலைகள் கொண்ட குடியிருப்புகள் .. | 28,908 |
| | ஆக மொத்தம் .. | 47,075 |

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 18,167 பிரச்சினை குடியிருப்புகளில் 3,465 குடியிருப்புகளுக்கு ரூ. 2,597 இலட்சம் செலவில் 14.19 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் குடிநீர் வழங்கும் பணி நிறைவேற்றப்பட்டது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட தொடக்கத்தில் அதாவது 1—4—1980-ல் 14,702 பிரச்சினைக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதியளிக்க வேண்டியிருந்தது. பருவ மழை பொய்த்து மாநிலம் முழுவதும் வறட்சி நிலவிய காரணத்தால் குடிநீர் பிரச்சினை இல்லாதவையாக இருந்த 12,340 குடியிருப்புகள் திட்டகாலத்தில் பிரச்சினைக் குடியிருப்புகளாக மாறின. மேலும் 1980 முதல் 1985 வரையுள்ள காலத்தில் புதியதாக 2,486 குடியிருப்புகள் தோன்றின. எனவே, ஆறாவது ஐந்தாண்டு திட்ட தொடக்கத்தில் இத்திட்ட காலத்தில் குடிநீர் வசதியளிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த 14,702 குடியிருப்புகளைத் தவிர மேற்கொண்டு மேலே கூறிய 14,826 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி செய்து தரவேண்டியிருந்தது. எனவே, 10,734 கிராமங்களில் உள்ள 29,528 பிரச்சினைக் குடியிருப்புகளுக்கு ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் குடிநீர் வசதி செய்து தரவேண்டியிருந்தது. இவற்றில் 5,852 கிராமங்களில் உள்ள 16,505 பிரச்சினை குடியிருப்புகளுக்கு மட்டுமே குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. இதற்கான செலவு ரூ. 198.03 கோடியாகும். இதனால் 92.80 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர்.



ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் (1985-90):

ஏழாவது ஐந்தாண்டு திட்ட தொடக்கத்தில் அதாவது 1—4—1985-ல், 13,023 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிககப்படவேண்டிய நிலையிருந்தது. இவற்றில் 10,900 குடியிருப்புகளுக்கு ரூ. 25,000 இலட்சம் செலவில் ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் குடிநீர் வசதி செய்துதர உத்தேசிக்கப்பட்டது. 1985—86-ம் வருடம் 2,834 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

1986-87-ம் வருடம் 5,000 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்துதர தீர்மானிக்கப்பட்டது. இவற்றில் 1987-ம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதி வரை 3,479 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மீதமுள்ள குடியிருப்புகளில் குடிநீர் வசதி அளிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 1987—ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் இறுதிவரை மொத்தம் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 4,244 இலட்சங்களில் (அடிப்படை தேவைத்திட்டம் ரூ. 2,700 இலட்சம் மற்றும் விரைவு படுத்தப்பட்ட ஊரக குடிநீர்த் திட்டம் ரூ. 1,544 இலட்சம்) ரூ. 4,273 இலட்சம் குடிநீர் வசதி அளிக்கும் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

1987-88 ம் வருடம் அடிப்படைத் தேவைத்திட்டம் மற்றும் விரைவு படுத்திய ஊரக குடிநீர் திட்டம் ஆகியவற்றின் கீழ் 4,200 குடியிருப்புகளுக்கு ரூ. 4,687 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து தர தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவ மழை பொய்த்ததின் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலையினை கருத்தில் கொண்டு முன்னோக்குத் திட்ட அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வறட்சிப் பகுதிகளை தேர்ந்தெடுத்து ஆழ்துளைக்கிணறு அமைத்து குடிநீர் வசதி அளிக்குமாறு களப்பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

1983-84-ம் ஆண்டிலிருந்து இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஊரகக் குடிநீர் திட்டங்களுக்கு கீழ்க்கண்டவாறு கடன் வழங்கியுள்ளது.

| | ரூபாய் இலட்சங்களில். |
|---|---|
| 1983-84 .. .. .. .. | 496.07 |
| 1984-85 .. .. .. .. | 630.00 |
| 1985-86 .. .. .. .. | 696.16 |
| 1986-87 .. .. .. .. | 1266.00 |

ஊரகக் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து முந்தைய ஆண்டுகளில் பெறப்பட்ட கடனை, முதலும் வட்டியுமாக திருப்பி செலுத்தும் பொருட்டு 1986-87-ம் ஆண்டு திருத்திய நிதி

ஒதுக்கீடு மதிப்பீட்டிலும், மற்றும் 1987-88 ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மதிப்பீட்டிலும் முறையே ரூ. 158.76 இலட்சம் மற்றும் ரூ. 258.71 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளன.

கிராமக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்தல்:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முக்கிய புதிய திட்டங்களை செயல்படுத்த வேண்டிய நிலையில் இருப்பதால், ஏற்கனவே வாரியத்தின் பராமரிப்பில் ஊரகப் பகுதியிலிருந்த கையிறைப்பான்களையும், விசையிறைப்பான்களையும், பொது மக்களின் ஒத்துழைப்புடன் சிறந்த முறையில் பராமரிக்க வழிகோலும் வகையில் பராமரிப்புப் பொறுப்புகள் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கே மாற்றி வழங்கப்பட்டுள்ளது.

கையிறைப்பான், விசையிறைப்பான் பராமரிப்பு பணிகள் மூன்று கட்டங்களில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும் கையிறைப்பான் கவனிப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்தக் கவனிப்பாளர்கள் கையிறைப்பான் குறைபாடுகளை அவர்களிடம் அளிக்கப்பட்டிருக்கும் அஞ்சல் அட்டை மூலம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு தெரிவிக்கிறார்கள். இருப்பினும் பெரிய பழுதுகள் போன்றவை நடமாடும் குழுவினால் கவனிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் நிலையில் மெக்கானிக் மற்றும் பொருத்துநர் ஒருவர் உள்ளார். கோட்ட அளவில் இளநிலை உதவிப் பொறியாளரின் கீழ் நடமாடும் பராமரிப்புக்குழு உள்ளது. இக்குழுவுக்கு ஒரு ஊர்தியும் உண்டு. மாவட்ட அளவில் ஆட்சித் தலைவரின் நேரடி கண்காணிப்பில் இப்பணிகளைக் கவனிக்க ஒரு கட்டளைப் பிரிவு, ஒரு உதவி செயற் பொறியாளருடன் செயல்பட்டு வருகிறது.

தற்போது சுமார் 80,000 கையிறைப்பான்களும் 16,000 விசையிறைப்பான்களும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன. 1984–85 வரை இவற்றை பராமரிப்பதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 20.70 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டு வந்தது. இத்தொகை போதுமானதாக இல்லாததால், 1985-86-ல் மானியத் தொகை ரூ. 50.00 இலட்சமாகவும், 1986-87-ல் ரூ. 75.00 இலட்சமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கிராமங்களிலும், பேரூராட்சிகளிலும் தடையின்றி குடிநீர் கிடைக்க வேண்டுமானால் கையிறைப்பான்களையும், விசையிறைப்பான்களையும் பழுதின்றி சரியான முறையில் பராமரிக்க வேண்டியது மிகவும அவசியமாகும். எந்த ஒரு இறைப்பானும் 7 நாட்களுக்கு மேல் பழுதடைந்த நிலையில் இருத்தல் கூடாது என அரசு வலியுறுத்தியுள்ளது. ஊரக குடிநீர் திட்டத்தின் கீழ் வரும் கையிறைப்பான்களையும், விசையிறைப்பான்களையும் சிறந்த முறையில் பராமரிப்பதற்கு கூடுதல் நிதி தேவையென கருதப்பட்டதால், அடிப்படை தேவைத் திட்டத்தின் நிதியிலிருந்து 10 விழுக்காடு ஒதுக்கீடு செய்யமுடிவு எடுக்கப்பட்டுள்ளது.



அடிப்படை தேவைத் திட்டத்தின் நிதியிலிருந்து 1986–87 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலம், ரூ. 150 இலட்சம் கையிறைப்பான்களை பராமரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த தொகை பழுதடைந்த நீர் ஆதாரங்களை புதுப்பிப்பதற்கும், துரு பிடித்த நிலையிலுள்ள எஃகு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குப் பதிலாக சிமெண்ட் தொட்டிகளை அமைப்பதற்கும் பயன்படுத்தப்படும். பேரூராட்சிகளில் உள்ள சுமார் 9,000 கையிறைப்பான்கள் மற்றும் விசையிறைப்பான்களை பராமரிக்க ரூ. 75 இலட்சம், பேரூராட்சிகளின் இயக்குநர் பொறுப்பில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

1987-88-ல் கையிறைப்பான் மற்றும் விசையிறைப்பான் ஆகியவற்றின் பராமரிப்பிற்காக மாநில அரசின் நிதி ஒதுக்கீடான அடிப்படை தேவைத் திட்டத்தின் 10 விழுக்காடுகள், அதாவது ரூ 283.06 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கையிறைப்பான், விசையிறைப்பான் ஆகியவைகளின் பராமரித்தலில் ஏற்படும், காலதாமதங்களை களையும் பொருட்டு தேவையான உதிரிகளை சேமித்து வைக்கும்படி மாவட்ட அதிகாரிகள் கோரப்பட்டுள்ளனர். மேலும் மாவட்ட ஆட்சியர்கள் 100 கையிறைப்பான்களுக்கு மேலுள்ள ஒவ்வொரு ஒன்றியத்திலும் தேவையான அளவு தற்காலிக பொருத்துனர்களை அமர்த்திக் கொள்ளவும், அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் இறைப்பான்கள் செயல்படும் இடங்களை காட்டும் வகையில் வரை படங்கள் தயாரிக்கப்பட்டு அவைகள் அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளன. இறைப்பான்களை உடன் கண்டறியும் வகையில் அவைகளுக்கு வரிசை எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கையிறைப்பான்கள் நல்ல முறையில் செயல்படுகின்றனவா என்பதை அவ்வப்போது கண்டறிந்து தக்க பராமரிப்பு பணிகளை செய்ய வேண்டி முன்னறிவிப்பின்றி புலத்தணிக்கை மேற்கொள்ள வேண்டுமென சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். செப்பனிடும் பணிகளை களப்பணியாளர்கள் சீராக செயல்படுத்துவதற்கு வசதியாக ஒரு வழிகாட்டி நூல் ஊரக வளர்ச்சி இயக்குநரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

<u>தொழில் நுட்ப குழுமம்:</u>

குடிநீர் உப்பு மற்றும் உவர்ப்புத் தன்மை உள்ள பகுதிகளில் வழங்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீரின் தன்மையினையும் அளவினையும் மேம்படுத்தும் பொருட்டு, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துணையுடன் இந்திய அரசினால் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக 1986–87-ல் இந்தியாவில் பதினோரு மாவட்டங்களை தேர்ந்தெடுத்து அதில் குடிநீர்த் திட்டங்கள் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள இராமநாதபுரம் மாவட்டம் இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயற்படுத்தும்

பொருட்டு அரசு ஒரு செயல் இயக்குநரை நியமித்துள்ளது. இவரது தலைமையகம் இராமநாதபுரம் ஆகும். இத்திட்ட மானது மற்ற விஞ்ஞான தொழில்நுட்ப கழகங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படும். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரச்சினை குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங் கும் திட்டம் ரூ. 2,120 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு இந்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத் திட்டத்தை தயாரிக்க ரூ. 6 இலட்சமும் திட்டத்திற்கான முதற் கட்டமாக ரூ. 200 இலட்சமும், இந்திய அரசு வழங்கியுள்ளது. மேலும் மூன்று மாவட்டங்களுக்கு இத்திட்டத்தினை விரிவு படுத்தும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

வெளிநாட்டு உதவியுடன் நிறைவேற்றப்படும் திட்டங்கள்:

குடிநீர்த் திட்டங்கள்; ஐரோப்பிய பொருளாதாரக் குழுமம் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஐரோப்பிய பொருளாதாரக் குழும உதவியுடன் செயலாக்கப் படும் திட்டம்:

கோயமுத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் பல குடி யிருப்புகளில் மக்கள் உபயோகிக்கும் குடிநீரில் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும், புளூரைடு அதிகமாக கலந்திருப்பது கண் டறியப் பட்டது. ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் உதவி யுடன் இவ்விரண்டு மாவட்டங்களில் குடிநீர் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இத்திட்ட செயலாக்கத்திற்காக ஒரு தலைமை பொறியாளரின் கீழ் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப் பட்டுள்ளது. 31—3—1986 முடிய ரூ. 232.50 இலட்சம் செலவில் 72 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப் பட்டது. 1986–87-ல் ரூ. 471 இலட்சம் செலவில் 178 குடி யிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட உள்ளது. இதில் ரூ. 270.00 இலட்சம் செலவில் 119 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. 1987—88-ல் ரூ. 475.77 இலட்சம் செலவில் 80 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட உள்ளது.

உலக வங்கித் திட்டம்:

தமிழக அரசு உலக வங்கி உதவியுடன் குடிநீர் மற்றும் குறைந்த செலவிலான சுகாதார துப்புரவு திட்டங்களை மேற் கொள்ள உள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ரூ. 14,942 இலட்சம் (இணைப்பில் காண்க) இதில் கோயமுத்தூர், மதுரை ஆகிய மாநகராட்சி, சேலம் நகராட்சி மற்றும் 75 நடுத்தர மற்றும் சிறிய பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வசதி அளிக்கவும் 14 நகரங்களில் குறைந்த செலவிலான கழிவுநீர் திட்டங்களை செயலாக்கவும் உள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் 740 வழி



யோர குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 1986 ஏப்ரல் மாதம் முதல் செயலாக்கப்பட்டு வருகிறது.

விரிவான திட்ட மதிப்பீடுகள் உருவாக்கப்பட்டபின் முதற் கட்டமாக இத்திட்டத்தில் 44 சிறு நகரங்களுக்கு குடிநீர் வசதி அளிச்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 14 நகரங் களுக்கு ஏப்ரல் 1987–ல் தற்காலிக குடிநீர் வசதியளிக்க திட்ட மிடப்பட்டுள்ளது. கோவை, மதுரை ஆகிய மாநகராட்சிகளிலும், சேலம் நகராட்சியிலும் குடிநீர் மேம்பாட்டு திட்டங்கள் செயலாக்கப்பட உள்ளன. மேலும் குறைந்த செலவிலான சுகாதார துப்புரவு திட்டம் ரூ. 709.55 இலட்சம் செலவில் 14 நகராட்சிகளில் செயலாக்கப்பட்டு வருகிறது. 1987—88-ல் ரூ. 2,500 இலட்சம் செலவில் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் திட்டங்கள் செயலாக்கப்பட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

டேனிடா மற்றும் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல நிதி உதவி:

டேனிடா மற்றும் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நலநிதி உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் கையிறைப்பான்கள் புனரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்களில் இத்திட்டம் செயலாக்கப்பட்டு 1987-ம் ஆண்டு மே மாத இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துளையிடும் கருவிகள்:

குடிநீர் அளிக்கும் திட்டத்திற்கு மிகவும் தேவையானது ஆழ் துளை கிணறுகளை அமைக்கத் தேவையான ஆழ்துளைக் கருவி களாகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் உள்ள 80 ஆழ் துளைக் கருவிகளில் 60 கருவிகள் பத்து ஆண்டுகளுக்கு மேலாக உபயோகப்படுத்தப்பட்டு தம்முடைய திறனைஇழந்தவை யாக உள்ளன. எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தனி நபரிடம் உள்ள ஆழ்துளைக் கருவிகளை உபயோகிக்க வேண்டியுள்ளது. எனவே வாரியம் மேலும் பழுதடைந்த ஆழ் துளைக் கருவிகளுக்குப் பதிலாக ஐந்து ஆழ்துளைக் கருவிகள் வாங்க முடிவு எடுத்துள்ளது. தற்போது உள்ள ஆழ்துளைக் கருவிகளில் முறை மாற்றத்தின் மூலம் செயல் திறனை அதிகரிக்க வும் அதிக ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கவும் ஏற்பாடுகள் செய்து வருகிறது. மற்ற துறைகளில் உள்ள ஆழ்துளைக் கருவிகள் குறைவாக இருப்பதாலும், வாரியத்திடம் தேவையான அளவு ஆழ்துளைக் கருவிகள் இல்லாமையினாலும், வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் வழக்கமான பணிகளுக்காக தனி நபரிடம் உள்ள ஆழ்துளைக் கருவிகளை 1986—87-ல் வாரியம் உப யோகித்தது.

தளவாடப் பொருட்கள் வழங்குதல்;

குடிநீர்த் திட்டங்களில் தளவாடப் பொருட்கள் வழங்குவது ஒரு முக்கிய பணியாகும். குடிநீர்த் திட்டங்களுக்கான செலவில் 60 முதல் 70 விழுக்காடுகள் தளவாடப் பொருள்களுக்கான செலவாகும். குடிநீர்த் திட்டங்களை திட்டமிட்டபடி நிறைவேற்ற குறித்த காலத்தில் தளவாடப் பொருள்கள் கிடைப்பது ஒரு முக்கிய தேவையாகும். இப்பிரச்சினையை உணர்ந்த வாரியம் தளவாட பொருள்களை வாங்குதல், சேமித்தல் மற்றும் வழங்கு தல் ஆகியவைகளை மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. திட்டங்களுக்குத் தேவையான தளவாட பொருட்கள் குறித்த காலத்தில் கிடைக்கும் பொருட்டு தளவாட பொருள்களின் பற்றாக்குறை பற்றிய முறையீடுகளை தவிர்க்கும் பொருட்டும் ஒவ்வொரு மேற்பார்வை பொறியாளர் அளவில் ஒரு சேமிப்பு கிடங்கு ஏற்படுத்த வாரியம் முடிவு செய்துள்ளது. ஊரக குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற தளவாடப் பொருள்கள் தடையின்றி கிடைக்கப் பெற ரூ. 10 முதல் 15 கோடி வரையில் தளவாடங் களின் முன்நிலை இருப்பு ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது

திட்ட உருவாக்கம்:

குடிநீர்த் திட்டங்களை தொடர்ச்சியாக செயல்படுத்தவும் திட்டங்களை ஆய்வு செய்து திட்ட மதிம்பீடுகளை உருவாக்குவது அவசியம். இத்தருணத்தில் தருமபுரி மாவட்டத்தின் பல பகுதி களில், குடிநீர் தீர்வு காண நிரந்தரமான நீர் ஆதாரங்கள் இல்லை. எனவே, ஒக்கனேக்கலில் உள்ள காவேரி ஆற்றிலிருந்து இம்மாவட்டத்திலுள்ள 2 நகராட்சிகள், 13 பேரூராட்சிகள் மற்றும் 595 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் தீட்டப்பட உள்ளது. இதன் மதிப்பு சுமார் ரூ. 9,400 இலட்சம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரிவான ஆய்வுகள் செய்து மேற்கூறிய திட்டத்தை உருவாக்க தனியாக ஒரு திட்ட உரு வாக்கும் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது கள ஆய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், திட்டங் களுக்கான வங்கி ஒன்று அமைக்கவும் திட்ட உருவாக்கத்தை தீவிரப்படுத்தவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தனி திட்ட உருவாக்கக் கோட்டம் அமைக்க வாரியம் முடிவு செய்துள்ளது.

பேரூராட்சிகளுக்கு குடிநீர்த்திட்டங்களை விரிவுபடுத்துதல்:

தமிழ்நாட்டில் உள்ள 1981-ம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி 652 பேரூராட்சிகளில் 213 பேரூராட்சிகள் நகரப் பேரூராட்சிகளாக பிரிவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 439 பேரூராட்சிகள் ஊரகப் பிரிவின் கீழ் கொண்டு வரப்பட் டுள்ளன.

கிராமப்புறமாக கருதப்படும் பேரூராட்சிகளின் நிதி நிலை நெருக்கடியை கருத்தில் கொண்டு குடிநீர் வசதியற்ற 277 கிராம பேரூராட்சிகளில் கடும் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள இடங்களுக்கு முன்னுரிமையளித்து ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் குடிநீர்த்



திட்டங்களை நிறைவேற்ற அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் நகரப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள பேரூராட்சிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர்த் திட்டப் பணி ஆய்வுத் தொகையை முன்னமேயே கட்ட வேண்டியதில்லை எனவும் ஆய்வுத் தொகையை திட்ட மதிப்பீட்டுடன் சேர்த்துக் கொள்ளலாம் எனவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பாதுகாப்புத் துறைக்கு குடிநீர் திட்டங்களைச் செயலாக்குதல்;

பாதுகாப்புத் துறையின் முக்கிய பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயலாக்கி வருகிறது. திருச்சியிலுள்ள ஹெவி அல்லாய் பெனிட்டிரேட்டர் திட்டத்திற்கான குடிநீர்த் திட்டத்தை ரூ. 380 இலட்சம் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொண்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்கைலார்க் குடிநீர்த் திட்டம் எனப்படும் கப்பற்படை பாதுகாப்புப் பிரிவிற்கு ரூ. 365 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்புத் துறையின் கோரிக்கையின்படி வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணத்தி லுள்ள கடற்படையின் விமான தளத்திற்கு குடிநீர் வழங்குவ தற்கான திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

நகரக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று திட்டங்கள்:

குடிநீர்த் திட்டம்:

தமிழ்நாட்டில் 1986-ம் ஆண்டு மார்ச் வரையில் 753 நகரங் களில் 280 நகரங்களுக்கு குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு செயலில் உள்ளன. இதில் 2 மாநகராட்சிகள், 93 நகராட்சிகள் 5 நகராட்சி நகரியங்கள், 182 பேரூராட்சிகள், எட்டு பேரூராட்சி நகரியங்கள் அடங்கும். குடிநீர்த் திட்டங்கள் 53 நகரங்களிலும், குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் 35 நகரங்களிலும், செயலாக்கத்தில் உள்ளன.

தமிழ்நாடு அரசு நகர குடிநீர் திட்டங்களுக்கான 1986-87-ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 587.39 இலட்சமும் 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 841.87 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய் துள்ளது.

கழிவு நீரகற்று திட்டம்:

சுத்தமான சுற்றுப்புற சூழ் நிலையை உருவாக்கும் பொருட்டு நகரப் பகுதிகளிலும், மாவட்டத் தலைநகரங்களிலும், சுற்றுலா மையங்களிலும், கழிவு நீரகற்று திட்டம் செயல்படுத்த அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது, கோயம்புத்தூர் மாநகராட்சியிலும், திருச்சி, சேலம் ஆகிய நகராட்சிகளிலும் கழிவு நீரகற்று திட்டங்கள் செயலில் உள்ளன. திருச்சி நகரப் பகுதிகளில் கழிவு நீர் அகற்றும் திட்டப் பணிகள் முழுமையாக்கப்பட்டு வருகிறது. 1987 மே திங்களில் திட்டத்தின் எல்லா பணிகளும்

[illegible] என எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற இரண்டு [illegible] திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. தனியாரிட [illegible] கழிவு நீர் சுத்திகரிப்பிற்கு தேவைப்படும் நிலங்கள் ஆர்ஜிதம் செய்வதில் சில இன்னல்கள் உள்ளன. இருப்பினும், தனிக்கவனம் செலுத்தி நிலங்களை ஆர்ஜிதம் செய்து மேற்கூறிய மற்ற இரண்டு திட்டங்களை முடிக்க ஆவன செய்யப்பட்டு வருகின்றது. மேலும் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர் மாவட்டம் தலை நகரங்களுக்கு கழிவுநீர் அகற்றுத் திட்டங்கள் அமைக்க ஆய்வு வேலைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகை ஏரியில், மாசுபடுத்தலை தடுக்கும் பொருட்டு, ஆய்வு செய்து கழிவு நீரகற்றுத் திட்ட மதிப்பீடு தயாரிக்க, மலைவாழ், முன்னேற்றத் திட்டங்களின் கீழ் தமிழ்நாடு அரசு ரூ. 4 இலட்சம் நிதி அளித்துள்ளது. இதற்கென தனியாக ஒரு திட்ட உருவாக்கு கோட்டம் அமைக்கப் பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

<u>ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதி உதவி:</u>

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து 1969–70-ம் ஆண்டி லிருந்து 1985–86-ம் ஆண்டு வரை ரூ. 8,315.03 இலட்சம் நகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றுத் திட்டங்களை செயல்படுத்த கடனாக பெறப்பட்டுள்ளது.

1986–87-ம் ஆண்டிற்கு நகரக் குடிநீர் திட்டங்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 232.00 இலட்சம் கடனாக அளிக்க முன் வந்துள்ளது.

தமிழ்நாடு அரசு, நகரக் குடிநீர் திட்டங்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெற்ற கடனை முதலும் வட்டியு மாக சேர்த்து திருப்பிச் செலுத்துவதற்காக 1986-87-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 1,222.11 இலட்சமும், 1987-88–ம் ஆண்டு மதிப்பீட்டில் ரூ. 700 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதுபோலவே கழிவு நீரகற்று திட்டங்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடனை முதலும் வட்டியுமாக திருப்பிச் செலுத்தும் பொருட்டு, 1986-87-ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 99.19 இலட்சமும் 1987-88-ம் ஆண்டு மதிப்பீட்டில் ரூ. 95.54 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த அனுபவங்களைக் கொண்டு மாநிலத்தில் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதால் மட்டும் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரமாக தீர்வு காண இயலாது. கூட்டுக் குடிநீர் திட்டங்கள் அமைப்பதால் மட்டுமே குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முடியும். இதன் மூலம், நகர





பகுதிகளான நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு குடிநீர்த் திட்டம் அமைப்பதுடன் வழியோர கிராமங்களில் உள்ள பல குடியிருப்புகளுக்கு, குடிநீர் விஸ்தரிக்கப்படுகிறது. ஆகவே, மண்டல தலைமைப் பொறியாளர்களையும், மேற்பார்வைப் பொறியாளர்களையும் தனி கவனம் செலுத்தி, கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை அமைக்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

தற்போது கடற்கரையோர கிராமங்களில் நல்ல குடிநீர் ஆதாரம் ஏதும் இல்லை. இதனால் இப்பகுதிகளில் வாழும் மீனவர் குடியிருப்புகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெற முடியாத நிலையில் உள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம் பகுதியில் 216 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு ரூ. 1,392 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை உருவாக்கி வருகிறது.

மக்களுக்கு வழங்கப்படுகின்ற குடிநீர் மாசு இன்றி கலப்பட மற்றதாக இருக்க வேண்டுமாதலால், குடிநீர் விநியோகிக்கப்படு கின்ற முறைகளில், தண்ணீர் சேகரிக்கப்பட்டு தரத்திற்காக சோதனை செய்யப்பட வேண்டும். தற்போது நீர் தரத்தை ஆராய தேவையான அளவு சோதனைக் கூடங்கள் வாரியத்தின் வசம் இல்லை. இதன் முக்கியத்துவத்தை அறியவும், குடிநீரை குறிப்பிட்ட கால இடைவெளியில் சோதனை செய்து தரத்தை ஆராயவும், ஒவ்வொரு மேற்பார்வைப் பொறியாளர் வட்ட அலுவலகத்திலும், சோதனைக் கூடங்களை அமைக்க உத்தேசித் துள்ளது. இத்திட்டத்திற்காக தொடரா செலவினமாக ரூ. 6·00 இலட்சமும், தொடர் செலவினமாக ரூ. 3.45 இலட்சமும் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

<u>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.</u>

1978 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு சட்டத் தின்படி அமைக்கப்பட்ட சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சென்னைப் பெருநகரில் வளர்ந்து வரும் மக்களின் தொகைக்கு ஏற்ப குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றுவதற்கான பணிகளை சீராக திட்ட மிட்டு பொது சுகாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற குறிப்பான நோக்கத்தோடு செயல்படுத்த வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டது. சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் அமைப்புகளைச் செயல்படுத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளோடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் ஆகியவற்றுக்கான பல்வேறு திட்டப் பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[1987 ஏப்ரல் 2

இவ்வாரியம் அமைக்கப்படும் முன் உள்ள நிலையும், வாரியம் அமைக்கப்பட்டதிலிருந்து 1986-87 வரை செய்துள்ள சாதனைகளும் பின்வருமாறு:—

| வரிசை எண்ணும் விவரங்களும். | 1-8-1978 வரை உள்ள நிலை. | 1986—1987 முடிய செய்து உள்ள சாதனைகள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. குடிநீர்க் குழாய்களின் மொத்த நீளம். | 1,210 கி.மீ. | 300 கி.மீ. | 1,510 கி.மீ. |
| 2. கழிவுநீர் குழாய்களின் மொத்த நீளம். | 1,223 கி.மீ. | 82 கி.மீ. | 1,305 கி.மீ. |
| 3. கிணற்றுப் பகுதியிலுள்ள ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை. | 45 | 30 | 75 |
| 4. குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை. | 2,952 | 676 | 3,628 |
| 5. இந்தியா மார்க்-II பம்புகளின் எண்ணிக்கை. | .. | 1,121 | 1,121 |
| 6. மதிய உணவு மையங்களுக்காக உள்ள குடிநீர்த் தொட்டிகளின் எண்ணிக்கை. | .. | 274 | 274 |
| 7. வருவாய் குறைந்த நலிவுற்றோர் பிரிவுக்காக உள்ள குடிநீர்த் தொட்டிகளின் எண்ணிக்கை. | 129 | 395 | 524 |
| 8. குடிநீர் வழங்கு ஊர்திகளின் எண்ணிக்கை. | 28 | 15 | 43 |
| 9. கழிவு நீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை. | 55 | 6 | 61 |
| 10. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை. | 1 | 2 | 3 |



1987 ஏப்ரல் 2]

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 4,000 இலட்சத்தில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ரூ. 3,561.00 இலட்சம் (குடிநீர் வழங்கல் பிரிவின்கீழ் ரூ. 1,543 இலட்சம், கழிவு நீரகற்றும் பிரிவின்கீழ் ரூ. 2,018.00 இலட்சம்) செலவிட்டுள்ளது. மேலும் 1981, 1982, 1983 ஆகிய மூன்று ஆண்டுகளில் நிலவிய கடும் வறட்சி நிலையை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் அரசு முழு மானியமாக வழங்கிய ரூ. 1,011·00 இலட்சத்தைக் கொண்டு பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளையும் செயல்படுத்தி வெற்றிகரமாக சமாளித்தது.

**ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்:**

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக ரூ. 12,500 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அ. குடிநீர் வழங்கல்:**

| | (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|
| 1. நடைபெற்றுவரும் திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்கள். | 2,965 | |
| 2. சென்னை நகருக்கு நீர்கொணர்தல் மற்றும் விநியோகத் திட்டம். | 5,875 | 8,840 |

**ஆ. கழிவுநீர் அகற்றல்.**

| | (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|
| 1. நடைபெற்று வரும் திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்கள். | 3,417 | 3,660 |
| 2. சென்னை நகருக்கு நீர் கொணர்தல் மற்றும் விநியோகத் திட்டம். | 243 | |
| மொத்தம் .. | | 12,500 |

1985-86 ஆம் ஆண்டில் இவ்வாரியம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக குடிநீர் வழங்கல் பிரிவின்கீழ் ரூ. 404.45 இலட்சமும், கழிவு நீரகற்றல் பிரிவின்கீழ் ரூ. 581.99 இலட்சமும் செலவு செய்துள்ளது. இவ்வாரியம் 1986-87-ம் ஆண்டில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக குடிநீர் வழங்கல் பிரிவின்கீழ் ரூ. 1,279.00 இலட்சம் மற்றும் கழிவு நீரகற்றல் பிரிவின்கீழ் ரூ. 597.14 இலட்சம் செலவு செய்துள்ளது.

1987-88 ஆம் ஆண்டின் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு :

1987–88 ஆம் ஆண்டுக்காக மாநில அரசிடமிருந்து கோரப்பட்டுள்ள மொத்த மானிய விவரம் வருமாறு :—

| (1) | குடிநீர் வழங்கல். (2) | கழிவு நீரகற்றல். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. திட்டப் பணிகள் .. | 654.68 | 312.38 | 967.06 |
| 2. சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று திட்டம் (கிருஷ்ணா குடிநீர்த் திட்டம்) | 3,000.00 | .. | 3,000.00 |
| 3. உலக வங்கி திட்டம். | 600.00 | 277.50 | 877.50 |
| 4. செயற்கை மழைத் திட்டம் .. | 8.19 | .. | 8.19 |
| மொத்தம் .. | 4,262.87 | 589.88 | 4,852.75 |

குடிநீர் வழங்கல் :

இந்த வாரியம் நிறைவேற்றிய பல்வேறு குடிநீர் வழங்கு திட்டங்களின் பயனாக, சென்னை மாநகருக்கு சாதாரணமாக நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவ 1978 ஆம் ஆண்டில் 215 மில்லியன் லிட்டராக இருந்தது, 1986-ல் 250 மில்லியன் லிட்டராக உயர்ந்துள்ளது. நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு சாதாரணமாக வழங்கப்படும் தண்ணீரின் அளவு 70 லிட்டரிலிருந்து 73 லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் மக்கட்தொகை 32.77 இலட்சம் ஆகும். தற்போதைய மக்கட்தொகை சுமார் 38.00 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டில் 85 விழுக்காடு மக்களுக்கு (26.39 இலட்சம்) குடிநீர் வசதி அளிக்கப்பட்டது. 1986–ல் இது 90 விழுக்காடாக (33.37 இலட்சம்) உயர்த்தப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கல் பிரிவின்கீழ் கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்தில் நாளொன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் நீரை சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் பணியும், கீழ்ப்பாக்கத்தில் நீரேற்றும் இயந்திரங்கள் திறனை அதிகரிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன. 1978 ஆம் ஆண்டு சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட 12 ஊராட்சிகளில் திருவான்மியூர், சாலி



கிராமம், கோடம்பாக்கம், விருகம்பாக்கம், கொடுங்கையூர் எருக்கஞ்சேரி ஆகியவற்றிற்கு ஏற்கெனவே குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. வில்லிவாக்கம், கொளத்தூர், திருமங்கலம், கனகம், தரமணி, கோயம்பேடு மற்றும் வேளச்சேரி ஆகிய பகுதிகளில் விநியோக குழாய்கள் பதிக்கும் பணி முடிவடைந்துவிட்டது. மேற்காணும் ஊராட்சிகளுக்குத் தேவைப்படும் குடிநீருக்கான குடிநீராதாரப் பணிகளுக்கு பின்வரும் திட்டங்களை செயல்படுத்த 1986 ஆம் ஆண்டு நவம்பர் இறுதியில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1. வில்லிவாக்கம் கொளத்தூர் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் கொணர்தல் மதிப்பீட்டுத் தொகை ரூ. 277.00 இலட்சம்.

2. திருவான்மியூருக்குத் தெற்கு கடலோர நீராதாரத்திலிருந்து நிலத்தடி நீரைக் கொணர்ந்து கனகம்–தரமணி, வேளச்சேரி மற்றும் சென்னை மாநகரின் தெற்குப் பகுதிகள் ஆகியவற்றிற்குக் கொண்டு வருதல் மதிப்பீட்டுத் தொகை ரூ. 250.00 இலட்சம்.

3. மேற்கு அண்ணா நகர், திருமங்கலம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல் மதிப்பீட்டுத் தொகை ரூ. 140.00 இலட்சம். மேற்கூறிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை நகர குடிநீர் மேம்பாடு :

சென்னை நகரத்தின் வளர்ந்து வரும் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் முகத்தான், தொலை நோக்கு திட்டமாக கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் பூண்டி, செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கங்களுக்கு 1,200 கோடி கன அடி நீர் கொண்டு வரப்பட வகை செய்கிறது.

தமிழ்நாடு ஆந்திர மாநில எல்லையில் தொடங்கி சென்னைக்கு அருகில் உள்ள நீர்த்தேக்கங்கள் வரையில் கால்வாய் அமைக்கும் பணியினை மாநில பொதுப் பணித் துறை மேற்கொண்டுள்ளது. இந்நீர்த் தேக்கங்களில் இருந்து குழாய்களின் மூலம் நீர் கொண்டு வருதல், சுத்திகரித்தல், குழாய்களின் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் இதனால் கூடுதலாக வரக்கூடிய கழிவு நீரை அகற்றுதலும், சென்னைக் குடிநீர் வாரியத்தின் பொறுப்பாகும். நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் குழாய் பதித்தல் போன்ற பணிகளை செயற்படுத்த தேவையான நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் நகரில் வழங்கப்படும் குடிநீர் அளவை அதிகரிக்க பல்வேறு குறுகியகால திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் உதவியோடு நீர் புவியமைப்பு. செயற்கை நீர் செலுத்தும் முறைகள் மற்றும் நிலத்தடி நீர், மேல்மட்ட நீர் ஆகியவற்றைப் பயன்படுத்தும்

முறைகள் பற்றி நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் ரூ. 149.55 கோடி மதிப்பீட்டில் ஒரு பெரும் திட்டம் தயாரிக்கப் பட்டு உலக வங்கி உதவி கோரி அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கி குழுவினருடன் இதுவரை ஐந்து முறை விவாதிக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

பூண்டி, கொடுதலையாறு வெள்ளப்பகுதி மற்றும் கன்னிகைப் பேர் ஆகிய மூன்று புதிய நீரூற்றுகளிலிருந்து நாளொன்றுக்கு 550 இலட்சம் லிட்டர் நிலத்தடி நீரினை எடுப்பதற்காக ரூ. 15 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டு பயன்படத் தொடங்கும்.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டப் பணிகளின் முதற்கட்ட முடிவுகளின் பரிந்துரையின் பேரில், நீர் ஆதார மேம்பாடு, நீரை சிக்கனமாக பயன்படுத்துதல் தொடர்பான இரண்டாம் கட்ட ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான திட்டத்திற்கு ரூ. 67.00 இலட்ச மதிப்பீட்டிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன.

**கழிவு நீரகற்றல் :**

இதுபோலவே, இவ்வாரியம் செயற்படுத்திய பல்வேறு கழிவு நீரகற்றுத் திட்டங்களின் பயனாக 1978-ல் நாளொன்றுக்கு 1,900 இலட்சம் லிட்டர் திறனாக இருந்த கழிவு நீரகற்று திறன் அளவு 1986-ல் 2,200 இலட்சம் லிட்டராக உயர்த்தப் பட்டுள்ளது. 1978-ல் பயனடைந்த மக்கட்தொகை 74 விழுக்காடாக (22.98 இலட்சம்) இருந்ததை 1986-ல் 80 விழுக்காடாக (29.66 இலட்சம்) உயர்த்தப்பட்டுள்ளது. வாரியம் செயல்படத் துவங்கியதிலிருந்து 1986 ஆம் ஆண்டு வரையில் 63 கிலோ மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர்க் குழாய்கள் பதிக்கப் பட்டுள்ளன. தவிர ஆறு புதிய கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. கோயம்பேடு, பெருங்குடி ஆகிய இடங்களில் இரண்டு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

கொடுங்கையூரில் 1, 2 மண்டலங்களுக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 1987–88ல் செயல்படத் தொடங்கும். மேல்பட்டடை, கோட்டூர், திருவான்மியூர், வில்லிவாக்கம், மாம்பலம் ஏரிக்கரைப் பகுதி ஆகியவற்றிற்கு கழிவு நீரகற்று வசதி செய்து கொடுக்கும் பணி நடந்து வருகிறது. ரூ. 8.00 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட கழிவுநீர் விசைக் குழாய்களை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் 70 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 17 கழிவு நீரேற்று நிலையங் களை புதுப்பிக்க ரூ. 1,043 இலட்சம் மதிப்பீட்டிலான திட்டத் திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 1987-88-ல் மேற்கொள்ளப்படும்.





அரசு கழிவு நீரகற்று வசதியின் கீழ், கீழ்க்கண்ட இரண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவைகள் சென்னை நகர குடிநீர் மேம்பாடு கழிவு நீரகற்று வசதி திட்டத்தில் அடங்கும்.

| | |
|---|---|
| 1. பெரியார் நகருக்கு கழிவு நீரகற்று வசதி அமைத்தல். | திட்ட மதிப்பீடு ரூ. 232 இலட்சம். |
| 2. அரும்பாக்கம் மேற்கு பகுதிக்கு கழிவு நீரகற்று வசதி அமைத்தல். | திட்ட மதிப்பீடு ரூ. 273 இலட்சம். |

மேற்கண்ட இரண்டு திட்டங்கள் 1987–88 ஆம் ஆண்டு செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**செயற்கை மழைத் திட்டம் :**

1986–87 ஆம் ஆண்டிலும் செயற்கை மழைத் திட்டத்திற்காக தனி ரக வானூர்தி பயன்படுத்தப்பட்டது. இவ்வானூர்தி ஆறு ஆண்டுகள் பயன்படுத்தப்பட்டுவிட்டதால் முறைப்படி இந்த ஆண்டு இதனை முற்றிலுமாகப் பழுது பார்த்துச் சீரமைக்க வேண்டியதிருந்தது.

பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் எரோநாட்டிக்ஸ் லிமிடெட் என்ற இந்திய அரசுத் துறை நிறுவனம் இந்த விமானத்தைப் பழுது பார்த்தது. மேலும் பறப்பதற்கு தகுதி சான்றிதழ் 1986 நவம்பரில் பெறப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இந்த வானூர்தி சுமார் 25 மணி நேரம் பறந்து பணியாற்றியுள்ளது. இந்திய விமானப்படையிலிருந்து அயற்பணி அடிப்படையில் நியமிக்கப் பட்டுள்ள ஒரு விமானி இதை இயக்குகிறார். மேலும் செயற்கை மழைத் திட்டம் செயல்படுத்தப்படும் காலங்களில் இவ்வானூர்தி யில் பணியாற்றுவதற்காக குறுகிய கால அடிப்படையில் துணை விமானி ஒருவரை இவ்வாரியம் நியமித்துள்ளது.

1987-88 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் இத்திட்டச் செயலாக்கம் மற்றும் பராமரிப்புக்காக ரூ. 8.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாநில வறட்சி நிவாரணப்பணிகள்— 1987–88 (குடிநீர்):**

1986 ஆம் ஆண்டு பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை காரணமாக மாநிலத்தின் பல பகுதிகளில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடியதாக உள்ளது. 1986 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளோடு கூடுதலாக ரூ. 28 கோடி செலவில் பல குடிநீர்ப் பணிகளை நிறைவேற்ற அரசு ஆணையிட்டுள்ளது. இவற்றினுள் 1987-88 ஆம் நிதியாண்டில் ஊரகக் குடிநீர் திட்டத்தில் ஏற்கப் பட்டுள்ள 4,200 ஆழ்துளைக் கிணறுகள் உள்ளிட்ட 8,625 ஆழ்துளைக் கிணறுகளை வறட்சிப் பகுதிகளில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி–மார்ச் மாதத்திற்குள் 2,000 ஆழ்துளைக் கிணறுகள் ரூ. 5 கோடி செலவில் அமைக்கப்படும்.

[1987 ஏப்ரல் 2

## சென்னை நகரத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் :

பருவமழை பொய்த்ததின் காரணமாக சென்னை நகருக்கு நீர் வழங்கும் நீர்த்தேக்கங்களிலுள்ள நீர்த் தேக்கத்தின் அளவு திருப்திகரமாக இல்லை. அடுத்த பருவமழை பெய்யும் வரை, தற்போதைய நிலைமையை சமாளிப்பதற்காக, சென்னை நகருக்கு சாதாரணமாக வழங்கும் குடிநீரின் அளவான நாளொன்றுக்கு 2,500 இலட்சம் லிட்டர்களுக்கு எதிராக நாளொன்றுக்கு 1,800 இலட்சம் லிட்டர்கள் வழங்குவதற்காக நீர்த்தேக்கங்களில் இருந்து தினமும் எடுக்கும் நீரின் அளவைக் குறைத்து அதற்குப் பதிலாக நிலத்தடி நீர் ஆதாரங்களிலிருந்து நீரினை எடுத்து ஈடு செய்வதற்காக அரசு பல வழிவகைகளை எடுத்துள்ளது.

வறட்சி நிலைமையை சமாளிப்பதற்காக ஏற்கனவே உள்ள கிணற்றுப் பகுதிகளை அபிவிருத்தி செய்தல், தவிர கூடுதலான ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்தல், பழைய நாட்பட்ட பம்புகளை மாற்றியமைத்தல் போன்ற பல பணிகளுக்கான செலவினத்திற்காக அரசு ரூபாய் 163.00 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:—

| வரிசை எண் மற்றும் வேலையின் விவரங்கள். | எண்ணிக்கை. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 ஏற்கனவே உள்ள கிணற்றுப் பகுதிகளில் கூடுதலான ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைத்து அவற்றிற்கு பம்பு செட்டுகள் அமைத்து, மின் இணைப்புகள் கொடுத்தல், மேலும் குழாய்கள் பதித்தல். | 16 | 40.00 |
| 2 டீசல் ஜெனரேட்டர்கள் வாங்குதல் | 10 | 15.00 |
| 3 குழாய்க் கிணறுகளை அமைத்தல் | 1 500 | 15.00 |
| 4 ஆழ்துளைக் கிணறுகள் இறக்கி, இந்தியா மார்க்-2 பம்புகளை பொருத்துதல். | 120 | 18.00 |
| 5 பகுதிகளின் பணிகளுக்காக 3 டன் எடை திறனுள்ள டிரக்குகள் வாங்குதல். | 6 | 10.00 |
| | | 98.00* |

*வரிசை எண் 1 முதல் 5 வரைக்கான தொகை ரூ. 98 இலட்சம் அரசு கடனுதவி தொகையிலிருந்து செலவு செய்யப்படும்.



1987 ஏப்ரல் 2]

| | | |
|---|---|---|
| 6 கான்டூர் கால்வாயை தூர் எடுப்பதற்கும் செப்பனிடுவதற்கும் மற்றும் செங்குன்றம், சோழவரம் ஏரிகளின் உட்பகுதியில் கால்வாய்கள் வெட்டுவதற்கான பணிகள். | .. | 3.00 |
| 7 தற்போதுள்ள பம்பு செட்டுகளை பழுது பார்த்து அவற்றை செயல்படுத்தி இயக்குதல். | .. | 5.00 |
| 8 பழைய கிணற்றுப் பகுதிகளில் உள்ள 14 கிணறுகளை புனரமைத்து, அவற்றிற்கான பம்புகளை பழுது பார்த்தல் மற்றும் மாற்றியமைத்தல் | 14 | 33.00 |
| 9 குழாய்க் கிணறுகளை புதுப்பித்தல் | 663 | 1.40 |
| 10 இந்தியா மார்க்-2 பம்புகளை புனரமைத்தல். | 226 | 22.60 |
| | | 65.00* |
| மொத்தம் | | 163.00 இலட்சம். |

(* வரிசை எண் 6 முதல் 10 வரைக்கான செலவு ரூபாய் 65 இலட்சம் வாரியத்தால் அதன் சொந்த நிதியிலிருந்து செலவு செய்யப்படும்)

ஏற்கனவே குடிநீர் ஆதாரம் குறைந்த நிலையில் உள்ள கோடை கால ஆரம்பக் கட்டத்தில், குடிநீர் தட்டுப்பாட்டின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் மனித ஆற்றலுக்கு இயன்ற அளவுக்கு தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிப்பதற்கு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. தற்போது வழங்கும் குடிநீர் அளவினை அதே நிலையில் வைத்திருக்கவும், நகரின் எல்லா பகுதிகளுக்கும் குடிநீர் கிடைக்கச் செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய சத்துணவு மையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மக்கள் நெருக்கமுள்ள குடியிருப்புப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் மெய்யான தேவைகளுக்கேற்ப குடிநீர் வழங்குதலை நெறிப்படுத்தவும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் சிறப்புக் கவனம் செலுத்திவருகிறது.

### இணைப்பு.

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பெற உள்ள குடிநீர் மற்றும் குறைந்த செலவிலான சுகாதாரத் துப்புரவுத் திட்டங்கள்.

| வரிசை எண். | விவரம். | 1981-ஆம் ஆண்டு மக்கட் தொகை. | செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பிரிவு—1 கோயம்புத்தூர் மற்றும் 20 நகரங்கள் | 8,76,[illegible]36 | 3,683.58 |
| 2 | பிரிவு—2 மதுரை .. .. .. | 8,17,562 | 3,251.45 |
| 3 | பிரிவு—3 சேலம் மற்றும் 11 நகரங்கள் .. .. | 5,28,547 | 3,302.30 |
| 4 | பிரிவு—4 44 நகரங்கள் .. .. .. | 4,69,888 | 2,131.79 |
| 5 | பிரிவு—5 குறைந்த செலவிலான சுகாதார துப்புரவுத் திட்டம் 14 நகரங்களில். | 6,22,140 | 709.56 |
| 6 | 740 கிராம குடியிருப்புகள் (பிரிவு 1 மற்றும் 3 இல்) | 5,73,401 | 1,413.51 |
| | மொத்தம் .. | 38,88,074 | 14,491.91 |
| 7 | பிரிவு—6 சாதனங்கள் மற்றும் பயிற்சியும் ஆலோசனையும். | .. | 350.00 |
| 8 | பிரிவு—7 கோவையில் நீர் அளமானிகள் பொருத்துவதற்கான சுழல் நிதி. | .. | 100.00 |
| | | | 14,941.91 அல்லது ரூபாய் 149.42 கோடி. |



### இணைப்பு.

உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்பெற உள்ள குடிநீர் மற்றும் குறைந்த செலவிலான சுகாதாரத் துப்புரவு திட்டங்கள்.

| வரிசை எண்ணும் நகரத்தின் பெயரும். | மாவட்டம். | நிலை. | 1981 ஆம் ஆண்டு கணக்கெடுப் பின்படி மக்கட் தொகை. | செலவினம். (இலட்சங்களில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| பிரிவு—1. | | | | |
| 1 கோயம்புத்தூர் .. | கோயம்புத்தூர். | மாநகராட்சி. | 7,00,923* | 2,124.50 |
| 2 மதுக்கரை .. .. | டிை | பேரூராட்சி. | 8,190 | 90.30 |
| 3 செட்டிப்பாளையம் | டிை | டிை | 6,509 | 60.33 |
| 4 எட்டிமடை .. | டிை | டிை | 6,145 | 52.62 |
| 5 ஒத்தக்கால்மண்டபம் | டிை | டிை | 6,175 | 55.15 |
| 6 திருமலையம்பாளையம் | டிை | டிை | 4,400 | 53.10 |
| 7 வெள்ளலூர் .. | டிை | டிை | 13,838* | 69.12 |
| 8 பெரியநாயக்கன் பாளையம் .. | டிை | டிை | 21,000 | 2,31.54 |
| 9 நரசிம்மநாயக்கன் பாளையம். .. | டிை | டிை | 5,779* | 33.80 |
| 10 கூடலூர் .. .. | டிை | டிை | 8,481 | 38.56 |
| 11 துடியலூர் .. .. | டிை | டிை | 11,926 | 160.74 |

| வரிசை எண்ணும் நகரத்தின் பெயரும். | மாவட்டம். | நிலை. | 1981-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கட் தொகை | செலவினம். (இலட்சங்களில்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 12 சர்க்கார்சாமகுளம் | ஷை | ஷை | 3,025 | 20.59 |
| 13 சின்னவேடம்பட்டி .. | ஷை | ஷை | 5,968* | 90.42 |
| 14 இடிகரை .. .. | ஷை | ஷை | 5,045 | 27.66 |
| 15 காளப்பட்டி .. .. | ஷை | ஷை | 6,200 | 62.93 |
| 16 சரவணம்பட்டி .. | ஷை | ஷை | 5,045 | 59.74 |
| 17 வெள்ளக்கிணறு .. | ஷை | ஷை | 7,371 | 76.03 |
| 18 கன்னம்பாளையம் .. | ஷை | ஷை | 6,950 | 60.47 |
| 19 கருமாத்தம்பட்டி .. | ஷை | ஷை | 12,765 | 62.53 |
| 20 இருகூர் .. .. | ஷை | ஷை | 14,400 | 96.04 |
| 21 பல்லடம் .. .. | ஷை | ஷை | 16491* | 157.48 |
| | | | | 3,683.58 |
| பிரிவு—2. | | | | |
| 1 மதுரை .. .. | மதுரை | மாநகராட்சி. | 8,17,562* | 3,251.45 |
| பிரிவு—3. | | | | |
| 1 சேலம் .. .. | சேலம் | நகராட்சி. | 3,61,177 | 1,623.42 |
| 2 ஆத்தூர் .. .. | ஷை | ஷை | 50,537* | 700.13 |
| 3 சூரமங்கலம்.. .. | ஷை | ஷை | 26,624* | 236.79 |
| 4 மேச்சேரி .. .. | ஷை | ஷை | 15 247 | 97.56 |
| 5 ஓமலூர் .. .. | ஷை | ஷை | 10,309* | 59.34 |
| 6 கருப்பூர் .. .. | ஷை | ஷை | 9,303 | 60.33 |



| | | | | |
|---|---|---|---|---|
| 7 கன்னன்குறிச்சி .. | ஷை | ஷை | 11,411 | 87.33 |
| 8 அயோத்திபட்டிணம்.. | ஷை | ஷை | 7,605 | 57.80 |
| 9 வாழப்பாடி .. .. | ஷை | ஷை | 8,315 | 76.62 |
| 10 ஏதாபூர் .. .. | ஷை | ஷை | 10,800 | 84.54 |
| 11 பெத்தநாயக்கன் பாளையம். .. | ஷை | ஷை | 9,755 | 121.13 |
| 12 நரசிங்கபுரம் .. | ஷை | ஷை | 7,464 | 97.04 |
| | | | | 3,302.03 |
| பிரிவு—4 | | | | |
| 1 பொன்னேரி .. | செங்கல்பட்டு | பேரூராட்சி. | 16,029* | 40.26 |
| 2 பள்ளிப்பட்டு .. | ஷை | ஷை | 7,284 | 26.95 |
| 3 கும்மிடிபூண்டி .. | ஷை | ஷை | 6,976 | 41.74 |
| 4 பள்ளிக்கொண்டா .. | வடாற்காடு | ஷை | 16,391* | 37.95 |
| 5 திருவலம் .. .. | ஷை | ஷை | 4,896 | 17.68 |
| 6 அம்மூர் .. .. | ஷை | ஷை | 7,030 | 26.54 |
| 7 கீழ்பென்னாத்தூர் .. | ஷை | ஷை | 9,998 | 36.81 |
| 8 ஒடுகத்தூர் .. | ஷை | ஷை | 7,300 | 39.46 |
| 9 பெண்ணாடம் .. | தென்னாற்காடு | ஷை | 12,400 | 35.40 |
| 10 கிள்ளை .. .. | ஷை | ஷை | 9,100 | 48.72 |
| 11 வடக்கானந்தல் .. | ஷை | ஷை | 14,970 | 24.59 |
| 12 வளவனூர் .. .. | ஷை | ஷை | 13,448 | 41.60 |
| 13 திட்டக்குடி .. .. | ஷை | ஷை | 15,880 | 49.20 |
| 14 தேவூர் .. .. | சேலம் | ஷை | 8,300 | 48.49 |
| 15 அரசிரமணி .. .. | ஷை | ஷை | 15,000 | 67.90 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 16 கணியூர் .. .. | கோயம்புத்தூர் | பேரூராட்சி | 6,990 | 19.23 |
| 17 சென்னசமுத்திரம் .. | பெரியார் | ஷை | 7,900 | 28.94 |
| 18 குளூர் .. .. | ஷை | ஷை | 11,090 | 73.44 |
| 19 அத்தாணி .. .. | ஷை | ஷை | 7,120 | 42.67 |
| 20 கூடலூர் .. .. | நீலகிரி | ஷை | 21,680 | 112.11 |
| 21 பெருமகளூர் .. | தஞ்சாவூர் | ஷை | 5,929 | 25.42 |
| 22 நீடாமங்கலம் .. | ஷை | ஷை | 6,561 | 21.33 |
| 23 சீர்காழி .. .. | தஞ்சை | நகராட்சி | 25,508* | 143.15 |
| 24 காட்டுப்புத்தூர் .. | திருச்சிராப்பள்ளி | பேரூராட்சி | 10,217 | 34.16 |
| 25 கல்லக்குடி .. | ஷை | ஷை | 8,100 | 68.46 |
| 26 உடையார்பாளையம் | ஷை | ஷை | 9,617 | 39.86 |
| 27 புள்ளம்பாடி .. | ஷை | ஷை | 6,600 | 42.87 |
| 28 கிருஷ்ணராயபுரம் .. | ஷை | ஷை | 8,540 | 41.38 |
| 29 அரியலூர் .. | ஷை | ஷை | 20,635* | 184.59 |
| 30 வேடசந்தூர் .. | மதுரை | ஷை | 6,308* | 32.64 |
| 31 தேவாரம் .. .. | மதுரை | பேரூராட்சி | 15,800 | 107.10 |
| 32 கோம்பை .. .. | ஷை | ஷை | 14,550 | 52.96 |
| 33 பண்ணைப்புரம் .. | ஷை | ஷை | 8,158 | 46.92 |
| 34 கீரனூர் .. .. | ஷை | ஷை | 5,390* | 22.21 |
| 35 பரவை .. .. | ஷை | ஷை | 11,080 | 44.57 |
| 36 வீரபாண்டி .. | ஷை | ஷை | 11,500 | 51.83 |
| 37 இலுப்பூர் .. .. | புதுக்கோட்டை | ஷை | 8,654 | 51.24 |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 38 கமுதி .. .. | இராமநாதபுரம் | பேரூராட்சி | 13,200 | 56.38 |
| 39 அபிராமம் .. .. | ஷை | ஷை | 9,020 | 23.87 |
| 40 புதுவயல் .. .. | ஷை | ஷை | 6,304 | 26.83 |
| 41 கண்டனூர் .. | ஷை | ஷை | 6,128 | 23.25 |
| 42 சாம்பவாவடகரை .. | திருநெல்வேலி | ஷை | 10,520 | 28.89 |
| 43 நெய்பாலூர் .. | ஷை | ஷை | 14,800 | 66.92 |
| 44 ஆழ்வார்குறிச்சி .. | ஷை | ஷை | 7,967 | 35.78 |
| | | | | 2,131.79 |

பிரிவு—5

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1 பொள்ளாச்சி .. | கோவை | நகராட்சி | 82,115* | 62.61 |
| 2 ஆம்பூர் .. | வட ஆற்காடு | ஷை | 66,026* | 65.93 |
| 3 செங்கற்பட்டு .. | செங்கற்பட்டு | ஷை | 47,324* | 54.55 |
| 4 பண்ருட்டி .. | தென் ஆற்காடு | ஷை | 43,031* | 45.55 |
| 5 ஆத்தூர் .. .. | சேலம் | ஷை | 40,537* | 65.01 |
| 6 கூனூர் .. .. | நீலகிரி | ஷை | 44,750* | 57.25 |
| 7 தேனி—அல்லிநகரம் .. | மதுரை | ஷை | 53,023* | 63.75 |
| 8 பட்டுக்கோட்டை .. | தஞ்சாவூர் | ஷை | 49,485* | 63.72 |
| 9 சீர்காழி .. .. | ஷை | ஷை | 25,508* | 30.02 |
| 10 தென்காசி .. .. | திருநெல்வேலி | ஷை | 49,214* | 64.49 |

| வரிசை எண்ணும் நகரத்தின் பெயரும். | மாவட்டம். | நிலை. | 1981-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை. | செலவினம் (இலட்சங்களில்). |
| --- | --- | --- | --- | --- |
| 11 கோபிசெட்டிபாளையம் | பெரியார் | [illegible] | [illegible],846* | 57.57 |
| 12 துறையூர் .. | திருச்சிராப்பள்ளி | [illegible] | 23,599* | 30.12 |
| 13 அறந்தாங்கி .. | புதுக்கோட்டை | நகராட்சி | 23,227* | 24.92 |
| 14 கொடைக்கானல் .. | மதுரை | நகரியம் | 20,451* | 24.06 |
| | | | | 709.55 |

குறிப்பு:—பிரிவு 1 முதல் 4 .. .. குடிநீர் வழங்குதல்.

பிரிவு 5 .. .. .. குறைந்த செலவில் சுகாதார துப்புரவு திட்டம்.

* 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் அடங்கிய துணை திட்டப் பகுதி.

கணக்கெடுப்பு மக்கள் தொகை இல்லாத பகுதிகளில் எதிர்பார்ப்பு எண்ணங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு ... சென்னை-600 008. 136511
V811,31 N87-36-2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

---

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.